# வீணையடி நீ எனக்கு

இந்துமதி

பூஞ்சோலைப் பதிப்பகம்
58, டி. பி. கோயில் தெரு
திருவல்லிக்கேணி
விவேகாநந்தர் இல்லம்
சென்னை-600005

வீணையடி நீ எனக்கு (சமூக நாவல்)
முதற் பதிப்பு : செப்டம்பர் 1991
விலை ரூ : 36-00

[library stamp]

VEENAIYADI NEE ENAKKU
Tamil Social novel
by MRS. INDHUMATHI
© Indhumathi
first edition : September 1991
294 Pages
10 pt. letters
18 × 12. 5 cms
box board binding
cover design : Eswari
POONCHOLAI PATHIPPAGAM
Copies available at :
TAMIL PUTHAKALAYAM
58 T. P. Koil Street
Triplicane, Ice house
Madras 600 005
Price Rs 36-00

11842

அச்சிட்டோர் : 2 8 8 5 9 6 6
ஸ்ரீ குருராஜா பிரஸ்,
7, சின்னப்ப ராவுத்தர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

வீணையடி
நீ
எனக்கு

# வீணையடி நீ எனக்கு...

11842
2888966

## 1

இடை வேளைக்கான மணி அடித்தது. வழக்கமாகக் கல்லூரி மரத்தடியில் கூடுகிற அந்த மாணவர்களின் கூட்டம் அன்றைக்கும் கூடிற்று. எப்போதும் போல் அரட்டைப் பேச்சில் இறங்கிற்று. புதிதாக மெக்ஸிகோ சலவைக்காரி ஜோக் ஒன்றைச் சொல்லிச் சிரித்ததில் கல்லூரிக் கட்டிடம் அதிர்ந்தது. அந்தச் சிரிப்பு ஓய்வதற்கு முன்னாலேயே அத்தனைபேர் பார்வைகளும் சக்தியின் முகத்திற்குத் திரும்பியதில், சட்டென்று சிரிப்பு, பேச்சு, அரட்டை எல்லாம் நின்று போனது. 'என்ன ஆயிற்று இவனுக்கு...?' என்ற கேள்வி அங்கிருந்த அத்தனை பேர் மனங்களிலும் எழுந்த போதிலும் சங்கர் மட்டும் வெளிப்படையாகவே கேட்டான்.

"என்ன தலைவா...ஏன் இப்படி இருக்க...?" சங்கர் ஆரம்பித்ததும் ஆளுக்கு ஆள் தொடர்ந்தார்கள்.

"இன்னிக்கு மட்டுமில்லடா...கொஞ்ச நாளாகவே அவன் சரியா இல்ல..."

"பேச்சு, சிரிப்பு, கலகலப்பு எல்லாம் போய் எதையோ பறி கொடுத்த மாதிரி இருக்கான்..."

"அது மட்டுமா...? முன்ன மாதிரி ஓட்டல், சினிமான்னு எதுக்காவது அழைச்சிட்டுப் போறானா பார்த்தியா?"

"ஓட்டல், சினிமாவை விடுடா....காலேஜ் காண்டீன் பக்கம் கூட்டிட்டுப் போய் எத்தனை நாளாகுது...?"

"டேய்...சும்மா இருங்கடா...அவனுடைய பிராப்ளம் என்னன்னு தெரிஞ்சுக்கறதை விட்டுட்டு எது எதையோ பேசறீங்க..." சங்கர் அடக்கி விட்டுத் தொடர்ந்தான்.

"இதப்பாரு சக்தி... உன் மனசுல என்ன சங்கடம்...? எது உன்னைக் கஷ்டப் படுத்தறதுன்னு சொல்லுடா...?"

அத்தனைக்கும் சக்திவேல் பேசாமலிருந்தான். தலை குனிந்து மௌனமாக உட்கார்ந்திருந்தான். அதைப் பொறுத்துக் கொள்ள இயலாத சங்கர் சற்று உணர்ச்சி வசப்பட்ட குரலில் சொன்னான்:

"ஏய் சக்தி... இப்ப நீ சொல்லப் போறியா இல்லியா...? உன் பணத்துல ஜாலியா சினிமா பார்க்கறதுக்கும், டிரைவ்-இன்ல டிபன் சாப்பிடறதுக்கும், உன் வெளிநாட்டுக் கார்ல ஊர் சுத்தறதுக்கும் தான் நாங்கள் நண்பர்கள்னு நினைச்சியா...? உன் கஷ்டத்தையும் சேர்த்துப் பகிர்ந்துக்கற நண்பர்கள்டா நாங்க..."

அதைக் கேட்டுச் சடாரென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தான் சக்தி.

"எதுக்கு சங்கர் இப்படியெல்லாம் பேசற...?"

"பின்ன... உன் கஷ்டம் என்னன்னு சொல்லு...?"

"ம்ஹூம்... சொன்னா நீங்க சிரிப்பீங்க..."

"ச்! உன்னைப் பார்த்து நாங்க சிரிப்போமாடா...? சொல்லுடா... ப்ளீஸ்டா..."

சக்தி தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தான்.

"...இல்ல சங்கர்... பணம் எனக்கு அலுத்துப் போயிடுச்சு சங்கர், வசதிகள் அலுத்துப் போயிடுச்சு. அரண்மனை மாதிரி வீடும், வரிசையா நிக்கற கார்களும் வெறுப்பா இருக்கு. ஒரு குரல் கொடுத்தால் ஓடிவரும் ஒன்பது வேலைக்காரங்களைப் பார்க்கிற போதே



எரிச்சல் வருது. சொல்லப் போனால் வாழ்க்கைல எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கிறதே பெரிய பிரச்சினையாத் தெரியுதுடா..."

சக்தி நிஜமான குரலில் மிக உருக்கமாகச் சொன்னதைக் கேட்டு மற்றவர்கள் சிரித்தார்கள். வாழ்க்கையில் பணம் கூட அலுத்துப் போகுமா என்று வியந்தார்கள். தங்கள் வீடுகளில் மாதக் கடைசியானால் கை மாற்றிற்கு அலைவதை எண்ணிப் பெருமூச்சு விட்டார்கள். பிரச்சினைகளற்ற நிலையே ஓர் பிரச்சினையாக முடியுமா என்று கேட்டுக் கொண்டார்கள். சக்தியின் பணமும், வசதிகளும் தங்களுக்கு இருந்தால் வாழ்க்கையை எப்படி அனுபவித்திருப்பார்கள் என்பதை எண்ணி ஏங்கிப் போனார்கள். இருப்பதை அனுபவிப்பதை விட்டு இவன் ஏன் இப்படி வெறுத்துப் போய்ப் பேசுகிறான் என்று புரியாமல் ஆளுக்கு ஆள் கேள்வி கேட்கத் தொடங்கிய போது மீண்டும் ஓர் அதட்டல் போட்டான் சங்கர்.

"கொஞ்சம் சும்மா இருங்கடா... அவன் மனசு புரியாமல் உளறாதீங்கடா..."

சக்தி அவனை நன்றி கலந்த பார்வையில் ஏறிட்டுச் சொன்னான்.

"ரொம்ப தாங்க்ஸ்டா சங்கர்..."

"எதுக்குடா..."

"என் மனசைப் புரிஞ்சுக்கிட்டதுக்கு..."

"புரிஞ்சுக்கிட்டா மட்டும் போறாது. முதல்ல உனக்குள்ள ஏற்பட்டிருக்கிற அந்த வெறுமையைப் போக்க வழி தேடணும்" என்று சொல்லிச் சற்று நேரம் யோசித்துப் பின்னர் பளிச்சென்று சக்தியை ஏறிட்டான்.

சக்தி... எனக்குப் பிரமாதமான ஒரு ஐடியா தோணுது..."

"என்ன...?"

"நீயும் காதலிக்க ஆரம்பிடா... அப்புறம் 'போர்' அடிக்காது... மனசு சரியாப் போயிடும்..."

"எ...ன்...ன!?" என்று அதிர்ந்து போனான் சக்தி.

"ஏண்டா டேய்... என்ன விளையாடறீங்க...? 'போர்' அடிக்காமல் இருக்கிறதுக்கா காதலிக்கிறது...?"

"அதுவும் ஒரு காரணம்டா..."

"ஆமாண்டா சக்தி... சங்கர் சொல்ற ட்ரீட்மெண்ட் தான் உனக்கு சரி..."—எல்லோரும் சேர்ந்து ஒரு குரலில் கோரஸ் மாதிரி இழுத்ததும் சக்திக்குச் சுள்ளென்று கோபம் வந்தது.

"என்னடா பேசறீங்க நீங்க...?" என்று சிடுசிடுத்தான். "போர் அடிக்காமல் இருக்கவா காதல் பண்றீங்க...? அதுக்குத்தான் காதல்னா என்னால முடியாது. நீங்க பண்றதுதான் காதல்னால் எனக்கு வேணாம். இன்னிக்கு கீதா, ஒரு மாசம் கழிச்சு ராதா, அதுக்கப்புறம் மாலான்னு சட்டையை மாத்தற மாதிரி மாத்திக்கறீங்களே... இதுக்குப் பேரா காதல்...?"

சக்தி வெறுப்போடு கேட்டதும் சமாளிக்கிற விதமாக அவர்களிடமிருந்து பதில் வந்தது.

"நாங்க என்னடா சக்தி செய்யறது...? அந்தப் பொண்ணுங்க வந்து காதலிக்கிறதாச் சொல்றப்போ, சும்மா இருந்துட முடியுமாடா...? அது ஒரு ஆம்பிள்ளைக்கு அழகாகுமா சொல்லு...? அதுக்காகத் திருப்பி காதலிக்க ஆரம்பிக்கறோம்..."

"கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்றது தெரிஞ்சும் காதலிக்கிறதா சொல்றீங்களே... அது ஏமாத்தல் வேலை இல்ல...?"



"கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்றது எங்களுக்கு மட்டும்தான் தெரியுமா...? அவங்களுக்குத் தெரியாது...? தெரிஞ்சு தானே காதலிக்க வராங்க... அதுக்கு என்ன சொல்ற...?"

"...அது மட்டுமில்ல சக்தி... எல்லாக் காதலும் கல்யாணத்துலதான் முடியணும்னு எதிர்பார்த்தால் எப்படிடா...?"

"அப்படிப் பார்க்கப் போனா இன்னிக்கு நாட்ல காதலே இருக்காதுடா..."

"சீ! என்ன பேசறீங்க...?" என்று மிக அழுத்தமாக மறுத்துப் பின்னர் சொன்னான் சக்தி.

"நீங்க சொல்ரதுதான் காதல்னா எனக்கு அது வேணாம். உங்களை மாதிரி காதல்ன்றதை வெறும் உடம்பு பற்றின விஷயமா மட்டும் என்னால நினைக்க முடியல... அதனாலதான் நீங்க பழகற மாதிரி என்னால எந்தப் பொண்ணு கூடவும் பழக முடியறதில்ல..."

"என்னடா நீ...? அம்பிகாபதி—அமராவதி காதலா, ரோமியோ—ஜூலியட் காதலா இருக்கணும்னு சொல்றியா...? இல்லாட்டி தேவதாஸ் மாதிரி காதலுக்காகக் குடிச்சுக் குடிச்சு சாகணும்னு எதிர்பார்க்கறியா...?"

"நிச்சயமா! காதலுக்காக சாக முடியாதவன், சாகத் தயாரா இல்லாதவனெல்லாம் எதுக்கு காதலிக்கிறதா சொல்லிக்கிட்டு அலையணும்னு கேட்கறேன்...?"

"போடா... நாங்கள்ளாம் 21ம் நூற்றாண்டை எதிர் பார்த்துப் போயிட்டிருக்கோம். அதுவும் முக்கியமா இந்தக் காதல் விவகாரத்துல 22ம் நூற்றாண்டுக்குக் கூடப் போகத் தயாரா இருக்கோம்..."

"அப்படின்னா...?"—புரியாமல் கேட்டான் சக்தி.

"அப்படின்னா—மனசாட்சி, உறுத்தல், கல்யாண நிர்ப்பந்தம் எதுவுமில்லாமல் அனுபவி ராஜா அனுபவின்னு இருக்கத்தான் ஆசைப்படறோம் .."

"அடப்பாவிகளா . !?"

"இதுல போய் பாவம் எங்கிருந்துடா வந்தது...?" வாழ்க்கை வாழறதுக்கில்லாமல் வேற எதுக்கு...?"

"அது மட்டுமில்ல தலைவா...? உன்கிட்ட இருக்கிற அழகு, நிறம், பணம் இந்த மூணும் எங்க கிட்ட இருந் திருந்தால் ஆஹா... வாழ்க்கையை எப்படி அனுபவிப் போம் தெரியுமா...?"

"அதான் உங்ககிட்ட இல்லை. கடவுளுக்குத் தெரியும் யார்கிட்ட எதைக் கொடுக்கணும்னு .. ஆட்டுக்கு வாலை அளந்துதான் வச்சிருக்கார் பார்த்தீங்களா...?" விவாதம் முற்றி சண்டையாகும் போல் தெரியவே சங்கர் குறுக்கிட்டுப் பேச்சை மாற்றினான்.

"அது சரி... அந்தப் பேச்சை விடு மச்சி... நீ சொல்ற அமர காதல் படம் ஒண்ணு வந்திருக்கு... போகலாமா...?"

"என்ன படம்...?"

"கயாமத் ஸே ஹயாமத் தக்..."

"அப்படின்னு ஒரு படமா...?"

"கர்மம்! நீயெல்லாம் ஒரு காலேஜ் ஸ்டுடெண்ட்! சொல்லிக்க வெட்கமா இல்ல...?"

"ஏண்டா?"

"பின்ன என்ன...? நூறு நாள் ஓடியாச்சு... அவனவன் ஏழெட்டு தரம் பார்த்துட்டான். தியேட்டர் முழுசும் காலேஜ் ஸ்டுடண்ட்ஸ் தான். நீ என்னடான்னா அப்படின்னு ஒரு படமான்னு கேட்கற...?"



'ஏண்டா சங்கர்... அமர காதல் படம்னு சொல்றீங்க... உங்களுக்கெல்லாம்தான் அதுல நம்பிக்கை கிடையாதே... பின்ன எதுக்கு ஏழெட்டுத் தரம் பார்த்திங்க...?" தன் கேள்வியில் அவர்களை மடக்க முயன்றான் சக்தி.

"உன்னை மாதிரி பணக்கார வீட்டுப் பையன்களுக்கு மண்டைலேயும் ஒண்ணும் இருக்காது, மனசுலயும் ஒண்ணும் இருக்காது .."

"ஹேய் .." — சக்தி முறைத்தான்.

"நம்மால எதெல்லாம் இயலாதோ எதெல்லாம் முடியாதோ அதையெல்லாம் கதைங்கள்ல படிக்கிறதுல, சினிமாவுல பார்க்கிறதுல ஒரு திருப்தி, ஒரு த்ரில் இருக்குடா..."

"ஸாரி .. காதலை த்ரில்லா நினைக்கவோ, த்ரில்லுக்காக செய்யவோ நான் இஷ்டப்படலை..."

"ஓ. கே... உன்னைப் பொருத்தவரை காதல் நிஜமானது, புனிதமானது, அமரத்துவம் வாய்ந்ததுன்னு கருதற இல்ல ..? அதைத்தான் அந்தப் படத்துலயும் காட்றாங்க .. அதைப் பார்க்க வரக் கூடாதா ...?

"ப்ளீஸ் சக்தி...வாடா...நாமெல்லாம் ஒண்ணா சேர்ந்து சினிமா பார்த்து ரொம்ப நாளாயிடுச்சுடா...

"ம்ஹூம். எனக்கு இப்ப சினிமா பார்க்கிற மூட் இல்ல..."

"ஏய்...நீ இப்ப வரப் போறியா ..இல்ல. குண்டுக் கட்டா கட்டித் தூக்கிட்டுப் போயிடவா...?"

"ஓ...கமான் ..கெட் அப் சக்தி..."

மற்றவர்கள் அத்தனை பேரும் கையைப் பற்றி இழுத்ததும் வேறு வழியின்றி அவர்களோடு கிளம்பினான் சக்திவேல்.

அடுத்த சில நிமிடங்களில் அவர்களை ஏற்றிக் கொண்டு அவனது கார் கல்லூரியை விட்டுக் கிளம்பிற்று. டிரைவ் இன் ஓட்டலில் டிபனை முடித்துக் கொண்டு தியேட்டருக்கு வந்தார்கள். சூயிங்கம் மென்று, பாப் கார்ன் தின்று சினிமா பார்த்தார்கள்.

படம் முடிந்து வெளியில் வந்த சக்தி ஆழ்ந்து யோசித்தான். படம் அவனது நினைவைத் தொட்டது; நெஞ்சைத் தொட்டது; உணர்வைத் தொட்டது. உள் மனதில் அழுத்தமாய்; ஆழமாய்ப் பதிந்து போயிற்று.

காதல் என்பது இப்படித்தான் இருக்க வேண்டும்.

நிஜமாய், நிச்சயமாய், சத்தியமானதாய் இருக்க வேண்டும்.

நீயின்றி நானில்லை என்று உருக வேண்டும்.

உனக்கென்றே நான் என்கிற உறுதி வேண்டும்.

சாவையும் எதிர் கொள்ளத் தயாராக வேண்டும்.

தான் காதலித்தால் இப்படித்தான் காதலிப்பான்.

நிஜமானவனாய், நிச்சயமானவனாய், சத்தியமானவனாய் இருப்பான்.

நீயின்றி நானில்லை என்று உருகுவான்.

உனக்கென்றே நான் என்று தன்னை முழுதுமாய் ஒதுக்கித் தருவான்.

சாவிற்கும் தயாரானவனாக இருப்பானே தவிர—

ஒரு போதும் இவர்கள் சொல்கிற மாதிரி இருக்க மாட்டான்.

சட்டை மாற்றுகிற மாதிரி மனதை மாற்றிக் கொள்ள மாட்டான்.

மாற்ற அவனால் இயலாது.



ஆனால்—

யாரைக் காதலிப்பது...?

தான் நினைக்கின்ற மாதிரியே நினைக்கக் கூடிய—

தன்னைப் போன்றே காதலில் நம்பிக்கை உள்ள—

ஒருமுறைதான் காதல் வரும் என்கிற

அழுத்தமான சிந்தனையுள்ள—

தனக்குப் பிடித்தமான—

தன்னைப் பிடிக்கக் கூடிய பெண்—

எங்கிருந்து கிடைப்பாள்...?

அல்லது எங்கே இருக்கிறாள்...?

அதுதான் இவனுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் இத்தனை நேரம் காத்துக் கொண்டிருக்க மாட்டான். காரில் உட்கார்ந்து யோசனை செய்து கொண்டிருக்க மாட்டான். அவள் யார் என்பது தெரியாமல், பிடிபடாமல் இருப்பதுதான் இந்த சங்கடத்திற்கு ஒரு காரணமாகவும் தோன்றிற்று. அதுவே சிறிது சுவாரஸ்யமாகவும், சந்தோஷமாகவும் கூட இருந்தது. இது போன்ற தேடல்களில்தான் வாழ்க்கையின் ரகசியம் அடங்கியிருப்பதாகப் பட்டது. இந்தத் தேடல்கள் இல்லாது போனால் வாழ்க்கையில் ரம்மியமில்லை. கவர்ச்சியில்லை. அழகில்லை. ஒன்றுமே இல்லை...

சங்கர் சொன்னது சரிதான். தான் காதலிக்க வேண்டும். தான் மனதிற்கு மிகப்பிடித்தமான பெண்ணை மிகப் பிடித்தமான ஆழ்ந்த காதலில் காதலிக்க வேண்டும். அழுத்தமான காதலாக அது இருக்க வேண்டும். வானவில்லின் வர்ணஜாலமாகக் காட்டி விட்டு மறையாமல் கல்லினில் செதுக்கிய சிற்பமாக இருக்கவேண்டும். காலம் காலமாய் அழியாததாக வேண்டும். கடைசி

மூச்சு வரை நிற்க வேண்டும். அமரகாதல் என நிலை பெற வேண்டும்... அப்படி நிலை பெறுவதற்கான ஒரு பெண்ணைத்தான் இவன் காதலிப்பான். உயிராகக் கொள்ளுவான். உருகி ஒன்றுமில்லாமற் போவான்...

ஆனால் யார் அவள்...?

என்னைப் புரிந்து கொண்டு, உன்னையும் புரிய வைக்கக் கூடிய புத்திசாலித்தனமும், அழகும் சேர்ந்த, என் மனதிற்கு மிக இனிய புதுமைப் பெண்ணே... நீ யார்..? எங்கே இருக்கிறாய்..? உன் பெயரென்ன...? எங்கோ பிறந்து, பதினேழு, பதினெட்டு வருடங்கள் வளர்ந்து, தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிற அந்தப் பெண்ணை அப்போதே சந்திக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் யார் அவள், எங்கே இருக்கிறாள் என்ற எதுவும் தெரியாமல் எப்படிச் சந்திப்பது..?

ஆழ்ந்த யோசனையில் இருந்த அவன் தோளில் ஒரு விழுந்தது.

"என்னடா...? அந்த அமரகாதல் படத்தோடு அப்படியே உறைஞ்சு போயிட்டியா...? வண்டியைக் கிளப்புடா..."

சட்டென்று தன் சிந்தனையிலிருந்து விடுதலை பெற்று காரைக் கிளப்பிக் கொண்டு திரைப்பட அரங்கை விட்டு வெளியில் வந்தான் சக்தி...

# 2

திரைப்பட அரங்கை விட்டு வெளியில் வந்ததும் காரின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நண்பர்களில் ஒருவன் சக்தியிடம் கேட்டான்.

"இப்படியே நேரா பீச்சுக்குப் போகலாமா சக்தி...?"

"ரொம்ப நல்ல ஐடியாடா... நாம் பீச்சுக்குப் போய் கூட ரொம்ப நாளாச்சுடா..." —இன்னொருவன் வழி மொழிந்தான்.

ஆனால் சக்திவேல் அந்த மனநிலையில் இல்லை. பார்த்த திரைப்படமும், உள் மன ஓட்டங்களும் அவனை முழுமையாக ஆட்கொண்டிருந்தன. தன் மனதிற்கு இனியவளைப் பற்றி மீண்டும் தனிமையில் சிந்திக்க வேண்டும் போலிருந்தது. அவள் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என பட்டியல் போடுகிற ஆசை ஏற்பட்டது. தனியாக உட்கார்ந்து தன் மனதைத் தானே ஆராய வேண்டும் என்று தோன்றியது. அதற்குக் கடற்கரை கூட சரியான இடம்தான்.

ஆனால் இவர்களோடு போகக் கூடாது. இது போன்ற கூட்டம் கூடாது. தனியாய், மிகவும் தனியாய் தன் மனது மட்டுமே துணையாகப் போக வேண்டும். மணலில் மல்லாந்து படுத்து வானத்தைப் பார்க்க வேண்டும். மேகங்களுக்கிடையில் எண்ணத் தூரிகை கொண்டு தன் வருங்காலக் காதலியை வரையவேண்டும். கற்பனைக் கோடுகளாக இழுத்து மகிழ வேண்டும்.

அந்தரங்கமாக அவளோடு உரையாட வேண்டும். ஆசை மனதைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்...

இவர்களோடு போனால் இவற்றில் எதுவும் நடக்காது. தனிமை என்பதே கிடைக்காது. இவர்கள் போகின்ற புடவைகளையும், வருகின்ற சல்வார் கம்மீஸ் களையும் வெறிப்பார்கள். தங்களைக் கடந்து செல்கின்ற பெணகளைப் பார்த்து விஸிலடிப்பார்கள். சினிமாப் பாட்டு பாடுவார்கள்.

'நடையா...இது நடையா...?'' என்பான் ஒருவன்.

'அன்று வந்ததும் இதே நிலா...' என்று ராகமிழுப் பான் இன்னொருவன்.

அந்தப் பெண்களில் யாராவது ஒருத்தி திரும்பிப் பார்த்து முறைத்தால் போதும்.

'என்னப் பார்வை... உன்தன் பார்வை என்பான் இன்னொருவன்...

இந்தக் கேலிப் பேச்சிற்காகவும், கிண்டலுக் காகவுமே இவர்கள் கடற்கரைக்குப் போவார்கள். சினிமாவிற்குப் போவார்கள். கோயில், குளம், கடைத் தெரு என்று அத்தனை இடங்களிலும் பெண்களைத் தேடி அலைவது ஒன்றே குறிக்கோள் என்பதுதான் இவனுக்கு வெறுப்பைத் தந்தது. பார்க்க வேண்டியது தான். அழகான எதையும் பார்க்கத்தான் கண்கள் இருக்கின்றன. பார்வை கொடுக்கப்பட்டிருக்கிறது. அழகை ஆராதிக்கத் தெரிய வேண்டியதுதான். அதற்காக அது ஒன்றுதான் குறிக்கோள் என்பதும், அதற்காக அலைவதும் சக்திக்குள் சொல்ல முடியாத வெறுப்பை ஏற்படுத்தின.

இவன் தேடுவது பெண்களில்லை...

பெண்...

ஒருத்தி...



குறிப்பாக ஒரே ஒருத்தி...

தன் தேடல் இவர்களுக்குப் புரியாது என்று நினைத்துக் கொண்டான் சக்தி. சொன்னால் சிரிப் பார்கள் என்பதும் தெரியும். 'போடா சன்யாசி...'' என்று கேலி செய்வார்கள். 'ஏண்டா இப்படி இருக்கே....?' என்று தலையில் அடித்துக் கொள்வார்கள். கர்மம்! இவனெல்லாம் ஒரு காலேஜ் ஸ்டுடெண்ட்டா... என்று பரிகசிப்பார்கள்.

இவர்களால் தன் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முடியாது. உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாது. இதில் சங்கர் சற்று பரவாயில்லை. ஆனாலும் அவனாலும் தன்னை முற்றிலும் தெரிந்து கொள்வதென் பது இயலாது. வேண்டாம். இவர்கள் தன்னைப் புரிந்து கொள்ள வேண்டாம். தெரிந்து கொள்ள வேண்டாம். தன்னைப் புரிந்து கொள்ள வேண்டியது ஒருத்தி தான். புரிந்து கொள்ள வேண்டியதும் அவள்தானே தவிர இவர்கள் இல்லை. அதனால் இவர்களோடு இப்போது போக வேண்டாம். தனக்குத் தேவை தனிமை. அது கிடைக்க வேண்டுமானால் இவர்களுடன் போவதைத் தவிர்த்தாக வேண்டும்...

முடிவு செய்துக் கொண்டான் சக்தி. ஆனாலும் அதை அவர்களின் மனம் புண்படாத வகையில் பக்குவ மாகச் சொன்னான்.

"வேண்டாண்டா... நான் வரலை. என்னை விட்டுடுங்க .. உங்களை வேணும்னால் பீச்சுல இறக்கி விட்டுப் போறேன்...''

அதற்குப் பின்னர் கடற்கரைக்குப் போவதா, வேண்டாமா என்பது பற்றி ஒரு சின்ன பட்டிமன்றமே நடந்தது. போவது என்கிற முடிவிற்கு வந்தார்கள்.

"சரிடா... எங்களை காந்தி சிலைக்குப் பக்கத்துல இறக்கி விட்டுட்டுப் போ...''

அதன்படி அவர்கள் அத்தனை பேரையும் காந்தி சிலை கடற்கரையில் இறக்கி விட்டான். அங்கிருந்து தனியாய் காரில் வீடு திரும்பும் போது ஒரு நிம்மதி ஏறபட்டது. எதிலிருந்தோ விடுதலை கிடைத்த மாதிரி தோன்றியது. சில சந்தர்ப்பங்களில் நட்புகூட சுமை யாகத் தெரியும் போலிருக்கிறது என்று சொல்லிக் கொண்டான். நட்பு சுமையாவது மட்டுமின்றி தனிமை யும் இனிமை தரக்கூடியது என்பதையும் புரிந்து கொண்ட போது இது காதலின் அறிகுறி அல்லவா...?' என்கிற கேள்வி எழுந்தது.

காதல் வயப்படுவதற்கு முன்னரே, தன் காதலியார் என்பது தெரிவதற்கு முன்னரே தனக்கு ஏன் இப்படித் தோன்றுகிறது எனவும் கேட்டுக் கொண்டான். 'தான் சந்தித்தே இராத, முகம் கூட அறியாத ஒரு பெண்ணின் நினைவு எதற்காகத் தன்னை அலைக்கழிக்கிறது...? இது போன்ற சிந்தனைகளை ஏன் உருவாக்குகிறது? நண்பர்கள் கூட அந்நியப்பட்டுப் போவது எதனால்? கூட்டமற்ற தனிமை இனிமையானதாகவும் நட்பு சுமை யாகவும் தெரிகிறதே... இது ஏன்...?

ஒரு வேளை இவை அனைத்தும் காதலின் அறிகுறிகளோ?

காதல் வயப்பட நினைக்கும் இளைஞனின் மனதில் ஏற்படும் எண்ண அலைகளோ...? நெஞ்சில் அரும்பு கின்ற இனிய மொட்டுக்களோ...? பின்னர் அந்த மொட்டுக்கள் மெல்ல மெல்ல இதழ் விரித்து பூக்களாக மலருமோ...? தன் நெஞ்சம் ஒரு நந்தவனமாக மாறுமோ..? அந்த நந்தவனத்திற்காக ஏற்பட்ட மனோதத்துவ மாறுதல்களோ இவைகள்...? அப்படி யானால் அந்த நந்தவனம் மலருதல் எப்போது...? மொட்டுக்கள் இதழ் விரிப்பது எப்போது...? மணம் பரப்புவது எப்போது ..? எத்தனைக் காலமாகும் அதற்கு?''



அந்தக் கேள்விக்கான விடை கிடைக்கவில்லை! அவனுக்கு தெரியவும் இல்லை. 'எத்தனைக் காலமானா லும் காத்திருக்க வேண்டியதுதான் ' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட போது அவனிடமிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

அந்தப் பெருமூச்சோடு கார் அவனது வீட்டுத் தெருவில் திரும்பிற்று. தெருக்கோடியில் நுழைந்த போதே தன் வீட்டு வாசலில் வரிசையாகக் கார்கள் நின்று கொண்டிருப்பதை கவனித்தான். தெருக்கோடி என்பதே அவனது வீட்டுக் காம்பவுண்ட் சுவரில் ஆரம்பம் தான். சற்றேறக் குறைய தெரு முழுவதையும் அடைத்துக் கொண்டு நிற்கிற கம்பீரமான வீடு அவனுடையது. ஒரு வரிசையில் இவனது வீடும், அடுத்தாற் போன்று அமைதிக்கும், அழகிற்கும் ஆசைப்பட்டு அந்தத் தெருவைத் தேர்ந்தெடுத்து வீடு கட்டிக் கொண்டு வந்திருக்கிற திரைப்பட இசையமைப்பாளரின் வீட்டை யும் விட்டால், மற்ற எல்லா வீடுகளும் எதிர் வரிசையில் தான். எதிர் வரிசை வீடுகள் கூட அதிகமில்லை. நான்கே வீடுகள் உள்ளடங்கிய பெரிய பெரிய பங்க ளாக்கள். தென்னையும், விசிறிவாழையும், மாமரங் களுமாகச் சோலைகளாகத் தெரிகின்ற வீடுகள். பசுமை யும், குளுமையும், நிழல்களுமாக மறைத்துக் கொண்டிருக் கின்ற அவற்றில் மறைந்து நிற்கின்ற வீடுகள்.

அந்தத் தெருவில் கார்களைத் தவிர மற்ற வாகனங்கள் எதுவும் நுழைந்ததில்லை. நுழைகின்ற அவசியமும் இல்லை. வீடுகளில் வேலை செய்கின்ற தோட்டக்காரர்கள், வேலைக்காரர்கள், எடுபிடி ஆட்களின் சைக்கிள்கள் மட்டும் நுழையும். நேராக வீடுகளின் பின்பக்கம் போய் ஒதுக்குப்புறமாக நிற்கும்.

அப்படிப்பட்ட சென்னை நகரின் பிரபலமான சாலைகளில் ஒன்றான—மரங்கள் அடர்ந்த மிக அழகான அந்த வீதியில் ஒவ்வொரு நாளும் அவன் வீட்டின்

எதிரில் குறைந்த பட்சம் பத்து கார்களாவது நிற்பது வழக்கம்தான். அரசியல் கட்சி ஒன்றின் முக்கியப் பிரமுகராக இருக்கும் அவனது அப்பா ராஜரத்தினத்தைத் தேடி ஆட்கள் வருவது சகஜம்தான். அதிலும் ராஜரத்தினம் வெறும் அரசியல் கட்சி சார்ந்த அரசியல்வாதி மட்டுமல்ல. இலக்கியவாதி. இலக்கியம் பற்றி நாள் முழுதும் பேசக்கூடிய திறமைசாலி. தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூட ஷெல்லியையும், கீட்ஸையும் ஒப்பிக்கக் கூடியவர். அவர் ஆங்கிலத்தில் எழுதின நாலைந்து புத்தகங்கள் அந்த வீட்டின் நூல் நிலையத்திற்கு மற்றுமொரு பெருமையைத் தேடித் தந்திருப்பது நிஜம்.

இலக்கியம் மட்டுமின்றி ராஜரத்தினம் கலை உலகத்திற்கும் ஓர் காவலர். அவரது ஆதரவினால் முன்னுக்கு வந்த கலைஞர்கள் ஏராளம். சபாக்கள் ஏராளம். சங்கீத, நாட்டிய, நாடக மன்றங்கள் ஏராளம். கலை இலக்கியம் இரண்டிற்கும் அப்பாற்பட்டு வியாபாரத்திலும் அவர் புலியாக இருந்தது தான் அத்தனை பேருக்கும் ஒரு ஆச்சரியம்.

'மனுஷர் இப்படி எல்லாத்துலயுமா கெட்டிக்காரரா இருப்பார்! என்ன கணக்கு! எப்படிப்பட்ட மூளை! சொத்து மட்டுமில்ல... இதெல்லாம் கூடப் பரம்பரையா வருதுப்பா...'' என்பார்கள்.

அப்படிப்பட்ட ஒருவரைத் தேடி நாள்தோறும் ஆட்களும், கார்களும் வருவது சகஜமானாலும், அந்தத் தெருவில் இருப்பவர்களுக்குப் பழகிப் போன விஷயமானாலும், சக்தியும் அறிந்திருந்த ஒன்றுதான் என்றாலும், அன்றைய கார்களின் வரிசை அவனுக்கே ஆச்சரியத்தைத் தந்தது. 'என்ன விசேஷம் இன்று...? என்று நினைவைத் தேடிற்று மனது.

'அப்பாவிற்குப் பிறந்த நாளா...? இல்லையே... இருந்தால் காலையில் தெரிந்திருக்குமே...?''



அல்லது புதுசாக அவருக்கு ஏதாவது பட்டம் கொடுக்கிறார்களா...?

இல்லையென்றால் பதவி எதையும் வற்புறுத்தித் தந்திருக்கிறார்களோ...? அதற்கு வாழ்த்து சொல்ல இத்தனைக் கூட்டமா...?'

அவ்வாறு இருக்காது என்பதை மனது திடமாகவும், அழுத்தமாகவும் சொல்லிற்று. ஏனெனில் அரசியல் பதவிகளையெல்லாம் உதறித் தள்ளியவர் அப்பா என்பதை அவன் அறிவான். பதவிகள் மட்டுமின்றி பட்டங்களைக் கூட வேண்டாம் என்றவர் என்பதும் தெரியும். இதற்கெல்லாம் காரணம் அவரது எளிமை என்றோ, அடக்கம் என்றோ, போதுமென்ற மனம் என்றோ நிச்சயமாக சக்தியால் சொல்ல முடியாது.

அந்த அளவிற்கு அப்பாவை அறிந்து வைத்திருப்பவன் அவன். தெரிந்து கொண்டிருப்பவன். அவரது பிடிவாதம் தெரியும் அவனுக்கு. மூர்க்கத்தனம் தெரியும். முயலுக்கு மூன்றுகால் என்று சொல்லிவிட்டாரானால் அதை நிரூபிக்க ஒரு காலை ஒடித்து விடக் கூடியவர் என்பதும் தெரியும். ஒடிந்தது தெரியாமல் இருக்க பணத்தால் கட்டுப் போட்டு மறைக்கக் கூடியவர் என்பதையும் அறிவான்.

மொத்தத்தில் அவருக்கு அவருடைய பணத்தின் பலம் தெரியும். வலிமை தெரியும். மதிப்பு தெரியும் மரியாதை தெரியும். கௌரவம் தெரியும். சாதிக்கின்ற விஷயங்கள் தெரியும். கட்டுக் கட்டாகக் கரன்ஸி நோட்டுக்களை எரித்து குளிர்காய முடிந்த அவரால் நிச்சயம் பதவிகளையும், பட்டங்களையும் பெற்றுக் கொண்டு விட முடியாது. அந்த அளவிற்குத் தாழ்ந்து போகிறவர் அல்ல அவர். விட்டுக் கொடுக்கிறவர், இல்லை பட்டங்களையும், பதவிகளையும் தருகின்றகை தன்னுடையதாக இருக்க வேண்டும் என்று நினைப்பாரே தவிர பெருகின்ற கையாக இருக்கவிடமாட்டார்

என்பதனால் அப்போதைய அந்தக் கார்களின் வரிசைக்கான காரணம் தெரியவில்லை அவனுக்கு.

நிர்ணயிக்கவும் முடியவில்லை. தனிமையைத் தேடி ஓடிவந்தவனுக்கு இந்தக் கூட்டம் வெறுப்பைத் தந்தது. வீட்டினுள் நுழைவதே கூட கஷ்டமாக இருக்கும் போலிருந்தது. இதைவிட நண்பர்களோடு கடற்கரைக்குப் போயிருந்தாலே மேலாக இருந்திருக்கும் என்று நினைத்துத் தயங்கின போது—

அவன் வீட்டிலிருந்து கப்பல் போன்ற கார் ஒன்று வெளியில் வந்து அவனைக் கடந்து சென்றது. அந்தக் காரின் அத்தனை ஜன்னல்களும் கருப்புக் கண்ணாடியானதால் அவனால் உள்ளே இருந்தவர்களைப் பார்க்க முடியவில்லை, அந்தக் காரின் பின்னாலேயே வரிசையாக ஒவவொன்றாகக் கிட்டத்தட்ட பத்துக் கார்கள் வெளியேறின.

அதுவரை அமைதியாய், பொறுமையாய் தன் காரிலேயே காத்திருந்த சக்தி, பின்னர் மெல்ல தன்னுடைய காரை வீட்டினுள் கொண்டு போனான். போர்ட்டி கோவை விட்டுத் தள்ளி புல்தரைக்கு அருகில் நிறுத்தி விட்டுக் கீழே இறங்கி நடந்தபோது வீட்டினுள்ளிருந்த அந்த அசாதாரண அமைதி அவனுக்குப் புதிதாகத் தெரிந்தது.

அந்த அமைதியும், நிசப்தமும் ஒருவித சங்கடத்தை அடிவயிற்றில் தோற்றுவித்தன. ‘என்ன ஆயிற்று...?’ என்ற கேள்விக்கு பதில் தெரிந்து கொள்கிற ஆர்வத்தின் காரணமாக புல் தரையைக் கடந்து வீட்டை நோக்கி நடக்கலானான் சக்தி...

# 3

அரண்மனை போன்ற அந்த பங்களாவின் நிசப்தம் சகஜமானதுதான். தினமும் காணக் கூடியதுதான். அத்தனை பெரிய இடத்தின் சொந்தக்காரர்களான, உரிமை உள்ள நான்கு பேர்களும் ஆளுக்கு ஓரிடமாக அடைபட்டுப் போல் விடுவதனால் எப்போதும் அந்த நிசப்தம் இருக்கும். அமைதி இருக்கும். அதிலும் ராஜரத்தினம் வீட்டில் இருக்கிறார் என்றால் எந்த மூலையில் ஊசி விழுந்தாலும் எதிரொலிக்கும்.

ஆனாலும் அந்த மாலையில் காணப்பட்ட அமைதி வழக்கமான அமைதியில்லை என்பதை உணர்ந்தான் சக்தி. இந்த அமைதி மிகவும் வித்தியாசமானது. ஏதோ ஒரு ஆழமான பிரச்சினையின் அடிப்படையில் எழுந்தது என்பதையும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் பிரச்சினை என்ன என்பதுதான் தெரியவில்லை.

அதைத் தெரிந்து கொள்ள அவன் வரவேற்பறையில் நுழைந்த போது அம்மாவும், தங்கை நளினியும் சோபாவில் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். சித்தப்பாவும், சித்தியும் வந்திருப்பது தெரிந்தது. ஏதாவது மிக முக்கியமான காரணமானால் தவிர சித்தப்பாவும், சித்தியும் பெங்களூரில் இருந்து வரமாட்டார்கள். அம்மாவும், நளினியும் இப்படி அலங்கரித்துக் கொள்ள மாட்டார்கள். சரம் சரமாக வைர நகைகளைப் போட்டுக் கொள்ள மாட்டார்கள். அதிலும் தங்கை நளினியின் கழுத்திலும், கைகளிலும் இன்னும் அதிக வைரங்கள் பளிச்சிடவே மெதுவாக அம்மாவை ஏறிட்டுக் கேட்டான்.

"என்னம்மா விசேஷம் இன்னிக்கு...?"

அம்மாவிடமிருந்து பதில் வரவில்லை. மெல்ல ஒரு முறை தலைதூக்கி அவனைப் பார்த்து விட்டு மீண்டும் தலைகுனிந்து கொண்டாள். அந்தப் பார்வையில் எல்லையற்றதோர் சோகமும், பயமும், இயலாமையும் பளிச்சிடுவதை இவன் புரிந்து கொண்டான். அந்தப் பார்வை அவனுக்குப் புதிதில்லை. நினைவு தெரிந்த நாள் முதலாக அம்மாவின் கண்களில் இவற்றைத் தவிர வேறு கண்டதில்லை. அவள் வெளியில் வந்து யாரும் பார்த்ததில்லை. குரல் உயர்ந்து கேட்டதில்லை. அந்த வீட்டில் அம்மா இருக்கிற இடம் கூடத் தெரியாது.

இந்த பங்களா, பணம், ஆடம்பரம் இவற்றிற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இலலை என்கிற மாதிரித் தான் நடந்து கொள்வாள் அம்மா. 'நான் ஒரு சாதாரண மத்தியதரக் குடும்பத்திலிருந்து வந்தவள்' என்பதைச் சொல்லாமல் சொல்வாள். அவளின் அழகு, அடக்கம், கைத்திறன், காரியம் செய்கின்ற நேர்த்தி இவற்றைப் பார்த்தே தாத்தா அவளை மருமகளாக்கிக் கொண்ட கதையை அம்மாவே அவனிடம் நிறையதரம் சொல்லியிருக்கிறாள்.

'நான் பெரிய இடத்துலேர்ந்து வரலை. இவங்க அந்தஸ்த்துக்கு சமமான இடத்துலேர்ந்து வரலைன்ற கோபத்துல உங்கப்பா ரொம்ப நாள் என்கிட்ட பேசாமல் இருந்தார் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருந்தார் தெரியுமா...?'

"அப்புறம் எப்படியம்மா சரியானார்...?"

"எங்க சரியானார்...? இன்னும் கூட உங்கப்பாவுக்கு அந்தக் கோபம் உண்டு. உங்க தாத்தாவுக்குப் பயந்து என்னை ஏத்துக்கிட்டாரே தவிர மனப்பூர்வமா ஏத்துக்கலை. நாளாக நாளாக அவர் பேச்சுக்கு மறு வார்த்தை பேசாத, எதற்கும் வாயைத் திறக்காத என்



குணம் பிடிச்சுப் போயிடவே பேசாம இருந்துட்டாரு... இல்லைன்னால் தாத்தா காலமான கையோட என்னை அனுப்பிட்டு வேற கல்யாணமில்ல செய்துகிட்டிருப்பாரு..."

அதில் அம்மாவின் சோகம் தெரியும், ஏக்கம் தெரியும். அந்த வீட்டில் அதுதான் தன் நிலை என்பதை உணர்ந்து கொண்டிருப்பது தெரியும். எனவே அம்மாவின் முகத்தில் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டுவிட்ட பயமும், சோகமும், இயலாமையும் புதிதற்ற காரணத்தினால் அவன் திரும்பி தங்கையைப் பார்த்தான்.

"என்ன நளினி விசேஷம்...?"

தங்கை அவனை ஏறிட்ட பாவனையில் அம்மாவின் பார்வையில் இல்லாத இன்னும் ஒன்று அதிகம் காணப் பட்டது.

அதுதான் கண்ணீர்!

அதைப் பார்த்ததும் அவன் பதறிப் போனான். பதைத்துப் போனான். அவனுக்குத் தன் தங்கையைப் பிடிக்கும். அந்தப் பிடிப்பைவிட பரிதாபமே அதிகம் இருக்கும். தான் ஒரே பையன் என்றால் அவளும் ஒரே பெண்.

இந்தப் பதினெட்டு வயதுவரை வீட்டை விட்டுத் தனியாக வெளியில் எங்கும் அனுப்பப்படாதவள். எவரோடும் பழக அனுமதிக்கப்படாதவள். சிநேகிதிகள் என்று யாருமற்றவள். பேச்சுத் துணைக்குக் கூட ஒருவரும் இல்லாதவள். வீட்டில் ஆசிரியர்களை வரவழைத்து படிப்பு சொல்லித்தரப்பட்டதே தவிர பள்ளிக்கோ, கல்லூரிக்கோ அனுப்பப்படாதவள்.

"காலேஜ் எப்படி இருக்கும் சக்தியண்ணா...?"

ஒருநாள் அவள் கேட்ட கேள்வியில் இவனுக்கு குருட்டுப் பெண் யானை எப்படி இருக்கும் என்று

கேட்ட கதை நினைவிற்கு வந்தது. நெஞ்சு உருகிப் போயிற்று. அந்தக் கால ராஜ குமாரிகளை கன்னி மாடத்தில் சிறை வைத்த மாதிரி அவள் அந்த வீட்டில் வைக்கப்பட்டிருப்பதாக நினைத்தான் ராஜகுமாரிகளுக் காவது தோழிகள் இருந்தார்கள். பாங்கியர்கள் இருந் தார்கள். இவளுக்கு அப்படியும் ஒருவரும் இல்லை என்பதில் இன்னமும் பரிதாப உணர்ச்சியே மேலிட்டது.

வெளி உலகில் தான் பார்க்கிற அவள் வயதுப் பெண்களிடம் காணப்படும் கலகலப்பு, உற்சாகம், சந்தோஷம் இவளிடம் இல்லை என்பதையும் அவன் அறிவான். சூரிய வெளிச்சமற்று வளருகின்ற ஒரு செடிக்கு ஒப்பாகவே அவள் இருப்பதையும் உணர்ந்தான். வாழ்க்கையின் சின்னச் சின்ன ரசனைகளையும், அதில் ஏற்படும் சந்தோஷத்தையும் அவள் இழப்பது தெரிந்தது பணத்தினால் கிடைக்கக் கூடிய சுகங்களையும், ஆடம்பரத்தையும் தவிர வேறு எதையும் அவள் அனுபவித்ததில்லை என்பதாலும், கூண்டில் அடைக்கப் பட்ட பறவையின் நிலையில் இருப்பதாலும் அவளிடம் தனிப்பட்ட இரக்கம் கலந்ததோர் அன்பு பெருகும்.

அப்போதும் அதே அன்புப் பெருக்கில் இதயத்தை வருடிக் கொடுக்கிற குரலில் அவளருகில் போய் இன்ன மும் மெதுவாக, நிதானமாகக் கேட்டான்.

"என்ன ஆச்சும்மா நளினி...? என் கிட்ட சொல்லும்மா...?"

அதற்கு மேல் தாங்க இயலாதவளாக அவள் புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு உள்ளே ஓட, அவன் அதனால் ஏற்பட்ட வலியோடு சித்தப்பாவை ஏறிட்டான்.

"என்ன ஆச்சு சித்தப்பா....? ஏன் யாருமே பதில் சொல்ல மாட்டேன்றாங்க...?"

அவர் தழைந்த குரலில் சொன்னார்.



"நளினிக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்காரு உங்கப்பா..."

"அந்தப் பேச்சு வார்த்தைதான் கொஞ்சம் முன்னால இங்க நடந்திச்சா...? மாப்பிள்ளை வீட்டுக் காரங்கதான் வந்திருந்தாங்களா...?

"ஆமாம் .."

"அதுக்கு ஏன் நளினி அழணும் சித்தப்பா...?"

"அவளுக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்ல..."

"இஷ்டமில்லாதப்போ ஏன் பேச்சு வார்த்தை நடத்தணும்...?"

அதற்கு சித்தப்பாவிடமிருந்து பதில் வராமற் போகவே அவன் அம்மாவைப் பார்த்தான்.

"ஏம்மா... நளினிக்கு இஷ்டமில்லாத இடத்தை எதுக்குப் பேசி முடிக்கணும்...?"

"உங்கப்பா இஷ்டப்பட்டுட்டாரேப்பா..." — அம்மா விடமிருந்து பலவீனமான குரலில் பதில் வந்தது.

"அப்பா இஷ்டப்பட்டா போறுமாம்மா...? நளினி இஷ்டப்பட வேணாமா...? கல்யாணம் பண்ணிக்கப் போறது அவதானே ...?"

அதற்கு அம்மா மௌனிக்க, அவனே மீண்டும் கேட்டான்.

"ஏம்மா... நளினிக்கு மாப்பிள்ளை பிடிக்கலியா...?"

'ஆமாம்' என தலையாட்டினாள்.

"ஏம்மா... படிச்சவரு தானே...?"

"அமெரிக்காவில் எம்.பி.ஏ படிச்சிருக்காருப்பா..." — சித்தப்பா முந்திக் கொண்டு சொன்னார்.

அவன் சித்தப்பா பக்கம் திரும்பினான்.

"நல்ல வசதியான இடம்தானே சித்தப்பா...?"

"ம்... நம்பளை மாதிரி மூணு மடங்குப் பணம்..."

"பின்ன ஏன் நளினிக்குப் பிடிக்கலை...?"

"____"

"சொல்லுங்க சித்தப்பா... மாப்பிள்ளைக்கு என்ன குறை...?"

"ஒரு குறையுமில்லப்பா... நளினியின் நிறத்துக்குக் கொஞ்சம் கருப்பு... அவ்வளவுதான்" —முதல் முறையாகச் சித்தி வாயைத் திறந்ததும் அம்மா சட்டென்று சொன்னாள்.

"கொஞ்சம் என்ன...? நிறையவே கருப்பு. ரெண்டு பேரும் பக்கத்துல நின்னாங்கன்னா பச்சரிசியும், எள்ளுமாத் தெரிவாங்க... அது மட்டுமில்லாம குண்டா தொப்பை விழுந்து பார்க்க வயசான மாதிரி கூட இருக்காரு..."

"சரிம்மா... இதெல்லாம் அப்பா கண்ணுல படாமலாப் போயிடுச்சு...?"

"பணம் இருக்கேப்பா... கோடி கோடியா இருக்காமே...?"

"ஏம்மா...அந்தப் பணத்தை விட நளினியின் சந்தோஷம் முக்கியம்ன்றதை அப்பாகிட்ட எடுத்துச் சொல்லக் கூடாது...?"

"உங்கப்பா கிட்டயா...? நானா...?!" —அம்மா அதிர்ந்து, மிரண்டு அவனைப் பார்த்தாள்.

"ஏம்ப்பா... தெரியாத மாதிரி கேட்கறியே...? உங்கப்பா முன்னால நின்னு யாராவது வாயைத் திறக்க முடியுமா...?"



அந்த உண்மை கூரான அம்பு மாதிரி மனதில் தைத்தது. நிஜம்தான். அப்பாவின் எதிரில் நின்று யாராலும் வாயைத் திறக்க முடியாது. அதிலும் அம்மாவால் முடியவே முடியாது. ஆனாலும் எப்படியாவது அந்த கல்யாணத்தை நிறுத்த வேண்டுமென்று தோன்றியது அவனுக்கு.

"ஏம்மா... இப்படி எல்லாருமே பயந்துகிட்டுப் பேசாம இருந்தா எப்படி...? நளினிக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லேன்னு யாராவது அவர்கிட்ட எடுத்துச் சொல்ல வேணாமா?"

"நீதான் சொல்லேம்ப்பா..."—டக்கென்று சித்தப்பா கேட்க,

"நானா...?!" என்று அதிர்ந்து போய் அவரைப் பார்த்தான் அவன்...

# 4

சக்தியின் அதிர்ச்சிக்குக் காரணமிருந்தது. பயத்திற்குக் காரணமிருந்தது. அதுவரை அப்பாவின் எதிரில் நின்றதில்லை அவன். சகஜமாக நான்கு வார்த்தைகள் பேசினதில்லை. பேசுவதற்கான நேரமும் சந்தர்ப்பமும் கிடைத்ததுமில்லை.

எது வேண்டுமானாலும் அப்பாவின் காரியத்ரிசி கணேசன் மூலமாகத்தான் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். கணேசன் அப்பாவின் வீட்டு விஷயங்களைக் கவனிக்கின்ற காரியதரிசி. அலுவலக விஷயங்களுக்கென தனியாக மூன்று காரியதரிசிகள் இருக்கிறார்கள். வீட்டுப் பிரச்சினை பற்றின எந்த விஷயமானாலும் கணேசனைத் தவிர்த்து நேராக அப்பாவிடம் போக முடியாது. அப்படியே போனாலும் அவர் மீண்டும் கணேசனைத் தான் கூப்பிடுவார்.

"என்னய்யா... ஏதோ சொல்றாங்களே... கவனிக்கக் கூடாது ..? இதையெல்லாம் நான் பார்க்க முடிமாய்யா ...?"

அந்த அதட்டலில் கணேசனின் மெல்லிய உருவம் இன்னமும் ஒடுங்கிப் போகும். குரல் நடுங்கும் வார்த்தைகள் தடுமாறும்.

"ஸாரி சார்... வெரி ஸாரி..." என்று மன்னிப்பு கேட்டு. பேசப் போனது அம்மாவானாலும் வெளியே அழைத்துக் கொண்டு வந்து விடுவார். பின்னர் அம்மாவிடம் மிகப் பணிவாக மன்னிப்பு கேட்கும் குரலில் சொல்வார்.



"...எதுவானாலும் என்கிட்ட சொல்லுங்கம்மா... ஒரு குறை இல்லாம செய்து தந்துடறேன்..."

அதைக் கேட்டு அம்மா வருத்தம் தோயச் சிரிப்பாள்.

"எல்லாத்தையும் உன்கிட்ட சொல்ல முடியுமா கணேசன்...? அவுருகிட்ட மட்டுமே சொல்லக் கூடிய விஷயங்களும் இருக்குமில்ல...?"

"இருக்கும்தாம்மா..." என்று ஆமோதித்து விட்டுப் பின்னர் பரிதாபமாகக் கேட்பார்.

"நான் என்ன செய்ய முடியும் சொல்லுங்கம்மா...? ஐயாவோட உத்தரவுப் படிதானே நடக்க முடியும் ?"

கணேசனது கெஞ்சலுக்குப் பரிதாபப்பட்டே இவர்கள் அப்பாவை அணுக மாட்டார்கள். அவரிடம் போய் எதுவும் கேட்க மாட்டார்கள்.

அப்பாவின் இருப்பிடம் என்பது பெரிய கோட்டை மாதிரி. அத்தனை சுலபமாக உள்ளே நுழைந்து விட முடியாது. அவரைப் பார்த்து விட முடியாது. பேசி விட முடியாது.

ஒரே ஒரு முறை அப்பா இவனது அறைக்குள் நுழைந்திருக்கிறார். முன் அறிவிப்பு எதுவுமின்றி, இன்டர்காமில் கூட கூப்பிட்டுச் சொல்லாமல் அப்பா உள்ளே நுழைந்ததும் இவன் பதறிப் போனான். எழுந்து நின்று தடுமாறினான். இவனது தடுமாற்றத்தையும், படபடப்பையும் கவனிக்காதவராகக் கேட்டார் அவர்.

"+2 பரிட்சை ரிஸல்ட் வந்திடுச்சு. நல்லமார்க் எடுத்து பாஸ் பண்ணியிருக்க...மேல என்ன படிக்கப் போறதா உத்தேசம்...?"

இவன் தயங்கித் தயங்கி மெதுவாக மெல்லிய குரலில் சொன்னான்.

"பி. ஏ. சேரலாம்னு இருக்கேன்ப்பா..."

"என்ன...?!—அது அதட்டலா, உறுமலா, அல்லது வெறும் 'என்னதானா...' என்பதை நிர்ணயிக்க இயலாத இவன் அவரது முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அந்த முகத்திலிருந்தும் தெரிந்து கொண்டு விடமுடியாது. எந்த வித உணர்வுகளையும் வெளிப்படுத்தாத இறுகிய முகம் அவருடையது. கோபமோ, வெறுப்போ உற்சாகமோ, சந்தோஷமோ எதையும் உள்ளடக்கியே பழக்கப்பட்ட முகம். அன்பு என்பதும், பாசம் என்பதும் அவருக்குத் தெரியுமா, அவரிடம் இருக்கின்றதா என்பதான கேள்விகள் நிறைய முறை இவன் மனதுள் எழுந்திருக்கின்றன. ஆனாலும் அவற்றிற்கான பதில்கள் மட்டும் கிடைத்ததே இல்லை.

பகவத்கீதை சொல்கின்ற மாதிரி பற்றற்று வாழ்கிறாரா அப்பா, அல்லது ஹிட்லர் மாதிரி சர்வாதிகார வாழ்க்கை நடத்துகிறாரா என்பதே புரியாத, மிகப் பெரிய புதிராக, தன்னைச் சுற்றிலும் ஒரு கோடு போட்டுக் கொண்டு, அனைவரையும் தூரத்தள்ளி நிறுத்தியே பழக்கப்பட்டு விட்டதனால் அவருடைய கேள்வியின் பாவத்தைப் புரிந்து கொள்ள இயலாமல் தன் ஆசையை மட்டும் வெளிப்படுத்தினான்.

"ஆமாம்ப்பா... ஆங்கில இலக்கியம் முடிச்சு, ஏதாவது தீஸிஸ் எழுதி டாக்ட்ரேட் வாங்கணும்னு எனக்கு ஆசை..."

"ரப்பிஷ்!" என்றார் அவர்.

"ஆங்கில இலக்கியமும் வேணாம். ஒண்ணும் வேணாம். ஆங்கில இலக்கியத்தை வச்சிக்கிட்டு நமக்கு இருக்கிற தொழிற்சாலை அத்தனையும் நிர்வகிக்க முடியாது. அதனால் ஒழுங்கா இன்ஜினீரிங் சேரு..."

இவனுக்குள் எதுவோ இடறிற்று. உள்ளுக்குள் எழுப்பிய பெரிய மாளிகை மடமட வென்று சரிந்து



விழுந்தது. கண்கள் கலங்கின. முகம் கலங்கிற்று. குரல் கூட கலக்கமாக வந்தது.

"இல்லப்பா...எனக்கு இன்ஜினீரிங் சேர விருப்பமில்லப்பா..."

"முட்டாள் மாதிரி பேசாத. நான் சொல்றதைக் கேளு...கணேசன் நாளைக்கு கிண்டி என்ஜீனீரிங் காலேஜ்லேருந்து அப்ளிகேஷன் வாங்கிட்டு வருவான். அதை எழுதி அனுப்பு...மற்றதை நான் பாத்துக்கறேன்... ஓ. கே...?"

அன்றிரவு முழுதும் இவன் அழுதான். கலங்கிக் கண்ணீர் வடித்தான். அம்மாவின் மடியில் முகம் புதைத்து குமுறினான்.

"எனக்கு இன்ஜினீரிங் படிக்கப் பிடிக்கலேம்மா. இயந்திரங்களோடு பழகி நானும் ஒரு இயந்திரமாக மாறிடுவேன்னு தோணுது. அதனால ஆங்கில இலக்கியம் தாம்மா பிடிச்சிருக்கு..."

அம்மா அவனது தலை முடியைக் கோதி விட்டாள். முதுகை வருடினாள். எப்போதும் பார்க்கிற மாதிரி கனிவாகப் பார்த்தாளே தவிர ஒன்றும் சொல்லவில்லை.

மறுநாள் கணேசன் கொண்டு தந்த விண்ணப்பத் தாளைப் பூர்த்தி செய்தான். நுழைவுத் தேர்வு எழுதினான். பின்னர் சம்பளம் கட்டினான். இப்போது கல்லூரிக்குப் போய்க் கொண்டிருக்கிறான், படித்துகூட முடிக்கப் போகிறான்.

ஆனால் கல்லூரியில் காலடி எடுத்து வைத்த முதல் நாள் அப்பாவாக மீண்டும் அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். இவன் தயங்கித்தயங்கி வீட்டை ஒட்டி அவுட் ஹவுஸ் மாதிரி இருந்த கட்டப்பட்ட அவரது இருப்பிடத்திற்குள் நுழைந்தான். அவனே எதிர்பாராத வகையில் அப்பா வாசலில் நின்று அவனை வரவேற்றார். அவனது முதுகில் தட்டி 'குட்பாய்' என்றார்.

அதில் சிலிர்த்துப் போனான் அவன், அந்தச் சிலிர்ப்பு உடல் முழுவதும் அலையாக ஓடிற்று. முதல் முறையாக அப்பாவும் மனிதர்தான் என்கிற எண்ணம் தோன்றிற்று. மெல்ல அவரது முகத்தை ஏறிட்டுப் பார்த்தபோது அவரே கேட்டார்.

"காலேஜுக்குக் கிளம்பிட்டியா...?"

ஆமாம் என்கிறாற் போல் தலையாட்டினான்.

"இன்னிக்குத்தானே காலேஜ் திறக்கறாங்க...?"

அதற்கும் தலையாட்டாலே பதில்.

"முதல் முதலா காலேஜுக்குப் போகப் போற இல்லையா...?"

"ஆமாம்ப்பா..."

"ஆல் தி பெஸ்ட். நல்லாப் படி. முதன் முதலா காலேஜ்ல நுழையப் போகிற உனக்கு ஒரு பரிசு தரணும்னு தோணிச்சு. உடனே வாங்கிட்டேன். இந்தா.... பிடி..."

ஒரு அழகான வளையத்தில் நுழைக்கப்பட்ட சாவியை அவனிடம் நீட்டினார். அதை வாங்கிக் கொண்ட அவன் எதன் சாவி அது என்பது புரியாமல் திகைத்தான்.

"என்ன பார்க்கற ..? கார் சாவி. உனக்குப் பரிசாகத் தரணும்னு நேத்துதான் வாங்கினேன். என்ன கார்னு சொல்லு பார்க்கலாம்...?"

'கல்லூரியில் காலடி எடுத்துக் கூட வைக்கவில்லை. அதற்குள் கார் பரிசா...!' அவன் எதிர்பார்க்காத ஒன்று. ஆதலால் அந்த அதிர்ச்சியிலிருந்தே நீங்காதவனாக பதில் சொல்லாமல் நின்றான்.

அவரே பேசினார்.



"உனக்கு ரொம்பப் பிடிச்ச மெர்ஸிடெஸ் பென்ஸ். கலர் கூட உனக்குப் பிடிச்ச சாம்பல் நிறம்..."

இவனுக்கு மூச்சு முட்டிற்று. நெற்றி வியர்த்தது. பென்ஸ்கார்! இவன் கற்பனை கூட செய்திராதது. 'எதற்கு இதை ஈடு செய்கிறார் அப்பா...?'

ஆனாலும் அன்று அந்தக் காரை ஓட்டிக் கொண்டு கல்லூரிக்குள் நுழைந்த அனுபவம் இருக்கிறதே...!

இன்று நினைத்தாலும் பசுமையாக நெஞ்சில் படருகின்ற அனுபவம். மறக்கவே இயலாத அனுபவம்... அன்றுதான் அவன் அப்பாவின் அருகில் நின்று பேசினான். அதற்குப் பின் அவரைப் பார்க்கின்ற சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கின்றனவே தவிர பேசுகிற சந்தர்ப்பம் ஏற்பட்டதே இல்லை.

அப்படிப்பட்ட அப்பாவிடம் பேசுவதா! அதிலும் இவனா...? அதுவும் அவர் முடிவு செய்து விட்ட இந்தத் திருமணம் பற்றியா...? சித்தப்பா விளையாடுகிறாரா...? தங்கையின் கல்யாணம் பற்றி பேசக் கூடிய வயதா அவனுக்கு...? அதுவும் அப்பாவிடம் பேச முடியுமா...? எல்லாம் தெரிந்தும் எத்தனை சுலபமாக 'நீதான் பேசேன் தம்பீ...! என்று சொல்லி விட்டார் அவர்...

நினைத்த போது சித்தப்பாவின் மீது கோபம் வந்தது. தன்னால் இயலாததை மற்றவர்கள் தலையில் சுமத்தப் பார்க்கிற சாமர்த்தியம் புரிந்தது. ஆனால் யோசித்துப் பார்த்த போது சித்தப்பாவை விட இதில் அக்கறையுள்ளவன் அவன்தான் என்பதும் பிடிபட்டது. அதிலும் நளினி அவன் தங்கை. ஒரே தங்கை. பணத்தினால் கிடைக்கக் கூடிய வசதிகளையும் ஆடம்பரத்தையும் தவிர மனம் மட்டுமே உணரக் கூடிய எதையும் அனுபவித்ததில்லை அவள். வாழ்க்கையின் வர்ணங்களையும், அழகுகளையும் கண்டதில்லை.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியத் திருப்பம் திருமணம் என்பது. அதைப் பொறுத்தே அவளது எதிர்காலம் அமைகிறது. சந்தோஷம் அமைகிறது. நிறைவு என்பது ஏற்படுகிறது. அப்படிப் பட்ட திருமணம் மனதிற்குப் பிடிக்காததாக, வற்புறுத்தலுக்காக நடைபெறும் என்றால் அப் பெண்ணின் எதிர்காலம் இருண்ட காலமாகிவிடும். அவளது கனவுகள் கற்பனைகள் எல்லாம் கலைந்து போய்விடும். உதடுகள் சிரிப்பை இழக்கும். முகம் களை யிழக்கும். உடம்பு இயந்திரமாகும். வெறும் கூடாக உலவி வரும்.

கூடாது. இது போன்ற ஓர் நிலைமை எந்தப் பெண்ணிற்கும் ஏற்படக்கூடாது. வேறு எந்தப் பெண்ணிற்கும் ஏற்படக் கூடாது என்கிற போது நிச்சயம் நளினிக்கு ஏற்பட்டு விடக் கூடாது.

வீட்டிற்குள் அடைத்து வைக்கப்பட்ட அந்தப் பறவை இனிமேலாவது வெளி உலகைக் காண வேண்டும். சந்தோஷமாய் சுதந்திரமாய்ப் பறக்க அனுமதிக்கப்பட வேண்டும். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். சூரிய வெளிச்சத்தையும், நிலவின் குளிர்ச்சி யையும் ஸ்பரிசிக்க வேண்டுமே தவிர மீண்டும் மற்றொரு இருட்டறைக்குள் தள்ளப்பட்டு விடக் கூடாது. சுவாசிக்கத் திணறக் கூடாது...

அதற்குத் தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்று அவன் முடிவு செய்து கொண்டான் நளினி சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் அப்பாவிடம் பேசுவது என்பதைத் தீர்மானித்துக் கொண்டான். எப்படியாவது அந்தக் கல்யாணத்தை நிறுத்த உறுதி செய்து கொண்டான்.

அந்த உறுதி ஏற்பட்டதும், திடம் ஏற்பட்டதும் தன்னம்பிக்கையோடு சித்தப்பாவைப் பார்த்துக் கேட்டான்.



“சித்தப்பா... அப்பா இப்போ எங்கே இருக்காரு...?”

“அவருடைய இடத்துலதான் இருக்காரு...”

“கூட யார் யாரெல்லாம் இருக்காங்க தெரியுமா...?”

“கணேசனைத் தவிர வேற யாருமில்லேன்னு நினைக்கிறேன்...”

இவன் இன்டர்காமில் கணேசனைக் கூப்பிட்டான். கணேசன் மறுக்க இயலாதவாறு ஏதோ ஒரு வேகம் உந்தித் தள்ள மிக அழுத்தமான குரலில் சொன்னான்;

“நான் அப்பா கிட்ட பேசணும் கணேசன்...”

கணேசன் ஒரு வினாடி ஆடிப் போவதை உணர முடிந்தது. குரலின் நடுக்கத்திலிருந்து அதை அவனால் உணர முடிந்தது.

“எப்...பப் பேசணும் தம்பி...?”

“இப்பவே... இந்த நிமிஷமே...”

“...என்ன விஷயம் தம்பி...?”

“அவர் கிட்டதான் சொல்ல முடியும்...”

கணேசன் தயங்க இவன் கேட்டான்,

“என்ன...?”

“இல்ல... அப்பா குணம் தெரியுமே... என்ன சொல்லுவாரோ...?”

“கேட்டுச் சொல்லுங்க...”

“...என்கிட்ட சொல்லுங்களேன். நான் அவர்—”

“இல்ல. அவர் கிட்டதான் சொல்லணும்!”

“அப்படின்னா ஒரு நிமிஷம் இருங்க தம்பீ... கேட்டுக்கிட்டு வரேன்...”

சில வினாடிகளுக்குப் பின் அவர் சொன்னார்;

“வரச் சொல்றார், வாங்க தம்பீ...”

# 5

பெரிய சோபா ஒன்றில் சரிந்து உட்கார்ந்திருந்தார் ராஜரத்தினம். கையில் பைப் இருந்தது. எதிர் டீபாயில் வெளிநாட்டு விஸ்கி பாட்டிலும், கண்ணாடி டம்ளரும், ஸ்பென்சர் சோடாவும் வைக்கப்பட்டிருந்தன.

தன் எதிரில் வந்து நின்ற சக்திவேலை கவனிக்காத மாதிரி இருந்தார் அவர். கண்ணாடி டம்ளரில் விரல் அளவு விஸ்கி ஊற்றி மீதம் சோடாவைத் திறந்து நிறைத்துக்கொண்டார். பின்னர் மெல்ல உறிஞ்சியவாறு அவனை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன?" என்ற கேள்வி அவரிடமிருந்து வந்த போது சக்தியின் முதுகுத் தண்டு சொடுக்கிற்று. நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பின. நாக்கு வரண்டு போயிற்று. சட்டென்று எற்பட்ட பயம் நெஞ்சைக் கவ்விக் கொள்ள அவரது முகத்தைப் பார்க்கிற தைரியமின்றி, கேட்க வந்ததைக் கேட்கிற துணிச்சலற்று தலையைக் குனிந்து கொண்டான் அவன்.

அவனிடமிருந்து பதில் வராததைக் கவனித்த ராஜரத்தினம் மிக நிதானமாகக் கண்ணாடி டம்ளரைக் காலி செய்தார். இன்னொரு பெக் ஊற்றி சோடா கலந்து மீண்டும் வாயருகில் கொண்டு போனவர், நிறுத்தி விட்டுக் கேட்டார்.

"பழக்கமுண்டா...?"

"என்னப்பா...?"



"ட்ரிங்க்ஸ் சாப்பிடற பழக்கமிருக்கான்னு கேட்டேன்..."

"ஐயோ... இல்லப்பா..."

"நிஜமா...?"

"சத்தியமாப்பா..."

"இதுக்கெல்லாம் போய் எதுக்கு ஒரு சத்தியத்தை வீணாக்கற...? ம்...?"

அவன் பேசாதிருந்தான். அவரே மறுபடியும் பேசினார்.

"வா... வந்து இப்படி உட்காரு .."

உடனே கீழ்ப் படிந்தான்.

காலியான டம்ளரை டீபாய் மீது வைத்து விட்டு பைப்பை எடுத்து புகைத்தவர், புகையை நெஞ்சு முழுவதும் நிரப்பிக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்.

"சிகரெட் பழக்கம் உண்டா...?"

"ம்ஹூம். அதுவும் இல்லப்பா..."

"எனக்காகச் சொல்றியா... இல்ல, நிஜமாகவே கிடையாதா...?"

"சத்தி—" என்று ஆரம்பித்தவன் சடாரென்று நிறுத்தி அவர் முகத்தை பயத்தோடு ஏறிட்ட போது அவரது உதட்டில் லேசான முறுவல் ஓடிக் கொண்டிருந்தது

"சில விஷயங்கள் பழக்கமாயிடுச்சுன்னா விடறது கஷ்டமா இருக்கு... இல்ல...?"

அவன் அதிர்ந்து போய்ப் பார்த்தான்.

"சத்தியம் போடறதைச் சொன்னேன்."

அவன் பேசாதிருந்தான். அவரே மேலே பேசினார்.

"உனக்கு மட்டுமில்ல... எல்லாருக்குமே பழக்கமாயிட்ட சிலதை விடறது கஷ்டம் தான்... என்னையும் சேர்த்தே சொல்றேன்." என்றவர் பின் ஏதோ நினைவிற்கு வந்தவராக அவனைத் தீவிரமாகப் பார்த்தார்.

"ஏதோ பேசணும்னு கணேசன்கிட்ட சொன்னியாமே...?

சட்டென்று அவர் விஷயத்திற்கு வந்ததும் அவன் தடுமாறினான்.

"ஆ... ஆமாம்ப்பா..."

"அதுவும் உடனே பேசணும்னு கேட்டியாம்...?"

"ம்... ஆமாம்ப்பா..."

"அவ்வளவு அவசரமாப் பேசணும்னு சொல்லிட்டு வாயை மூடிக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்...? ம்... பேசு..."

அவனால் உடனே ஆரம்பிக்க முடியவில்லை. எப்படி ஆரம்பிப்பதென்றும் தெரியவில்லை. அப்பாவின் பார்வை கூர்மையான ஈட்டி மாதிரித் துளைக்க, எழுந்து ஓடிப்போய் விட வேண்டும் போலிருந்தது.

அவனது சங்கடங்களையெல்லாம் உணர்ந்தும் உணராதவராகக் கேட்டார் அவர்.

சொல்லு... இது வரை இந்த மாதிரி என்கிட்ட பேசணும்னு நீ கேட்டதே இல்ல... இப்போ கேட்டிருக்கன்ற போது விஷயம் ரொம்ப முக்கியமானதா இருக்கணும்னு தோணிச்சு... என்ன... நான் சொல்றது சரிதானே...?"



"ஆ... ஆமாம்..."

"என்ன விஷயம்...?"

"............"

"ப்சு...! எனக்கு நேரத்தை வீணடிக்கிறவங்களைக் கண்டா கொஞ்சம் கூடப்பிடிக்காதுன்னு தெரியுமில்ல...?"

அவன் தலையாட்டினான்.

"அப்ப... சீக்கிரம் சொல்லு..."

"வந்து... வந்து... நளினிக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கீங்களாப்பா?"

"ஆமாம்..." என்ற போது அவர் அந்தப் பேச்சை எதிர்பார்க்கவில்லை என்பது குரலில் புலப்பட்டாலும் முகம் இறுகியே கிடந்தது. இவன் தயங்கித் தயங்கி மீண்டும் மெதுவாகக் கேட்டான்;

"நிச்சயமே பண்ணிட்டீங்களாப்பா...?"

"ஏன்... எதுக்குக் கேக்கற...?"

"இல்ல... வந்து... வந்துப்பா... நளினிக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்டீங்களா...?"

"யாரைக் கேட்கணும்...?"

அவன் உமிழ்நீரை விழுங்கியவாறு சொன்னான்.

"நளினியைத்தான்..."

"எதுக்குக் கேட்கணும்...?"

"அப்பா!?"

"எதுக்குக் கேட்கணும்னு கேட்டேன்...?"

"இது அவளுடைய வாழ்க்கை இல்லியாப்பா...?"

“அப்படின்னா அதுல எனக்கு சம்பந்தமில்லேன்னு சொல்ல வரியா?”

“ஐயோ… அப்படியில்லப்பா… அவளுக்கும் இஷ்டமிருக்கணுமில்ல…?”

“ஓஹோ… இஷ்டமில்லேன்னு சொல்லத்தான் நீ வந்திருக்கியா…?”

“— —”

“சொல்ல வந்ததை விட்டுட்டு இப்படிப் பேசாமல் நின்னா எப்பிடி…?”

உடனே அவன் தனக்குள்ளிருந்த தைரியத்தையெல்லாம் ஒன்று திரட்டிச் சொன்னான்;

“ஆமாம்ப்பா… நளினிக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லதான்…”

“ஏன் இஷ்டமில்லியாம்…?”

“…வந்து… மாப்பிள்ளை கருப்பா இருக்காராம்..”

“கறுப்பா இருக்கிறவங்க மனுஷங்க இல்லியா…?”

“— —”

“நீங்கள்ளாம்தான் தென் ஆப்பிரிக்க விடுதலை பற்றி பேசறீங்க இல்லியா…?”

“ஐயம் ஸாரிப்பா… கறுப்பா இருக்கிறவங்க மனுஷங்க இல்லேன்னு சொல்ல வரலப்பா… மனுஷங்கதான். மதிப்புக்கு உரியவங்கதான், ஆனா மனசுக்குப் பிடிச்சவங்களா இருக்கணும் என்கிற அவசியமில்லையேப்பா…”

“ரப்பிஷ்! என்ன பேசற நீ…? மனசுன்றது எதுன்னு தெரியுமா உனக்கு….?”



“இது என்னப்பா கேள்வி…? எல்லாருக்கும் இருக்கிறதுதாம்ப்பா மனசு…”

“அது சரி மனசு எல்லார்கிட்டயும் இருக்குன்றதை ஒத்துக்கறேன். ஆனால் மூளை சிலபேர் கிட்டத்தான் இருக்கு…”

“அப்…பா…!”

“முட்டாள், மனசு மட்டும் இருந்தாப் போறாது, வெறும் உணர்ச்சி பூர்வமா மட்டும் சிந்திச்சால் போறாது, மூளை வேணும். அறிவு பூர்வமா சிந்திக்கத் தெரியணும். இல்லாட்டி உன்னை மாதிரி முட்டாள்களாகத்தான் இருக்க முடியும்…”

“அப்பா…!”

“உன் அப்பாகிட்ட பணம் இருக்கு. சாதாரணப் பணமில்ல… கத்தை கத்தையா, கரன்ஸிநோட்டா இருக்கு…லட்சம் லட்சமா இருக்கு. அதனால் உனக்கு அருமை தெரியலை. எப்பவுமே நம்மகிட்ட இருக்கிற பொருளின் அருமை மனுஷங்களுக்குத் தெரியாது. கையை விட்டுப் போனால்தான் தெரியும். பணமில்லாதவங்களைக் கேட்டுப் பாரு, சொல்வாங்க. நாய் அலைச்சல் அலையறதைப் பத்தி நாள் முழுசும் பேசுவாங்க…”

“நம்ம கிட்டத்தான் பணமிருக்கேப்பா…?”

“நம்ம கிட்ட மட்டும் இருந்தாப் போதுமா…? உன் தங்கச்சி நளினிகிட்ட இருக்க வேணாமா…? அவ போகப் போற எடத்துல இருக்க வேணாமா…?” இந்த மாதிரி அரண்மனை வாழ்க்கை வாழ்ந்தவளால் சாதாரண வாழ்க்கை வாழ முடியுமா சொல்லு…? வெள்ளை வெளேர்னு, அழகா இருக்கிற ஒருத்தன் சாதாரணக் குடும்பத்துலேர்ந்து வந்தவனா இருந்தால் கல்யாணம் செய்துப்பாளா இவள்…?”

"நிச்சயமா செய்துப்பாப்பா... அவ மனசுக்குப் பிடிச்சிருக்கணும். அதுதான் முக்கியம். பணம், பதவி, அந்தஸ்து இதெல்லாம் அவசியமில்லே..."

"அதுசரி...உன்னை மாதிரி வாழ்க்கை அனுபவமில்லாமப் பேசரவங்களுக்கு அவசியமிருக்காது. அந்த, நேர உணர்ச்சி வேகத்துல வார்த்தைகளைக் கொட்றவங்களுக்கு அவசியமிருக்காது. ஆனால் நடைமுறை வாழ்க்கைக்குப் பணம் ரொம்ப ரொம்ப அவசியம். வாழ்க்கை சுலபமானதா இருக்கணும்னால் பணம் வேணும். சந்தோஷமானதா இருக்கிறதுக்கும் அதுதான் தேவைன்றதை இல்லாதவங்களைக் கேட்டுத் தெரிஞ்சுக்க. நீ தெரிஞ்சுக்கிட்டா மட்டும் போறாது. உன் தங்கைக்கும் எடுத்துச் சொல்லு . என்ன...? புரியுதா...? போய் ஒழுங்கா வேலையைப் பாரு... போ..."

அவனுக்கு உடம்பு பதறிற்று. நெஞ்சு பதறிற்று. அழுத்தமாக அவர் சொன்ன கடைசிச் சொல்லுடன் அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது தெரிந்தது. இதற்குமேல் பேசவேண்டிய அவசியமில்லை என அவர் சொல்லாமல் சொல்வது புரிந்தது. ஆனாலும் கடைசி முறையாகக் கேட்டுவிடுகிற நோக்கத்துடன் வாய் திறந்தான் அவன்.

"...வந்து ... வந்துப்பா ... நளினியின் இந்தக் கல்யாணம்—"

"அதான் சொன்னேனில்ல...? ஜனவரி இருபத்திரெண்டாம் தேதி நாள் குறிச்சிருக்கேன். விஜயாசேஷ மகாலை புக் பண்ணச் சொல்லியிருக்கேன். தாஜ், சோழா, கன்னிமாரா எல்லா ஓட்டல்லேயும் ரூம் புக்பண்ணச் சொல்லியாச்சு. ஜனவரி இருபத்திரெண்டுக்கு இன்னும் அதிகநாள் இல்ல...அதுக்குள்ள எல்லா வேலையும் முடிஞ்சாகணும்...அதனால கல்யாண வேலைகள்ல நீயும் பொறுப்பு ஏத்துக்கணும், கூட உதவி செய்யணும்..."



"அப்பா...!"

"ம்... உனக்கு ஏத்ததா ஒரு வேலை தரலாம்னு தோணுது. முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு அன்னிக்கு சாயந்திரம் பரத நாட்டியக் கச்சேரி வைக்கலாம்னு இருக்கேன். புதுசா நம்ம நடேசப் பிள்ளையோட சிஷ்யப் பொண்ணு ஒன்னு ரொம்ப நல்லா ஆடறா'ன்னு அவரு சொல்லிட்டிருக்காரு. அத்தனை அற்புதமா ஆடற ஆட்டக்காரி சமீபகாலத்துல உருவாகலன்னு பெருமையா பேசிட்டிருந்தாரு... அந்தப் பொண்ணு பேரு கூட என்னவோ சொன்னாரு...மறந்து போயிடுச்சு... கணேசன் கிட்ட சொல்லி அந்தப் பொண்ணோட விலாசம் வாங்கித்தர சொல்றேன். நீயே நேராப் போய்ப் பார்த்து மாப்பிள்ளை அழைப்பு அன்னிக்கு சாயந்திரம் அந்தப் பொண்ணோட டான்ஸுக்கு ஏற்பாடு செய்திடு... என்ன...? கணேசன் கிட்ட கேட்டு பத்தாயிரம் ரூபாய் பணம் வாங்கிக்க. அதை அந்தப் பொண்ணுகிட்ட அட்வான்ஸ் பணமா கொடுத்திட்டு வந்துடு.. ஓ.கே.. போ... போய் கல்யாணம் நல்லபடியா நடக்கிறதுக்கு உண்டான வழியைப் பாரு... குட் நைட்!"

அதற்கு மேலும் அவன் தயங்கி நிற்பதைப் பார்த்த அவர் மிக அழுத்தமான குரலில் சொன்னார்.

"லுக் சக்தி... வாழ்க்கையின் நெளிவு சுளிவு அத்தனையும் தெரிஞ்சவன் நான். எப்போ, எதை, எப்படிச் செய்யணும்னு எனக்குத் தெரியும். மனசை அலட்டிக்காம உன் வேலையை கவனி... நாளைக்கே போய் நான் சொன்ன அந்தப் பொண்ணைப் பார். இதுக்கு மேல உன்கூட செலவழிக்க எனக்கு நேரமில்ல. அதனால நீபோய் கணேசனை அனுப்பு..."

வேறு எதுவும் பேச இயலாத நிலையில் அறையை விட்டு வெளியில் வந்தான் சக்தி...

# 6

கீழ் உதட்டைக் கடித்துத் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அப்பாவின் அறையை விட்டு வெளியில் வந்தான் சக்தி. செம்மண் பாதை வழியாக நடந்து வீட்டிற்குள் நுழைந்த போது அவனது வரவிற்காகக் காத்திருந்த அம்மாவும் சித்தப்பா, சித்தியும் எழுந்து நின்றார்கள். அவன் அவர்களை ஏறிட்டுப் பார்க்கிற துணிவற்றவனாகத் தலையைக் குனிந்து கொண்டான். அந்தத் தலைக்குனிவின் அர்த்தத்தை அம்மா புரிந்து கொண்டாள். பேசாதிருக்க இயலாமல் வாய்விட்டுக் கேட்டார் சித்தப்பா.

"அப்பா என்ன சொன்னாரு...?

"ம்... ஜனவரி இருபத்திரெண்டாம் தேதி கல்யாணம்னு சொன்னாரு . !"

ஒரு வரியில் அப்பாவின் முடிவையும், தன் இயலாமை யையும் தெரியப்படுத்திவிட்டு அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காதவனாக மடமடவென்று படியேறி தன் அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டான். தன் கோபத்தை, வெறுப்பை, ஆத்திரத்தை யார் மீது காட்டுவது என்பது தெரியாமல் கட்டிலில் விழுந்து தலைகாணியில் முகத்தைப் புதைத்துக் கொண்டபோது, அறைக் கதவு தட்டப்படுகிற சத்தம் கேட்டது.

இவனுக்கு எரிச்சல் வந்தது. எழுந்து போய் கதவைத் திறக்கப் பிடிக்காமல் "யார் அது...?" என்று கேட்டான்.

"நான்தாங்க கணேசன்..."

எழுந்து போய் கதவைத் திறந்தான்.



"என்ன ..?"

"ஐயா இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னா ருங்க..."

"என்னது ..?"

"பணம்..."

"எதுக்கு...?"

"டான்ஸ் ஆடற பொண்ணுகிட்ட கொடுக்கச் சொன்னாருங்க..."

"எவ்வளவு...?"

"பத்தாயிரங்க..."

"டான்ஸ் ஆடற பொண்ணு வீட்டுக்கு நான்தான் போகணுமா...?"

கணேசன் மௌனித்தார்.

"இல்லீங்க தம்பீ... அது மரியாதையா இருக்கும்னு அப்பா நினைக்கிறாரு..."

"யாருக்கு மரியாதை...?"

"கலைக்கு மரியாதைன்னு சொன்னாரு... இல்லைன்னால் என்னையோ, வேறு யாரையோ விட்டுத் தாங்க கொடுக்கச் சொல்வாரு..."

"மனுஷ மனசுக்கு மரியாதை காட்டத் தெரியாதவங்க கலையை மதிக்கிறாங்க இல்ல...?"

அவனது முணுமுணுப்பைக் காதில் வாங்கிக் கொள்ளாத கணேசன் கேட்டார்.

"தம்பீ...?"

"ஒண்ணுமில்ல... பணத்தை இப்படி மேஜைமேல வச்சிட்டுப் போங்க..."

அறைக்குள் நுழைந்து பணக்கவரை மேஜை மீது வைத்த கணேசன் சீட்டு ஒன்றை நீட்டினார்.

"என்னது...?"

"விலாசங்க..."

"யாருடைய விலாசம்...?"

"அந்தப் பொண்ணுது..."

"அதையும் மேஜை மேலேயே வையுங்க..."— அவன் அலட்சியமாகச் சொன்னான்.

"தம்பி எப்பப் போகப் போறீங்கன்னு சொன்னால் அவங்களுக்குப் போன் போட்டுத் தெரியப் படுத்திடுவேங்க..."

"நானேதான் போகணுமா...? வேற யாரையாவது அனுப்பி பேசிட்டு வரச் சொல்றேனே..."

"ஐயயோ... ஐயா உங்களையே போகச் சொன்னாருங்க..."

"போகலைன்னா...?"

"கோவிச்சுக்குவாருங்க..."

"நான் மட்டும் கோவிச்சுக்க மாட்டனா...? இந்தச் சின்ன விஷயத்துக்கெல்லாம் நான்தான் போகணுமா...? அதுவும் பேர், ஊர் தெரியாத ஒரு டான்ஸர் வீட்டுக்கு...?"

"பேர் ஊர் தெரியாதவங்க இல்லீங்க. சின்னப் பொண்ணுன்னாலும் இப்போ பிரபலமாகிக்கிட்டு வருதுங்க. ரொம்ப நல்லா ஆடுது. அந்தத் திறமைக்கு மதிப்பு கொடுக்கணும்னுதான் உங்களையே போகச் சொல்றாருங்க..."



11842
2888966

'பெரிய திறமை! தன் வீட்டுப் பெண்ணை வீட்ல அடைச்சு வைச்சிட்டு அடுத்த வீட்டுப் பெண்ணோட திறமையை மட்டும் மதிக்கக் கத்து வச்சிட்டிருக்காங்க...'

"என்ன தம்பி சொல்றீங்க... வர வர காது சரியாக் கேக்க மாட்டேங்குது..."

"அப்பா முணுமுணுத்தால் மட்டும் கேட்டுடும்..."

அவர் பேசாதிருந்தார்.

"சரி... அந்தப் பெண்ணோட வீடு எங்க இருக்குது...?"

"இங்கதாங்க... ராஜா அண்ணாமலை புரத்துல..."

"போன் பண்ணி நாளை ராத்திரி ஏழு மணிக்கு நான் வர்றதைத் தெரியப் படுத்திடுங்க... ஆமாம் பேர் என்ன சொன்னீங்க?"

"யாரு பேரு தம்பீ...?"

"உங்க பேரையா கேட்டேன்...? அந்தப் பொண்ணு பேரு..."

"ரவிச்சந்திரிகா...!"

'ரவிச்சந்த்ரிகா!' அந்தப் பெயரின் இனிமை அவன் மனதில் பதிந்தது. மென்மையான சங்கீதத்தைக் கேட்ட மாதிரி இருந்தது ஏன் என்பது தெரியாமல் மறுநாள் கல்லூரியில் அந்தப் பெயர் அவன் மனதிற்குள் திரும்பத் திரும்ப வந்து போயிற்று. அன்று மாலை கல்லூரி முடிந்து வீட்டிற்குக் கிளம்பியவன் நண்பன் ஒருவனிடம் கேட்டான்.

"ஆமாம்... ரவிச்சந்த்ரிகான்றது யாருடா...?"

"எந்த ரவிச்சந்த்ரிகா... டான்ஸராடா...?"

"ஆமாம்..."

"அவளைப் பார்த்தியாடா...?!" — நண்பனின் கண்கள் பளபளத்து ஆர்வத்திலும், எதிர் பார்ப்பிலும் மின்னின. முகம் அதிதீவிரமானதோர் பாவனை காட்டவே இவன் சற்று தயங்கியவாறு சொன்னான்.

"இல்ல.. ஏன் கேட்கற...?"

"அவளுடைய டான்ஸையாவது பார்த்திருக்கியா...?"

"ம்ஹூம்... ஏண்டா...?"

"பார்க்கணும்டா சக்தி... மின்னல் ஒன்னு வந்து மேடைல ஆடற மாதிரி இருக்கும். அந்த வேகம் லாவகம், முகபாவம்... இதெல்லாம் வைஜயந்திமாலா, பத்மினி, பத்மா சுப்ரமணியம் இவங்களுக்கெல்லாம்கூட இருந்ததில்ல தெரியுமா...?"

"போடா போ... என்ன பேசற...? அவங்கள்ளாம் நாட்டியத்துக்குனே பிறந்தவங்க..."

"இருக்கலாம்... ஆனா பிறந்தவங்களுக்கெல்லாம் வயசாகுது இல்ல... அது ஆகிப்போச்சே அவங்களுக்கு... இந்தப் பொண்ணுக்கு டீன் ஏஜ். வெறும் வயசு மட்டுமில்ல. அப்படிப்பட்ட அழகு. தகதகன்னு தென்னம்பூ மாதிரி நிறம். கண்ணும், மூக்கும், செப்பு மாதிரி வாயும் அஜந்தா எல்லோரா சிற்பம் மாதிரி, சித்திரம் மாதிரி என்ன அழகு தெரியுமா!"

"டேய்... டேய்... என்னடா ஆயிடுச்சு உனக்கு... இப்படி வர்ணிக்கிற... விட்டால் கண்ணதாசன் மாதிரி பாட்டு பாடிடுவ போல இருக்கு..."

"அவ அழகுக்கு கண்ணதாசன் போறாதுடா... கம்பன் வரணும் வர்ணிக்க..."

"சரி... நீ எப்போ பார்த்த அவளை...?"

"பிரம்மகான சபாவுல அவளுடைய பர்ஃபார்மென்ஸ் இருந்திச்சே... உங்கப்பாதானே தலைமை தாங்கினாரு..."



"ஓ...! அப்படியா...? எனக்குத் தெரியாது..."

'எதுதான் தெரிஞ்சிருக்கு உனக்கு...? ஆமாம் எதுக்குத் திடீர்னு அவளைப் பத்தி கேட்ட...?"

"என் தங்கைக்கு ஜனவரி இருபத்ரெண்டாம் தேதி கல்யாணம்டா..."—சொல்கிற, போதே அவனுக்குள் மனசு வலித்தது. இதைத் தடுத்து நிறுத்துகிற துணிவு இல்லையே...' என்கிற ஆதங்கம் ஏற்பட்டது. ஆனால் அதையெல்லாம் நண்பனிடம் சொல்லாமல் வெறும் விஷயத்தை மட்டும் சொன்னான். அதைக் கேட்ட நண்பன் அவனைக் கண்கள் அகலப் பார்த்தான்.

"இந்த ஜனவரி இருபத்ரெண்டா...?"

"ஆமாண்டா..."

"நீ எங்க கிட்ட சொல்லவே இல்லையேடா...?"

"நேற்றுதானே நிச்சயமாச்சு..."

"எங்க...?"

"விஜயா சேஷமகால்ல..."

"அதுக்கும் ரவிச்சந்த்ரிகாவுக்கும் என்ன சம்பந்தம்..?"

"முட்டாள். மாப்பிள்ளை அழைப்புக்கு அவளுடைய பரதநாட்டியம்தான்னு அப்பா முடிவு செய்திருக்காரு... அவளை பிக்ஸ் பண்ண இன்னிக்கு சாயந்திரம் அவ வீட்டுக்குப் போகப் போறேன்..."

"இன்னிக்கா...? எத்தனை மணிக்குப் போற...?"

"ஏழு மணிக்கு..."

"டேய், டேய் நானும் கூட வரேண்டா... அவளை அந்த சாக்குல கிட்ட இருந்து பாக்கலாம்டா..."

நண்பன் கெஞ்சக் கெஞ்ச இவன் மனதிற்குள் அவனை உடன் அழைத்துப் போகக் கூடாதென்று

தோன்றிற்று. அது ஏன் என்று தெரியவில்லை. அந்த நண்பனை மட்டுமல்ல. வேறு யாரையுமே கூட அழைத்துப் போகக் கூடாது என்கிற முடிவில் பொய் சொன்னான்.

"ஸாரிடா... அப்பா கூட வராங்கடா..."

"ஐயோ! உங்கப்பா வராருன்னா நான் வரலப்பா..."

வீட்டிற்கு வந்த போது காரணம் தெரியாத ஒரு சந்தோஷத்தில் மனசு மிதந்தது. நளினியின் கல்யாணத்தைப் பற்றின வேதனை கூட கொஞ்சம் குறைந்திருந்தது. குளித்து, தனக்கு மிகப் பிடித்தமான உடையணிந்து, தலையை நன்றாக வாரி, மேலே வெளி நாட்டு செண்ட்டை ஸ்ப்ரே செய்துக் கொண்டு கண்ணாடியில் தன்னை முழுதுமாய் ஒரு முறை பார்த்துக் கொண்ட போது நண்பர்களுடன் போன அந்த இந்தித் திரைப்படம் ஞாபகத்திற்கு வந்தது.

'கயாமத் ஸே கயாமத் தக்' என்ற அந்தப் படத்தின் கதாநாயகனான அமீர்கானைப் போன்றே தான் அழகாய், இளமையாய் இருக்கின்ற உணர்வுடன் கிளம்பினான் மறக்காமல் நேற்றிரவு கணேசன் மேஜை மீது வைத்து விட்டுப் போன பணத்தையும், விலாசத்தையும் எடுத்துக் கொண்டான்.

கீழே இறங்கி வந்து டிரைவரைத் தவிர்த்து தன் இன்னொரு வண்டியான மாருதியில் ஏறி தானே ஓட்டிக் கொண்டு போன போது அவன் மனதை மீண்டும் மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்ட பெயர் ரவிச்சந்த்ரிகா!

# 7

ராஜா அண்ணாமலைபுரத்தின் ஆரவாரமற்ற அமைதியில், மரங்களடர்ந்த சாலையின் ஓர் ஓரத்தில் மிகச்சிறியதாய், அழகானதாய் இருந்தது அந்த வீடு. எளிமையாகக் காணப்பட்டது. புதிதாகக் கட்டப்பட்டது என்பது தெரிந்தது. வெளிக்கதவு வெறும் ஸ்கூட்டரும், சைக்கிளும், மனிதர்களும் மட்டுமே போகக் கூடிய வசதியில் வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக வெளியிலேயே காரை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து போனான் சக்தி.

வீட்டிற்கும், வெளிச்சுவற்றிற்கும் இடையில் இருந்த நிலப்பரப்பு சின்னதாக இருந்தாலும் கச்சிதமாகத் தோட்டமாக்கப்பட்டிருந்தது. வாசல் குழல் விளக்கின் வெளிச்சத்தில் மல்லிகைச் செடியும், ரோஜாச் செடிகளும் தெரிந்தன. இன்னொரு பக்கத்தில் நித்ய மல்லிகை கொடியில் படர்ந்துக் கிடந்தது. பூத்திருக்கிற வாசனை நாசியை எட்டிற்று. இரு பக்கத் தோட்டத்திற்கு நடுவிலிருந்த ஒற்றையடிப் பாதை மங்களூர் ஓடுகள் பதிக்கப்பட்டு சிவப்பில் பளபளத்தன.

அதில் நடந்து வீட்டை நெருங்கினான் சக்தி. படியேறி அழைப்பு மணியை அழுத்துமுன் ஒரு வினாடி நிதானித்தான். வீடு இருந்த அமைதியில் உள்ளே யாருமில்லையோ என்று நினைத்தான். ஆனால் அவன் புறப்பட்ட போது கூட கணேசன் தயங்கித் தயங்கி வந்து நின்று சொன்னார்.

"தம்பீ... வெளிய எங்கயோ கிளம்பிட்டீங்க போல இருக்கு...?"

அதைக் கேட்டதும் இவனுக்கு எரிச்சல் வந்தது. 'நான் எங்கே போனால் உனக்கென்னய்யா...?' என்று கேட்கத் தோன்றிற்று. ஆனாலும் அவரது வயதையும், அப்பாவுடன் அவர் கொண்டிருந்த நெருக்கத்தையும் கருதி தன் எரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டான்,

"ஏன்...?"

"இல்ல...இன்னிக்கு சாயந்திரம் ஏழு மணிக்குத்தான் ரவிச்சந்த்ரிகாவோட அப்பாய்ண்ட்மெண்ட்..."

அதைக் கேட்டதும் அவனுக்குள் அடங்கிக்கிடந்த கோபம் குபீரென்று வெளிப்பட்டது.

"அவ யார் எனக்கு அப்பாய்ண்ட்மெண்ட் தர...?"

"ஐயயோ...அப்படிச் சொல்லலீங்க தம்பீ...ஏழு மணிக்கு நீங்க வருவீங்கன்னு தெரியப்படுத்தியிருக்கிறதைச் சொன்னேன்..."

"அப்ப அது என்னுடைய அப்பாய்ண்ட்மெண்ட் தானே தவிர அவளுடையதில்லை..."

"ஆமாம் தம்பீ...வாய் தவறி சொல்லிட்டேன். உங்க அப்பாய்ண்ட்மெண்ட்தான்..."—நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்று தோன்றிற்று அவருக்கு.

"ஞாபகமிருக்கு... அங்கேயும் போய்விட்டுத்தான் வருவேன்..."—அங்கேதான் போகிறேன் என்பதை ஒப்புக் கொள்ள அவனது உடம்பில் ஓடிய அப்பாவின் ரத்தம், பரம்பரைப் பணக்கார ரத்தம் இடம் கொடுக்கவில்லை.

"பணமும், அட்ரசும் எடுத்துக்கிட்டீங்களா...?"

"சும்மா தொண தொணக்காதீங்க. எல்லாம் எடுத்துக்கிட்டாச்சு..."



சுள்ளென்று விழுந்து விட்டுத்தான் வந்திருந்தான் அவன். ஆனால் இங்கு வந்து பார்த்தபின் வீட்டின் அமைதி ஏமாற்றம் தந்தது. தன்னை வரவேற்க வாசலில் யாரும் நிற்காததும், வாயிற்கதவு திறக்கப் படாததும் என்னவோ போலிருந்தது. ஒருவித கோபத்தையும் ஏற்படுத்திற்று. ஒருவேளை தான் வரப் போவதையே மறந்து வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியில் எங்கும் போய் விட்டார்களோ என்று தோன்றிற்று பழையகாலம் மாதிரி பூட்டு தொங்க விட்டு பூட்டப்படாமல் கதவிலேயே சாவி நுழைத்து பூட்டப்படுகிற வசதிகள் எல்லாம் இருக்கிறதே... என்றும் நினைத்துக் கொண்டான்.

அப்படி அவர்கள் போயிருப்பார்களானால் அதை மிகப் பெரிய அவமதிப்பாகக் கருதினான் அவன். தான் வருவதாகச் சொன்னபின்பும் வீட்டில் இல்லாது போனால் அதற்கு என்ன அர்த்தம்...? எப்படிப்பட்ட இடத்திலிருந்து வருகிறான் அவன்...! அவன் வர மாட்டானா என்று எத்தனைபேர் ஏங்குகிறார்கள்... நண்பர்களும், உறவினர்களும், தெரிந்தவர்களும் காத்துக் கிடக்கிறார்கள்...'நீ எங்க வீட்டுக்கெல்லாம் வருவியா...?' என்று ஆதங்கமாகக் கேட்கிறார்கள்...

அப்படிப்பட்ட யார் வீட்டிற்கும் போகாமல், வருவதாகத் தெரியப்படுத்திய பின்னரும் வீட்டில் இல்லாமல் கதவடைத்து சாத்தப்பட்டிருந்ததில் கோபமுற்று திரும்பிப் போய் விடலாமா என்று நினைத்தான். தான் போகின்ற இடங்களில் தன்னை வரவேற்கின்ற விதத்தை நினைத்து 'இங்கு வர ஒப்புக் கொண்டதே தவறு' எனத் தோன்ற அவன் திரும்பிய போது வாசல் கதவு திறக்கப்பட்டது. உள்ளேயிருந்து குபீரென்று ஊதுவர்த்தி வாசனையும், சாம்பிராணி வாசனையும் வந்தது. சற்று முன்னரே பூஜை செய்து முடித்ததன் அடையாளமாகக் கற்பூர மணம் கமழ்ந்தது.

ஏதோ கோவிலின் சந்நிதானத்தில் நிற்கிற உணர்வு ஏற்பட நிமிர்ந்து பார்த்தான் அவன்.

திறந்த கதவின் இடைவெளியில் நின்று கொண்டிருந்தாள் அந்த அம்மாள். தகதகவென்று நெருப்பின் ஜ்வாலை நிற்கிற மாதிரி தோன்றியது. பளிச்சென்ற முகம். வைரமூக்குத்திகளின் சுடர். கண்களும், மூக்கும் செதுக்கி வைத்த அமைப்பு. பார்வையில் அமைதி தெரிந்தது அருள் தெரிந்தது. கையெடுத்து கும்பிடத் தோன்றுகிற கம்பீரம் தெரிந்தது. உதட்டில் தெளிவான புன்னகை ஓடிக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்ததும் மிக இயல்பான குரலில் "யாருங்க...?" என்று கேட்டாள்.

இந்த முகம் காட்டிய அமைதியிலும், தெளிவிலும், கம்பீரத்திலும் சற்று நிதானப்பட்ட அவனை அந்தக் கேள்வி மீண்டும் எரிச்சல் ஏற்படுத்தியது. கோபப் பட வைத்தது. தன் கோபத்தை வெளிபடுத்துகிற வகையறியாதவனாக அழுத்தமான குரலிலேயே பதில் சொன்னான்.

"நான் ராஜரத்தினத்தின் வீட்லேர்ந்து வரேன்..."

"அவருடைய மகன் சக்—"

"ஆமாம்"

அந்த அம்மாளின் சிரிப்பு விரிந்தது. முகம் மலர்ந்தது. கண்கள் பளிச்சிட்டன.

"நல்ல கேள்வி' என்கிற கோபம் அவனுள் பொங்கிற்று. 'இதுதான் நீங்கள் வரவேற்கிற லட்சணமோ...?' என்று கேட்கத் துடித்த நாவை அடக்கிக் கொண்டு சொன்னான்.

"ரொம்ப நேரம் ஒன்னும் ஆகலை. பத்து நிமிஷம் தான் ஆச்சு..."



"ஐயோ... பத்து நிமிஷமாவா நிக்கறீங்க... உள்ள வாங்க தம்பீ..."

"இருக்கட்டும் நீங்கதான் ரவிச்சந்த்ரிகாவா...?"— வேண்டுமென்றே, அந்தக் கேள்வியில் அவமானப்படுத்த வேண்டுமென்றே கேட்டான் அவன்.

அந்த அம்மாள் மௌனமையாகச் சிரித்து கொண்டே அந்தக் கேள்வியினால் பாதிக்கப்படாதவளாகச் சொன்னாள்.

"இல்ல... நான் ரவிச்சந்த்ரிகாவோட அம்மா..."

"ஓ... ஐயம் ஸாரி... இந்தாங்க. இதுல பணம் பத்தாயிரம்—"

"எதுக்காக இப்படி வாசல்லியே நின்னுக்கிட்டுப் பேசணும்...? உள்ள வாங்க தம்பி... உள்ள வந்து உட்கார்ந்துப் பேசுங்க..."

"இல்ல... நான் உள்ள வரல. இதைப் படிங்க. இதுல பத்தாயிரம் இருக்கு. கணேசன் உங்க கிட்ட பேசியிருப்பாரு... ஜனவரி இருபத்ரெண்டாம் தேதி கல்யாணம் இருபத்தொண்ணாம் தேதி சாயந்திரம் உங்க பரத நாட்டியக் கச்சேரி ஏற்பாடு பண்ணியிருக்கு... ஆறரை மணிக்கு ஆரம்பிக்கணும். நீங்க ஆறு மணிக்கெல்லாம் வந்துடுங்க..."

அந்த அம்மாள் பணத்தை வாங்கவில்லை. இப்படி வாசலிலேயே நின்று பணத்தை நீட்டியது அவனை சங்கடப்படுத்திற்று. அச்செய்கையில் மனம் மிகவும் புண்பட்டாலும் தன் நிதானத்தை இழக்காமல் சொன்னாள்.

"பணம் இருக்கட்டும் தம்பி. உள்ள வாங்க. வீட்டுக்குள்ள கூட வராம பணத்தை நீட்டினீங்கன்னா நல்லாவா இருக்கு...?"

"எனக்கு உள்ள வர்றதுக்கெல்லாம் நேரமில்ல... பணத்தை வாங்கிக்குங்க நான் போகணும்..."

அவன் பிடிவாதமாகச் சொல்லவே வேறு வழியின்றி அந்த அம்மாள் கை நீட்டி பணத்தை வாங்கிக்கொண்ட போது பூஜை அறையிலிருந்து சடாரென்று மின்னல் ஒன்று வந்த மாதிரி வெளிப்பட்டாள் அவள். கைகளும் முகமும் தங்கத்தை உருக்கி வார்த்த மாதிரி இருந்தது. பார்த்துப் பார்த்து மிகுந்த அழகுணர்ச்சியுடன் நேர்த்தியாகப் படைக்கப்பட்டிருந்ததில், படைத்தவனின் ரசனை தெரிந்தது. நயம் தெரிந்தது. கைதேர்ந்த சிற்பியின் லாகவம் தெரிந்தது.

பூஜை அறையிலிருந்து அவள் வெளிப்பட்ட வேகம் மின்னல் ஒன்று கீழே இறங்கி வந்து நின்ற மாதிரியான தோற்றம்...

யார் இவள்...?

இவள்தான் ரவிச்சந்த்ரிகாவா!

வெள்ளை வெளேறென்று என்ன நிறம்! வாசல் படியை மறைத்துக் கொண்டு எத்தனை உயரம்! மழமழவென்று நீளநீளமாய் என்ன கைகள்! கால் முட்டியைத் தொடுகின்ற கூந்தலும், நீண்டகன்ற கரிய பெரிய கண்களும், செண்பகப் பூ நாசியும், செதுக்கிப் பொருத்தினாற் போன்ற மெல்லிய உதடுகளும்...

என்ன அழகு...! இப்படிக்கூட ஒரு அழகா! ரவிவர்மா பார்த்திருந்தால் ஓவியமாக்கியிருப்பார். காளிதாசனோ, கம்பனோ பார்த்திருந்தால் காவியமாக்கியிருப்பார்கள்...

ஆனால் இவன்...?

ரௌத்திரமாக்கியிருக்கிறான்,

கோபப்படுத்தியிருக்கிறான்,



இந்தக் கோபத்தை எப்படித் தணிப்பது...?

அவனுக்குத் தெரியவில்லை ஒரு வழியும் புரியாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றபோது அவள் தன் அம்மாவிடம் சொன்னாள்.

"அம்மா... முதல்ல இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடு. நம் கலைக்கும், நமக்கும் மரியாதையில்லாத இடத்துல என்னால ஆட முடியாது. இந்த மாதிரி பணத்தை நீட்டி என்னை ஆட வச்சிடவும் முடியாது. நான் இவங்க வீட்டுக் கல்யாணத்துல ஆடப் போறதில்லை. பணத்தைத் திருப்பிக் கொடுத்து முதல்ல இவரை இந்த இடத்தை விட்டுப் போகச் சொல்லு..."

அவனும் அந்த அம்மாவும் மருண்டு நிற்க நெருப்பு மாதிரி ஜ்வாலை கக்கிவிட்டு, மின்னல் அந்த இடத்தை விட்டு மறைந்து போயிற்று...

# 8

ரவிச்சந்த்ரிகா என்ற மின்னல் பளீரென்று சக்தியினுள் இறங்கி அடி மனதில் மிகப் பலமான தாக்குதலை ஏற்படுத்தி விட்டுப் போயிருந்தது. அந்தக் கொடி மின்னலின் அழகில், பிரகாசத்தில், பளபளப்பில், ரம்மியத்தில் தன்னை மறந்தான் அவன். சில வினாடிகள் நினைவிழந்து அப்படியே நின்று கொண்டிருந்தான். இப்படியும் ஒரு அழகா என்று மீண்டும் மீண்டும் மனசு ஆச்சரியப்பட்டது. பிரமித்தது. அதிலேயே லயித்தும் கிடந்தது. ஒரு வேளை காவியக் கதாநாயகிகளில் யாரேனும் உயிர்பெற்று வந்து விட்டார்களோ என்று

கூட தோன்றிற்று. இல்லர்விட்டால் ரம்பை, ஊர்வசி, மேனகை என இந்திரனது சபையிலிருந்து இறங்கி வந்தவளா...?'

'சீ...சீ!' என்று உடனே அதைத் தானே மறுத்துக் கொண்டான், எத்தனைத் தெய்வீகமான அழகு...! இதைப் போய் ஊர்வசி, மேனகை... என்கிறேனே... என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான். சகுந்தலை, சீதை, தமயந்தி மாதிரி இது காவிய அழகு. ஓவிய அழகு... அந்த அழகைப் போய் கோபப்படுத்தி விட்டோமே...என்று மறுபடியும் நொந்து கொண்டான்.

"அம்மா... முதல்ல அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடு. நம் கலைக்கும், நமக்கும் மரியாதையில்லாத இடத்துல என்னால ஆடமுடியாது. இந்த மாதிரி பணத்தை நீட்டி என்னை ஆட வச்சிடவும் முடியாது. நான் இவங்க வீட்டு கல்யாணத்துல ஆடப்போறதில்லை. பணத்தைத் திருப்பிக் கொடுத்து முதல்ல அவரை இந்த இடத்தை விட்டுப் போகச் சொல்லு..."

என்ன வார்த்தைகள்! எத்தனைக் கோபம்! முகம் எவ்வளவு சிவந்து போய்க் கிடந்தது. சிவந்து போயிற்றே தவிர சுழிப்போ, நொடிப்போ இன்றி சிறிது கூட அழகு மாறாமல், நெற்றி கூட சுருங்காமல் எப்படிப் பேசினாள்...! கோபப்பட்டால் கூட நான் அழகாகத் தான் இருப்பேன்...! என்று சொல்கிற அபிநயமாகத் தான் அந்தக் கோபம் இருந்தது.

ஆனால் அந்தக் கோபம் நிஜம். பேசின வார்த்தைகள் நிஜம். கண்களின் பளபளப்பு நிஜம். முகத்தில் ஏறிய சிவப்பு நிஜம். அவை பாவனையல்ல, அபிநயமல்ல. அடிமனத்தின் இயல்பான உந்துதலில் புறப்பட்டகோபம். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு மாதிரியான கோபம்.

அம்பாகத்தான் அவன் மனதில் தைத்து வலியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அந்த அளவு கோபப்



படுகிற மாதிரி தான் தப்பாக ஒன்றும் பேசவில்லையே என்று நினைத்துக் கொண்டானே தவிர தன்னை வரவேற்க யாருமில்லாமல் வாசற் கதவு மூடியிருந்த போது ஏற்பட்ட கோபம் மாதிரித்தான் இது என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. 'நான்' என்ற உணர்வின் மீது விழுந்த அடி. அதிலும் கலைஞனின் நெஞ்சில் விழுந்த அடி. அதனால்தான் அவ்வாறு சீறிக் கொண்டு புறப்பட்டிருக்கிறது. மின்னலாக வந்து தாக்கியிருக்கிறது. என்பது தெரியவில்லை அது தெரியாமல் இப்போது இந்தக் கோபத்தை எப்படி சரிப் படுத்துவது...?' என்று யோசித்தான்.

அவன் யோசித்தவாறு நின்று கொண்டிருந்ததைக் கலைத்து ரவிச்சந்த்ரிகாவின் தாய் புவனேஸ்வரி குரல் கொடுத்தாள்.

"இந்தாங்க தம்பி... வாங்கிக்குங்க..."

சடாரென்று எண்ணங்களிலிருந்து விடுபட்டு அந்த அம்மாவை ஏறிட்டான் அவன்.

"என்னதுங்கம்மா...?"—இப்போது குரல் தழைந்து சன்னமாக வந்தது,

"பணம் தம்பீ...?"

"ஏம்மா... இப்படித் திருப்பி வாங்கிட்டுப் போறதுக்கா எடுத்துக்கிட்டு வந்தேன்...?" நிஜமான பரிதாபத்தில் கேட்டான்.

"நான் என்ன செய்யறது...? நீங்க அப்படி நடந்துக் கிட்டீங்க...?"

"தப்பா என்ன நடந்துக்கிட்டேன்...?"

"ஏன் தம்பீ... வீட்டு வாசல்லியே நின்னுக்கிட்டு ஏதோ கடைல சாமான் வாங்கற மாதிரி 'இந்தாங்க பணம். ஜனவரி இருபத்திரெண்டாம் தேதி வந்து ஆடிட்டுப் போங்கன்னால் கோபம் வராதா...?' இது

தெய்விகக் கலை இல்லையா...? அதுக்கு உண்டான மரியாதை வேண்டாமா...?"

இப்போதுதான் எங்கே தவறு செய்தோம் என்பது புரிந்தது அவனுக்கு. அந்த அம்மாள் சொன்ன பிறகு பிடிபட்டது. ஒரு நல்ல கலைஞனுக்குக் கலையின் மீது உள்ள பக்தியும், மதிப்பும், மரியாதையும் கோபமாக வெளிப்பட்டிருப்பது தெரிந்தது. அதிலிருந்து ரவிச்சந்த்ரிகாவை இன்னும் கூட அறிந்து கொண்டான் அவன். வெறும் அழகு மட்டுமின்றி ஆழமான அறிவும், நுண்ணிய உணர்வுகளும் கொண்டவள் என்பதைத் தெரிந்து கொண்டான். மிகவும் வலுவான கொள்கைகளும், தீர்க்கமான கருத்துக்களும் உடையவள். காசு, பணத்திற்கு அடிமையாகாதது மட்டுமின்றி துச்சமாக மதிக்கக் கூடியவள்... தெய்வீகக் கலைஞர்களுக்கும், பிறவிக் கவிஞர்களுக்கும் மட்டுமே சொந்தமான இக்குணம் அவளிடம் இருந்ததை எண்ணி சந்தோஷப் பட்டான். கூடவே அப்பாவின் நினைவும் வந்தது. ரவிச்சந்த்ரிகா நாட்டியமாட மறுத்து விட்டது தெரிந்தால் கோபப்படுவார் அவர். தன் நினைவுகளுக்கும், முடிவுகளுக்கும் மாறாக எது நடந்தாலும் அவருக்குக் கோபம் வரும். அவருக்குக் கோபம் வந்தால் அது எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதையும் அறிவான் ஆகவே எப்படியாவது பேசி ரவிசந்த்ரிகாவை நாட்டியமாடச் செய்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த அம்மாவை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன தம்பீ.... பாக்கறீங்க...?"

"இல்லீங்கம்மா... எப்படியாவது அவங்க ஆடறதுக்கு நீங்கதான் சம்மதிக்க செய்யணும். இல்லைன்னால் அப்பா கோவிச்சுக்குவாரு .."

"உங்க அப்பாவுக்கு எத்தனைக் கோபமும் பிடிவாதமும் உண்டோ அதே அளவு பிடிவாதமும் கோபமும் இவளுக்கும் உண்டு தம்பி... அதுலயும்



நாட்டியத்தை விலைக்கு வாங்கிடலாம்னு படியேறி வர்ற பணக்காரங்களை உள்ளக் கூட விடமாட்டா..."

"நான் அப்பிடியா வந்தேன்...?"

"ஆனா அப்பிடி நடந்துக்கிட்டீங்க..."

"அம்மா... நான் அப்பிடி நடந்துக்கிட்டதுக்கு நீங்க தான் காரணம்..."

"நானா...?!"

"ஆமாம்மா..."

'நான் எப்பிடிக் காரணமாவேன் தம்பீ...?"

"அதை உள்ள வந்து உட்கார்ந்து சொல்லலாமா... இல்ல இப்படி வாசல்ல நின்னுக்கிட்டேதான் பேசணுமா...?"

"நான் ஆரம்பத்துலயே கூப்பிட்டேனில்ல...? நீங்க தான் பிடிவாதமா வரமாட்டேனிட்டீங்க... ஏதோ வரக் கூடாத இடம்னு நினைச்சுக்கிட்டீங்க...

"ஐயோ..." என்று பதறினான் அவன். "நான் அப்படியெல்லாம் ஒண்ணும் நினைக்கலை..."

"நீங்க நினைச்சீங்களோ என்னவோ தெரியாது. ஆனால் உங்க செய்கை அப்படித்தான் இருந்திச்சு. அதனாலதான் சந்த்ரிக்கு அத்தனை கோபம் வந்திச்சு. நமக்கும் நம் கலைக்கும் மரியாதையில்லாத இடத்துல ஆட முடியாதுன்னிடுச்சு...'

"மரியாதை இல்லாம சொல்லலைம்மா... நானும் ஒரு கோபத்துலதான் சொல்லிட்டேன்..."

"எதுல சொன்னீங்களோ... சொன்னதுதானே...? திருப்பி எடுத்துக்கவா முடியும்...?"

"அதே மாதிரி நீங்க செஞ்சதும் செஞ்சதுதானே .. திரும்பியா எடுத்துக்கப் போறீங்க...?"

"என்ன சொல்றீங்க...?"

"அதான் உள்ள வந்து சொல்றேன்னனில்ல ..?"

"அவ என்ன சொல்லுவாளோ...? முதல்ல 'வரக் கூடாத' இடம் மாதிரி பிடிவாதமா வாசல்ல நின்னவரை ஏன் இப்போவீட்டுக்குள்ள கூட்டிக்கிட்டு வந்தேன்னு கேட்பாளோ என்னமோ?"

"எம்மா... அப்பிடிக் கூட கேட்பாங்களா...?"

"கேட்கக் கூடிய பொண்ணுதான் தம்பீ...மரியாதைக் குறைவா யாரு ஒரு வார்த்தை பேசினாலும் தாங்காது..."

"எம்மா மரியாதைக் குறைவுன்னு நினைச்சிருந்தால் நான் வீடு தேடி வந்திருப்பேனா...? உங்களுக்கு எங்களைத்தெரியும்...? அப்பாவுக்கு எத்தனை செகரெட்டரிங்க இருக்காங்கன்னு தெரியும். கீழ எத்தனைப் பேர் வேலை செய்யறாங்கன்னு தெரியும்.."

"ஐயோ... அதெல்லாம் தெரியாதா தம்பீ .. நீங்க என்ன சாதாரண இடமா...?"

"இடத்துக்குச் சொல்ல வரலை. மறுபடியும் அதையும் வேற தப்பா எடுத்துக்கப் போறீங்க .. உங்க இடத்துக்கு வர்றது குறைச்சல்னோ, போக வேண்டாத இடம்னோ நினைச்சிருந்தால் நானே வந்திருப்பேனா...? வேற யாரையாவது இல்ல அனுப்பியிருப்பேன்.... உங்கப் பொண்ணு மேல, அவங்க நாட்டியத்து மேல எத்தனை மதிப்பும், மரியாதையும் இருந்தா நானே ஓடி வந்திருப் பேன்..? கணேசன்தான் வர்றதா இருந்தது. அவரைக் கூட வேணாம்னு சொல்லிட்டு நாம் நேர்ல போய் கூப்பிடனும். அதுதான் கௌரவம், மரியாதையா இருக்கும்னு ஓடிவந்தேன் பாருங்க. அதுக்குதான் இந்தத் தண்டனை...

அதைக் கேட்டுக் கொண்டே மீண்டும் ரவிச்சந்த்ரிகா என்ற மின்னல் பூஜை அறையிலிருந்து வெளிப்பட்டு பளீரென்று சொல்லிற்று.



"நாங்க யாருக்கும் எந்தத் தண்டனையும் தந்த தில்ல... தர்ற பழக்கமும் இல்ல..."

வேண்டுமென்றே முகத்தை சோகமாக்கிக் கொண்டு பேசினான் சக்தி...

"ஏன் இல்ல...உள்ள வரேன்னு கேட்கிறவனைக் கூட வேணும்னே வாசல்லியே நிக்க வச்சுப் பேசறீங்களே! இதுக்கு நான் கூட கோவிச்சுக்கலாமில்ல? அப்படி என்ன நான் உள்ள வரத் தகாதவனா, தகுதியற்றவனா... சொல்லுங்க...?"

கலீரென்று சலங்கை குலுங்கின மாதிரி சிரித்து விட்டாள் ரவிச்சந்த்ரிகா. அந்தச் சிரிப்பை ரசித்துக் கொண்டே சிரிக்காமல் நின்றான் அவன்.

"என்ன சந்த்ரி .. இத்தனை சொல்லியும் இன்னுமா உன் கோபம் தணியல...?"

"ம்ஹூம் அவங்களுக்குத் தணிஞ்சாலும் எனக்குத் தணியலை .. அத்தனை ஆர்வமா, ஆசையா, நானே கூப்பிடணும்னு ஓடி வந்தேன் பாருங்க .. இத்தனை மணிக்கு வரேன்னு சொல்லி, இருந்தும் வீட்டு வாசல் கதவை அடைத்து மூடிவச்சால் என்ன அர்த்தம்...? நீ வரவேண்டாம்டா பாவி. நீ வர்றது எங்களுக்குப் பிடிக்கலைன்னு நேரிடையா சொல்லாமல் கதவை அடைச்சு வச்சு தெரியப்படுத்தினவங்க வீட்டு வாசல்ல இத்தனை நேரமா நின்னுக்கிட்டுப் பேசறேன் பாருங்க... என்னை நானே ... எதனாலோ அடிச்சுக்கணும்..."

ரவிச்சந்த்ரிகாவின் சிரிப்பு சட்டென்று நின்றது. பார்வை உயர்ந்து அவன் முகத்தில் ஒருவித வருத்தத் தோடு பதிந்தது. அவனது கோபத்திற்கான காரணமும் அப்போதுதான் புரிந்தது. பெரிய இடத்துப் பிள்ளை. வருகிறேன் என்று தெரியப் படுத்தியிருந்தும் வரவேற்க யாருமற்று கதவை மூடி வைத்த தவறு பிடிபட்டது. தன் கோபத்தில் எந்த அளவு நியாயமிருக்கிறதோ

அதே அளவு நியாயம் அவன் கோபத்திலும் இருக்கிறது என்பது தெரிந்தது. அவனது பேச்சினால் தன் மனசு புண்பட்டதென்றால் தங்கள் செய்கை அவன் மனதைப் புண்படுத்தியிருக்கிறது... அந்தக் கோபத்தில்தான் உள்ளே வர மறுத்திருக்கிறானே தவிர வேறு எந்தவித உள்நோக்கமுமில்லை என்பதை உணர்ந்து, தங்களின் தவற்றிற்கு வருத்தப்பட்டு மிக மெல்லிய குரலில் அவ்வருத்தம் வெளிப்படுகிற தொனியில் பேசினாள்.

"ஐயம் ஸாரி... வெரி சாரி... உள்ளே வாங்க..."

"ம்ஹூம். மாட்டேன்..." பிடிவாதமாக மறுத்தான் அவன்.

"நான்தான் மன்னிப்பு கேட்டுட்டேனில்ல...இன்னும் என்ன...?"

'மன்னிப்பு கேட்டால் மட்டும் போறாது... இன்னும் ஒன்றையும் சொல்லணும்..."

"என்ன...?"

"நீங்க டான்ஸ் ஆடறேன்னு ஒத்துக்கணும்.."

மீண்டும் கலகலவென்று மிக இயல்பாய் அழகாய், வசீகரமாகச் சிரித்தாள் அவள்.

"ம்ஹூம்... சிரிச்சா போறாது. வாய் திறந்து சொன்னாத்தான் நான் உள்ள வருவேன்..."

"ஆடறேன். வாங்க..."

மிகவும் சந்தோஷமாக, உள் மனதில் சொல்ல முடியாத ஓர் உணர்வு பொங்கிப் புறப்பட உள்ளே நுழைந்தான் சக்தி...

# 9

அந்த சந்திப்பிற்குப் பின் தூக்கமற்றுப் போனான் சக்தி. தூக்கம் பட்டும்தானா...? சாப்பாடு, சிரிப்பு, பேச்சு எதுவுமே அற்றுப் போனான். தனிமை அவனுக்குப் பிடித்திருந்தது. தன் அறைக்குள் போய் கதவை சாத்தி தாளிட்டு கட்டிலில் விழப் பிடித்திருந்தது. பக்கத்தில் ரவிச்சந்த்ரிகாவைக் கற்பனை செய்து மணிக் கணக்கில் பேசப் பிடித்திருந்தது. அந்த நிலவு முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கப் பிடித்திருந்தது. கையைப் பற்றி இழுத்துத் தோளில் சரித்துக் கொள்ள, மெல்ல தலையை வருடிக் கொடுக்க, நீளநீளமான விரல்களை நீவிக் கொடுக்க, அந்த அழகிய கண்களில் மென்மையாய் முத்தமிட, பளிங்கு போன்ற உடலைத் தன்னோடு சேர்த்து அணைத்து காதருகில் மெதுவாய் கிசுகிசுக்க...

'ஐ லவ் யு ரவி... இந்த உலகத்துல இருக்கிற எல்லாத்தையும் விட நான் உன்னை அதிகம் நேசிக்கிறேன் சந்திரி...'

சட்டென்று ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது அவனிடமிருந்தது. ரவிச்சந்த்ரிகாவிற்குப் பதிலாகக் கிடந்த தலைகாணியின் மீது கோபம் வந்தது. உடனே அந்தக் கோபம் தன் மீதே திரும்பிற்று.

'இது என்ன பைத்தியக்காரத்தனம்...' என்று முணுமுணுத்துக் கொண்டான். 'நான் ஏன் இவ்வாறு மாறிப் போனேன்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அவளை சந்தித்து விட்டு வந்த நாள்

முதலாக மனசு ஏன் இப்படி அலை பாய்கிறது...?, நின்றால் ரவிச்சந்த்ரிகா, நடந்தால் ரவிச்சந்த்ரிகா பார்ந்தால் ரவிச்சந்த்ரிகா, பேசினால் ரவிச்சந்த்ரிகா, படித்தால் ரவிச்சந்த்ரிகா, படுத்தால் ரவிச்சந்த்ரிகா...

இப்படிக் கூடவா தெரிய முடியும்...? இதைத்தான் பாரதி 'பார்க்குமிடத்திலெல்லாம் நின்னைப்போல் பாவை தெரியுதடி!' என்று பாடினானோ...? இந்த அளவிற்கா ஒரு பெண்ணின் நினைவு ஒருவனை அடித்துப் போடும்...? ஒன்றும் செய்யவிடாமல் தவிக்க வைக்கும்...? தூக்கமற்று, சாப்பாடற்று போகச் செய்யும்...? தனிமை தேடி ஓடச் சொல்லும்...? கற்பனை உலகத்தில் மிதக்கச் செய்யும்...?

இது என்ன...? காலையில் கண்விழிக்கும் போதே 'குட்மார்னிங் ரவிச்சந்த்ரிகா' என வாய் முணுமுணுக்கிறதே... அந்த அளவிற்கா அவள் நினைவு கட்டிப் போட்டிருக்கிறது...? அல்லாட வைக்கிறது...? அலைக்கழியச் செய்கிறது....? இதற்கெல்லாம் என்ன காரணம்...? அவளது அழகா...? வெறும் அழகு மட்டும் தானா...?

அழகு மட்டும்தான் என்றால் இதற்கு முன் எத்தனை அழகிகளைப் பார்த்திருக்கிறான். கல்லூரி விழாக்களில், வீட்டு விசேஷங்களில், அப்பா தரும் விருந்துகளில்... எத்தனைப் பெண்கள்...! 'ஹாய்' சொல்லி சிரித்து, அவனை நெருங்க முயன்று, பேச ஆசைப்பட்டு பார்வைக்கு ஏங்கி...

அவர்களில் ஒருத்தியைக் கூட அவன் திரும்பிப் பார்த்ததில்லை. ஒரு வார்த்தை பேசினதில்லை. நிமிட நேரம் நினைத்ததில்லை. அந்தப் போலி அலங்காரங்களும், வெட்டப்பட்ட தலைமுடிகளும், உதட்டுச் சாயமும், செயற்கை உச்சரிப்பும் நுனிநாக்கு ஆங்கிலமும் ..



வெறுத்துக் கூடப் போயிருந்தான். இதன் காரணமாகத் தான் பெண்களை விட்டுத் தள்ளியே நின்றிருந்தான். குரோட்டன்களும், போகன்வில்லாக்களும் எனக்குத் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆகவேதான் இது வெறும் கவர்ச்சியில்லை என்கிற முடிவிற்கும் வந்திருந்தான். ரவிச்சந்த்ரிகாவின் அழகும் கவர்ச்சிகரமான அழகில்லை. ரம்பை, ஊர்வசி மாதிரியான அழகில்லை. ரவிவர்மாவின் படங்களில் பார்க்கிற மகாலக்ஷ்மி மாதிரி, சீதா தேவி மாதிரி, பார்வதி மாதிரியான அழகு. தெய்வீக அழகு. பார்த்தவுடன் படுக்கையை நினைக்கவைக்கிற அழகில்லை கை கூப்பிக் கும்பிடச் செய்கிற அழகு.

அழகு மட்டும்தான் அப்படி என்றில்லை. அந்த அழகுடன் சேர்ந்த குணமும் கைகூப்பவைப்பதாகத் தான் இருந்தது. வீட்டினுள் போய் உட்கார்ந்து அந்த வரவேற்பறையைப் பார்த்த போது ஏதோ கோவிலின் சந்நிதி ஒன்றில் உட்கார்ந்திருக்கிற உணர்வு தோன்றியது. பெரிய நடராஜர் சிலை, பார்வதி பரமேஸ்வரனின் நடன மாடுகிற சிலை, நர்த்தன விநாயகர் என வைக்கப்பட்டிருந்தது. மல்லிகை மணமும், ஊதுவத்தி வாசனையும், சாம்பிராணியின் கமழ்தலும் சேர்ந்து இவனது நெஞ்சை நிறைத்தன.

அறையின் அலங்காரத்தை அவன் பார்த்துக் கொண்டிருந்த போதே உள்ளே போய் குடிப்பதற்குத் தண்ணீரும், பழச் சாத்துக்குடி ஜூஸும் கொண்டு வந்து தந்த ரவிச்சந்திரிகா அவனுக்கு எதிர் சோபாவில் உட்கார்ந்தவாறு கேட்டாள்.

"என்ன பார்க்கறீங்க...?"

"எத்தனை அழகா இந்த அறையை அலங்கரிச்சிருக்கீங்கன்னு பார்க்கறேன்..."

அதைக் கேட்டு மெலிதாகப் புன்னகைத்தாள் அவள். பின்னர்,

"ஜூஸ் சாப்பிடுங்க..." என்றாள்.

மறுக்காமல் எடுத்துக் குடித்தான். டம்ளரை டீபாய் மீது வைத்து விட்டு ஒரு வினாடி தயங்கினான். அவனது தயக்கத்தைப் புரிந்து கொண்ட புவனேஸ்வரி அம்மாள் கேட்டாள்.

"என்னங்க தம்பீ...?"

"இல்ல...இப்போ இந்தப் பணத்தை வாங்கிக்க எந்த விதமான ஆட்சேபணையும் இருக்காதில்ல...?"

அந்த அம்மாள் மெல்ல மகளை ஏறிட புன்னகை மாறாமல் பேசினாள் ரவிச்சந்த்ரிகா.

"பணத்துக்கு என்ன அவசரம்...? ஆடிட்டு வாங்கிக்கறேனே...?"

"ம்ஹூம், அப்பா கொடுத்துட்டு வரச் சொன்னாரு .. இல்லைன்னால் எனக்குத் திட்டு விழும்..."

"சரி...உங்களுக்குத் திட்டு விழக்கூடாதுன்னு வாங்கிக்கறேன்..."

"ரொம்ப தேங்க்ஸ்..." என்று புவனேஸ்வரியம்மாள் திருப்பித் தந்த பணத்தை மீண்டும் எடுத்துக் கொடுத்தான் அவன். அந்தப் பணக்கட்டைப் பார்த்து ஆச்சரியப் பட்ட ரவிச்சந்த்ரிகா வினாடி நேரத் தயக்கத்திற்குப் பின் கேட்டாள்.

"எவ்வளவு...?"

"பத்தாயிரம்..."

"பத்தாயிரமா...!"

"ஆமாம். அட்வான்ஸாகத்தான் அப்பா இதைக் கொடுத்து விட்டு வரச் சொன்னார்..."



அதைக் கேட்ட அவள் முகம் சடாரென்று மாறிற்று. அதில் தெரிந்தது கோபமா, வருத்தமா என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. குரலிலிருந்தும் தெரிந்து கொள்ள இயலவில்லை.

"சாரி மிஸ்டர்... உங்க பேர் என்ன சொன்னீங்க...?"

"சக்தி... சக்திவேல்..."

"...பத்தாயிரமெல்லாம் ரொம்ப அதிகம். நான் அவ்வளவெல்லாம் வாங்கறதில்லை. ரெண்டாயிரத்து ஐநூறு இல்லேன்னா மூவாயிரம் ரூபாய்தான் வாங்கறேன். இப்படிப் பணம் வாங்கிக்கிட்டு ஆடறதே எனக்குப் பிடிக்கலை. நான் கத்துக்கிட்ட இந்த தெய்வீகக் கலையை விக்கற மாதிரி இருக்குன்னு தோணறது. ஆனால் நடைமுறை வாழ்க்கைல அது முடியாது. அம்மாவும், நானும், இதயநோயாளியான அப்பாவும் சாப்பிடணும்னால் பணம் தேவை. அதுக்கு வாங்கித்தான் ஆகணும்ன்றதால் வாங்கறேனே தவிர வேற எதுக்குமில்ல. டான்ஸ் கத்துக்கிட்டு சம்பாதிக்கணும்னு நான் கத்துக்கலை. சேர்த்து வைக்கணும்னு கத்துக்கலை..."

"ஐயோ... நான் அப்படியெல்லாம் சொல்லலையே..." என்று பதறினான் அவன்.

"நீங்க சொல்லலை. ஆனால் என்னை நீங்க புரிஞ்சுக்கணும். என் எண்ணத்துக்கு மதிப்புக் கொடுக்கணும்ன்றதுக்காகச் சொல்றேன்..."

"சொல்லுங்க... என்ன செய்யணும்...?"

"இந்தப் பணக்கட்டைப் பிரிச்சு மூவாயிர ரூபாயை மட்டும வச்சிட்டு மீதியை எடுத்துக்கிட்டுப் போகணும்..."

"...வந்து..."

"ப்ளீஸ்.. ஒண்ணு தெரியுமா உங்களுக்கு...? அளவுக்கு அதிகமா தர்றதும் ஒருவிதத்துல அவமதிப்பு தான் தெரியுமா...?"

"சரி... நான் எடுத்துக்கிட்டுப் போறேன். போறுமா...?"

"தாங்க் யூ ஸோ மச்..."

அதை வந்து அப்பாவிடம் சொல்லி மீதப் பணத்தைத் திருப்பித் தந்த போது அப்பா ஒரு வினாடி பேசாமல் இருந்தார். பின்பு மெல்ல முணு முணுத்துக் கொண்டது இவனுக்குக் கேட்டது.

'அழகு மாதிரியே அந்தப் பொண்ணோட குணமும் வித்தியாசமாகத்தான் இருக்கு. இந்தக் காலத்துல இப்படி ஒரு பெண்ணா...!'

அப்பாவைப் போலவே அவனும் நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டான். உள்ளுக்குள் சந்தோஷப் பட்டான். 'ரவிச்சந்த்ரிகா மாதிரி எத்தனை பேர் இருப்பார்கள்...!' என்று தோன்றிற்று. அபூர்வமாக லட்சத்தில் ஒருத்தி இருக்கலாம். கோடியில் ஒருத்தி இருக்கலாம். அதுவும் பணமே எல்லாம், பணம்தான் எல்லாம் என்றாகிவிட்ட இந்தக் காலத்தில் இப்படி ஒருத்தி இல்லாமலே கூடப் போகலாம். மாதிரிக்காக இப்படிப்பட்ட அழகும், குணமும் இன்னமும் இருக்கத் தான் செய்கிறது. முற்றிலுமாகக் காணாமற் போய் விடவில்லை என்று காட்டுவதற்காக ஆண்டவனால் படைக்கப்பட்ட மாதிரியாகக் கூட இருக்கலாம். எல்லாவித நல்ல குணங்களும் மறக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக எப்போதாவது இது போன்ற சிலரைப் படைத்து அனுப்பியிருக்கலாம்...

எதுவானாலும் ரவிச்சந்த்ரிகா மாதிரி இன்னொருத்தி கிடைக்கமாட்டாள். பார்க்கக்கூட முடியாது. அழகு, அறிவு, நற்குணம் எல்லாம் ஒன்று சேர்ந்த இன்னொரு பெண்ணை மீண்டும் எங்கே சந்திக்க முடியப் போகிறது...?



அதை நினைத்த போது அவனிடமிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று எழுந்தது. சட்டென்று தான் நினைத்ததன் தவறு தெரிய வந்தது.

'இன்னொரு பெண்ணைச் சந்திக்க முடியப்போவ தில்லை. என்பது இருக்கட்டும். சந்திக்கவும் பிரியப்பட வில்லை. ரவிச்சந்த்ரிகாவைத் தவிர வேறு யாரையும் ஏறெடுத்துப் பார்க்கவும் அவனால் இயலாது. மனதால் நினைக்க முடியாது. அன்று நண்பர்களிடம் பேசின மாதிரி, அவர்களோடு சேர்ந்து பார்த்த திரைப்படம் மாதிரி...'

ரவிச்சந்த்ரிகா தவிர அவனது நெஞ்சத்திலோ வாழ்க்கையிலோ வேறு யாருக்கும் இடம் கிடையாது...

திடமாய், தீர்க்கமாய் முடிவு செய்து கொண்ட பின் அடி மனத்திலிருந்து லேசான சந்தேகம் ஒன்று தலை தூக்கிற்று.

'நான் இந்த அளவிற்கு நினைக்கிறேனே... உருகு கிறேனே... அவளில்லாமல் வாழ்க்கையில்லை என்று தவிக்கிறேனே... அவள் எப்படி நினைக்கிறாள்...? என்ன நினைக்கிறாள்? இதே மாதிரி உருகுகிறாளா...? அல்லது அன்றோடு மறந்தே போய் விட்டாளா...? எப்படித் தெரிந்து கொள்வது என்பது புரியாமல் அதற்காக வேறு தவிக்கத் தொடங்கினான் அவன்...

# 10

"எங்கோ பிறந்தவராம்
எங்கோ வளர்ந்தவராம்
எப்படியோ என் மனதைக் கவர்ந்தவராம்..."

அதற்கு அபிநயம் பிடித்த போது சட்டென்று ரவிச்சந்த்ரிகாவின் மனது நழுவிற்று. அபிநயத்தை விட்டு சக்தியிடம் போயிற்று. அன்று அவன் வீடுதேடி வந்தது, வாசலிலேயே நின்றது. பின்னர் உள்ளே வந்தது, தான் காட்டிய தார்மீகக் கோபத்திற்குக் கட்டுப்பட்டது என ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தது. அந்த அறையில் வந்து உட்கார்ந்து நடராஜர் சிலையையும், நடனமாடும் பார்வதி சிவனையும், நர்த்தன வினாயகரையும், தஞ்சாவூர் வீணையையும், ஏற்றிவைக்கப் பட்டிருந்த பெரிய பெரிய குத்து விளக்குகளையும் மாறி மாறிப் பார்த்தது நினைவிற்கு வந்தது. அவனது பார்வை, முகபாவம், கண்களின் லயிப்பு இவற்றின் மூலம் மனதின் ஈடுபாடு தெரிந்தது. "என்ன பார்க்கறீங்க...?" என்ற இவளது கேள்விக்கு அவன் சொன்ன பதிலும் நினைவிற்கு வந்தது.

'ஒண்ணுமில்ல... எப்படி வச்சிருக்கீங்க வீட்டை... ஏதோ கோவில் சன்னிதானத்துல. இருக்கிற மாதிரி தோணுது ..'

அதையே மீண்டும் போகிறபோதும் சொல்லி விட்டுப் போனான். வாசல் வரை வழியனுப்ப அவளும் அம்மாவும் கூடப் போனபோது மறுபடியும் சொன்னான். "உங்க வீட்ல உட்கார்ந்துட்டிருந்த இத்தனை நேரமும் கோவிலில் உட்கார்ந்துட்டிருந்த மாதிரி இருந்தது. மனசு ரொம்ப நிம்மதியா, அமைதியா இருந்திச்சு. இதை ஏதோ உங்களைத் திருப்திப் படுத்தச் சொல்றதா நினைக்கக் கூடாது. நிஜமா சொல்றேன். என் மனசுக்குள்ள தோணினதை மறைக்காமல் அப்படியே சொல்றேன். இந்த மாதிரி எந்த இடத்துலயுமே நான் உணர்ந்ததில்லை .."

பரவசப்பட்டதோர் மனோ நிலையில் அவன் பேசியதைக் கேட்டு அம்மா மென்மையாகப் புன்னகைத்தாள். அவனது உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டவளாகச் சிரித்தாள்.



"வீட்டை நாங்க கோவிலாகத்தான் வச்சிட்டிருக்கோம் தம்பி .."

அதைக் கேட்டு சக்தி சிரித்ததும், பேசினதும் இன்னமும் மனசை விட்டு அகலாமல் நின்று கொண்டிருந்தன.

வீட்டை மட்டுமில்லேம்மா... மனசைக் கூட நீங்க அப்படித்தான் வச்சுட்டிருக்கீங்க. கல்மிஷம், கபடமில்லாம, சூதுவாது அறியாம, அனாவஸ்ய ஆசைகள் இல்லாம... துடைச்சு சுத்தமா வச்சிட்டிருக்கீங்க... வெறும் சுத்தம் மட்டும் இருந்தா ஆஸ்பத்திரி ஞாபகம் தான் வரும். ஆனால் கோவில் ஞாபகம் வர்றதுக்குக் காரணம் சுத்தமான மனசுல நல்ல எண்ணம்ன்ற கோலம் போட்டு, தீர்க்கமான சிந்தனைன்ற நெய்விளக்கு ஏற்றி, போதுமென்ற நிறைவால சாம்பிராணி தூபம் போட்டிருக்கிற காரணத்துனால தான் கோவிலாத் தெரியுது. தெய்விகம் மணக்குது. உங்களையும், உங்க மகளையும் சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம். என்னால இந்த சந்திப்பை மறக்கவே முடியாது...'

அம்மா மட்டுமில்லை. அவளும் தான் அதிர்ந்து போனாள். அவனது பேச்சைக் கேட்டு மனசு சிலிர்த்தது. உடம்பு சிலிர்த்தது. நல்லதை நல்லதென்று புரிந்து கொண்டு பாராட்டுகிற மனமும், மனசுவிட்டுப் பேசுகிற மனமும் இன்னும் எத்தனை நல்லதாக இருக்கவேண்டுமென்று தோன்றிற்று. இப்படிக் கூட ஒருவனா என்கிற ஆச்சரியம் மிகுந்தது.

உள்ளே வந்ததும் அம்மாவும் அதையேதான் சொன்னாள்.

"எப்படிப்பட்ட பிள்ளை பார்த்தியா சந்த்ரி... எத்தனை பெரிய இடத்துப் பிள்ளை. கோடீஸ்வரன் வீட்டு ஒரே பிள்ளை... ஆனால் அந்தக் கர்வமோ, பணக்காரத் திமிரோ கொஞ்சம் கூட இல்லாமல் எப்படிப் பேசுது .. பார்த்தியா..."

சொல்லிச் சொல்லி அம்மா வியந்து போக இவள் வேண்டுமென்றே அம்மாவைத் தூண்டி விடலானாள்.

"ஆமாம்... அப்படிப் பட்டவர் தான் முதல்ல வீட்டுக்குள்ள நுழைய மாட்டேன்னு அடம் பிடிச்சாரு..."

"அடம் பிடிச்சதுக்குக் காரணமிருக்குது இல்ல. அத்தனை பெரிய இடத்துப் பிள்ளை வரேன்னு சொல்லியிருந்தும் வாசல் கதவை அடைத்து சாத்தினது நம்ம தப்புதானே...?"

"ஏம்மா... அதுக்காக வாசல்லியேவா நின்னு காத்துக்கிட்டிருக்க முடியும்...?"

"வர்ற நேரத்தைத் தெரிவிச்சாங்க இல்ல... கதவையாவது திறந்து வச்சிருக்கலாம். தப்பு நம்ம பேர்ல இருக்கிறப்போ அந்தப் பிள்ளையைக் குறை சொல்ல முடியாது. தங்கமான பிள்ளை. இந்தக் காலத்துல எந்தப் புள்ளை இப்படி இருக்குது? அதுலயும் எந்தப் பணக்கார வீட்டுப் பிள்ளை இப்படி இருக்கும்...? என்னம்மா பேசிச்சு... அந்தப் பேச்சிலேர்ந்து மனசு தெரியலை...? குழந்தை மாதிரி என்ன மனசு...!"

"ஆமாம், குழந்தை மனசுதான் இப்படி கோபப் படுமாக்கும்...?"

"அது சரி...! அதுவும் உன்னை மாதிரி கோபப்படும் போல இருக்கு... தப்பு நடந்தா தாங்கிக்காது போல இருக்கு... கோபம் இருக்கிற இடத்துலதான் குணமும் இருக்கும். உன்கிட்ட இருக்கிற மாதிரி .."

அவளுக்குள் விழுந்து போன உள்மனசில் ஆழப் பதிந்து போன சக்தி என்கிற பொறியை அம்மா விசிறி விசிறி அதிகப்படுத்தினாள். பேசிப் பேசி எரிய விட்டாள். புகழ்ந்து புகழ்ந்து ஜ்வாலையாக தகிக்க விட்டாள். அம்மா தனக்கே தெரியாமல் பரப்பின ஜ்வாலையின் அனலில் இவள் மிக ரகசியமாக உள்ளுக்



குள்ளேயே நினைத்து நினைத்து நெகிழ்ந்து கொண்டிருந்தாள். இந்தப் பதினெட்டு வயதில் இது வரை அனுபவித்தே இராத புதியதொரு உணர்வில் மனம் தவித்தது. நெஞ்சு தவித்தது. அவனைப் பற்றி நினைப்பதே சந்தோஷமாக இருந்தது. உற்சாகமாக இருந்தது. எந்த வேலை செய்தாலும் அவனது ஞாபகமே வந்தது.

'நேர முழுவதிலுமப் பாவி தன்னையே—உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்...'

என்று தன் அறையில் தானாக அபிநயம் பிடித்துப் பார்த்தாள். பின்னர்,

'கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
கண்டு வர வேணுமடி தங்கமே தங்கம்...'

எனவும் பாடிக் கொண்டாள்.

உடனே சட்டென்று கண்களில் பொட்டாக ஒரு துளி நீர் எழுந்து குளங்களாக மாறி கரகரவென்று கன்னங்களிலும் வழியலாயிற்று.

"ஆமாம்... கண்டு வரவோ கேட்டு வரவோ எனக்கு யார் இருக்கிறார்கள்...? எந்தத் தங்கம் இருக்கிறாள்...? எந்தத் தோழி இருக்கிறாள்...?" என்று சொல்லிக் கொண்டாள். 'அப்பாவிடமும், அம்மாவிடமுமா சொல்ல முடியும் இதையெல்லாம்...?'

சொன்னால் என்ன செய்வார்கள்...? அதிர்ந்து போவார்கள்... ஆச்சரியப் படுவார்கள். 'உனக்கு இப்படியெல்லாம் கூட நினைக்கத் தெரியுமா...?' என்று கேட்டாலும் கேட்பார்கள். இல்லாவிட்டால் கோபப் பட்டாலும் படலாம்...

இல்லை. அவர்களால் கோபப்பட முடியாது. இதுவரை அம்மாவோ, அப்பாவோ அவளிடம் கோபப் பட்டதில்லை. அவளிடம் மட்டுமின்றி வேறுயாரிடமுமே

கோபப்பட்டு, அவள் பார்த்ததில்லை. முகம் சிணுங்கினதோ அதிர்ந்து பேசினதோ கூடக் கிடையாது. அழுத்தமாக ஒரு வார்த்தைகூட சொன்னது கிடையாது. அப்படிப்பட்ட மென்மையான மனம் கொண்டவர்களால் கோபப்பட முடியாது

ஆனால் அதிர்ச்சியடையலாம் 'என்னம்மா இது...?' என்று அடித்து வைத்த மாதிரி நின்று போகலாம். அதுவும் இல்லை என்றால் 'ஏம்மா... அந்தப் பிள்ளை எங்கே ..நாம் எங்கேம்மா...? அவன் கோடீஸ்வரன் வீட்டுப் பிள்ளைம்மா...' என்று பயப்படலாம்...

அவர்கள் பயப்படுவதற்கு முன்னால் அவளுக்கே ஒரு பயம் வந்தது. தன் நினைவிற்குத் தானே கடிவாளம் போட முயன்றாள். தன்னைத் தானே அடக்கிக்கொள்ள முயன்றாள். 'நிஜமாகவே அவர் எங்கே நாம் எங்கே...?' என்று அவன் நினைவைத் தன் மனதை விட்டுத் தள்ள முயன்றாள்.

'நான்தான் இப்படி உருகுகிறேன். உள்ளுக்குள் அலைகிறேனே தவிர அவருக்கு நம் நினைவு கூட மறந்து போயிருக்கலாம். அல்லது சந்தித்த எத்தனையோ பேர்களில் இவளும் ஒருத்தி என ஒதுக்கித் தள்ளியிருக்கலாம்...

இல்லாவிட்டால் இந்தப் பத்து நாட்களில் ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு ஒரு தரமாவது வந்திருக்க மாட்டானா...? தொலைபேசியிலாவது கூப்பிட்டுப் பேசியிருக்க மாட்டானா ? இதில் எதையுமே செய்யாததிலிருந்து என்ன தெரிகிறது...? உன்னை அவன் மறந்தே போய்விட்டது தெரியவில்லை...?'

அறிவு அவளை அடக்கிற்று. ஆனால் மனம் அறிவிற்கு அடங்க மறுத்து சண்டித்தனம் செய்தது.

மறக்கிறவனாக இருந்தால் போகிற போது இந்த சந்திப்பை என்னால மறக்கவே முடியாது என்று ஏன் சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்ற கேள்வி எழ —



சக்தியின் மனதில் தான் இருக்கிறோமா இல்லையா, தன்னைப் போல் அவனும் உருகித் தவிக்கிறானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்கிற வகையற்று,

பாலும் கசந்ததடி, சகியே
படுக்கை நொந்ததடி....

என்ற பாடலுக்குத் தத்ரூபமாக அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள் ரவிச்சந்த்ரிகா...

## 11

கிட்டத்தட்டப் பத்து நாட்களாக சக்தியை கவனித்துக் கொண்டு வந்தாள் ராஜேஸ்வரியம்மாள். மகனைப் பார்க்கப் பார்க்க மனசு சங்கடப்பட்டது. அவன் என்னவோ போல் இருப்பது தெரியவந்தது. மனநிலை சரியற்றவனாக வளைய வருவது புரிய வந்தது. இல்லாவிட்டால் இப்படி எப்போதும் அறைக்குள் அடைந்து கிடக்க மாட்டான். சாப்பாட்டுத் தட்டில் அளைய மாட்டான். தூக்கம் வராமல் தவிக்க மாட்டான். வெறிக்க வெறிக்க எங்கோ பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டான்...

பெற்ற பிள்ளை அவ்வாறு இருப்பது கண்டு அந்த அம்மாளின் வயிறு சங்கடப்பட்டது. மனதை என்னவோ செய்தது. அதற்கு என்ன காரணம் என்பது தெரியாததால் அந்த சங்கடம் இன்னமும் அதிகமாயிற்று. இரண்டு மூன்று முறை மகனிடம் கேட்டுப் பார்த்தாள். சாப்பாட்டு மேஜைக்கு வந்து சாப்பிட உட்கார்ந்தவனின் தலையைக் கோதிவிட்டவாறு அருகில் நின்று அன்பாகப் பார்த்தர்ள். மிகவும் மென்மையாக நெஞ்சைத் தொடுகிற குரலில் கேட்டாள்.

"என்ன சக்தி...? ஏன் என்னவோ மாதிரி இருக்கே ?"

இன்னொருவரானால் அந்தக் குரலின் இதத்திற்கு கைகளின் வருடலுக்கு, பார்வையின் குளிர்ச்சிக்கு, பிரவாகித்த அன்பிற்கு மனசிலிருக்கிற அத்தனையும் கொட்டியிருப்பார்கள். வடிகால் தேடிக் கொண்டிருப்பார்கள் தாய்மை பொங்கும் அந்த அம்மாளின் மடியில் தலை சாய்த்துச் சொல்லியிருப்பார்கள்.

சக்தியும் சொன்னவன்தான். எதுவானாலும் அம்மாவிடம் பகிர்ந்து கொண்டவன் அவளிடம் பேசி ஆறுதல் தேடிக் கொண்டவன். மனதை லேசாக்கிக் கொண்டவன். ஆனாலும் இந்த முறை அவனால் சொல்ல முடியவில்லை. தன் மனதைத் திறந்து காட்ட முடியவில்லை. நெஞ்சின் தாபத்தைக் கொட்ட முடியவில்லை. வெட்கம் அவனைத் தடுத்தது. தான் காதல் வயப்பட்டிருப்பதை அம்மாவிடம் எப்படிச் சொல்வது, என்று தோன்றியது அதனால் மெல்ல எதையோ சொல்லி சமாளிக்க முயன்றான்.

"ஒண்ணுமில்லம்மா..."

"ஒண்ணுமில்லன்னா நீ இப்படி இருக்க மாட்டியேப்பா...?"

"எப்படி இருக்கேம்மா...? சாதாரணமாகத்தானே இருக்கேன்..."

"சாதாரணமாகவா இருக்கே...? பொய் சொல்லாத.. கண்ணாடியில உன் மூஞ்சியை நீயே பார்த்துக்க..."

"தினமும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்மா.... ஒரு வித்தியாசமும் தெரியல... நீங்களா எதையோ கற்பனை செய்துக்கிட்டு கேட்டா... என்ன பதிலைச் சொல்ல முடியும்...? எனக்கு ஒண்ணுமில்ல, நான் நல்லாத்தான் இருக்கேன்..."



அதோடு அந்தப் பேச்சை கத்தரிக்க விரும்பியவனாக நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுந்து கொண்டான். அம்மாவின் மனதில் சமாதானம் ஏற்படுகிற விதமாகச் சிரித்துக் கொண்டே போய் கை கழுவி விட்டு வந்தான். முகத்தின் சிரிப்பு மாறாமல் மீண்டும் அம்மாவைப் பார்த்துச் சொன்னான்.

"இப்பக் கூட கை கழுவறப்போ வாஷ்பேஸின் கண்ணாடில என் முகத்தைப் பார்த்தேன். சிரிச்சுக்கிட்டு நல்லாத்தான் இருந்திச்சு, வீணா எதையோ நினைச்சு மனசை வருத்தப்படுத்திக்காதீங்க. நான் என் ரூமுக்குப் படிக்கப் போறேன். அப்புறமா பாலுக்குப் பதிலா டீ அனுப்புங்க. பரீட்சை வருது நல்லாப் படிக்கணும்..."

அந்த அம்மாள் அவன் முகத்தையே பார்த்தவாறு பேசாதிருந்தாள்.

"என்னம்மா பேசாமல் இருக்கீங்க ..? சரியா...? டீ அனுப்பறீங்களா...?"

"சரிப்பா..."

சொல்லியனுப்பினாளே தவிர அந்த அம்மாளின் மனம் சமாதானமாகவில்லை. சக்தி பொய் சொல்கிறான் என்று தோன்றியது. எதையோ மறைக்கிறான் எனப் பட்டது. என்னவாக இருக்கும் என்பதை உட்கார்ந்து யோசித்தபோது நளினியின் கல்யாணவிஷயமாகத்தான் இருக்க வேண்டும் என்கிற முடிவிற்கு வந்தாள். அது தான் அவனை மிக ஆழமாகப் பாதித்திருக்க வேண்டும். தங்கையின் மனசுக்குப் பிடிக்காத இந்தக் கல்யாணத்தை நிறுத்த இயலாத வருத்தமாக இருக்க வேண்டும். அந்த சோகம்தான் அவனை இவ்வாறு அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. ஒன்றுமே செய்ய விடாதவனாக ஆக்கியிருக்கிறது அடித்துப் போட்டிருக்கிறது.

இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தபோது இதைப்பற்றி நளினியிடமே பேசலாம் என்கிற முடிவிற்கு வந்தாள்.

மாடிப்படியேறி நளினியின் அறைக்குப் போன போது அவள் யாருடனோ மிக சந்தோஷமாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. கட்டிலில் படுத்து மெத்தையில் டெலிபோனை எடுத்து வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்தவாறு சரளமான ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தாள். ஏற்கெனவே வெள்ளை வெளேறென்று அழகாக இருக்கும் அந்த முகம் இன்னும் அழகாகக் காணப்பட்டது. அதி சந்தோஷம் தெரிந்தது. குரலின் கலகலப்பும், குளுமையும், மென்மையும், இழைவும்...

'யாரிடம் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறாள் இவள்...? நெருங்கின சிநேகிதி என்று கூட யாரும் இவளுக்குக் கிடையாதே...?'

அந்த அம்மாள் புருவங்கள் சுருங்க அறைக்குள் நுழைந்த போது சட்டென்று அவளது பேச்சு நின்றது. சரேலென்று எழுந்து கட்டிலில் உட்கார்ந்தாள். அந்த நேரத்தில் தன் அறைக்குள் அம்மாவை எதிர் பார்க்காதது தெரிந்தது. அதனால் தொலைபேசியின் பேசும் பகுதியில் "ஒரு நிமிஷம் ப்ளீஸ்...?" என ஆங்கிலத்தில் சொல்லி குழலை மூடிக் கொண்டு அம்மாவைப் பார்த்தாள்.

"என்னம்மா...?"

"யாரு கிட்ட பேசிட்டிருக்க நீ...?"

அம்மாவின் குரலும், முகத்தில் தெரிந்த சந்தேகமும் அவளுக்குள் சட்டென்று ஒருவித பயத்தை ஏற்படுத்தின. அத்தனை நேரமிருந்த சந்தோஷம், குதூகலம், உற்சாகம் எல்லாம் வற்றித் தணிய மெதுவாகக் கேட்டாள்.



"ஏம்மா...?"

"இல்ல... உனக்கு சிநேகிதிங்கன்னு கூட யாரும் கிடையாதே... இந்த மாதிரி இத்தனை நேரமா டெலிபோன்ல யாருகிட்ட சிரிச்சுப் பேசறேன்னு நான் தெரிஞ்சுக்க வேணாமா? அதனால கேட்டேன்..."

"சொல்றேம்மா... நான் தப்பா யாருகிட்டேயும் பேசலேம்மா..." என்றவள் தொலைபேசியின் பேசும் பகுதியைப் பொத்திக் கொண்டிருந்த உள்ளங்கையை விலக்கி மென்மையாகச் சொன்னாள்.

"நான் திரும்ப போன் பண்றேங்க..."

"———"

"ஆமாங்க... அம்மா வந்திருக்காங்க... என்கிட்ட ஏதோ பேசணும்ன்றாங்க... அவங்க கிட்ட பேசிட்டுத் திரும்ப உங்ககிட்ட பேசறேன்... சரியா...?"

"———"

"இல்லீங்க... கட்டாயமா பண்ணறேன். ராத்திரி மணி பனிரெண்டானாலும் உங்ககிட்ட பேசிட்டுத்தான் படுப்பேன்..."

மறுபக்கத்திலிருந்து வந்த பதிலை வாங்கிக் கொண்டு தொலைபேசியின் குழலை அதன் மீது பொருத்தி விட்டு அம்மாவை ஏறிட்டாள்.

"சொல்லும்மா...?"

"நான் சொல்றது இருக்கட்டும். முதல்ல நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லு... டெலிபோன்ல பேசினது யாரு...?

நளினி மெதுவாகத் தலை குனிந்து முகம் சிவக்க, குரல் தடுமாறச் சொன்னாள்

"அ அவருதாம்மா..."

"அவருன்னா...?"

"அவரு... உனக்கு மருமகனாகப் போறவரு..."

"மருமக... அவரு கிட்டயா பேசிட்டிருந்த...?"— அந்த அம்மாள் அதைச் சிறிதும் எதிர்பார்க்காத அதிர்ச்சியில் கேட்டாள்.

"ஆமாம்மா..."

"ஏண்டி... அந்த மாப்பிள்ளை பிடிக்கலை அவரைக் கட்டிக்கப் போறதில்லை. கறுப்பா இருக்காரு... தொப்பை விழுந்திருக்குன்னெல்லாம் சொல்லிஅழுத...?"

"———"

"என்னடி பேசாம இருக்க...? பதில் சொல்லுடி...? இப்போ இப்படி சந்தோஷமா சிரிச்சுப் பேசற அளவுக்கு எப்படிப் பிடிச்சவரா மாறினாரு...?"

"அது... அது வந்து... அப்பா என்கிட்டப் பேசி என் மனசை மாத்தினாரும்மா..."

"அப்பாவா...! உன் கிட்டயா...! எப்போ...?"

"பெண் பார்த்துட்டுப் போன ரெண்டு நாளுக்கு அப்புறம் சக்தியண்ணா போய் எனக்காகப் பேசிட்டு வந்திச்சில்ல... அதுக்கு மறுநாளு..."

'நிஜமாவா?!"

"ஆமாம்மா... கணேசன் வந்து அப்பா கூப்பிடறதா சொன்னாரு, போனேன். அப்பா, 'வாம்மா... உட்காருன்னு...' என்னைத் தன் பக்கத்துல உட்கார வச்சுக்கிட்டாரு. தோள் மேல கை போட்டு ரொம்ப அன்பா விசாரிச்சாரு.. கடைசில, 'ஏம்மா... உனக்கு நான் பார்த்த இந்த மாப்பிள்ளை பிடிக்கலியான்னு?' ஆரம்பிச்சு சொன்னாரு பாரும்மா... அந்த இடத்தின் நல்லது, மாப்பிள்ளையோட நல்லகுணம், வாழ்க்கை சினிமா இல்ல... வெள்ளைத் தோலால் மட்டும் அழகு



வந்துடாது... நெல்சன் மண்டேலா பத்தி படிக்கற... டி.வி.யில் பார்க்கற.. அவரு எதுக்காகப் போராடறாரு... எதுக்காக இத்தனை வருஷம் ஜெயில்ல இருந்தாருன்ற எல்லாம் தெரிஞ்சுக்கிட்டிருக்கிற புத்திசாலிப் பொண்ணான நீ மாப்பிள்ளை கருப்புன்ற ஒரே காரணத்துக்காக வேண்டாம்னு சொல்லலாமாம்மா...? 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா... உன்தன் கரிய நிறம் தோன்றுவதையே நந்தலாலா'ன்னு பாரதி பாடினதை ரசிக்கிற... ஆனா நிஜ வாழ்க்கைல அதுக்கு எறுமாறா நடந்துக்கலாமா அம்மா'ன்னு கேட்டாரு... அதுக்கப்புறம்தான் எனக்கு என் தப்பு பிடிபட்டுச்சு. அழகுன்றது நிறத்துல இல்லேன்னு தெரிஞ்சிச்சு. மனசு தெளிவாச்சு. இல்லப்பா... 'நான் தப்பா ஏதோ சொல்லிட்டேம்ப்பா... நீங்க பார்த்த இவரையே கட்டிக்கறே'ன்னு சொன்னேன்...!

"ஏம்மா மனசு திருப்தியோட சொல்லணும் எனக்காகச் சொல்லக்கூடாது"ன்னாரு..

"இல்லப்பா... மனசு திருப்தியோடதான் சொல்றேன்"னேன். அதுக்கப்புறம் அப்பாவே 'அவரோட' டெலிபோன் நம்பர் தந்து பேசச் சொன்னாரு... பேசினேன்... பேசினதுக்கு அப்புறம் தான் அவரு எவ்வளவு தங்கமானவருன்னு தெரிஞ்சுது... அதுலேர்ந்து தினமும் நாங்க டெலிபோன்ல பேசிக்கிட்டுத்தான் இருக்கோம்...."

கேட்கக் கேட்க அந்த அம்மாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. மனதை விட்டு பெரிய பாரம் இறங்கின மாதிரித் தோன்றியது. ஆனாலும் கூடவே வருத்தமும் ஏற்பட்டது.

'இந்த வீட்டில்தான் நாமும் இருக்கிறோம். நமக்குத் தெரியாமல் எத்தனை விஷயங்கள் நடக்கின்றன...' என்று தோன்றிற்று. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாது தாய்மை உள்ளத்தோடு பேசத் தொடங்கினாள்.

"அப்பாடா... ரொம்ப சந்தோஷம். மனசுக்கு நிம்மதியா இருக்கு. இந்த வீட்ல நடக்கப் போற முதல் கல்யாணம் இப்படியா மனசுக்குத் திருப்தி இல்லாததா நடக்கணும்னு நினைச்சேன். இப்போ எல்லாமே திருப்தியாயிடுச்சு... ஆனா..."

"ஆனா என்னம்மா...?"

"ஏம்மா... இதை சக்திகிட்ட நீ சொல்லியிருக்கக் கூடாது... அன்னிலேர்ந்து அவன் உனக்காக மனசு கஷ்டப்பட்டு, சரியா சாப்பிடாம, தூங்காம, முகத்தைத் தூக்கி சோகமா வச்சிட்டிருக்கான்... அவனுக்கு நீ தெரியப்படுத்தியிருக்க வேணாம்...?"

அப்போதுதான் அவளுக்குத் தன் தவறு பிடிபட்டது. கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு சொன்னாள்.

"ஸாரிம்மா... இப்பவே போய் அண்ணன்கிட்ட பேசறேன். விவரமா எல்லாத்தையும் சொல்லி சரிப் படுத்தறேன்."

"இரு... அவன் டீ கேட்டான். சமையற்காரர்கிட்ட சொல்லி அதை வாங்கி எடுத்துக்கிட்டுப் போய் அவனைப் பாரு... என்ன...?"

"சரிம்மா..."

## 12

தன் அறைக்குள் நுழைந்த நளினியைப் பார்த்து ஆச்சரியப்பட்டான் சக்தி. அவனுக்குள் ஒரு குற்ற உணர்ச்சி கூட ஏற்பட்டது. அவளுக்காகத் தன்னால் எதுவும் செய்ய இயலாமல் போய்விட்ட சங்கடம் மீண்டும் எட்டிப் பார்த்தது. 'பாவம் அவள்' என்கிற உணர்வோடு அவள் முகத்தை ஏறிட்டவனுக்கு அந்த மாற்றம் பளிச்சென்று புலப்பட்டது.



'என்ன இது...? நளினிதானா இவள்...? அன்று பார்த்த அதே நளினியா...? முகம் நிறையச் சோகமும், கண்களில் கண்ணீருமாக நின்ற நளினியா...? துக்கத்தை அடக்க முடியாமல் வாயைப் பொத்திக் கொண்டு ஓடிய நளினியா...?'

இல்லை... இவள் வேறு நளினி. புது நளினி. முகம் முழுதும் பிரகாசமாய் விளக்கேற்றி வைத்தாற் போன்றிருக்கிற நளினி, சந்தோஷமாய் சிரித்துக் கொண்டிருக்கிற நளினி. குதூகலமாய் இருக்கிற நளினி. உற்சாகமாய் இருக்கின்ற நளினி...'

என்ன ஆயிற்று இடையில்...? எது இவளை இப்படி ஆக்கிற்று...? எதனால் ஏற்பட்ட மாற்றம்...? எப்படி ஏற்பட்டது?

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பது மட்டும் புரிந்தது. அவள் சந்தோஷமாக இருப்பது தெரிந்தது. அதில் மனச்சங்கடமும், குற்ற உணர்வும் ஓரளவு குறைந்தவனாக மெல்ல நிமிர்ந்து பார்த்து மெதுவான குரலில் கேட்டான்.

"வா... நளினி... என்ன என் ரூமுக்கே வந்துட்ட...?"

'இல்லண்ணே... நீ டீ கேட்டேன்னு அம்மா சொன்னாங்க... சமையற்காரரைப் போட்டுத் தரச் சொல்லி வாங்கிட்டு வந்தேன்..."

"நீ ஏம்மா எடுத்துக்கிட்டு வரணும்...? எத்தனை வேலைக்காரத் தடியனுங்க இருக்காங்க. கொடுத்தனுப்பக் கூடாது...?"

"இல்லண்ணே, நானே எடுத்துக்கிட்டு வரணும்னு தான் வந்திருக்கேன். எங்கண்ணனுக்கு நான் டீ கூடவா கொண்டிட்டு வந்து தரக்கூடாது...?"

'ஐயயோ.... அப்படிச் சொல்லலம்மா... உனக்கு எதுக்கு இந்தக் கஷ்டம்னுதான்..."

"இதுல கஷ்டம் என்ன இருக்குண்ணே...? அதுவுமில்லாம உன் கிட்ட கொஞ்சம் பேசணும்னு தோணிச்சு. அதனாலயும் வந்தேன். ஏண்ணே... நான் பேசறதால உன் படிப்புக்கு இடைஞ்சலா இருக்குமா...? அப்புறம் வேணும்னா வரட்டுமா..?"

"படிப்பு கிடக்கட்டும். அப்புறம் படிச்சுக்கறேன். நீ சொல்லும்மா... உட்காரு... உன்கிட்ட பேசியே ரொம்ப நாளான மாதிரி இருக்கு..."

"எனக்கும் அப்படித்தாண்ணே இருக்கு... நம்ம ரெண்டு பேருக்கும் நடுவுல ஒரு பள்ளம் விழுந்திடுச்சோன்னு தோணுது..."

"ஓ! பைத்தியம். ரெண்டு பேரும் கொஞ்ச நாளாப் பேசிக்கலேன்னா பள்ளம் விழுந்ததா ஆயிடுமா...? என்ன பேசற நீ...? ம்...? உட்காரு... மனசு விட்டு பேசலாம்..."

"முதல்ல நீ டீ சாப்பிடுண்ணே...?"

"நீ... ஏதாச்சும் சாப்பிட்டியா...?"

"ஆயிடுச்சு... பால் கூட குடிச்சிட்டுத்தான் வாரேன்..."

"அப்ப சரி... நான் டீ குடிக்கறேன்..."

கோப்பையிலிருந்து டீயை ஒரு மிடறு விழுங்கியவன் சட்டென்று அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்னண்ணே...?"

"இல்ல... டீ யார் போட்டது...?"

"ஏண்ணே சமையற்காரருதான்..."

"ம்ஹூம்... நான் நம்பலே..."



"சத்தியமா அவருதாண்ணே போட்டாரு..."

"ஆனா நீ கொண்டிட்டு வந்த... இல்ல... அதான் இவ்வளவு நல்லா இருக்கு..."

"போண்ணே..." என்று வெட்கமும், பெருமையுமாக அவள் புன்னகைக்க இவன் டீ முழுதையும் குடித்து கோப்பையை மேஜை மீது வைத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

"ம்... சொல்லு நளினி... இனிமேல ஃப்ரீயா பேசலாம்..."

"இல்லண்ணே... அம்மா ஏதோ சொன்னாங்க... நீ கொஞ்சநாளா என்னமோ மாதிரி இருக்கிறதா சொல்லி ரொம்ப வருத்தப் பட்டுக்கிட்டாங்க..."

"ஐயோ... அவங்களுக்கு வேற வேலை இல்லை நளினி. எதையோ தானா கற்பனை பண்ணிக்கிட்டுப் பேசறாங்க..."

"இல்லண்ணா அம்மா எதையும் கற்பனை செய்யறவங்க இல்ல... பெரிசு படுத்தறவங்க இல்ல... வாழ்க்கைல வர்ற எதையும் அனுசரிச்சுப் போறவங்க... சுலபமா எடுத்துக்கறவங்க... வாழ்க்கையை அதன் போக்குல ஏத்துக்கறவங்கன்னு உனக்கு தெரியாதா என்ன...?"

"அடேயப்பா!" என்று வியந்து போனான் அவன். எப்படிப் பேசுகிறாள் என்று ஆச்சரியப்பட்டுப் போனான். புதிதாக ஏதோ ஞானம் வந்த மாதிரியல்லவா சொல்கிறாள்! எப்படி ஏற்பட்டன இத்தனை தெளிவும் முதிர்ச்சியும்...?

"ஏன் நளினி.. நீயா இப்படியெல்லாம் பேசற...? இந்த மாதிரியெல்லாம் பேசக் கூடத் தெரியுமா உனக்கு..."

"ஏன் தெரியாதுண்ணே...? பொறுப்பு வந்தா எல்லாம் தானா வருது..."

'நிஜம்தான்' என்று தனக்குள் முனகிக் கொண்டான் அவன். அது காதில் விழாத மாதிரி பேசத் தொடங்கினாள் அவள்.

"என் கல்யாணத்தைப் பத்தித்தான் நீ அதிகம் கவலைப்படறேன்னு அம்மா சொன்னாங்க. என்னைப் பொண்ணு பார்க்க வந்த அன்னிலேர்ந்து நீ சரியா சாப்பிடறதில்லை, தூங்கறதில்லைன்னாங்க..."

"ஓ... ஓ...! அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல, அம்மா எதையோ கற்பனையா நினைச்சுக்கிட்டுப் பேசறாங்கன்னா நீ நம்ப மாட்டேன்ற ?"

"அம்மாவும் கற்பனை பண்ணலை, என் கண்ணும் பொய்யாப் பார்க்கலை .. நீ என்னவோ மாதிரித்தான் ஆயிட்டே... முகமெல்லாம் கறுத்து, கண்ணுக்கடியில கருப்பா கருவளையம் படர்ந்து... ஏண்ணே... தூங்கி ரொம்ப நாளாயிடுச்சா?"

"ஏம்மா அப்படிக் கேக்கற...?"

"இல்லண்ணே... என் கல்யாணம் பற்றின கவலைன்னா இனிமேல அந்தக் கவலையெல்லாம் பட வேண்டிய அவசியமே இல்லைண்ணே... அதை உட்டுடு..."

"நளி...னி.... என்னம்மா சொல்ற நீ...?"

"ஆமாண்ணே... நான் அன்னிக்கு ஏதோ குழந்தைத்தனமாப் பேசிட்டேன். பொறுப்பில்லாமல் நடந்துக்கிட்டேன். ஆனா அதுக்கப்புறம், அப்பா கூப்பிட்டுப் பேசினதுக்கு அப்புறம்தான் எல்லாம் புரிஞ்சது. என் தப்பு தெரிஞ்சுது..."

"அப்பா கூப்பிட்டுப் பேசினாரா...?!"



ராஜேஸ்வரி அம்மாளைப் போல் அவனும் ஆச்சரியமும் அதிர்ச்சியுமாகக் கேட்டான். அம்மாவிடம் சொன்னதைத் தவிர அப்பாவும், தானும் பேசின ஒரு பேச்சு விடாமல் அண்ணனிடம் சொன்னாள் அவள். முகம் முழுதும் மகிழ்ச்சியும், மலர்ச்சியுமாக அமைதியாகக் கேட்டுக் கொண்டான் அவன். எல்லாவற்றையும் சொல்லி முடித்தபின் நிதானமாக அவனைப் பார்த்தாள் அவள்.

"...அதனால தான் என் கல்யாணம் பற்றி நீ எந்த விதக் கவலையும் படத் தேவை இல்லேன்னு சொன்னேன் அண்ணே.. அப்பா சொன்னதுக்கு அப்புறம் என் மனசு தெளிவாயிடுச்சு, குறையா என் கண்ணுக்குப் பட்டது குறையே இல்லேன்னு தெரிஞ்சு போயிடுச்சு நான் இப்போ ரொம்ப சந்தோஷமா இருக்கேன். அவரோட தினமும் டெலிபோன்ல பேசிக்கிட்டிருக்கேன், பேசப் பேசத்தான் மனுஷங்களைத் தோற்றத்துல எடை போடறது எவ்வளவு தப்புன்றது பிடிபட்டது. அவரு ரொம்ப நல்லவரு. தங்கமானவரு... என்ன படிப்பு... என்னமாப் பேசறாருண்ணே... நான் நிஜமாகவே கொடுத்து வச்சவதாண்ணே..."

"அடேயப்பா... விட்டா இப்பவே அவருகிட்ட ஓடிப்போயிடுவே போல இருக்கே..." என்று அவன் கேலி செய்ததும்,

"போண்ணே..." என்று நிஜமாகவே அறையை விட்டு வெளியில் ஓடினாள் அவள்.

அவள் ஓடுவதை ரசித்த சக்திக்கு 'அப்பாடா' என்றிருந்தது. பெருமளவு பாரம் குறைந்த மாதிரித் தோன்றியது. சொல்ல முடியாத ஒரு நிம்மதி ஏற்பட்டது. நளினியின் கல்யாணத்தில் இருந்த அத்தனைப் பிரச்சினைகளும் தீர்ந்து சுபமானது மாதிரி, ரவிச்சந்த்ரிகா மீது தனக்கு ஏற்பட்டிருக்கிற இந்தக்

காதலும் சுபமாகக் கல்யாணத்தில் முடிந்தால் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தான்.

'ஆண்டவா... இதிலும் எந்தப் பிரச்சினையும் இல்லாது நல்லபடியாகச் செய்து விடேன்...' என்று தன்னையும் அறியாமல் வேண்டிக் கொள்ள ஆரம்பித்தான் அவன்...

## 13

வீடு அமர்க்களப்பட்டது. மனித நடமாட்டமும், சிரிப்பும், பேச்சும் உற்சாகமுமாக இருந்தது. கல்யாணத்திற்கு இன்னும் பதினைந்து நாட்கள் இருந்த போதே கல்யாணக் களை கட்டியிருந்தது. வருவோரும், போவோருமாகச் சத்திரம் மாதிரி இருந்தது. புது வெள்ளையடிப்பிலும், கதவு ஜன்னல்களின் வார்னிஷ் பளபளப்பிலும் வீட்டிற்கே கல்யாணப் பெண்ணின் மெருகும் ஜொலிப்பும் ஏறியிருந்தது. யாரைப் பார்த்தாலும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். வீட்டு வேலைக்காரர்களின் முகங்களில் எல்லையற்ற சந்தோஷம் ஓடிற்று. வாசல் கூர்க்காவிலிருந்து குளியல் அறைகளைக் கழுவுகிறவர்கள் வரை மகிழ்ச்சிகரமாக இருந்தார்கள். 'வெளியில் ஒருவர் விடாமல் சந்திக்க நேர்கிற அத்தனைப் பேர்களிடமும்' எங்க வீட்டுச் சின்னம்மாவுக்குக் கல்யாணம் என்பதை அலுக்காமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

'அப்படின்னா உனக்குப் புதுத்துணி கிடைக்கும்னு சொல்லு...' என்றவர்களிடம் மனசு நிரம்பி வழியப் பெருமையடித்துக் கொண்டார்கள்.

"புதுத் துணின்னா மத்த விடுங்க மாதிரி சாதாரணத் துணின்னு நினைச்சியா...? இவங்க பட்டு எடுத்துக் கொடுப்பாங்க... தெரியுமா...?"



அதிலும் நளினியின் மனதிற்குப் பிடித்துத்தான் இந்தத் திருமணம் நடைபெறுகிறது என்பது தெரிந்ததும் அத்தனை பேர் உற்சாகமும் அதிகமாயிற்று. ராஜேஸ்வரி அம்மாளின் நெஞ்சு நிரப்பித் தளும்பிற்று. 'வீட்டில் நடைபெறப் போகிற முதல் விசேஷம். அதிலும் கல்யாணம். ஒரே பெண்ணின் கல்யாணம். அவள் மனதிற்குப் பிடித்துப் போன மாப்பிள்ளை என்கின்ற நினைவில் சுறுசுறுப்பும் புதுத் தெம்புமாக செயல்படத் துவங்கினாள். ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்தாள். பட்டுப்புடவைகளுக்கு உடல் முழுதும் சரிகை வேய்ந்து தறிபோடச் சொன்னாள். நகைக் கடையையே வீட்டிற்கு வரவழைத்தாள். சமையல் வகைகளை சமையற்காரர்களைச் செய்யச் சொல்லி ருசி பார்த்து பின்னரே பட்டியல் தந்தாள். பத்திரிகை கூட தங்கத் தகட்டில் வைரம் பதித்த மாதிரி அச்சடித்துத் தரச் சொன்னாள்.

ஒரு அறை முழுதும் ஆட்கள் உட்கார்ந்து பத்திரிகைகளை உறையில் இடுவதும் விலாசம் எழுதுவதுமாக இருந்தார்கள். தபாலில் சேர்க்க வேண்டிய அழைப்பிதழ்களைக் காரியதரிசிகள் கவனித்துக் கொள்ள, நேரில் அழைக்க வேண்டியவர்களை ராஜரத்தினமும், ராஜேஸ்வரியம்மாளுமே போய்க் கூப்பிட்டார்கள்.

கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு மேலாக அழைக்கும் படலம் நடந்த பின்னரும் ஏராளமான அழைப்பிதழ்கள் இருக்க ராஜரத்தினம் களைத்துப் போனார். இனி மேலும் இவ்வாறு தான் வீடு வீடாகப் போய்க் கொண்டிருக்க முடியாது என்பதை உணர்ந்தார். அதனால் கவனிக்க வேண்டிய அத்தனை வேலைகளும் பாதிக்கப் பட்டிருப்பதைப் புரிந்து கொண்டு மனைவியையும், சக்தியையும் கூப்பிட்டுச் சொன்னார்.

"இனிமேல என்னால கூப்பிட வந்துட்டிருக்க முடியாது. இங்க அத்தனை வேலையும் அப்படியே

நிக்குது. நீங்க ரெண்டு பேரும் போய் அழைச்சிட்டு வாங்க. இன்னும் நாலு நாள்தான் இருக்கு கல்யாணத்துக்கு. நான் இருந்து கவனிக்க வேண்டிய ஏற்பாடுங்க தலைக்கு மேல கிடக்குது ..''

அவர் அவ்வளவு தூரம் ஒத்துழைத்து தன்னோடு அழைக்க வந்ததே அதிகம் என்பதை உணர்ந்த அந்த அம்மாள் மென்மையாகப் பேசினாள்.

''சரிங்க... நீங்க உங்க வேலைகளைக் கவனிங்க .. நானும், சக்தியுமாப் போயி இன்னும் அழைக்க வேண்டியவங்களை அழைச்சிட்டு வரோம் ..''

அதைக் கேட்டு சக்தி தயங்குவதைக் கவனித்த ராஜரத்தினம் அவனை ஏறிட்டுக் கேட்டார்.

''என்ன சக்தி யோசனை .. ?''

''ஒ...ண்ணு...மில்லப்பா...''

''என்ன...? தயங்காமல் சொல்லு...?''

''இல்ல... காலேஜ் இருக்கேன்னு பாக்கறேன்...''

''காலேஜுக்கு லீவு போட்டுடு சக்தி. கல்யாணத்துக்கு இன்னும் முழுசா நாலு நாள்தான் இருக்கு...''

''.........''

''என்ன பேசாமல் இருக்கே ..?''

''இல்லப்பா... கல்யாணத்தன்னிக்கும், அதுக்கு முதல் நாளும் லீவு போட்டாப் போறாதாப்பா... பைனல் இயராச்சேன்னுதான் தயங்கறேன் ..''

''பரவாயில்ல .. இன்னும் ரெண்டு நாள் கூடச் சேர்த்து லீவு போட்டுடு... நேர போய் பத்திரிகை கொடுக்க எத்தனை இடங்க பாக்கி இருக்குன்னு பாரு .. அம்மா மட்டும் போனால் நல்லா இருக்காது கூட நீயும் போகணும். முதல் முதலா செய்யற கல்யாணம்



ரொம்ப நல்லா விமரிசையா நடக்கணும்னு நான் நினைக்கறேன். நீயும் அப்படித்தானே அபிப்பிராயப் படற...?''

''ஆமாம்ப்பா...''

''அப்ப்டின்னா பின்னால படிச்சுக்கலாம். இப்ப லீவு போட்டுட்டு எதையெல்லாம் நீ கவனிக்க முடியும்னு பாரு... முதல்ல இன்னியோட இந்த அழைக்கிற வேலையை முடிச்சுக்குங்க...''

''சரிப்பா...'' என்று போகத் திரும்பியவனை மீண்டும் கூப்பிட்டார் அவர்.

''இதப்பாருப்பா .. அப்பிடியே பத்திரிகைங்களைக் கூட எடுத்துக்கிட்டுப் போய் கல்யாணத்துக்கு வாசிக்கிற நாதஸ்வரக் காரங்கள்லேருந்து நாட்டியமாடற அந்தப் பொண்ணு வரை நேர்ல போய் பத்திரிகை கொடுத்திட்டு வந்துடு ...''

சடாரென்று சக்தியின் முகம் மலர்ந்தது. நூறு வாட்ஸ் பல்ப் ஏற்றின மாதிரி பிரகாசித்தது. அப்பாவின் கையை ஓடிப்போய் சின்னக் குழந்தை மாதிரி பற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. 'சின்ன அப்பா... என் செல்ல அப்பா ..' என்று கொஞ்சத் தோன்றியது.

கல்யாணத்திற்கு முந்தின நாள் மாலை நாட்டிய நிகழ்ச்சியின் போதுதான் ரவிச்சந்த்ரிகாவை சந்திக்க முடியும் என்று நாட்களை எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறாரே ..! இப்போதே பார்க்கக் கூடிய ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி சொல்கிறாரே ..! இப்படிப் பட்ட அப்பாவிற்கு பதிலுக்கு என்ன செய்ய முடியும்? தான் ஆற்றக் கூடிய கைமாறு என்ன...?

தாங்க முடியாத சந்தோஷ நிலையில் அவன் யோசித்தவாறு நிற்க, அவர் அதைத் தயக்கம் எனக் கருதி மீண்டும் கேட்டார்.

"என்னப்பா தயங்கற ..? உனக்கு இதுல ஏதாவது ஆட்சேபணை இருந்——"

"ஐயோ... ஒரு ஆட்சேபணையும் இல்லப்பா... நான் தாராளமாப் போயிட்டு வாரேன்..."

"சரி... அப்படியே அந்தப் பொண்ணு ரவிச்சந்த்ரிகாவையும் கூப்பிடற இல்ல...?"

அவன் மனம் அடித்துக் கொண்டது. இதயம் கால்வினாடி 'லப்டப்' சத்தத்தை நழுவவிட்டது. உள்ளம் துடித்தது. நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டது.

'ஒருவேளை எதையோ புரிந்து கொண்டுதான் அப்பா இப்படிக் கேட்கிறாரோ...?' என்ற சந்தேகம் எழுந்தது. அதில் அவன் பேசாமல் இருக்க, அவர் மெலிதாய் எரிச்சல் தலைதூக்கக் கேட்டார்.

"என்ன சக்தி ..?"

"ஆ... போறேம்ப்பா... அவங்க வீட்டுக்கே முதல்ல போயிடறேன்..."

"சரி... இன்னி ராத்திரியோட அழைப்பு வேலையை முடிச்சுக்கிடுங்க..."

'சரிப்பா..." என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் அவன் திரும்ப இப்போது ராஜேஸ்வரியம்மாள் தயங்கித் தயங்கி நிற்பதைப் பார்த்து சலித்துக்கொண்டார் ராஜரத்தினம்.

"என்ன... நீ வேற என்னசொல்லப் போற ..?"

அந்த அம்மாள் சொல்ல வந்ததைச் சொல்ல இயலாமல் இன்னமும் தயங்கித் தடுமாற ராஜரத்தினம் கோபப் பட்டார்...

"என்ன... சொல்ல வந்ததை சீக்கிரம் சொல்லு... எனக்கு வேலை இருக்கு... சும்மா நேரத்தை வீணடிக்க முடியாது..."



"இல்லீங்க... வந்து... வந்து .. யாரோ ஒரு பொண்ணு பேரு சொன்னீங்களே .. யாருங்க அது...?"

"யாரு ..?" என்று யோசித்தார் அவர்.

"ரவிச்சந்திரிகான்னு..."

"ஓ! அதுவா... அந்தப் பொண்ணு பேரைக் கேள்விப் பட்டதில்லை ..? ஒரு பெரிய டான்ஸர். ரொம்ப நல்லா நாட்டியமாடும். தில்லானா மோகனாம்பாள் பார்த் திருக்க இல்ல... அந்தக் காலத்துல மோகனாம்பான்னா... இப்ப ரவிச்சந்த்ரிகா..."

நிஜமானதோர் உணர்ச்சி வேகத்தில் அவர் பேசிய ஒவ்வொன்றும் தவறான கோணத்தில் அந்த அம்மாளின் நெஞ்சில் விழ, முகத்தை சுளித்துக் கொண்டாள்.

"நான் .. அவ வீட்டுக்கெல்லாம் போகலீங்க..."

"ஏன்...?"—திடுக்கிட்ட மாதிரி கேட்டார் அவர்.

"நாட்டியக்காரி வீட்டுக்கெல்லாம் நான் போக மாட்டேங்க .."

சக்தியின் மனதில் அந்தச் சொற்கள் நெருப்புத் துண்டங்களாக விழுந்து தகித்தன.

'அம்மா அப்படிச் சொல்லாதேம்மா... நீ நினைக்கிற மாதிரி இல்லேம்மா அவ...' என்று சொல்லத்துடித்த நாக்கை அடக்கிக் கொண்டான்.

ஆனால் ராஜரத்தினம் அப்படி அடக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாதவராகப் படபடவென்று பேசினார்.

"இல்ல... நீ கட்டாயம் போற .. நீயே நேர்ல போய் அவளைக் கூப்பிடற. அவளை மட்டுமில்ல, நம்ம கல்யாணத்துல பங்கு எடுத்துக்கற ஒவ்வொரு கலைஞர்

களையும் கூப்பிடற. இதுதான் அவங்க கலைக்கு நாம செய்யற மரியாதை..."

சொல்லி விட்டு அதற்குமேல் காத்திராமல் சடாரென்று அவர் உள்ளே போக, ராஜேஸ்வரியம்மாள் தன் வெறுப்பை வெளிக்காட்டும் வகையற்று மௌனமாக நின்றாள்...

## 14

காரில் போன போது ராஜேஸ்வரியம்மாள் மௌனமாகவே வந்தாள். முகத்தில் எப்போதும் இருக்கிற அமைதியோ, புன்சிரிப்போ இல்லை. மாறாக ஒருவிதக் கோபம் பளிச்சிடுவதாகப் பட, அதற்கு மேல் தாங்க இயலாதவனாகக் கேட்டான் சக்திவேல், மெதுவாக நிதானமாகக் கேட்டான்.

"ஏம்மா என்னவோ போல இருக்கீங்க..."

சிந்தனை கலைந்து நிமிர்ந்தவளாக அவனைப் பார்த்தாள். சற்றுத் தடுமாறினவளாகப் பதில் சொன்னாள்.

"ஒ... ஒண்ணுமில்லையேப்பா..."

"சும்மா சொல்லாதீங்கம்மா... முகம் என்னவோ போல இருக்கு... கொஞ்சம் கூட சுரத்தே இல்லை..."

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல... எப்பவும் இருக்கிற அதே மொகமாகத்தான் இருக்கு..."

"போங்கம்மா... அப்படிச் சொல்லி மழுப்பினா நான் ஏமாந்து போவனா...? எனக்குத் தெரியாது உங்க முகத்தைப் பத்தி...?"



"என்ன தெரியும் உனக்கு...?"

"எங்கம்மா முகம் தெய்வீகமான முகம். கோவில்ல பார்க்கற அம்பாள் முகம் மாதிரி களையான முகம். சாந்தமான முகம். கொஞ்சம் கூட கோபமோ, வருத்தமோ எட்டிப் பார்க்காத முகம்..."

"சாமி சினிமாவுல வர்ற கே. ஆர். விஜயா முகம் மாதிரின்னு சொல்லு..."

"போங்கம்மா நீங்க... நான் உங்களை கோவில் அம்பாள்னு சொன்னா நீங்க சினிமாவுல மேக் அப் போட்ட முகத்தையெல்லாம் இழுக்கறீங்க. நான் சொல்றது நிஜமான தெய்வீகமான முகம்..."

"சரிப்பா... அப்படியே இருக்கிறதா ஒத்துக்கறேன் போறுமா...?"

"ம்ஹூம்... போறாது..."

"வேற என்ன செய்யணும்...?"

"நிஜத்தைச் சொல்லணும்..."

"எந்த நிஜம்...?"

"உங்க முகம் ஏன் இப்படி வாடி வதங்கிக் கிடக்குதுன்ற நிஜம்..."

"நான்தான் ஒண்ணுமில்லேன்றனில்ல...?"

"நானும்தான் பொய் சொல்லக் கூடாதுன்றனில்ல...?"

அந்த அம்மாள் சிரித்து விட்டாள். ஆனாலும் அதுவும் இயல்பான, நிஜமான சிரிப்பாகத் தெரியவில்லை. காரணம் தெரிகிற வரை அவனும் விடுவதாக இல்லை. காரணத்தை ஓரளவு ஊகித்திருந்தாலும் அதுதானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நினைத்தே மீண்டும் கேட்டான்.

"...நீ இப்ப சிரிச்சாலும் அதுவும் நிஜமான சிரிப்பாக இல்ல .. சொல்லும்மா... என்கிட்ட சொல்லாமல் வேற யாருகிட்ட சொல்லப் போற ..? என்கிட்டயே சொல்ல முடியல்லன்னா வேற யாருகிட்ட சொல்ல முடியும் ..?"

அந்தப் பேச்சு மனதைத் தொட அந்தம்மாள் மெல்லத் தயங்கிச் சொன்னாள்.

"ஒண்ணுமில்லப்பா... எனக்கு அங்கல்லாம் வரப் புடிக்கல..."

'அங்கல்லாம்' என்று அம்மா குறிப்பிட்ட இடம் எது என்பதை அவன் புரிந்துக் கொண்டான். அதில் மனசுக்குள் அம்பு ஒன்று தைத்துக் கொண்டது. சுரீலென்று வலியெடுத்தது. அம்மாவின் தவறான அந்த அபிப்பிராயத்தைப் போக்கவேண்டுமென்று துடித்தது. உடனே தானே கூட அப்படி நினைத்தவன்தானே என்று தோன்றிற்று. முதல் முதலாக அப்பா தன்னை ரவிச்சந்திரிகாவின் வீட்டிற்குப் போகச் சொன்னபோது அம்மா இப்போது எப்படி நினைக்கிறாளோ அதே மாதிரி நினைத்தவன்தானே அவனும், இது போன்று சங்கடப்பட்டவன்தானே... பின்பு ரவிச்சந்திரிகாவைப் பார்த்தபின் மனசு எப்படி மாறிற்றோ அது போல் அம்மாவிற்கும் மாறும். அவளது முகத்தைத் பார்க்கிற யாருக்கும் கையெடுத்துக் கும்பிடத் தோன்றும். மதிப்பும், மரியாதையுமாக உட்கார்ந்திருக்கிற இடத்தை விட்டு எழச் செய்யும். சீதை, தமயந்தி, மகாலக்ஷ்மி, சரஸ்வதி என்று தெய்வீகமாக நினைக்கச் செய்யும். அதுவும் வெறும் பார்வை மட்டுமின்றி ஒருதரம் பேசிவிட்டால் போதும். மனசு 'ஹா ஹா' என்று அரற்றும். நினைக்க நினைக்க உடம்பு சிலிர்த்துப் போகும். உள்ளம் சிலிர்க்கும். முதுகுத் தண்டு சொடுக்கும்.

வெறும் அழகு மட்டுமின்றி இப்படிப்பட்ட அறிவா! இத்தனை புத்திசாலித்தனமா! நிஜமாக இவள் சாதாரணமான பெண்ணா...? ரத்தமும், சதையும் கொண்ட



11843 2888966

வெறும் மனுஷியா... அல்லது ஏதாவது தெய்வீக லோகத்திலிருந்து இறங்கி வந்தவளா...? என்கிற ஆச்சரியமெல்லாம் ஏற்படும்.

அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதைச் சொல்லாமல், தன் உள் மனதை வெளிப்படுத்தாமல் மெதுவாக அம்மாவிடம் மீண்டும் பேச்சுக் கொடுத்தான்.

"...அங்கெல்லாம்னா... எங்கம்மா...?"

"அதாம்ப்பா .. உங்கப்பா சொல்லி அனுப்பின நாட்டியக்காரி வீட்டுக்கெல்லாம்..."

இவன் மனதிற்குள் மறுபடியும் ஊசி தைத்தது. ஆனாலும் நிதானமிழக்காமல் பேசினான்.

"ஏம்மா... நாட்டியமாடறது என்ன... அத்தனை பெரிய தப்பாம்மா...?"

"தப்பு சரின்றதில்லப்பா பேச்சு... நாம எதுக்கு அங்கெல்லாம் போகணும்..."

"ஏம்மா... சிவன் நாட்டியமாடல... அவரோட சேர்ந்து பார்வதியும் ஆடல...? அவங்க மட்டும் நாட்டியக்காரங்க இல்லியா...? அவங்களுக்குக் கோவில் கட்டி கும்பிடலையா...? செவ்வாய், வெள்ளி தவறாம நீ போய் அர்ச்சனை செய்யலியா...?"

"ஐயயோ ..." என்று பதறினாள் அந்த அம்மாள்.

"என்ன சக்தி நீ...? தெய்வத்தையும், மனுஷங்களையும் ஒண்ணாக்கற...?"

"ஒண்ணாக்கலம்மா... தெய்வம் மாதிரி தெய்வீகத் தன்மையோட, களையோட சில மனுஷங்களும் இருப்பாங்கன்னுதான் சொல்ல வரேன்..."

"அது சரிப்பா... அப்படி எங்கயோ லட்சத்துல ஒருத்தங்க இருப்பாங்க... பொறுக்கிப் பொறுக்கிப்

பார்த்து எல்லாத்தையும் ஒண்ணா சேர்த்து எங்கேயோ ஒண்ணை சாமி பிறக்க வச்சிருக்கும். நான் இல்லேன்னல... ஆனா... அதுக்கும் இந்த நாட்டியக் காரிக்கும் என்ன சம்பந்தம்...?"

"அந்த மாதிரி ஒரு பிறவிதாம்மா நாம் இப்போ போகப் போற அந்தப் பொண்ணும்..."

"என்...ன...!?"

"ஆமாம்மா..."

"அது உனக்கு எப்படித் தெரியும்...?"

"நான் பார்த்திருக்கேன்..."

"எப்போ..." என்ற போது அந்த அம்மாளின் அடிவயிறு ஒரு முறை புரண்டது. நெஞ்சுக்குள் ஒரு பயம் பளீரென்று மின்னலாக வெட்டிற்று.

"ஒரு... பதினைஞ்சு நாள் முன்னால..."

"எங்க பார்த்த...?"

"அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போயிருந்தேன்..."

"எ... எதுக்கு...?" — அந்த கேள்வியில் ஏற்பட்ட சந்தேகத்தினால் உள்ளுக்குள் துவண்டு போனாள்.

"மாப்பிள்ளை அழைப்புக்கு அந்தப் பொண்ணோட நாட்டிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துட்டு வரச்சொல்லி அப்பா என்னை அனுப்பினாரு... அப்போ போயிருந்தேன்..."

"கூட உங்கப்பா வந்தாரா...?"

"ம்ஹூம்... அவுரு வரல..."

"பின்ன யாரு வந்தாங்க...?"

"நான் மட்டும் தனியாகத்தான் போனேன்..."



அதற்கு மேல் கேள்வி கேட்கவில்லை. எதை எதையோ நினைத்து மனசு சங்கடப்பட்டது. வீட்டை விட்டுக் கிளம்பியதை விட இப்போது குழப்பம் அதிகமாயிற்று. ஒன்றும் ஒன்றும் இரண்டு எனக் கூட்டிற்று. பெருக்கிப் பார்த்தது. கடைசியில் விடை கண்டு பிடித்தது.

'பத்துப் பதினைந்து நாட்களாக இவன் என்னவோ போல் இருந்ததற்குக் காரணம் இதுதானா?'

அந்த விடை தந்த வலியிலும் வேதனையிலும் அந்தத் தாயின் நெஞ்சம் இன்னமும் புழுங்கத் தொடங்கிற்று...

## 15

உள்ளுணர்வு என்பது சிலருக்குச் சில நேரங்களில் அதி அற்புதமாகச் செயல்படும். வருவதை முன் கூட்டியே எடுத்துச் சொல்லும். நல்லதைச் சொல்கிறதோ இல்லையோ, கெட்டதை நிச்சயமாகக் காட்டிக் கொடுக்கும். கெடுதல் ஏற்படுவதற்கு முன்னாலேயே மனசு துடிக்கும். காரணம் தெரியாததால் அழுகை வரும். யாருமில்லாமல் தன்னந்தனியாக ஒரு மூலையில் உட்கார்ந்து அழலாம் போலிருக்கும். வாய்விட்டுக் கதறத் தோன்றும்.

அப்படித்தான் தோன்றியது ராஜேஸ்வரியம்மாளுக்கு. அடிவயிற்றில் பயம் சுருண்டது. ஏதோ ஒரு வேதனை எட்டிப் பார்த்தது. சக்திவேல் பேசிய விதமும், முகம் பளிச்சிட்டதும், கண்களின் மினுமினுப்பும் புதிதாகத் தெரிந்தது. அவனது மனதின் பிரதிபலிப்பாகப் பட்டது. இதுவரை யாரைப் பற்றியும் சக்தி பேசினதில்லை. விமரிசித்ததில்லை. போற்றினதில்லை.

புகழ்ந்ததில்லை. அவன் யாரைப் பற்றியாவது வாய் திறந்து பேசியிருக்கிறான் என்றால் அது ராஜரத்தினத்தைப் பற்றித் தானே தவிர வேறு யார் பற்றியுமில்லை. முக்கியமாக பெண்களைப் பற்றி இல்லை.

இப்போது இந்தப் பெண்ணைப் பற்றி இவ்வளவு பேசுகிறானே... போற்றிப் புகழ்கிறானே... அவள் பெயரைச் சொல்கிற போது கண்களும் முகமும் பளிச்சிடுகிறதே... விளக்கேற்றின மாதிரி ஒரு தனிப் பிரகாசம் சூழ்ந்து கொள்கிறதே...

இதற்கெல்லாம் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா...? காரணம் இருக்கிறதா...? இவன்... இவன்... அந்தப் பெண்ணை... பெயர் என்ன சொன்னான்...?

சித்ரலேகாவா...? சந்திரலேகாவா...? ம்ஹூம்... வேறு என்னவோ பெயராக இருந்ததே... இதுவரை கேள்விப்படாத பெயராக இருந்ததே... என்ன அது...?

எவ்வளவு யோசித்தும் ஞாபகத்திற்கு வராததால் விட்டுவிட்டாள்.

'என்னவோ ஒரு பெயர். பெயரில் என்ன இருக்கிறது...? இப்போது தெரிந்து கொள்ளவேண்டியதெல்லாம் சக்திக்கு அந்தப் பெண்ணிடம் ஏற்பட்டிருக்கிற ஈடுபாடு எப்படிப்பட்டது என்பதுதானே தவிர வேறு எதுவுமில்லை.. கடவுளே இதை வேறு எதுவாகவும் ஆக்காதே... வெறும் ஈடுபாடு மட்டுந்தான் என்று வைத்துவிடு... இல்லாவிட்டால் எங்களால் தாங்க முடியாது. டான்ஸ் ஆடுகிற ஒரு பெண்ணை வீட்டின் மருமகளாக நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.. தயவு செய்து எந்தக் குழப்பத்தையும் ஏற்படுத்திவிடாதே... திருச்செந்தூர் முருகா... உன் அருளால் இப்போது தான் ஒரு குழப்பம் நீங்கி நளினியின் கல்யாணம் நல்லபடி நடக்கப் போகிறது. அது மாதிரியே சக்தியின்



கல்யாணத்தையும் நடத்திக் கொடுத்து விடு என் அப்பனே..!'

மனமுருக அந்த அம்மாள் கண்களை மூடி திருச்செந்தூர் முருகனை தரிசித்துக் கொண்டிருந்த போது கார் நின்றது. சக்தி அவள் தோளில் கைவைத்துச் சொன்னான்.

"வீடு வந்திடுச்சும்மா..."

அந்த அம்மாள் கண்களைத் திறந்து சக்தியின் முகத்தைக் கூர்மையாகப் பார்த்தாள்.

"என்னம்மா பார்க்கறீங்க...? ரவிச்சந்த்ரிகாவின் வீடும்மா..."

"ரவிச்சந்த்ரிகா... அதுதான் அந்தப் பொண்ணோட பேரு இல்ல..?" என்று கீழே இறங்கினவளின் பார்வை வீட்டையும் சுற்றுப்புறத்தையும் நோட்டமிட்டது. எடை போட முயன்றது.

"வாம்மா... உள்ள போகலாம்..."

அத்தனை சுலபமாக அந்த வீட்டினுள் நுழைய அந்த அம்மாளின் மனசு இடம்தரவில்லை. அதனால் மீண்டும் தயங்கினாள்.

"ஏம்ப்பா... நான் இங்கேயே இருக்கேன். நீ போய் பத்திரிகை வச்சிட்டு வந்துடேன்..."

"ஏம்மா... இத்தனை சொல்லிக்கூட தயங்கறீங்க, பார்த்திங்களா...? நீங்க அவசியம் உள்ள வரணும். அவங்களைப் பார்க்கணும்"

"எதுக்கு...?"

"பார்த்தாத்தான் அவங்க எத்தினி நல்லவங்கன்றது தெரியும்..."

"தெரிஞ்சுக்கிட்டு நான் என்ன செய்யப் போறேன்...? ஊர்ல ஆயிரம் நல்லவங்க இருப்பாங்க... அவங்க அத்தினிபேரையும் நான் பார்த்துக்கிட்டிருக்க முடியுமா...?"

"அ...ம்...மா...!?" என்று அதிர்ந்து போனான் அவன். முகம் சட்டென்று தன் பிரகாசத்தை இழந்தது. கண்களில் ஒருவித வருத்தமும், சங்கடமும் தோன்றிற்று. இதுவரை அம்மா இப்படிப் பட்டு கத்தரிக்கிற மாதிரி பேசி அவன் கேட்டதில்லை. முகத்திலும், குரலிலும் இத்தனை எரிச்சலைப் பாாத்ததில்லை. இவ்வளவு சொல்லிக்கூட ரவிச்சந்திரிகா பற்றின தன் அபிப்பிராயத்திலிருந்து அம்மா மாறவில்லை என்பது வருத்தமாக இருந்தது. வேதனை அளித்தது.

'இது என்ன முட்டாள்தனமான எண்ணம். பார்த்தே இராத ஒருத்தியைப் பற்றி எவ்வாறு இப்படிப்பட்ட அபிப்ராயங்களை உருவாக்கிக் கொள்ளலாம் என்று கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அம்மா மட்டுமில்லை. இந்தச் சமூகத்தில் முக்கால்வாசிப் பேர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். ஆராய்ந்து பார்க்காமல், கொஞ்சமும் தயங்காமல் மற்றவர்களைப் பற்றின அபிப்ராயங்களை ஏற்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். விமர்சனம் செய்கிறார்கள். படித்தவர்களே இந்தத் தவறுகளைச் செய்கிறபோது படிக்காத அம்மாவைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. காலம் காலமாக உள் மனசுக்குள் இறுகப் பதிந்து போன சில படிமானங்களைச் சட்டென்று விலக்கிவிட முடியாது. ஆகவே நிதானமாகப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. மார்க்கமில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அம்மாவை மாற்ற வேண்டுமே தவிர சடாரென்று இழுக்க முடியாது. இழுக்கவும் கூடாது...'

யோசித்து முடிவு செய்த சக்தி தனக்கு எழுந்த பெருமூச்சைக் கட்டுப்படுத்த இயலாதவனாக, மிகவும்



நிதானமாக, ஆனால் தன் வருத்தத்தை வெளிப்படுத்தியவனாகச் சொன்னான்.

"சரிம்மா... இவ்வளவு சொல்லியும் உங்களுக்கு இஷ்டமில்ல... என் பேச்சுல நம்பிக்கை வரலைன்ற போது நான் வற்புறுத்த விரும்பல... நீங்க கார்லயே உட்கார்ந்திட்டிருங்க.. நான் போய், கொடுத்திட்டு வந்துடறேன்..."

அவனைத் தனியாக உள்ளே அனுப்பவும் அந்த அம்மாவுக்கு இஷ்டமில்லை. அதுவுமின்றி மகனின் பேச்சில் தெரிந்த வருத்தமும், சோகமும் மனதை சங்கடப்படுத்த ஓர் முடிவிற்கு வந்தாள்.

'ஒருவேளை ஒன்றுமேயில்லாத ஒரு விஷயத்தை நாமாக ஊதிப் பெரிது பண்ணுவானேன்...?' என்று உதித்த திடீர் ஞானோதயத்தில் பேசினாள்.

"இல்லப்பா... நானும் வரேன். அப்புறம் உங்கப்பாவுக்குத் தெரிஞ்சால் கோவிச்சுக்குவாரு..."

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த போதே அற்புதமான வீணை இசை கேட்டது. மெலிதாய் சாம்பிராணி வாசனை வந்தது. சன்னமான குரலில் யாரோ வீணையினூடே பாடுவது கேட்டது.

அந்த மாலை நேரத்தின் அரை இருட்டில் வீட்டின் அமைதியும், உள்ளேயிருந்து வந்த சாம்பிராணி வாசனையும், மெலிதாய் நெஞ்சைத் தொட்ட வீணை இசையும் 'ராமா மீக்கு சமானமெவரு...?' என்ற கேள்வியின் உருக்கமும் சக்தியைக் கண்களை மூடி மயங்க வைத்த மாதிரி ராஜேஸ்வரியம்மாளின் மனதையும் தொடத்தான் செய்தது. தொட்டு உருக்கிற்று. அந்த வீட்டைச் சுற்றி புனிதமான காற்று வீசுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. கோவிலின் படியை மிதித்த உடனே ஏற்படும் அதே உணர்ச்சி இங்கும் ஏற்படுவதை உணர்ந்து கொண்ட அந்த அம்மாள் மெல்லிய குரலில் கேட்டாள்.

"பாடறது யாரு...?"

அதே சன்னமான குரலில் பதில் சொன்னான் சக்தி.

"தெரியல... ரவிச்சந்த்ரிவாகத்தான் இருக்கணும்னு நினைக்கறேன்..."

"வீணை வாசிக்கறது...?"

"அதுவும் அவளாகத்தான் இருக்கும்..."

"வீணை வாசிக்க, பாட்டு பாட, டான்ஸ் ஆட... எல்லாமே தெரியுமா அந்தப் பொண்ணுக்கு...?"

அதற்கு பதில் சொல்ல சக்தி வாய்திறக்கும் முன் கதவு திறக்கப்பட்டது. வரவேற்பறையின் குழல் விளக்கு வெளிச்சத்தில் தேவதையாக நின்று கொண்டிருந்தாள் ரவிச்சந்த்ரிகா. நல்ல இருட்டறையில் ஐந்து மூக்குகளிலும் திரிபோட்டு ஏற்றின குத்து விளக்கு மாதிரி தெரிந்தது அந்த முகம். வலது மூக்கின் ஒற்றைக்கல் வைரம் பளிச்சிட்டதில் சட்டென்று ராஜேஸ்வரியம்மாளுக்கு கன்யாகுமரியம்மனின் நினைவு வந்தது.

'என்ன அழகு! என்ன பிரகாசம்! எத்தனை தெய்வீகக்களை! இப்படிக்கூட ஒரு முகமா! கோவிலின் கற்பக் கிரகத்தில் நின்று கொண்டிருக்கிற அம்மன் மாதிரி உடம்பா! இத்தனை ஒளியும், தேஜஸும் ஒரு சாதாரணப் பெண்ணிடம் இருக்க முடியாது. ஏற்படாது. நிச்சயம் இவள் சாதாரணப் பெண்ணில்லை. சக்தி சொன்ன மாதிரி மிக உயர்வான பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்... இந்த வீடும், சூழ்நிலையும், இப்படிப் பட்ட பெண்ணையும் பற்றி என்னவெல்லாம் நினைத்து விட்டோம்...?'

தன் தவற்றுக்கு வருந்தின ராஜேஸ்வரியம்மாள் சக்தி அறிமுகப் படுத்தி வைப்பதற்கு முன்பாகத் தன்னையும் மீறி கை கூப்பினாள்...



# 16

தன்னை மறந்து, தன் நிலை மறந்து, தான் வந்திருக்கின்ற இடம் மறந்து கை கூப்பினாள் ராஜேஸ்வரியம்மாள். அத்தனை நேரம் காரில் பேசிக் கொண்டு வந்த அத்தனையும் ரவிச்சந்த்ரிகாவைப் பார்த்த உடனே சடாரென்று நினைவை விட்டே மறைந்தன. எதிரில் நிற்கின்ற அந்த முகத்தின் அதீதமான தெய்வீக அழகில், கம்பீரத்தில், பார்வையின் தெளிவில், அமைதியில், அடக்கத்தில் தன் வயமிழந்த ஓர் அனிச்சைச் செயலாகவே அந்தக் கை குவிப்பு வெளிப்பட்டது. தான் மட்டுமில்லை. இவள் எதிரில் நிற்கிற யாரானாலும் இப்படித்தான் நடந்து கொண்டிருப்பார்கள் என்று தோன்றிற்று. அதனால்தான் சக்தியின் அப்பா இவளை நேரில் போய் கூப்பிடச் சொல்லியிருக்கிறார். சக்தியும் ஒரு முறை பார்த்து விட்டு வந்து அடித்துப் போட்ட மாதிரி அசந்து போயிருக்கிறான்.

அத்தனை தீவிரமாகவும், வெறுப்புடனும் பேசிக் கொண்டு வந்த தானே தன்னையும் மீறி எதற்கோ கட்டுப்பட்ட மாதிரி, எதனாலோ கட்டுப்படுத்தப்பட்ட மாதிரி கை கூப்பியிருக்கிறோமென்றால்... இது என்ன விந்தை..? எப்படிப்பட்ட சக்தி...? ஒருவேளை இந்தப பெண் ஏதாவது வரம் பெற்று வந்திருக்கிறாளோ...? இராமாயணத்து வாலியைப் போல் எதிரில் நிற்பவர்களின் அனைத்து சக்திகளையும் பெறுகின்ற வரத்தைப் பெற்றவளோ....?

அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிட்டத்தட்ட இரும்பு மனிதர் என்று பெயர் பெற்ற சக்தியின் அப்பாவே பெருமையாகப் பேசுவாரா...? எந்தப் பெண்ணையும் திரும்பிக் கூடப் பார்க்காத சக்தி,

ஏறெடுத்துப் பார்க்காத சக்தி இவளைப் பற்றி இத்தனை வாதாடுவானா? அவர்கள் இருவருக்கும் மேலாக ஒரு நாட்டியக்காரியைப் போய்ப் பார்ப்பதா. நாட்டியக் காரியின் வீட்டுப்படியை மிதிப்பதா என்றிருந்தவள் .. இப்போது அதிசயித்து நின்று ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டு. இப்படிக் கூட ஒரு அழகா என்று பிரமித்துப் போய், கையெடுத்துக் கும்பிட்டு ..

அத்தனையும் செய்ய வைத்தது அவளது அழகு மட்டுமன்று, பொன்னுருக்கி வார்த்தெடுத்த நிறமன்று, நிலவைப் பிடித்து, தூசு துடைத்து பளபளப்பாக்கி வைத்த முகம் மட்டுமன்று. திறமைமிக்க தெய்வீக வரம் பெற்ற ஓவியன் தன் கற்பனை முழுவதையும் ஒன்று சேர்த்துத் தீட்டிய ஓவியம் போல் காணப்பட்ட உருவமன்று. அன்றலர்ந்த கமலப் பூவாக, நீண்டு குறுகுறுத்து நாட்டிய பாவனைகளுக்கென்றே படைக்கப் பட்ட முகத்திற்கு முழுமை தரும் கண்களன்று.

இவை அனைத்திற்கும் மேலாக அந்தக் கண்களில் காணப்பட்ட ஒளி. 'நான் சாதாரணப் பெண்ணில்லை. சில கொள்கைகளையும், லட்சியங்களையும் கொண்ட வள். அக்கொள்கைகளையும், லட்சியங்களையும் நிறை வேற்றுவதற்காகவே வாழ்ந்து கொண்டிருப்பவள்...' என்பதைச் சொல்லாமல் சொல்கிற சத்தியத்தின் பிரகாசம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டுப் பெண்களின் குணங்கள் எனப் போற்றப்படுகின்ற அனைத்து நெறிகளும் கொண்டவள் என்பதைக் காட்டு கின்ற முகம். 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை' என்று பாடினானே... அது என்னைப் பார்த்துப் பாடப்பட்ட பாடல் என எடுத்து இயம்பு கின்ற உருவம்... என்னைப் போல் என்னால்தான் இருக்க முடியும் எனச் சொல்லாமல் சொல்லுகின்ற ரவிச்சந்த்ரிகா என்ற அந்தப் பெண்ணின் ஒருமித்த அத்தனை லட்சணங்களும், முகத்தில் வெளிப்பட்ட நற்குணங்களும், தோற்றத்தில் தெரிந்த கம்பீரமும்



சேர்ந்து தன்னைக் கைகுவிக்க வைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள் ராஜேஸ்வரியம்மாள். தகதகவென்று முனிவர்கள் வளர்த்த யாகத்தின் தீ மாதிரி நின்று கொண்டிருக்கிற இவள் முன்பு அனைத்து அழுக்குகளும் பொசுங்கிப் போகும் என்பதைத் தெரிந்து கொண்டாள். இவள் பார்வை பட்டாலே போதும். இருட்டறைகள் தாங்களாக விளக்கேற்றிக் கொள்ளும் என அறிந்து கொண்ட பின்பு—

ராஜேஸ்வரியம்மாளுக்குள்ளும் விளக்கு எரிந்தது. உள் மனம் பிரகாசமாயிற்று. சந்தேகத் தூசு பொசுங்கிப் போயிற்று. 'என்ன தவம் செய்தனை யசோதா...?' என்றார்களாமே அது போல் இவளைப் பெற்றவர் களைப் பார்த்துக் கேட்க வேண்டும் எனத் தோன்றிற்று.

சில வினாடிகளுக்குள் தன் மனதில் தோன்றிய அனைத்து உணர்ச்சிகளையும் அடக்கிக் கொண்டு சுய உணர்விற்கு வந்த ராஜேஸ்வரியம்மாள் — தன்னைப் போலவே தன் எதிரில் தன் வரவைச் சிறிது கூட எதிர்பார்க்காமல் திகைத்து நின்ற ரவிச்சந்த்ரிகாவைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தாள்.

"வணக்கம்மா..."

அன்பு பொங்கிய அந்த மென்மையான குரலில் கலைந்து சடாரென்று தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட மாதிரி பார்த்தாள் ரவிச்சந்த்ரிகா.

"என்னம்மா... பார்க்கற...? உனக்குத்தான் வணக்கம் சொன்னேன்..."

"...ம்... வணக்... வணக்கம்மா... வணக்கம்..." — அப்போதுதான் ஞாபகத்திற்கு வந்தவளாகக் கை குவித்தாள்.

இரு தாமரை மொட்டுக்களை ஒன்று சேர்த்துப் பிடித்துக் கொண்டிருக்கிற மாதிரி இருந்த அவளின்

கூப்பிய கைகளையே பார்த்துக் கொண்டிருந்த ராஜேஸ்வரியம்மாள் மீண்டும் புன்னகையோடு கேட்டாள்.

"எதுக்கும்மா அப்படிப் பதர்ற...? நான் சக்தியின் அம்மா... உனக்குக் கல்யாணப் பத்திரிகை வச்சு நேர்ல கூப்பிடணும்னு வந்திருக்கேன். உள்ள வரலாமாம்மா...?"

மறுபடியும் பதறிப் போனாள் ரவிச்சந்த்ரிகா.

"ஐயோ... என்னம்மா அப்படிக் கேட்கறீங்க... வாங்கம்மா... உள்ள வாங்க... உட்காருங்க... இருங்க... இதோ அம்மாவைக் கூட்டிக்கிட்டு வரேன்.."

அவர்கள் இருவரையும் உட்கார வைத்து விட்டு கொடி மின்னல் மாதிரி பின் பக்கத்தோட்டத்தை நோக்கிப் போய் மின்னல் தன்னோடு குத்து விளக்கை ஏற்றிக் கொண்டு வந்தாற் போல் புவனேஸ்வரியம்மாளுடன் மீண்டும் ஹாலுக்குள் நுழைந்தாள்.

"இவங்கதான் என் அம்மா... புவனேஸ்வரின்னு பேரு..."

ராஜேஸ்வரியம்மாள் எழுந்து நின்று கைகுவித்ததில் மகளின் பதட்டமும், பதறலும் தாய்க்கு வந்தது.

"நீங்க உட்காருங்க. ஏன் எழுந்திருச்சிட்டீங்க? உள்ள வரலாமான்னு கேட்டீங்களாம், ரவி சொன்னா... மகாலக்ஷ்மி நீங்க... நீங்க வர இந்த வீடும், நாங்களும் எவ்வளவு பாக்கியம் பண்ணியிருக்கணும்...?"

"அப்படியா சொல்றீங்க...?" என்ற ராஜேஸ்வரி வரவேற்பறையைச் சுற்றி ஒரு தரம் பார்வையை ஓட்டினாள். அந்த அறையில் கமழ்ந்த தெய்வீகம், பக்தி, ஊதுவத்தியும், சாம்பிராணியும் கலந்த வாசனை, பார்வதி பரமசிவனின் நர்த்தனச் சிலை என ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வந்து கடைசியில் சொன்னாள்.



"நீங்க என்னை மகாலக்ஷ்மின்னு சொல்றீங்க... எனக்கென்னவோ கோவிலுக்குள் வந்து நின்னுட்டிருக்கிற மாதிரி இருக்கு..."

"அம்மா...!" என்று ஆச்சரியமாகவும் அதிர்ச்சியுடனும் சக்தி பதற அவள் மறுபடியும் நிதானமாக அவளைப் பார்த்துச் சொன்னாள்.

"நீ கார்ல வரும் போது சொன்னதெல்லாம் எத்தனை நிஜம்னு புரியுது சக்தி... ஒரு சின்னக் கதை சொல்றேன் கேட்டுக்கப்பா...

"தேவலோகத்துல சரஸ்வதி வீணை வாசிச்சிட்டிருந்தாங்களாம். அங்கே வந்த பார்வதி அதைக் கேட்டு மெய்மறந்து லயிச்சுப் போய் "ஆஹா..."ன்னு சொன்னாங்களாம். உடனே சரஸ்வதி வீணை வாசிக்கிறதை நிறுத்திட்டாங்களாம். பார்வதி ஏன் நிறுத்திட்டீங்கன்னு கேட்டதற்கு சரஸ்வதி சொன்னாங்களாம் :-

"நான் இத்தனை நேரம் வாசிச்ச அத்தனை வீணை இனிமையும் உங்க குரல்லேருந்து வந்த அந்த 'ஆஹா'ன்ற சத்தத்தின் இனிமைக்கு முன்னால ஒண்ணுமில்லாமல் போயிடுச்சு..."

"அதைக் கேட்டு பார்வதி அசந்து போய் நின்னுட்ட மாதிரி நான் இப்போ நின்னுட்டிருக்கேன். அசந்து போனது சரஸ்வதியா பார்வதியான்னு தெரியாத மாதிரி என் எதிர்ல நிற்கிற இந்தப் பொண்ணு சரஸ்வதி அம்சமா, இல்லே லட்சுமியம்சமா, அதுவுமில்லாட்டி போனா பார்வதியம்சமான்னு புரியாம முழிச்சிட்டிருக்கேன், இந்த மூணும் ஒண்ணாச் சேர்ந்த ஒரு அம்சம் இவள்ன்னு இப்பத்தான் புரிஞ்சுது. இவ சாதாரணப் பொண்ணில்லேன்னு தெரிஞ்சுது..."

அதைக் கேட்டு ரவிச்சந்த்ரிகா, "அம்மா..." என்று ராஜேஸ்வரியின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

உணர்ச்சி வசப்பட்டு குனிந்து அவளைத் தூக்கித் தன்னோடு அணைத்துக் கொண்ட ராஜேஸ்வரி 'அம்மா' என்பதற்குப் பதிலாக இவள் 'அத்தை...' எனக் கூப்பிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்...' என்கிற நினைப்புடன்,

"நல்லா இரும்மா... மனசுக்குப் புடிச்சவனைக் கட்டிக்கிட்டு மனசுக்குப் புடிச்ச வாழ்க்கையா நிறைவா, சந்தோஷமா வாழணும்மா..." என்ற போது—

புவனேஸ்வரியம்மாளின் நெஞ்சு அந்த உருக்கத்தில் அவளையும் மீறி விம்மிற்று.

அப்படிப்பட்ட ஒரு காட்சியைச் சிறிதுகூட எதிர் பார்க்காத சக்தி கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க நின்றான்...

# 17

"அந்தப் பொண்ணு மேல நீ ஆசைப்படறியா சக்தி...?"

தூக்கி வாரிப் போட்டது சக்திக்கு. படுத்துக் கொண்டிருந்தவன் சடாரென்று எழுந்து உட்கார்ந்தான். எதிரில் நின்றிருந்த அம்மாவைப் பார்த்தான். ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை. கேட்டது அம்மாதானா என்கிற சந்தேகம் வந்தது...

இது மாதிரியெல்லாம் கேட்கக் கூடியவளில்லை அம்மா. எதையும் முகத்திற்கெதிரே படீரென்று போட்டு உடைக்கக் கூடியவளில்லை. ஆழ்ந்து யோசிப்பவள். மென்மையாய், நயமாய்ப் பேசுபவள், நளினமாகச் செயலாற்றுபவள்.



அப்படிப்பட்ட அம்மா திடீரென்று தன் அறைக்கு வந்து இது போன்று கேட்பாள் எனபதை அவன் எதி பார்க்கவே இல்லை. அம்மா நின்றிருந்த தோற்றத்தையும், அவளது முக பாவத்தையும் பார்த்த போது தீர யோசித்த பின்னரே தன் அறைக்கு வந்திருக்கிறாள் என்பது புரிந்தது. இதைக் கேட்பதற்காகவே பால் கொண்டு வருகிற சாக்கில் வந்திருக்கிறாள். நேற்று ரவிச்சந்த்திரிகாவின் வீட்டிலிருந்து திரும்ப வந்த பின்பு அம்மா நிறைய சிந்தித்திருக்கிறாள். இரண்டும் இரண்டும் நான்கு எனக் கூட்டி கண்டுபிடித்திருக்கிறாள். உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனப் படியேறி வந்திருக்கிறாள்... அவளிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும். எதையும் மறைக்கக் கூடாது. இது மறைக்கப்பட வேண்டிய விஷயமல்ல.

தன் நண்பர்களைப் போல் ரவிச்சந்த்ரிகாவிடம் பழகி விட்டுப் பின் விட்டு விடுவதானால்தான் மறைக்க வேண்டும். பொய் சொல்ல வேண்டும். ஆனால்தான் அப்படிப் பட்டவனல்ல. ரவிச்சந்த்ரிகாவை நிஜமாக நேசிப்பவன், உயிராக நினைப்பவன், அவளைக் காதலிப்பவன். கல்யாணம் செய்து கொண்டு காலம் முழுவதும் அவளுடன் கைகோத்துக் கொண்டு கவிதை மயமான வாழ்க்கை வாழ ஆசைப்படுபவன்.

ஆகவே... இது மறைக்கக்கூடிய விஷயமுமல்ல. அதற்குத் தேவையும் இல்லை. இன்றில்லா விட்டாலும் ஒரு நாள் அம்மாவிடம் சொல்லி அவளது அனுமதியும் ஆசியும் பெற்றுத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். செய்து வைக்க வேண்டியவள் அம்மா. அப்பாவிடம் எடுத்துச் சொல்லி அவரது அனுதியும் அவள்தான் பெற்றுத் தர வேண்டும். எனவே அம்மாவிடம் நிஜத்தைச் சொல்லிவிட வேண்டும்...

"என்னப்பா... நான் கேட்கறேன். நீ பேசாம இருக்கே...?"— ராஜேஸ்வரியம்மாளின் குரல் மீண்டும் ஒலித்ததும் இவன் கலைந்து நிமிர்ந்தான்.

அம்மா கேட்ட கேள்விக்கு உடனே பதில் சொல்லத் தயங்கி, வெட்கப்பட்டு மிக மெதுவான குரலில் முணு முணுத்தான்.

"என்னம்மா கேட்டீங்க...?"

"நீ அந்தப் பொண்ணு மேல ஆசை வச்சிக்கிட்டிருக்கியான்னு கேட்டேன்...?"

"எந்தப் பொண்ணும்மா...?"

"என்னப்பா... தெரியாத மாதிரி எந்தப் பொண்ணுன்னு என்னையே திருப்பிக் கேட்கறே...? அப்போ இந்த மாதிரி நிறையப் பொண்ணுங்க இருக்காங்களா உனக்கு...?"

"ஐயய்யோ..." என்று பதறினான் அவன்.

"என்னம்மா நீங்க... உங்க மகனைப் பத்தி உங்களுக்குத் தெரியாதாம்மா..."

"தெரியும்னு ஒத்துக்கற இல்ல...?"

"நிச்சயமா... உங்களுக்குத் தெரியாம வேற யாருக்குத் தெரிய முடியும்...?"

"அப்படின்னா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு... அந்தப் பொண்ணை உனக்குப் பிடிச்சிருக்குதில்ல...?"

"அ...ம்...மா..."

"சொல்லுடா... ஏண்டா பொம்பளை மாதிரி வெட்கப் படற... புடிச்சிருக்குதானே..."

"ம்..."

"சாதாரணப்பிடிப்பா இல்லாம...ரொம்ப ரொம்பப் புடிச்சிருக்குதில்ல...?"

"ஆ... ஆமாம்மா..."



"ஆமாம்னா எத்தனை புடிச்சிருக்குது...இத்தனை..." —அந்த அம்மாள் கையை விரித்துக் காட்ட சக்தி சிரித்து இன்னமும் அதிகமாக வெட்கப்பட்டு தலைகவிழ்ந்து கொண்டான்.

"போ... ங்... கம்மா..."

"ஆமாம்... இனிமேல என்னைப் போகத்தான் சொல்லுவ..."

"அம்மா!?" என்று அவன் திடுக்கிட்டுத் தலைநிமிர, அந்த அம்மாள் சிரித்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கற... அவளைக் கல்யாணம் பண்ணிக்கிற அளவு பிடிப்பு இருக்குதில்ல...?"

அம்மாவின் கிண்டலும், கேலியும் புரிந்தது. அவள் விளையாட்டிற்குச் சொன்னது பிடிபட மீண்டும் ஒரு 'போங்கம்மா' சொன்னான்.

"இப்ப போங்கம்மா, போங்கம்மா, போங்கம்மான்னு வெறட்ற... நேத்து அவ... அந்தப் பொண்ணு... பேருதான் அடிக்கடி மறந்து போகுது, என்ன பேரு அது...?"

"ரவிச்சந்த்ரிகா!"

"பளிச்சுனு சொல்லு... எத்தனை தரம் உருப் போட்ட...?"

"உருப்போடலம்மா... ஒரு தரம் கேட்ட உடனே மனசுல பதிஞ்சு போச்சும்மா..."

"பதியும்ப்பா... ஏன் பதியாது... சாதாரண அழகா அது...! என்னையே நிமிஷமா மாத்திடுச்சுன்னா... உன்னை ..? நீ இளவயசுப் பையன். அதான் பதினைஞ்சு இருபது நாளா சாப்பாடு பிடிக்காம, தூக்கம் வராம... ஏக்கம் பிடிச்சு அலைஞ்சியா...?"

அ...ம்மா... அதில்லம்மா ... வந்து...''

''சும்மாயிருப்பா... நேத்து நான் பார்க்கல... அந்த வீட்டுக்குள்ள நுழைஞ்ச போது உனக்கிருந்த படபடப்பையும், அவளைப் பார்த்த உடனே உன் முகம் மத்தாப்பு ஏற்றிக்கிட்டதையும், ஏம்ப்பா... அப்பா, அம்மாவான நாங்கள்ளாம்கூட உங்க வயசுலேர்ந்து இந்த வயசுக்கு வந்தவங்கதான்... எங்களுக்கும் எல்லாம் புரியும். புரிஞ்சுக்கவும் முடியும்...''

அதைக் கேட்டு ஒரு வினாடி உணர்ச்சி வசப்பட்டுப் போனான் எப்படிப்பட்ட அம்மா! எல்லோருக்கும் இப்படி அம்மா கிடைப்பார்களா...? அம்மா மட்டும் தானா...? ரவிச்சந்த்ரிகா...? அவளும் கிடைக்கக் கூடியவளா...? தனக்குக் கிடைப்பாளானால் எப்படிப் பட்ட அதிர்ஷ்டம் அது!

அவன் மெல்ல அம்மாவின் அருகில் போய் அவள் கையைப் பற்றித் தடுமாறினான். அவன் கண் கலங்குவதைத் தாங்க இயலாத அந்தப் பெற்ற மனம் பரபரத்தது.

''சரி, சரி... அதுக்குள்ள உணர்ச்சி வசப்படாத. நல்ல பேச்சு பேசறப்ப கண் கலங்கக் கூடாது. ஆமாம்ப்பா... நான் கேட்கறேன்னு தப்பா நினைக்காதே... அந்தப் பொண்ணுக்கு அப்பா...?''

— ''இருக்காரும்மா... நாம உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்த அறைக்கு எதிர் அறைல படுத்துத் தூங்கிக்கிட்டிருந்தாரு, அவரு இதய நோயாளிம்மா... சமீபத்துல ஆபரேஷன் ஆனவருன்றதால் அதிகம் பேசக்கூடாது. அதுவுமில்லாம அவரு தூங்கிக்கிட்டிருந்ததால் நம்மைக் கூட்டிட்டுப் போகலை...''

''அப்படியா...?'' என்று யோசித்தாள் அந்த அம்மாள்.



''என்னம்மா யோசிக்கறீங்க...?''

''இல்ல... பொண்ணு மகாலக்ஷ்மி மாதிரி அத்தனை லட்சணமா இருக்குது... நல்லா படிச்சிருக்குது நல்ல குணவதியா தெரியுது. குடும்பமும் நல்ல குடும்பம்னறது பார்த்த உடனே புரியுது...: அப்படி இருக்கிறப்போ...?''

''என்னம்மா...?''

''ஒண்ணுமில்லப்பா... பணவசதியும் இருக்கிறப்போ எதுக்காக மேடை ஏறி நாட்டியமெல்லாம் ஆடணும்...? வீட்டுல ஆடிக்கிடட்டும் நான் வேணாம்னு சொல்லல... நம்ம வீட்டு விசேஷங்கள்ல ஆடட்டும்... ஆனா இப்படி வெளியிடங்கள்ல மேடை ஏறி ஆடறது என்னவோ போல இருக்கேப்பா...?''

''அம்மா... அதையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல உங்களுக்கு அவளைப் பிடிக்கணும்—''

''ஏம்ப்பா... எனக்குப் பிடிக்கலைன்னா விட்டுடப் போறியா...?''

''அ...ம்...மா...?!''

''அலர்றதைப் பாரு...? ஒரு பேச்சுக்குக் கேட்டாக் கூட இத்தினி பயமா...? இல்லப்பா... எனக்கு ரொம்பப் புடிச்சிருக்குதுப்பா... அந்த அழகும், நிதானமும், அடக்கமும், அறிவும் மருமகளா வரக் குடுத்து வச்சிருக்கணும்னு தோணுது...''

''அ...ம்மா...'' என்று ஓடிப் போய் ராஜேஸ்வரியம்மாளை அணைத்து ஒரே கட்டாகக் கட்டி கன்னத்தில் முத்தமிட—

அந்த அம்மாள் அத்தனை மகிழ்ச்சிப் பெருக்கிலும் குறும்பைக் கை விடாமல் சொன்னாள்.

''அப்பா சக்தி... இது உங்கம்மா... உன்னைப் பெத்தவ... நீ ரவிச்சந்திரிகான்னு நினைச்சுக்கிட்ட போல இருக்குது...''

"ஐய்யோ... போங்கம்மா..." என்று நிஜமாக வெட்கப்பட்டு அவன் அறையை விட்டு ஓடுவதைக் கவனித்த அந்த அம்மாள்,

"இந்தா... பாலைக் குடிச்சிட்டு ஓடு..." என்று தன் குரலால் பிடித்திழுத்து நிறுத்தினாள் பின்னர் அவன் தந்த காலி டம்ளரை வாங்கிக் கொண்டு படியிறங்கிக் கீழே வந்த போது—

"என்னப்பா... மருதமலையானே... இந்தப் பிள்ளையின் ஆசைப்படி மனசுக்குப் புடிச்ச பெண்ணையே கட்டி வையப்பா... ரெண்டு பேரையும் கல்யாணம் முடிஞ்ச கையோட உன் சந்நிதிக்குக் கூட்டிக்கிட்டு வரேன்..." என்று மனமுருகி மெய்யன்புடன் வேண்டிக் கொண்டது பாசமிக்க அந்தத் தாய் உள்ளம்...

## 18

கல்யாணத்திற்கு முதல்நாள் காலையிலிருந்தே நிலை கொள்ளாமல் தவித்தான் சக்தி. அன்று மாலை ரவிச்சந்த்ரிகாவைப் பார்க்கப் போகிறோம் என்பது மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. உற்சாகத்தை ஏற்படுத்தியது. 'எப்போது வரும் அந்த மாலைப் பொழுது' என்று ஏங்க வைப்பதாக இருந்தது. ஒவ்வொரு வினாடியும் அவன் கண்கள், மனம், உயிர், உடல் அனைத்தும்! ரவிச்சந்த்ரிகாவை எதிர்பார்த்துக் காத்திருந்த போது ராஜரத்தினம் அவனைக் கூப்பிட்டார்.

"இதப்பாரு சக்தி... இப்போ மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்து இறங்கப் போறாங்க... அவங்களைக் கவனிச்சுக்கிற பொறுப்பை உன்கிட்ட ஒப்படைக்கிறேன் நம்ம அந்தஸ்துக்கும், பேருக்கும் ஒரு குறைவராம கவனிக்கணும். என்ன...?"



சக்தி தயங்கினான்.

"அப்பா... வந்து... வந்து..." என்று தடுமாறினான்.

"என்ன... எதுக்காகத் தயங்கற சொல்லு... எனக்கு நிக்க நேரமில்ல... சி. எம் வரப்போறாரு... மந்திரிங்க அத்தனை பேரும் வராங்க. கவர்னர் வரப் போறாரு... இவங்களை வரவேற்க ஏற்பாடு செய்தாகணும். இந்த நிலைமைல நீ வேற என் நேரத்தை வீணடிக்காத. விஷயத்தைச் சொல்லு..."

"இல்லப்பா... மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை எப்படி வரவேற்கணும்னு எனக்குத் தெரியாதுப்பா... இதெல்லாம் பழக்கமில்லைப்பா...."

"ஆமாண்டா... நாளைக்கு நீயே மாப்பிள்ளையாகப்போற... அது மட்டும் பழகிக்கிட்டா செய்யப் போற...? அந்த மாதிரித்தான் இதுவும், ஒருத்தங்களை எப்படி கவணிக்கணும்னு தெரியாது...? இன்ஜினீரிங் படிக்கிறவனுக்கு இது கூடத் தெரியலை... சரி, கணேசனைக் கூட கூட்டிக்க. உங்கம்மாவைக் கேளு... மாப்பிள்ளை வீட்டுக்காரங்ககிட்டேயிருந்து பின்னால ஒரு பேச்சு வரக்கூடாது. புரிஞ்சுதா...? போ... போய் வேலையைக் கவனி..."

அவன் நேராக அத்தனை பெரிய சத்திரத்தில் அம்மாவைத் தேடிக் கொண்டு போனான். அம்மா தங்கை நளினியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற குளிர்சாதன அறையில் இருப்பதாகச் சொன்னார்கள், அங்கு போன போது புடவை கட்டிக் கொண்டிருந்த நளினி அலறத் தொடங்கினாள்.

"அண்ணே... வெளிய போண்ணே... பொம்பளைங்க புடவை கட்ற இடத்துல என்ன வேலைண்ணே..."

"ஐயோ... நீ புடவை கட்டுவேன்னு தெரிஞ்சா வந்தேன்...? அம்மாவைப் பார்க்க வந்தேன்... அம்மா எங்க...?"

“இப்பத்தான் சமையற்காரங்க வந்து கூட்டிக்கிட்டுப் போனாங்க. கீழ போயிருப்பாங்க. அங்க போய்ப் பாரு...”

அம்மாவைத் தேடிக் கொண்டு சமையலறைப் பக்கம் போனான். ஸ்டோர் அறையில் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கு போனால் சாப்பாட்டு அறை என்றார்கள். சாப்பாட்டு அறையில் வாசற்பக்கம் கை காட்டினார்கள். கடைசியில் மீண்டும் மாடிக்கு வந்து அம்மாவைத் தேடிக் கண்டு பிடித்து தனியாக அழைத்துப் போய் விசாரித்தான்.

“ஏம்மா... நீங்க அப்பாகிட்ட ஏதாச்சும் சொன்னீங்களா ..?”

“எதைப் பற்றிப்பா...?”

“ரவிச்சந்த்ரிகா பற்றி...?”

“ம்ஹூம். உன்னைப் பற்றிதான் சொன்னேன் ”

“என்னம்மா சொன்னீங்க...?”

“இல்ல .. கையோட சூட்டோட நம்ம சக்திக்கும் கல்யாணம் செஞ்சுடணும்ங்கன்னு... சொன்னேன்... ஏம்ப்பா...?”

“எதுக்கும்மா இப்ப என் கல்யாணத்தைப் பத்திப் பேசினீங்க ..?”

“ஏம்ப்பா உனக்கு மட்டும் வயசாகலையா...?

“ஏம்மா... இருபத்தோரு வயசுல கல்யாண மாம்மா...?”

“ஏம்ப்பா... அப்ப இருபத்தோரு வயசு வெறும் காதலிக்கற வயசுன்றியா...?”

“போங்கம்மா... நீங்க...”



“சரி... கல்யாணம் பண்ணிக்கிற உத்தேச மில்லைன்னா விட்டுடறேன்...”

“ஐயயோ இல்லையம்மா . கல்யாணம் பண்ணிக்கத் தான் போறேன்...”

“அவளைத்தானே பண்ணிக்கப் போறே...?”

“ஆமாம்மா ..”

“அப்போ எதுக்குத் தள்ளிப் போடணும் சொல்லு...? உன் வயசுல உங்கப்பாவுக்கு நீ பொறந்திட்ட தெரியுமா...?”

“இல்லம்மா .. படிச்சு முடிஞ்சப்புறம் ..”

“படிப்பு கிடக்கட்டும்டா... இன்னும் ஒரு வருஷம் தானே இருக்கு .. அதுக்குள்ள கல்யாணத்தை செஞ்சுக் கிட்டு பொண்டாட்டியையும் பக்கத்துல வச்சுக்கிட்டு நீ பாட்டுக்குப் படி .. யாரு வேணாம்னாங்க...?”

“ஆஹா... ரொம்ப நல்லா படிப்பு ஓடும்...”

“எல்லாம் ஓடும்டா... இப்ப மட்டும் என்ன, மனசுல அவளை வச்சுக்கிட்டு படிக்கவும் முடியாம, வெளியவும் சொல்ல முடியாம தவிக்கறதுக்கு அது தேவலாம். அவ கிடைச்சுட்ட திருப்தியிலயும், சந்தோஷத்துலயும் நல்லாவே படிக்க வரும்...”

அம்மா சொல்வது ஒரு வகையில் சரி என்று பட்டாலும் இத்தனை வேகமாக அவள் செயல்படுவாள் என்பதை எதிர்பார்க்கவில்லை, இன்னமும் ரவிச் சந்த்ரிகாவின் மனதில் தான் இருக்கிறோமா என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவளும் தன்னை நேசிக்கிறாளா என்பது தெரியவில்லை. அதற்குள் அப்பா வரை விஷயம் போய் விட்டதே என்று பயந்தான்.

"என்னப்பா யோசனை... என்ன ஆச்சு இப்ப ..? சீக்கிரம் சொல்லு. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரமாயிடுச்சு. நான் போகணும் பாரு..."

"...இல்லம்மா... எதுக்கும்மா இப்ப அப்பாகிட்ட இந்தப் பேச்சை எடுத்தீங்க...?"

"இப்ப எடுக்கல்லேன்னா அப்புறம் நேரம் கிடைக்காது. என் வீட்டுக்காரர் கிட்ட நான் பேசறதுக்குக்கூட கணேசனை எதிர்பார்க்கணும். அவன் தயவுக்கு நிக்கணும். அதனாலதான் உன் தங்கச்சி கல்யாணத்தை முன்னிட்டு என்கூட அவர் வெளியே வர்ற சாக்கை வச்சுக்கிட்டு உன் கல்யாணத்தைப் பத்தின பேச்சையும் காதுல போட்டு வச்சேன். எப்படி என் ஐடியா...?"

"நல்லாத்தாம்மா இருக்குது... ஆனா..."

"என்ன சொல்லுப்பா...? நேரமாகுதில்ல...?"

"அப்பா என்ன சொன்னாரு...?"

"முதல்ல நளினி கல்யாணம் நல்லபடியா முடியட்டும். அப்புறம் பேசலாம்னிட்டாரு..."

"அதுசரிம்மா... நாம பேசிக்கறோம். இன்னும் அவ மனசு என்னன்னு தெரியலையே...?"

"யார் மனசு...?"

"ரவிச்சந்த்ரிகா மனசு..."

ஒரு வினாடி அதிர்ந்த மாதிரி பார்த்தாள் அந்த அம்மாள்.

"என்னப்பா இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடற... உனக்குத் தெரியாது...?"

"தெ... தெரியலைம்மா..."



"நீ கேட்கலை...?"

"இல்லைம்மா..."

"பின்ன... கல்யாணம் வரை போயிட்ட...?"

"ஆ... ஆமாம்மா... போயிட்டேன்..."

"அப்படின்னா...?"

"அந்த அளவுக்கு அவளை நான் நேசிக்கறேம்மா... மனசுக்குள்ள வச்சு பூஜிக்கறேன்..."

"ஒரு வேளை அந்தப் பொண்ணு மனசுல அப்படி ஒரு எண்ணம் இல்லாமல் போயிடுச்..."

"ஐயோ... அப்படிச் சொல்லாதீங்கம்மா. அதை என்னால தாங்கிக்கவே முடியாது. ரவிச்சந்த்ரிகா இல்லைன்னால் நான் இல்லை..."

"என்னப்பா இது ..?!"

"ஆச்சரியமா இருக்குதாம்மா... பார்த்த பதினைஞ்சு நாள்ல இப்படி உருக முடியுமான்னு தோணுதா... எனக்குக் கூடத் தோணுது. நான் கூட ஆச்சரியப் படறேன். எப்படி... எப்படி இதுன்னு தெரியல... ஆனா... ஆனா இது நிஜம்னு தெரியுது. அடி மனசுல உருவான சத்தியமான அன்புன்னு புரியுது..."

"ச...க்...தீ..."

"நிஜமாத்தாம்மா சொல்றேன். இனி எனக்கு வாழ்க்கைன்னு ஒன்னு இருந்துச்சின்னா அது ரவிச்சந்த்ரிகா கூடதாம்மா..."

"அது சரிப்பா... அந்தப் பொண்ணு மனசு தெரியாம—"

"தெரிஞ்சிடும்மா... எப்படியும் இன்னிக்குள்ள தெரிஞ்சுக்குவேன்..."

"எப்படிப்பா..?"

"...எப்படி... என்னன்றது தெரியல.. ஆனா நிச்சயமா இன்னிக்கி ராத்திரி அவ நடனமாடிட்டுப் போறதுக்குள்ள அவ மனசு என்னன்றதைக் கண்டு பிடிச்சுடுவேன்..."

"நான்... வேணும்னா கேட்கட்டுமா...?"

"நீங்களா...!?"— என்று பதறினான் அவன்.

"ஏம்ப்பா... உனக்காக இதைச் செய்ய மாட்டேன்னா நினைக்கற ..?"

ஐயோ வேணாம்மா... நீங்க யாரு. உங்க நிலைமை என்ன ..? நீங்க போய் எனக்காக..."

"ஏம்ப்பா.. என் பிள்ளைக்கு நான் செய்யாம யாரு செய்வாங்க. பையனுக்குப் பொண்ணு பார்க்க. பொண்ணு கேட்க அம்மாங்க போற மாதிரித்தானே இதுவும்...?"

"வேணாம்மா... பொண்ணு கேட்கப் போறது வேற இதையெல்லாம் நீங்க செய்ய வேணாம். நானே இன்னிக்குக் கட்டாயம் கேட்டுடறேன் .."

"கேளுப்பா... இன்னிக்கு நல்ல நாளு. பதட்டப் படாம, அவசரப்படாம, மெதுவா, நிதானமா கேளு. கேட்டு நல்ல பதிலா இன்னி ராத்திரிக்குள்ள என்கிட்ட வந்து சொல்லணும், என்ன?"

"சரிம்மா..."

"உன் கிட்டேயிருந்து விஷயத்தைத் தெரிஞ்சுக்கிற வரைக்கும் எனக்கு மனசுல நிம்மதி இருக்க முடியாதுப்பா.. என் ரெண்டு கண்ணுல ஒரு கண்ணுக்கு நல்ல குளிர்ச்சியான கண்ணாடி கிடைச்சிடுச்சு. இன்னொரு கண்ணுக்கும் அதே குளிர்ச்சியான கண்ணாடி கிடைச்சிடுச்சின்னா ரொம்ப சந்தோஷமா இருக்கும்ப்பா..



மனசுக்கு நிம்மதியா இருக்கும்... அதனால இன்னி ராத்திரியே கேட்டுடுப்பா தள்ளிப் போடாத... என்ன செய்வியோ... என்னவோ... எனக்குத் தெரியாது. இன்னி ராத்திரிக்குள்ள எனக்கு நல்ல முடிவாச் சொல்லணும்..."

கட்டளை மாதிரி சொல்லி விட்டு அந்த அம்மாள் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும் 'என்ன செய்யலாம், எப்படி ரவிச்சந்த்ரிகாவிடம் பேசலாம்' என்று யோசிக்க லானான் சக்தி...

## 19.

சத்திரத்தின் வாசலில் கார் வந்து நின்றது. அந்தக் காரின் வருகைக்காகவே வாசல் புறத்திலேயே ஏதோ வேலை செய்கிற பாவனையில் காத்துக் கொண்டிருந் தான் சக்தி. அப்பா சொன்ன மாதிரி ரவிச்சந்த்ரிகாவை யும், அவளது நட்டுவாங்கக் குழுவினரையும் அழைத்து வர இரண்டு அம்பாஸிடர் கார்களை அனுப்பி வைத்த பின் 'எப்போது வருவாள் அவள்?' என்று துடித்த மனதை சமாதானப்படுத்தியவாறு நின்று கொண்டிருந் தான். ஆனாலும் மனது அடங்க வில்லை. கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருந்தது. வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

'கார் அனுப்பி இத்தனை நேரமாயிற்றே... இன்னும் காணவில்லையே... அவளை...?'

எத்தனை நேரமாயிற்று...? அரைமணி நேரத்திற்கு முன்புதானே அனுப்பினாய்...? ராஜா அண்ணாமலை புரத்திலிருந்து வடபழனி வர நேரமாகாதா...? அதுவும் இந்த நேரத்தில் எத்தனை போக்குவரத்து ...?

மனதைப் சமாதானப் படுத்தி, விழிகளைச் சமாதானப் படுத்தியவாறு வாயிற் புறத்தைவிட்டு அகலாமல் காத்திருந்த போது, அந்தக் கார் வந்து நின்றது. அதிலிருந்து கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினாள் ரவிச்சந்த்ரிகா. பளிச்சென்று முயல் குட்டி களைப் போன்ற இரு பாதங்கள்தான் முதலில் சக்தியின் கண்களிற்பட்டன. வெள்ளை வெளேறென்ற அப் பாதங்கள் மிக அழகாகத் தெரிந்தன. விரல் நுனிகளின் அல்தா சிவப்பு நலங்கிட்ட மாதிரி இருந்தது. பாதத்தைக் கீழே வைத்தபோது கட்டியிருந்த சலங்கை சத்தம் அவனது இதயத்தை மெல்லமீட்டியது. ஓடிப்போய் அப்பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. மிகவும் சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான். பாதங்களுக்குக் கூட இத்தனை கம்பீரமும், அழகும் இவளுக்கு மட்டும் தான் வரமுடியும் என்று நினைத்துத் தலை நிமிர்ந்தவன் ஒரு வினாடி அசந்து போனான்.

அஜந்தாவின் ஓவியங்களை அவன் பார்த்ததில்லை. இப்போது பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி தோன்றியது. எல்லோராச் சிற்பங்களின் எழிலைக் கண்டதில்லை, காணுகிற நிறைவும், திருப்தியும் வந்தது. 'பார்த்துப் பார்த்து ரசித்து ரசித்துச் செய்திருப்பானோ இவளைப் பிரம்மன்...! தன் படைப் பின்மிக உன்னதப்படைப்பாகப் படைத்திருப்பானோ...? அல்லது ஓவியர் ரவிவர்மாவிற்கும் பிரம்மனுக்கும் ஏற்பட்ட மோதலில் உதித்து வந்த சித்திரமோ இவள்...?

'நான் தீட்டிய ஓவியம் போன்றதொரு பெண்ணைப் படைத்துக் காட்ட முடியுமா...?' என்று கேட்டி ருப்பாரோ ரவிவர்மா...

'உன் ஓவியத்தை விடவும் அழகானதொரு பெண்ணைப் படைத்துக்காட்டுகிறேன் பார்...' என்று சவால் விட்டு இவளைப் படைத்திருப்பாரோ...!



மஞ்சளில் சிவப்புக் கரையிட்டுத் தைத்திருந்த நாட்டிய உடையில் கரையின் காரணமாக மட்டுமே அவளது நிறத்தையும், உடையையும் பிரிக்க முடிந்தது. வெளிர்மஞ்சள் நிறம் அவளது தந்த நிற உடலோடு கலந்து மின்னல் வந்திறங்கிய பாவத்தைத் தோற்று வித்தது. 'அத்தனை கூட்டத்திற்கிடையில் பளீரென்று அவள் காரை விட்டு இறங்கினது அத்தனை பேரையும் கவர்ந்தது. கண்ணிமைக்காமல் பார்க்க வைத்தது. யார் இவள் என்று கேட்கவைத்தது. இப்படிக் கூட ஒரு அழகா என பிரமிக்க வைத்தது.

சுற்றி உள்ளவர்களிடையே தன் தோற்றம் இப்படிப் பட்டதோர் பாதிப்பை ஏற்படுத்துவதை நிஜமாகவே உணராத அவள் கால் சலங்கைகள் ஒலிக்க மெல்ல நடந்து சக்தியை நெருங்கினாள்.

"வணக்கம் .." என்று இரு கைகளையும் கூப்பி புன்னகை புரிந்தபோதுதான் சக்தி சட்டென்று நிகழ் காலத்தை உணர்ந்தான்.

"வணக்கம்... வணக்கம்மா.... வாங்க.." என்று வரவேற்றான்.

அதற்குள் ரவிச்சந்த்ரிகாவின் வருகை சமையலறை வரை எட்ட, அம்மா வாசலுக்கு வந்தாள். மிக மிகச் சொந்தமானவர்களை, மனதிற்குப் பிடித்தமானவர் களை, அந்நியோன்னியமானவர்களை வரவேற்கிற மாதிரி ரவிச்சந்த்ரிகாவின் கைகளைப் பற்றி உள்ளே அழைத்துப் போனாள். நேராக நளினி இருந்த இடத்திற்குக் கூட்டிப் போய் அறிமுகப்படுத்தினாள்.

"இவதாம்மா என் பொண்ணு நளினி. கல்யாணப் பொண்ணு .. நளினி .. இவங்க ரவிச்சந்த்ரிகா."

நளினி சட்டென்று உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு எழுந்துகொண்டாள். ஏதோ பிரமையில் இருக்கிற

மாதிரி கைகூப்பினாள். எதிரில் பளிச்சிட்ட அந்த அசாதாரண அழகு நிறைய விஷயங்களை விளக்கிற்று. கொஞ்ச நாட்களாக அண்ணன் ஏன் அப்படி இருக்கிறான் என்பதன் காரணம் புரிகிற மாதிரி பட்டது. 'பாலும் கசந்ததடி, படுக்கை நொந்ததடி...' எனச் செய்திருப்பது இந்த அழகுதான். அம்மாடி...! எப்படிப் பட்ட அழகு...!

சக்தி கொடுத்து வைத்தவன்தான் என்று தோன்றிற்று. ஆனால் ஒரு நாட்டியக்காரியை மருமகளாக ஏற்க அப்பாவும், அம்மாவும் சம்மதிப்பார்களா என்கிற சந்தேகமும் கூடவே வந்து சட்டென்று விலகிற்று.

அம்மா அவள் கைகளைப் பிடித்துக் கொண்டிருக்கிற விதத்தைப் பார்த்தால் இப்போதே 'வா' என்று மருமகளாக்கி அழைத்துக் கொண்டு விடுவாள் போலிருந்தது. அப்பாவிற்கு இதில் எந்த வித ஆட்சேபணையும் இருக்க முடியாது என்றே பட்டது. ஏனெனில் அவர் ஒரு கலாரசிகர். கலைப்பிரியர். தன்னைத்தான் நடனம் கற்றுக் கொள்ள அனுமதிக்கவில்லையே தவிர நடனமாடுகிற, அதுவும் இப்படிப்பட்ட ஒரு சௌந்தர்யவதி மருமகளாக வருகிறாள் என்றால் நிச்சயம் அப்பா பூரித்துப் போவாரே தவிர மறுக்க மாட்டார் என்ற உண்மை பிடிபட நளினி மிகவும் சந்தோஷப்பட்டாள்.

'சக்தியண்ணனுடைய குணத்திற்கு ஏற்ற மாதிரி எல்லாம் நல்லபடியாக நடக்கணும்' என்று வேண்டிக் கொண்டு அம்மாவைப் பார்த்தாள்.

"ஏம்மா... இவங்களுக்கு சாப்பிட ஏதாச்சும் கொடேன்..."

"ம்ஹூம்... எதுவும் வேணாம்மா... நாட்டிய நிகழ்ச்சி இருக்கிற அன்னைக்கு நான் பகல் சாப்பாட்டிற்கு அப்புறம் ஒண்ணும் சாப்பிட மாட்டேன்..."



"கொஞ்சம் ஜூஸ் மட்டுமாவது குடியேன்..." ராஜேஸ்வரி அம்மாளின் மீற முடியாத அன்பின் காரணமாக ரவிச்சந்த்ரிகா சாத்துக்குடிப் பழ ரஸம் மட்டும் அருந்தினாள்.

அவள் குடித்து முடிக்கிற வரை காத்திருந்த ராஜேஸ்வரியம்மாள் பின்னர் மெதுவாகச் சொன்னாள்.

"நீ எப்போ இப்படிக் கல்யாணப் பொண்ணாகறது...?"

பொன் போன்ற அவளது கன்னங்களில் சிவப்பு படர்ந்தது. மெல்ல தலையைக் கவிழ்த்துக் கொண்ட ரவிச்சந்த்ரிகா.

"அதுக்கென்னம்மா அவசரம்..." என முணுமுணுத்ததைக் கேட்டு ராஜேஸ்வரியம்மாள் புன்னகைத்தாள்.

"எங்க நளினி கூட இப்படித்தான் சொல்லிச்சு. பார்த்துக்கிட்டே இரு. எங்க வீட்டுக் கல்யாணத்துல ஆடின வேளை, உனக்கே கல்யாணம் நிச்சயமாகுதா இல்லையா பாரு...".

ரவிச்சந்த்ரிகாவின் மனது அதைக் கேட்டு சிலிர்ப்படைந்தது. 'நிச்சயிக்கிறவங்க நீங்களாகவே இருப்பீங்களா...?' என்ற கேள்வி நுனி நாக்கில் துடித்துக் கொண்டு நிற்க, அதை அடக்கிக் கொண்டாள்.

ஆனால் அவளுடைய தாயார் புவனேஸ்வரியம்மாளால் அந்தப் பேச்சை ரசிக்க முடியவில்லை. தன் பெண்ணுக்குக் கல்யாணமாக வேண்டும் என்று யார் வாழ்த்தக் கேட்டாலும் மகிழ்ச்சியடையும் தாயின் நெஞ்சமாக அவள் நெஞ்சம் இருக்கவில்லை. 'என்ன பேச்சு இதெல்லாம்...?' என்று மனது சுணுங்கிற்று. முகம் சுணுக்கம் கண்டது. ஆனால் அதை வெளியில் காட்டாமல்,

"நேரமாகல்ல ரவி... மேடைக்குப் போகலாமா...?" என்று மெதுவாக திசை திருப்ப முயற்சித்தாள்.

அதே சமயம் சக்தி உள்ளே நுழைந்தான்.

"என்னம்மா... நேரமாகுதே .. அவங்களை மேடைக்கு அனுப்பேன்...?" என்றான்.

ராஜேஸ்வரியம்மாள் தன் மனம் நிறைந்து கிடப்பதை முகத்தின் புன்னகையில் காட்டிச் சொன்னாள்.

"தெரியுமே... அஞ்சு நிமிஷம் தாங்க மாட்டியே... வந்துடுவியே இதோ அழைச்சுக்கிட்டுப் போ... போம்மா ரவிச்சந்த்ரிகா... இனிமேல உன் பொறுப்பு அவனுடையது .." என்றவள் கால் வினாடி இடை வெளிக்குப் பின்னர் குறும்புத்தனம் நிறைய மகனைப் பார்த்தாள்.

"நான் நாட்டிய நிகழ்ச்சிப் பொறுப்பைச் சொன்னேன்..."

ரவிச்சந்திரிகா, சக்தி இருவருமே சொல்ல முடியாத தோர் சந்தோஷத்தில் மிதந்தவாறு மேடையை நோக்கி நகர—

"இதெல்லாம் எதில் போய் முடியுமோ...? ஆரம்பத் திலேயே துளிர்க்க விடாமல் கிள்ளி எறிவதுதான் நல்லது...' என்கிற திடமான முடிவுடன் அவர்களைப் பின் தொடர்ந்தாள் ரவிச்சந்த்ரிகாவின் தாயார் புவனேஸ்வரியம்மாள்...

## 20

பொதுவாகக் கல்யாண வீடுகளில் வைக்கப்படுகிற கச்சேரிகள் ரசிக்கப்படாமற் போய் விடுவதுதான் நிஜம். கல்யாணச் சடங்குகளில் ஒன்றாகக் கச்சேரி வைத்தலும் ஆகிப் போயிருந்தது. நல்ல வசதி படைத்தவர்கள்



மாப்பிள்ளை அழைப்பிற்கும், முகூர்த்தத்தன்று மாலை வரவேற்பிற்குமாக இருவிதக் கச்சேரிகள் ஏற்பாடு செய் வார்கள். இரண்டுமே பெரிய வித்வான்களின் கை வண்ணமாகத்தான் இருக்கும். அந்த வித்வான்களின் கச்சேரிக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களால் கூட கல்யாண வீட்டில் கேட்க முடியாது. ரசிக்க இயலாது.

அதற்குக் காரணம் கச்சேரி கேட்பதற்கென்று அவர்கள் அங்கு வருவதில்லை. அந்த எதிர்பார்ப்பும், ரசிக்கின்ற மனோபாவமும் இருப்பதில்லை. கல்யாண வீட்டின் பேச்சு சத்தமும் வருகின்றவர்களின் தகுதிக் கேற்ப வரவேற்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களும், ஒருவருக்கொருவர் நலம் விசாரித்தலும், எத்தனையோ நாட்களுக்குப் பின்னர் சந்திப்பவர்களின் அரட்டையும், சிறு பிள்ளைகளின் ஓடி விளையாடுகின்ற அரவமும், கைக் குழந்தைகளின் அழுகைக் குரல்களுக்குமிடையில் எத்தனை நல்ல நிகழ்ச்சியானாலும் ரசிப்பதென்பது இயலாத காரியம்தான். மனது ஒரு நிலைப்படாதுதான். அப்படியே போனாலும் இடையில் எத்தனையோ குறுக்கீடுகள் வரும்.

'என்ன சௌக்கியமா...?' என்று குரல் கேட்கும்.

'அம்மாவிற்கு உடம்பு எப்படி இருக்கு ..?' என்று குசலம் விசாரிக்கும்.

அடுத்து வரிசையாக வீட்டில் உள்ளவர்களைப் பற்றின கேள்விகள் தொடரும். ஒவ்வொன்றாகப் பதில் சொல்லி முடித்து மீண்டும் கவனம் கச்சேரி பக்கம் திரும்புவதற்குள் மிகப் பிடித்தமான 'சக்கனி ராஜா' முடிந்து சுத்தசாவேரி ஆரம்பமாகியிருக்கும்.

இதற்கிடையில் மிக மிகப் பிரபலமானவர்களும், அதிகாரிகளும், மந்திரிகளும், முதல் மந்திரியும், கவர்னரும் வருகிறார்கள் என்றால் போலீஸ் பட்டாளம் தவிர ஒரு பெரிய கூட்டமே சூழ்ந்து கொள்ளும்

தலைவரைப் பார்க்கின்ற ஆர்வத்தில் அவரவர்கள் முண்டியடித்து முன்னேறப் பார்ப்பார்கள். நெருக்கித் தள்ளுகிற கூட்டத்தில் மிதிபடுகின்ற அலறல்கள் அதிகமிருக்கும். கல்யாண வீட்டின் பெருந்தலைகள் அத்தனையும் முதல்வருடனும், கவர்னருடனும் வீடியோவிலும், புகைப்படத்திலும் விழுகின்ற காரணத்திற்காக அங்கு குழுமியிருக்கும்.

கச்சேரி செய்ய வந்த் மகாவித்வான் தன் நிகழ்ச்சியையே சிறிது நேரம் நிறுத்திக் கொள்வார். முதல்வரும், கவர்னரும், மற்ற மந்திரிகளும் பத்து நிமிடங்கள் இருந்து விட்டுப் புறப்பட்டுப் போன பின்னரும், அந்த அமளி ஓய அரைமணி நேரமாகும். அதன் பின்னர் வித்வான் மீண்டும் நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்குள் முன்பிருந்த வேகமும், சாரமும் குறைந்துவிடும்.

இவைகளெல்லாம் கல்யாணக் கச்சேரிகளில் தவிர்க்க இயலாதவை என்பதனாலேயே சில மகாவித்வான்கள் கல்யாணக் கச்சேரிக்கு ஒப்புக் கொள்வதில்லை.

ஆனால் இவற்றிற்கெல்லாம் மாறாக இருந்தது ரவிச்சந்த்ரிகாவின் நடனக் கச்சேரி. அத்தனை பேர் கண்களும் மேடையை விட்டு நகராமல் இருந்தன. இமைப்பதைக் கூட மறந்துவிட்ட மாதிரி தோன்றியது.

அத்தனை சிறப்பாக ஆடிக் கொண்டிருந்தாள் ரவிச்சந்த்ரிகா. மின்னல் ஒன்று மேடையில் வந்திறங்கி, ஜதியும், தில்லானாவும் ஆடுவதாகத் தோன்றியதே தவிர மானிடப் பிறவியாகப் படவில்லை. ஆண்டாளாக, ராதையாக, தட்க்ஷணின் மகளாக, சீதையாக மாறி மாறி அவள் அபிநயித்த போது சபை ஆஹா... என்று அதிசயித்தது. 'பாலசரஸ்வதி, குமாரி கமலாவுக்கு அப்புறம் இப்பத்தாம்ப்பா இப்படி ஒரு நாட்டியத்தைப் பார்க்கறேன்...' என்றது.



'வைஜயந்திமாலா, பத்மினியெல்லாம் கூட ஆடினாங்க... ஆனா இந்த மாதிரி இலல...'

'அதுக்குக் காரணம் அவங்கள்ளாம் சினிமாக்காரங்கன்ற கவர்ச்சி கூடவே இருக்கும். ஆனா இந்தப் பொண்ணு ஆடறப்போ நேரா அந்தப் பாாவதி தேவியே இறங்கி வந்து ஆடறாங்களோன்ற மாதிரித் தாம்ப்பா தோணுது...'

'முகம்கூட எத்தனை அழகாயிருக்கு பார்த்தியா...? கெட்ட எண்ணங்களையும், நினைப்புக்களையும் சுட்டுப் பொசுக்கிடற மாதிரி இல்லே...

'முகம் மட்டுமில்ல... பொண்ணே அப்படித்தான் இருககா... கொழுந்து விட்டு எரியற நெருப்பு மாதிரி தகதகன்னு...'

'ஆமாம். பேரு என்னன்னு சொன்னாங்க...?'

'ரவிச்சந்த்ரிகான்னு பேசிக்கிட்டாங்க...'

கூட்டத்தில் ஒருவனாக உட்கார்ந்து கேட்கக் கேட்க சக்தியின் மனசு படபடத்தது. ஒரு நிலையில் நில்லாமல் தவித்தது. கண்ணெதிரில் மின்னுகின்ற இந்த மின்னல் கிடைக்குமா என்கிற ஏக்கம் ஏற்பட்டது.

எப்படி ஆடுகிறாள்! சட்சட்டென்று அந்த முகத்தில் மாறுகின்ற பாவங்கள் எத்தனை! நீண்டகன்ற கரிய விழிகள் கூட நாட்டியத்திற்கென்றே படைக்கப் பட்டவையோ...! பளீர் பளீரென்று தகதகக்கிற கைகளும் வில்லாய் வளைகின்ற இடையும் மானின் லாகவத்தில் துள்ளுகின்ற கால்களும், அந்த முகமும், அதன் அழகும்...

'ரவிச்சந்த்ரிகா... நீ எனக்குக் கிடைப்பாயா...? எப்படிக் கேட்பது உன்னை...? இன்று ராத்திரிக்குள் அம்மாவிடம் முடிவுசொல்ல வேண்டுமே...?

அம்மா பாவம். தன்னை விட ஆர்வமாகக் காத்துக் கொண்டிருப்பாளே... அவளுக்கு 'எஸ்' சொல்ல வேண்டுமே... எப்படி...? யார் உதவப் போகிறார்கள்...? இந்த விஷயத்தில் யார் உதவியை நாட முடியும்...?

நண்பர்கள் யார் உதவியையும் நாடப் பிடிக்கவில்லை அவனுக்கு... ரவிச்சந்த்ரிகாவை அவர்கள் பார்த்த விதமே அவனுக்குப் பிடிக்கவில்லை. மேடை மீது நாட்டியமாடிக் கொண்டிருப்பவளைப் பார்க்காதே என்று சொல்ல எந்த உரிமையும் இல்லை நான்கு பேர்கள் பார்க்க வேண்டும் என்றுதான் அவள் ஆடுகிறாள். தன் கலையின் திறனை ரசிக்க வேண்டுமென்று ஆடுகிறாள்.

ஆனால் இவர்களோ கலையை ரசிப்பதற்குப் பதிலாக அவளை ரசிக்கிறார்கள். அணு அணுவாக ரசிக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர் முகங்களிலும் குத்து விட்டு விரட்ட வேண்டும் என்கிற ஆவேசம் அவன் மனதில் ஏற்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் யார் உதவியையும் நாட அவன் விரும்பவில்லை. ரவிச்சந்த்ரிகாவை அவர்களின் கண்களிற் படாமல் மறைத்து வைத்துவிட முடியுமானால் அதைச் செய்யக் கூட அவன் சித்தமாக இருந்தான்.

அப்படிப்பட்ட ஓர் உணர்வில் தவித்துக் கொண்டிருந்த போது ரவிச்சந்த்ரிகாவின் நாட்டிய நிகழ்ச்சி முடிவு பெற்றது. சபையினருக்குக் கை கூப்பி தங்கச் சிலை மாதிரி அவள் நிற்க, திரை விழுந்தது.

அதற்கெனவே காத்திருந்தவளாக புவனேஸ்வரியம்மாள் பாடும் இடத்தை விட்டு எழுந்து வந்து தன் கைகளாலேயே திருஷ்டி சுற்றினாள். விரல்களைச் சொடுக்கினாள். "என் கண்ணே பட்டுடும் போல இருக்கு" என்றாள்.



"போங்கம்மா... இன்னிக்குத்தானா ஆடறேன்...? இத்தினி நாள் ஆடலை...?" —ரவிச்சந்த்ரிகா வெட்கப் பட்டபோது அந்த அம்மாளையும் மீறி அந்த வார்த்தைகள் வெளியில் வந்து விட்டன.

"இத்தினி நாள் ஆடினாலும் இன்னிக்கென்னவோ ஸ்பெஷலா மனசு நிறைவா. ரொம்ப வேண்டியவங்க யாருக்காகவோ ஆடின மாதிரி இருந்திச்சு .."

சொல்லி விட்டு அந்த அம்மாள் நாக்கைக் கடித்துக் கொண்ட போது,

"கரெக்ட்... ரொம்ப சரியா சொன்னீங்க..." என்கிற பாராட்டுக் குரல் கேட்டுத் தாயும் மகளும் திரும்பிப் பார்த்தனர்.

ராஜரத்தினம் முகம் கொள்ளாத புன்னகையும், பெருமையுமாகப் படியேறி மேடைக்கு வர, அவரைத் தொடர்ந்து அதே முக பாவனையில் ராஜேஸ்வரி அம்மாளும், சக்தியும் கூட வந்துக் கொண்டிருந்தார்கள்...

# 21

"என்னம்மா... இப்படி செஞ்சிட்ட...?" என்று கேட்டார் ராஜரத்தினம். அவரது கண்களும், முகமும், உதட்டில் ஓடிய புன்னகையும் அந்தக் கேள்வி குற்றம் சாட்டுவதல்ல என்பதைச் சொல்லாமற் சொன்னாலும் குரல் குற்றம் சாட்டுவதாகவே இருந்தது. வழக்கமான கணீர்க் குரலில் வெண்கலமணி மாதிரி வெளிப்படவே 'என்ன சொல்கிறார் அவர், எதைச் சொல்கிறார்...' என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறிப் போனாள் ரவிச்சந்த்ரிகா... 'ஒரு வேளை தன் மனதைப் புரிந்து கொண்டு தண்டிக்கிறாரோ...?' என்று கூடத்

தோன்றிற்று. சக்தியிடம் தனக்கு ஏற்பட்டிருக்கும் அன்பையும், ஈடுபாட்டையும் தெரிந்துகொண்டு பேசுகிறாரோ...?' என்கிற சந்தேகம் வந்தாலும் தன் பொறுமையையும் நிதானத்தையும், பணிவையும் கைவிடாமல் மெல்ல அவரை ஏறிட்டுக் கேட்டாள்

"என்ன சொல்றீங்க நீங்க...?"

"என்ன சொல்றனா...? நீ செஞ்சது உனக்கே நல்லாயிருக்கா...?"

அத்தனை பெரிய மனிதர் அப்படிக் கேட்டதும் பதறிப் போய் இடையிற் புகுந்து கேட்டாள் புவனேஸ்வரியம்மாள்

"என்னங்க... அப்படி என்ன செஞ்சா அவ...?"

"உஷ்...! நீங்க பேசாதீங்க... இது எனக்கும் ரவிச்சந்த்ரிகாவுக்கும் இடையில் உள்ளது. நான் அவ கிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்கறேன்."

கணவரின் அந்தக் கட்டுப்பாடான கம்பீரக்குரல் ராஜேஸ்வரியம்மாளையும் பதறச் செய்தது. வினாடி நேரத்தில் எது எதையோ நினைக்க வைத்தது. 'அம்மா...' என பார்வையில் கெஞ்சி சக்தி அவளது கையைப் பற்றிக் கொண்ட போது கண்களாலேயே 'கொஞ்சம் நிதானமாக இரு சக்தி. அவசரப்படாதே...' என்று எச்சரித்தாள். பின்னர் மெதுவாகக் கணவரின் பக்கம் திரும்பி வழக்கமாக வெளிப்படும் பயந்த குரலில்,

"என்னங்க...?" என்று அழைத்தாள்.

சடாரென்று திரும்பி மனைவியைப் பார்த்தார் ராஜரத்தினம்.

"உனக்கு வேற தனியாச் சொல்ல வேணாம். அவங்களுக்குச் சொன்ன அதே பதில்தான் உனக்கும், இது எனக்கும் ரவிச்சந்திரிகாவுக்கும் உள்ள நேரடித் தகறாரு. இதுல யாரும் குறுக்கிட வேணாம்..."

"ரவி... அப்படி என்ன தப்புப் பண்ணினேம்மா...?" பெற்ற மனசு மீண்டும் பதறிற்று.

"அதுதான் தெரியலேம்மா...?" என்று சன்னமாக வீணையை மீட்டுகிற குரலில் ரவிச்சந்த்ரிகா சொல்ல மத்தளம் தட்டுகிற மாதிரி ராஜரத்தினத்தின் குரல் உயர்ந்தது.

"செஞ்ச தப்பு தெரியலேன்னா கேட்டுத் தெரிஞ்சுக்கணும்..."

"நிஜமாகவே நான் ஒரு தப்பும் செய்ததாத் தெரியலே..."

"ஐயயோ... பொய்வேற சொல்றியா...? அத்தனை பெரிய தப்பைச் செய்திட்டு முழுப்பூசணிக்காயைச் சோற்றுல மறைக்கலாம்னு பார்க்கறியா...?"

"என்ன சொல்றீங்க நீங்க...?"— இப்போது தைரியமாக நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் ரவிச்சந்த்ரிகா. எதுவானாலும் எதிர் நோக்குகிற திட சித்தத்தோடு நின்றிருந்தாள். மேடையில் தன்னைச் சுற்றி ஸ்தம்பித்து நின்றிருந்த அந்தச் சின்னக் கூட்டத்தின் கண்களில் தெரிந்த பயத்தையும், 'விஷயம் என்னவாக இருக்கும்...?' என்கிற ஆர்வத்தையும் சிறிதும் பொருட்படுத்தாத வளானாள் 'எதுவானால் என்ன...? மிஞ்சிப் போனால் நீ என் பையன் சக்தியைக் காதலிக்கிறாயா...? என்று கேட்கப் போகிறார். ஆமாம் என்பதை ஒப்புக் கொண்டு விட்டால் போயிற்று நிஜத்தைச் சொல்ல ஏன் பயப்பட வேண்டும். எதற்காகத் தயங்க வேண்டும்...'

இந்த ரீதியில் அவள் சிந்தித்துக் கொண்டிருந்த போது மீண்டும் ராஜரத்தினத்தின் உறுமல் குரல் கேட்டது.

"நிஜமாகத்தான் கேட்கறேன். நீ செய்த தப்பு உனக்குத் தெரியல...?"

"நிஜமாகத்தான் சொல்றேன். தெரியல..."

"இங்க வந்த எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு. எனக்கு சம்பந்தியாகப் போறவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. உனக்குத் தெரியாம இருக்குமா...?"

"சத்தியமாத் தெரியல... தயவு செய்து சொல்லுங்க...?"

கேட்ட அந்தக் குரல் கரகரத்துக் கண்கள் கலங்குவதைத் தாங்க இயலாமல் சக்தி தவித்துப் போய் முன்னால் வந்து,

"அப்பா..." என்று அழைத்தான்.

"என்ன...?" என்று அதே வேகத்தோடு திரும்பிப் பார்த்தார் அவர்.

"அவங்க எந்தத் தப்பும் செஞ்சதா எனக்குத் தெரியல. அப்படியே செய்திருந்தாலும் தெரிஞ்சு செய்திருக்க மாட்டாங்க. அதுக்காக நாம் கூப்பிட்டு நம் அழைப்பை ஏற்று வந்தவங்களை இப்படி அவமதிக்கக் கூடாது..."

"அவ மட்டும் என்னை அவமதிக்கலாமா...?"

"அப்படி என்ன அவமதிச்சாங்க...?"

"என்ன அவமதிக்கல...? நான் ஆசை ஆசையா ஒரே பொண்ணு கல்யாணம்னு பார்த்துப் பார்த்து செய்தேன். மாப்பிள்ளை அழைப்பு இந்த மாதிரி நடந்ததில்லேன்னு ஒருத்தர் தவறாமப் பேசணும்னு அத்தனை பெரிய வெளிநாட்டுக் காரை பூவாலயே ரதமா மாற்றியிருந்தேன். மாப்பிள்ளை அதுல உட்கார்ந்து ஆடி ஆடி வர்றப்போ பின்னால் அரசியல் கட்சிக் கூட்டம் மாதிரி கூட்டம் வரணும், வரும்னு நினைச்சிட்டிருந்தா... கார் பின்னால ஒரு பயல் இல்ல .. சம்பந்தியையும், என்னையும் விட்டா விளக்கு தூக்கறவங்



களும், பேண்ட் வாசிக்கிறவங்களும் தான். எங்கடா எல்லாரும்னு கேட்டா நாட்டிய நிகழ்ச்சி பார்க்கறாங்கன்னு சொல்றான். போய் கூட்டிட்டு வாடான்னு அனுப்பினால் 'ஒருத்தர் கூட வரமாட்டேன்றாங்க'ன்னு திரும்பி வந்து சொல்றான். உங்கம்மா கூட வரலேன்னாப் பார்த்துக்க... லட்சம் லட்சமா செலவழிச்சு நான் பத்திரிகை வச்சு அழைச்சா... அத்தனை பேரையும் தன் நாட்டியத்தால கட்டிப் போட்டது. இவ தப்பு இல்லாம யார் தப்பு? மாப்பிள்ளை அழைப்புக்குக் கார் பின்னால நடந்து வர ஒருத்தர் இல்லாமல் சபையில் இருத்தி உட்கார வைக்கிற மாதிரி ஆடினது யார் தப்பு...? இவ தப்பு இல்லாமல் என் தப்பா...?"

கணீரென்று மணியடிக்கிற குரலில் பெருமையும், மகிழ்ச்சியும் கம்பீரமும் கலந்து அவர் மூச்சு விடாமற் சொல்லி முடித்ததும் அத்தனை பேர் முகங்களும் பிரகாசித்தன. கண்கள் ஆனந்தத்தைக் கொட்டின. உதட்டோரம் நிம்மதிச் சிரிப்பு ஓட 'அப்பாடா...' என்ற பெருமூச்சு வெளிப்பட்டது.

எல்லோர் முகங்களையும் பார்வையால் துழாவின ராஜரத்தினம் பின்னர் தன் குரலைத் தழைத்துக் கொண்டு ரவிச்சந்த்ரிகாவின் அருகில் போய், அவளது தோளில் கைவைத்து மென்மையாக, ஒரு தந்தைக்குரிய அன்போடு சொன்னார்.

"...ஏம்மா .. அப்படியா ஆடறது? தன்னை மறந்து ஆடினதுல எல்லாரும் அவங்கவங்களை மறந்துட்டாங்க தெரியுமா...? சரி .. அப்படி என்ன ஆட்டம் ஆடறா... மாப்பிள்ளை அழைப்புக்குக் கூட ஆளில்லாமன்ற கோபத்துல நாலு ஆட்களையாவது அழைச்சிக்கிட்டு போகலாம்னு வந்து சபைக்குள்ள நுழைஞ்சவன் தான், அப்படியே நின்னுட்டேன். தெரியுமா...? சம்பந்திகளும் மாப்பிள்ளையும் என்ன கோவிச்சுட்டிருக்காங்களோ...?"

“கோபம் ஒண்ணுமில்ல சம்பந்தி ” என கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே வந்தார் மாப்பிள்ளையின் அப்பா.

“உங்களைக் காணோமேன்னு தேடிக்கிட்டு நானும் சபைக்குள்ள நுழைஞ்சவன்தான். இந்தப் பொண்ணு ஆடின ஆட்டத்தை விட்டுக் கண்ணெடுக்க முடியாம அப்படியே நின்னுக்கிட்டிருந்தேன்...”

“அப்ப மாப்பிள்ளை...?”

“எனக்கு மட்டும் தனியா கார்ல உட்கார்ந்திட்டிருக்க என்னவோ போல் இருந்திச்சு மாமா. நானும் இறங்கி வந்து இவங்க டான்ஸ் பார்க்க உட்கார்ந்துட்டேன்.”

அங்கிருந்த அத்தனை பேரும் சிரித்து ஓய கால்மணி நேரமாயிற்று அந்த மகிழ்ச்சிச் சிரிப்பு அலை அலையாக மண்டபம் முழுதும் பரவி எதிரொலித்தது.

அத்தனை பெருமையையும் புகழ்ச்சியையும், பாராட்டுகளையும் தாங்க இயலாத ரவிச்சந்த்ரிகா மிகவும் உணர்ச்சி வசப்பட்டவளாகச் சரேலென்று ராஜரத்தினத்தின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

தன்னையும் மீறினவளாக,

“என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க மாமா...” என்றாள்.

அலை அலையாக மிகுந்த சிரிப்புச் சத்தத்தில் அவள் சொன்ன ‘மாமா’ இரண்டு பேர்களைத் தவிர வேறு யார் காதுகளிலும் விழவில்லை.

அந்த இரண்டு பேரில் ஒருவர் அதைக் கேட்டு எல்லையற்ற சந்தோஷமடைய, மற்றொருவரின் முகம் சிணுங்கி, கண்களில் சொல்ல முடியாத கலவரமும், பயமும் எட்டிப் பார்த்தது.



‘கடவுளே ... இது எங்கு போய் முடியப் போகிறதோ ...?’ என்று அந்த மனது முணுமுணுத்துக் கொண்டது ..

## 22

“தீர்க்காயுசா, நல்லா இரும்மா... நிஜமாச் சொல்றேம்மா .. இந்த மாதிரி ஒரு நாட்டியத்தை என் வாழ்நாள்ல நான் பார்த்ததில்லேம்மா. எத்தனையோ பேர் ஆடிப் பார்த்திருக்கேன். ஆனால் உன்னை மாதிரி அத்தனையும் ஒண்ணாப் பொருந்தி யாருக்கும் அமைஞ்சதில்ல இந்த அழகும், ஆட்டத்தையும் மட்டும் சொல்லல... என் பொண்டாட்டி உன்னைப் பார்த்திட்டு வந்ததிலேர்ந்து புகழறதைக் கேட்டால் அறிவு, அடக்கம், பொறுமை, நிதானம் எல்லாமே உன்கிட்ட இருக்குன்றது தெரியறது. இப்படி எல்லாம் நிறைஞ்சு ஒருத்தர் கூட இருக்க மாட்டாங்க. கடவுள் படைக்கிறதும் இல்ல. ஆனால் எல்லாம் நிறைஞ்சது எப்படி இருக்கும்னு காட்டறதுக்காக எப்போவாவது, ரொம்ப ரொம்ப அதிசயமா, தன் படைப்புத் தொழிலுக்கே பெருமை தேடித் தர்றதா கோடியில ஒண்ணை இப்படிப் படைச்சு உலகத்துக்கு அனுப்புவார். அந்தக் கோடியில ஒண்ணா நீ இருக்கிறது ரொம்ப... ரொ...ம்...ப சந்தோஷம்மா...”

உணர்ச்சிப் பெருக்கில் ராஜரத்தினத்திற்கு குரல் கரகரத்து கடைசியில் பேசவே முடியாமல் தடுமாறிற்று. கண்கள் கலங்கிப் பளபளத்தன. மெல்லத் திரும்பித் தன் காரியதரிசி கணேசனைப் பார்த்தார். குறிப்பறிந்தவராகக் கணேசன் ஓடிப் போய் ஒரு பெரிய வெள்ளித் தட்டில் முன்னரே ரவிச்சந்த்ரிகாவிற்குத் தருவதற்கென வாங்கி வைத்திருந்த விலை உயர்ந்த பட்டுப் புடவையும்,

ரவிக்கைத் துண்டும், வெற்றிலை, பாக்கு, பழம், பூ எல்லாம் வைத்து எடுத்துக் கொண்டு மேடைக்கு ஓடி வந்தார். அதை வாங்கித் தன் மனைவியின் கைகளில் தந்த ராஜரத்தினம்,

"இந்தாம்மா... வாங்கிக்க..." என்றார்.

வெள்ளித் தட்டையும், பட்டுப் புடவையையும் பார்த்து சற்றுத் தயங்கினாள் ரவிச்சந்த்ரிகா.

அவர் விடவில்லை.

"என்ன தயங்கற...? நான் பணம் எதுவும் தரல... பணம் தந்தால் நீ வாங்கிக்க மாட்ட. திருப்பித் தந்துடுவேன்னு தெரியும். அதுவுமில்லாம உன் கலைத் திறமைக்குப் பணம் தந்து கௌரவிக்கணும்னால் என் சொத்து முழுசையும் தந்தாக்கூட போறாது. அதனால உன்னை எங்க குடும்பத்துல ஒருத்தியா நினைச்சு ஏதோ முடிஞ்ச அன்பளிப்பைத் தர்றோம்... வாங்கிக்க..."

ரவிச்சந்த்ரிகா அம்மாவைப் பார்த்தாள். அந்த அம்மாள் 'வாங்கிக்க' என்று தலையாட்டியதும் மீண்டும் ராஜரத்தினம், ராஜேஸ்வரி இருவரையும் ஒன்றாக நிற்க வைத்து அவர்கள் கால்களில் விழுந்து வணங்கிப் பொன் போன்ற கைகளை நீட்டி, புடவையையும், அதன் மீது வைத்திருந்த பூ, பழங்களை மட்டும் எடுத்துச் கொண்ட போது ராஜரத்தினம் குறுக்கிட்டார்.

"ம்ஹூம்... வெறும் புடவையை மட்டும் எடுத்துக்கச் சொல்லல... தட்டோடு சேர்த்துத்தான் எடுத்துக்கச் சொன்னேன்..."

"தட்டோடு சேர்த்தா...?!"

"ஆமாம்!"



வாங்கிக் கொண்டு திரும்ப முயன்றவளை மறுபடியும் அவர் குரல் தடுத்து நிறுத்திற்று.

"ஒரு நிமிஷம்மா..." என்றவர் மனைவியின் பக்கம் பார்வையைத் திருப்பினார்.

"ராஜி... உன் கழுத்துல இருக்கிற வைர நெக்லெஸைக் கழற்றி இந்தப் பொண்ணு கழுத்துல போடு..."

எல்லையற்ற சந்தோஷத்துடன் ராஜேஸ்வரியம்மாள் அதைக் கழற்றினபோது, புவனேஸ்வரியம்மாளும், ரவிசாந்த்ரிகாவும் பதறித் தடுக்க முயன்றனர். ஆனால் ராஜரத்தினத்தின் கட்டளைக்குரல் அவர்களைப் பேச முடியாமற் செய்து விட்டது.

கழுத்தில் வைர நெக்லெஸ் போட்ட கைகளைப் பற்றிக் கொண்டு, கண்களில் நீர் தளும்ப, "ம்...மா..." என்று அவள் தடுமாற, நிலைமையின் கனத்தை சுலபமாக்க முயன்றார் ராஜரத்தினம்.

"இப்படிப் பேசிட்டே நின்னுட்டிருந்தால் எப்படி...? நேரமாகல...? சாப்பிடப் போக வேணாம்...? வாம்மா... உன்னால என் மாப்பிள்ளை சம்பந்தி எல்லோரும் சாப்பிடாமல் காத்துட்டிருக்காங்க பாரு..."

"நீங்க போங்க... நான் இதோ வந்துடறேன்..."

"நாங்க எங்க போறது...? உன் கூட சாப்பிடணும்னில்ல காத்துட்டிருக்கோம்..."

தயங்கினாள் ரவிச்சந்த்ரிகா. "என்னம்மா...?"

"...இல்ல... நீங்கள்ளாம் போய் உட்கார்றதுக்குள்ள நான் நிமிஷமா டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடுவேன்..."

"ஓ. கே... உங்கம்மா... நட்டுவனார், மிருதங்கக்காரர், ஸ்ருதிப் பெட்டி எல்லாரையும் கூட்டிக்கிட்டு

நாங்க போறோம். நீ ரெண்டே நிமிஷத்துல டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடணும்...''

அந்த வினாடி அத்தனை கூட்டமும் அகல ரவிச்சந்த்ரிகா மட்டும் தனியாக ராஜேஸ்வரியம்மாள் காட்டிய அறைக்குள் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள். அங்கிருந்த கண்ணாடியில் தன் உருவத்தை முழுசாய் ஒரு முறை பார்த்துக் கொண்டவளுக்குச் சட்டென்று சக்தியின் ஞாபகம் வந்தது. அத்தனை பேர் பாராட்டியபோது அவன் ஒரு வார்த்தை சொல்லவில்லையே என்று தோன்றிற்று. ஆனால் மேடையில் குழுமியிருந்த கூட்டத்திற்கிடையில், அப்பாவிற்கு எதிரில் தனக்காகப் பரிந்து கொண்டு முன் வந்தது நெஞ்சில் நின்றது. 'நம் மீது எத்தனை நம்பிக்கையாகப் பேசினார்...!' என்கிற எண்ணத்தில் அலை அலையாக ஓர் உணர்வு பரவ அப்படியே நின்று கொண்டிருந்த போது, சன்னமாகக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

மெல்லப் போய் இவள் கதவைத் திறக்க அங்கு சக்தி நின்று கொண்டிருந்தான். ஓர் முறை சுற்று முற்றும் பார்த்து விட்டு அறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாழிட்டு விட்டுச் சொன்னான்.

''பயப்படாதீங்க... யாருக்கும் தெரியாமல் உங்களைத் தனியாகப் பாராட்டணும்னு தோணிச்சு. அதனால்தான் வந்தேன்...''

அவன் வந்தது, நின்றது கதவைத் தாழிட்டது எல்லாம் கனவுபோல் தோன்ற அப்படியே நின்று கொண்டிருந்தாள் ரவிச்சந்த்ரிகா. பார்வை அவன் முகத்தை விட்டகல மறுத்தது.

''என்ன பார்க்கறீங்க...? எப்படி ஆடினீங்க தெரியுமா...? எங்கப்பா சொன்னதுல ஒரு வார்த்தை அதிகமில்ல... நான் கண்ணிமைக்காமல் அப்படியே பார்த்துக்கிட்டிருந்ததால் இப்போ கண் வலிக்குது...''



''.........''

''என்ன பேசமாட்டேன்றீங்க...? ஒரு வேளை நான் இப்படித் தனியா வந்து பேசறது பிடிக்கலியா...?''

''சீ...ச்சீ அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல...''

''அப்படின்னா... என் பாராட்டை நீங்க ஏத்துக்கணும். ஆனா எனக்கு எப்படிப் பாராட்டறதுன்னு தெரியல... நிறைய பாராட்டணும்னு மனசு அடிச்சுக்கறது...''

''மனசு அதுக்கு மட்டும்தான் அடிச்சுக்கிறதா...?''

அவன் பார்வை உயர்ந்தது. அவள் முகத்தைத் தடவி, கண்களில் பதிந்து ஒன்றாகக் கலந்து மெல்லக் கரைந்தது. அந்தக் கரைதல் நெஞ்சில் புகுந்து அதையும் உருக்கிக் கரைக்க, துடிக்கும் கீழ் உதடுகளைப் பற்களால் அழுத்திக் கொண்டு குரல் கரகரக்க முணுமுணுத்தான் அவன்.

''ர...விச் சந்...த்ரி கா...!''

அவனது உணர்ச்சிகரமான குரலில் அவளும் முழுதுமாய் உருகினாள். மௌனமாகக் கரைந்து மெதுவாய்த் தன் வலது கையை நீட்ட, அவனும் ஒரு பூமாலையைப் பற்றுவது போல் அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

சில வினாடிகள் பேச முடியாது, பேச்சு வராமல் தவித்தவள் பின்னர் மெதுவாகக் கண்களை மட்டும் உயர்த்தி அவனை ஏறிட்டுக் கேட்டாள்.

''நீங்க கல்கி எழுதின பொன்னியின் செல்வன் படிச்சிருக்கீங்களா...?''

''ஹூம். இல்ல... இந்த சந்தர்ப்பத்துல அது எதுக்கு ஞாபகம் வந்துச்சு...?''

"காரணமாகத்தான்."

"என்ன காரணம்...?"

"அதுல ஒரு கட்டத்துல குந்தவிதேவி ஜெயில்ல இருக்கிற வந்தியத்தேவனைப் பார்க்கப் போவாங்க. ஜெயில் கம்பிகளுக்கிடையில் தன் கையை நீட்டுவாங்க. அதை வந்தியத்தேவன் பற்றிக் கொண்டதும் சொல்வாங்க..."

"என்ன சொல்வாங்க...?"

"வந்தியத் தேவரே... உங்கள் கரம் பற்றின இந்தக் கை இனி இந்த ஜென்மத்தில் வேறு யார் கையையும் பற்றாது..."

"ரவிச்சந்...த்ரி...கா..."

"அதையே நானும் உங்ககிட்டே சொல்ல ஆசைப் படறேன். உங்க கரம் தொட்ட இந்த ரவிச்சந்த்ரிகாவின் கை இனி இந்த ஜென்மத்தில் வேறு யார் கையையும் தொடாது..."

சக்தி உருகிப்போனான். உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின. உடம்பு முழுதுமே ஒரு முறை நடுங்கிற்று... கண்களை மூடி மௌனித்திருக்க ரவிச் சந்த்ரிகா கேட்டாள்.

"என்ன பதிலே இல்லை...?"

சட்டென்று கண்களைத் திறந்தான் சக்தி.

"இதுக்குப் பதிலா நான் ஒரு கேள்வி கேட் கட்டுமா...?"

"என்ன...?"

"இந்த ஒரு ஜென்மம் மட்டும்தானா ரவி...?"

மறுவிநாடி அவ்வறையிலிருந்த ஈருடல்களும் அணைப்பில் இறுகி ஒருடலானதைப் போலவே இரு நெஞ்சங்களும் உருகிக் கரைந்து ஒன்றாயின...



# 23

வானத்தில் பறந்து மேகத்தில் மிதக்கிற மாதிரியான உணர்வு ஏற்பட்டது சக்திக்கு. மனசு மிகவும் லேசாகிக் கிடந்தது. அத்தனை நாட்களாகப்பட்ட தவிப்பும், அவஸ்தையும் அடங்கியிருந்தது உள்ளுக்குள் நெருடிக் கொண்டிருந்த அத்தனை கேள்விகளுக்கும் விடை கிடைத்து விட்ட சந்தோஷம் ஏற்பட்டது. மிக உயர மான மலை உச்சியில் ஏறி நின்று 'ரவிச்சந்த்ரிகாவும் என்னைக் காதலிக்கிறாள்' என்று கத்த வேண்டும் போலிருந்து. அப்படிக் கத்தினால் மற்ற மலைச் சிகரங்களில் பட்டுத் தன் குரல் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கும். ரவிச்சந்த்ரிகா தன்னைக் காதலிக் கிறாள் என்பது உலகம் முழுவதிற்கும் தெரியவரும். அப்பாவிற்கு, அம்மாவிற்கு, நளினிக்கு, அவளது கணவனுக்கு, நண்பர்களுக்கு...

ரவிச்சந்த்ரிகாவும் தன்னைக் காதலிக்கிறாள்.

தான் எப்படி அவளைக் காதலிக்கிறோமோ அதே அளவு அவளும் தன்னைக் காதலிக்கிறாள்.

உயிருக்கு உயிராக நேசிக்கிறாள். உயிரினும் மேலாக நேசிக்கிறாள். உன் கரம் பற்றின என் கை இனி வேறு எந்தக் கரத்தையும் பற்றாது என்கிறாள்.

இந்த ஜென்மம் மட்டுமின்றி இனி எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் அவள் மனதில் அவனன்றி வேறு யாருமில்லை. அவன் மனதிலும்— மனதில் மட்டுமா...?

உடல், உயிர், ஆத்மா எல்லாவற்றிலும் அவள்தான்.

அவளன்றி அவனுக்கு வேறு யாருமில்லை.

அவள்தான் அவனின் உலகம்.

அவள்தான் அவனில் சுவாசக்காற்று.

அவள், அவள், அவள்...

அவளோடு, அதாவது அவள் நினைவோடு உருகிக் கரைந்து எத்தனையோ நாட்களாகி விட்டன.

செம்மண் தரையில் விழுந்த மழைநீர் தானும் சிவப்பு நிறமாக மாறியுதைப் போன்று மாறியாகி விட்டது.

கண்களைத் திறந்தால் அவள்.

மூடினாலும், மூடிய கண்களுக்குள் அவள்.

நெஞ்செல்லாம் அவள்.

நினைவெல்லாம் அவள்.

அவளின்றி அவனில்லை.

அவள் சொன்ன அவனின்றி அவளில்லை என்பதைக் கேட்ட பின்பு—

அவன் இந்த உலகத்தில் இல்லை. கால்கள் தரையில் பதியவில்லை. பார்வை எதிலும் நிலைக்கவில்லை. பேச்சு எழவில்லை. அப்படியே பற்றிய கைகளோடு அவளை இழுத்துக் கொண்டு பாரதிராஜா படங்களில் வருகிற மாதிரி ஸ்லோ மோஷனில் ஓடவேண்டும் போலிருந்தது. வெள்ளை உடையில் டூயட் பாட வேண்டும் என்று தோன்றிற்று.

'வீணையடி நீ எனக்கு மேவும் விரல் நானுக்கு' என்று பூப்போன்ற அந்த மென்மையான உடலை வருடிக் கொடுக்க வேண்டும். அந்த நிலா முகத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டும். நமக்குப் பிரியமான குழந்தையை அணைத்து மென்மையாக உச்சந்தலையில் முத்தமிடுகிற மாதிரி அவளது தலை உச்சியில் முத்தமிட வேண்டும்.



11842
2888966

அப்பா...! எப்படிப்பட்ட உடல் அவளுடையது! தாழம்மடலாக என்ன நிறம்! [illegible] வெட வெடவென்று என்ன உயரம்! [illegible] யானாலும் அவளை அணைத்துக்கொண்டபோது பூமாலையை அணைத்துக் கொள்கிற மாதிரியல்லவா இருந்தது. அப்படிப்பட்ட மென்மை! இதம்! குளிர்ச்சி! மணம்!

நிஜமாகவே அவளுடலிலிருந்து வீசிய நறுமணத்தை அவனால் மறக்க முடியவில்லை. அவளை நினைத்த போதே அந்த மணம் நெஞ்சிலிருந்து புறப்பட்டு நாசியைத் தொட்டது. தோளில் அவள் தலை சரித்து காதருகில் அவன் பெயரைச் சொல்லி அழைக்கிற மாதிரி தோன்றியது.

'சக்தி... நான் உங்களை நேசிக்கிறேன், என் மனமார. உயிரார, வாயார, நினைவார, நெஞ்சார நேசிக்கிறேன்...'

அவன் அவளது கூந்தலை வருடிக் கொடுத்தான். அந்த வருடலில் அவன் மனம் உருகி விரல்களின் வழியாக வெளிப்பட்டது. எல்லையற்ற பிரியம் தெரிந்தது. ஆத்மாவோடு ஆத்மாவாக சங்கமப் பட்டுவிட்ட ஐக்கியம் பிடிபட்டது. அந்த உருகலில், அவன் பேச முடியாமல் தவித்தான். வார்த்தைகள் நெஞ்சிலேயே சிக்கிக் கொண்டு வெளி வருகிற மார்க்கம் அறியாமல் தடுமாறின. மெல்ல, தன்னை சமாளித்துக் கொண்டு அவள் முகத்தை நிமிர்த்தி கண்களுக்குள் பார்த்தபோது அதன் பிரகாசமும், பளிச்சிட்ட நிஜமான பிரியமும், காதலும் அவனுக்குள் ஓர் சிலிர்ப்பை ஏற்படுத்தின. அவனுடல் நடுங்குவதை உணர்ந்து கேட்டாள் அவள்.

''என்ன சக்தி...?''

''ஒண்ணுமில்ல...''

''சொல்லுங்க... ப்ளீஸ்... சொல்லுங்களேன்...''

"என்னால சொல்ல முடியல..."

"ஏன்...?"

"மனசு அந்த அளவுக்கு சந்தோஷமா இருக்குது. நிறைஞ்சு கிடக்குது. சாமியைப் பார்க்கணும்னு காட்டுக்கு தவம் பண்ணப்போய், வருஷக் கணக்கா தவம் பண்ணின ரிஷிக்கு எதிரில் திடீர்னு தெய்வம் வந்து நின்னால் எப்படி இருக்கும்...? அப்படி இருக்குது எனக்கு..."

அவளது நீளமான விரல்கள் சடாரென்று அவனது முகத்தைத் தடவி வாயைப் பொத்தின. அவனுக்குப் பூச் செண்டால் வருடின சுகம் ஏற்பட்டது. தன் உதட்டில் பதிந்திருந்த அவளது செண்பக விரல்களில் முத்தமிட்டுக் கேட்டான் அவன்.

"என்ன சந்த்ரி...?"

"ம்ஹூம்..." என்று அவன் மார்பில் பதிந்திருந்த தலையை ஆட்டினாள் அவள்.

அவன் இன்னமும் உருகியவனானான்.

"என்ன சொல்லும்மா...?" என்றான்.

"ம்ஹூம்... இனிமேல பேசாதீங்களேன்..."

"ஏன்...?"

"என்னால தாங்க முடியாது..."

"ஏம்மா...?"

"அப்படியே உருகிப்போயிடுவேன் போல இருக்கு... உருகி ஒண்ணுமில்லாமப் போயிடுவேன்..."

செடியில் மிகப் பெரிதாக மலர்ந்திருக்கும் மஞ்சள் ரோஜாவைப் போன்ற அவள் முகத்தை மென்மையாக நிமிர்த்தி, சொன்னான்.



"ம்ஹூம்... தப்பாச் சொல்ற சந்திரி..."

"———"

"உருகி ஒண்ணுமில்லாமல் போக மாட்ட. என்கூட கலந்து நானாயிடுவ அப்புறம் நீ, நான்னு பிரிக்க முடியாம ஒண்ணாயிடுவோம்..."

"ச...க்...தி..."

"ரவி..."

"நீங்க இல்லாம எனக்கு ஒண்ணுமில்ல சக்தி..."

"நீயில்லாம நானே இல்லை ரவி..."

அவன் அவளைத் தன்னோடு அணைத்து முகத்தைத் தோளில் சரித்துக் கொண்டு, அடர்த்தியான கருங் கூந்தலை வருடி, மிக மிக மென்மையாய் முன்நெற்றியில் முத்தமிட்டு காதலாகிக் கசிந்துருகிக் கொண்டிருப்பதை அறியாத அவனது தாய் ராஜேஸ்வரியம்மாள் கல்யாணம் நல்ல படியாக நடந்து முடிந்த திருப்தியிலும் சந்தோஷத்திலும், நிம்மதியிலும் மெல்லப் படியேறி மாடிக்கு வந்தாள்.

அடுத்து மகனின் வாழ்க்கையைப் பற்றின ஆர்வத்துடனும், எதிர்பார்ப்புடனும், ரவிச்சந்த்ரிகாவை அவன் கேட்டானா, என்ன பதில் சொன்னாள் அவள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக சக்தியின் அறைக் கதவைத் தட்டினாள்...

# 24

சட்டென்று கலைந்து எழுந்து கொண்டான் சக்தி. ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை. எங்கிருக்கிறோம் என்பது தெரியவில்லை. உடனிருந்த ரவிச்சந்த்ரிகாவைக் காணவில்லை. அத்தனை நேரமும் அவளோடு

இருந்தது வெறும் கனவுதானா என்பது தெரியவில்லை. கனவா அல்லது கற்பனையா என்று பிடிபடாமல் சில வினாடிகள் தடுமாறினான். அந்தத் தடுமாற்றத்துடன் கட்டிலில் உட்கார்ந்து கண்களைக் கசக்கிய போது மீண்டும் கதவு சற்று பலமான வேகத்துடன் தட்டப் பட்டது.

இவனுக்கு அதில் எரிச்சல் ஏற்பட்டது. சொல்ல முடியாத கோபமும் எழுந்தது. அதி சந்தோஷமான அற்புத மனநிலையைக் கலைத்தவர்கள் யாரானாலும் மன்னிக்க முடியாது என்று தோன்றிற்று. மன்னிக்கவும் கூடாது. கனவானாலும், கற்பனையானாலும் எப்படிப் பட்ட கனவு! என்ன கற்பனை! அந்த சுகத்திலிருந்து யாரும் மீண்டு வருவார்களா..? வரத் தோன்றுமா...? தன்னை மீட்டுக் கொண்டு வந்த அந்த, கதவைத் தட்டின கைகளை முறுக்கி, மளுக்கென்று முறித்துப் போடுகிற ஆவேசத்துடன் எழுந்து வந்து கதவைத் திறந்தான். சிறிது கூட எதிர்பாராத வகையில் அங்கே அம்மா நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் ஒன்றும் செய்ய முடியாதவனாக அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே கேட்டான்.

"என்னம்மா நீங்க...சொல்லாம வந்து நிக்கறீங்க...?"

"ஆமாமப்பா... ஊரு விட்டு ஊரு வரேன் பாரு... முன்னால கடுதாசி போட்டுட்டு வர...? படியேறி உன் ரூமுக்கு வர்றதுக்கு இன்டர்காம்ல கூப்பிட்டுச் சொல்லிக் கிட்டிருக்கணுமான்னு நேர வந்திட்டேன்... ஏம்பா... உனக்கு ஏதாவது தொந்தரவா இருக்குதா..."

"ஐயோ... என்னம்மா நீங்க ..? உங்களுக்கு எதுக்குக் கஷ்டம்...? நானே கீழ இறங்கி வந்திருப்பேன்னு சொன்னால்... தொந்தரவான்னெல்லாம் கேட்கறீங்க... வாங்கம்மா... வாங்க..."

அந்த அம்மாள் உள்ளே வந்து கட்டிலில் உட்கார்ந்தாள்.



"ஏம்பா தூங்கிக்கிட்டிருந்தியா..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா... நீங்க சொல்லுங்க..."

"இல்லப்பா... நளினியையும், மாப்பிள்ளையையும் அனுப்பி வச்சிட்டு எப்படா நேரம் கிடைக்கும்னு உன் கிட்டப் பேசணும்னு ஓடி வரேன்...?"

"உன் கிட்ட சொல்லிக்காமப் போவாளாப்பா.. இப்ப மாப்பிள்ளை கூட ஹனிமூன் போயிருக்கு... அண்ணன் கிட்ட நீ சொல்லிடும்மா... எனக்கு வெட்கமா இருக்குன்னிடுச்சு..."

"ஹனிமூனுக்கா போயிருக்காங்க...? அப்ப பத்து மாசம் கழிச்சு குழந்தையோடத்தான் திரும்பி வருவாங்கன்னு சொல்லு..."

"அட! நீ ஹனிமூன் போனியானா அப்படித்தான் திரும்பி வர்றதா திட்டம் போட்டிருக்கியா...?"

"போங்கம்மா நீங்க... நான் நளினியைக் கலாட்டா செய்யிணமுனு சொன்னா என் பக்கமே திருப்பி விட்டுட்டீங்க..."

"சரி .. விளையாட்டு கிடக்கட்டும். இப்ப விஷயத் துக்கு வருவோம். ரவிச்சந்த்ரிகாகிட்ட பேசினியா? என்ன சொன்னா...? அவதானே என் மருமக...?"

"ஏம்மா... அவளைத் தவிர வேற யாராவது மருமகளா வந்தா ஏத்துக்கத் தயாரா இருக்கீங்களா..."

"இது என்ன கேள்வி சக்தி .. ரெண்டு நாளா அவ என்ன பதில் சொன்னாளோன்னு நான் தவிச்சுக் கிட்டிருந்தேன். சத்திரத்தை விட்டு வீட்டுக்கு எப்படா வரப் போறோம்னு காத்துக்கிட்டிருந்தேன். வீட்டுக்கு வந்தும் உன்னை சந்திக்க முடியலையேன்னு ஏங்கிக் கிட்டிருந்தேன். இப்ப எல்லாரையும் அனுப்பி

வச்சிட்டு மனசு பதைக்கப் படியேறி ஓடி வந்தா... இது என்னப்பா கேள்வி...? நல்ல பதிலா, காது குளிர அவதாம்மா உங்க மருமக... அதுக்கு அவ சம்மதிச் சுட்டான்னு சொல்ல மாட்டியா...?''

அம்மாவின் வருத்தமும், ஏக்கமும், தவிப்பும் புரிந்தவனாகச் சட்டென்று அவனும் வருத்தப்பட்டுப் போனான். தான் அவ்வாறு கேட்டிருக்கக் கூடாது என்பதை உணர்ந்து கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

''என்னம்மா நீங்க... நான் விளையாட்டுக்கு எது சொன்னாலும் தப்பா எடுத்துக்கறீங்க...''

"சரி... சரி... விஷயத்துக்கு வா... மடமடன்னு அவ சொன்னதையெல்லாம் சொல்லு...''

"சொன்னதையெல்லாமா...?"

''ஆமாம்.''

''போங்கம்மா... எல்லாத்தையும் உங்க கிட்ட சொல்ல முடியுமா...?'' என்று பெண்களைப் போல் வெட்கப்பட்டு கால் கட்டை விரலால் தரையில் கோடு போட்டான்.

அந்த அம்மாள் எல்லையற்ற மகிழ்ச்சிப் பெருக்கில் தலை நிமிர்ந்து கண்கள் அகல அவனைப் பார்த்தாள்.

''அப்... அப்படின்னா...?!''

''அப்படித்தான். உங்களுக்கு மருமகளா வர தான் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும்னு அவ சொல்றா...

'நிஜமாகவா...?!''

''ஆமாம்— நான் விளையாட்டுக்குச் சொன்னா அதை நிஜம்னு எடுத்துப்பீங்க... நிஜமா சொன்னா நிஜமாவான்னு கேட்பீங்க...''



''அப்படியில்லப்பா... வந்து... ரவிச்சந்த்ரிகா மாதிரி அழகும், குணமும் ஒண்ணாப் பொருந்தின பொண்ணு கிடைக்க நாம் கொடுத்து வச்சிருக்கணு மில்ல...?''

''ஆமாம்... மாறி மாறி மாமியாரும், மருமகளுமே கொடுத்து வச்சிருக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தா எப்படி...? மாமனாராகப் போறவரு சொல்லணு மில்ல...?''

''யாரு... உங்கப்பாவா?''

''ஆமாம்மா... அவரை நினைச்சாத்தான் பயமா இருக்குது. அவர் இதுக்கு ஒத்துக்க மாட்டாருன்னு தோணுது. அந்தஸ்து, பணம், கௌரவம்னு பார்க்கிற வரு, வார்த்தைக்கு வார்த்தை பேசறவரு, ரவிச்சந்த்ரிகா வைத் தன் மருமகளா ஏத்துக்குவரான்னு சந்தேகமா இருக்குது...''

"ஏம்ப்பா... அவருதானே இஷ்டப்பட்டு அந்தப் பொண்ணோட நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்தாரு... அவருதானே நானே நேர அந்தப் பெண்ணை வீட்டுக்குப் போய் அழைப்பு வச்சிட்டு வரணும்னாரு... நான் போகப் பிடிக்காமல் மாட்டேன்னதுக்குக் கூட அப்பா கோவிச்சுக்குவாருன்னு நீ சொல்லல...?''

"அது வேற... இது வேறம்மா... அது கலைக்கு அவரு கொடுக்கிற மரியாதை..."

"ஏம்ப்பா... கலைக்கு மரியாதை கொடுக்கிறவரு அந்தக் கலை யாருகிட்ட இருக்குதோ அவங்களுக்குமில்ல மரியாதை தரணும்...?''

''ஏம்மா... அதுல அப்பா தப்பு ஏதாச்சும் செய்தாரா...? ரவிச்சந்த்ரிகாவை எவ்வளவு பாராட்ட ணுமோ அவ்வளவு பாராட்டி, என்ன செய்யிணமோ அதை செய்திட்டாரில்ல...?"

"அந்தப் பொண்ணை அவரு புகழ்ந்ததைக் கேட்டப் புறம்தான் கல்யாணத்துக்கு மறுக்க மாட்டாருன்ற நம்பிக்கை எனக்கு வந்தது..."

"ஐயோ... அம்மா... ஒரு பொண்ணைப் பாராட்டறது, அவ கலையை ரசிக்கிறது, மேடைல புகழறது இதெல்லாம் வேற... அதே பொண்ணை மருமகளா ஏத்துக்கறதுன்றது வேற...? எத்தனை தமிழ் சினிமா பார்த்திருக்கிறீங்க? இதை இன்னுமா நீங்க புரிஞ்சுக்கலை...?"

"ஏம்பா... இப்ப நான் அவளை மருமகளா ஏத்துக்கத் தயாரா இல்லியா...?"

"நீங்க ஒரு பொண்ணு... அதனால இன்னொரு பொண்ணு மனசைப் புரிஞ்சுக்கறீங்க... அதுவுமில்லாம நீங்க சாதாரணக் குடும்பத்துலேருந்து வந்தவங்க... அதனால இன்னொரு சாதாரணக் குடும்பத்துப் பொண்ணை ஏத்துக்கத் தயாரா இருக்கீங்க... ஆனால் அப்பா... கோடீஸ்வரராகவே பிறந்து கோடீஸ்வரராகவே வளர்ந்து, கோடீஸ்வரராகவே வாழ்ந்துகிட்டிருக்கிறவரு இல்லியா...? அவரால இறங்கி வர முடியுமா...?"

அதன் பின்னரே அந்த அம்மாளுக்கும் நிஜம் உறைத்தது. சட்டென்று பிடிபட்டது. அதிலும் ராஜரத்தினத்தின் பிடிவாதம் தெரிந்தவள் ஆகையால் மெல்ல ஒருவித பயங்கூட எட்டிப் பார்த்தது. ஒரு வேளை அவர் இதற்கு மறுத்து விடுவாரானால் என்ன செய்வது என்கிற எண்ணம் எழுந்தது.

அதைத் தாங்குவானா இவன்...? தாங்க முடியுமா...? அந்த ஏமாற்றத்திலும், வெறுப்பிலும் மனம் உடைந்து போய்விட்டால்...? வேறு ஏதாவது முடிவிற்கு வந்து விட்டால்...?

பெற்ற வயிற்றில் அந்த எண்ணமே நெருப்பு மூட்டிற்று. திகுதிகுவென்று பற்றி எரிய வைத்தது.



தாங்க முடியாததாயிற்று. உடனே கண்களில் நீர் குளம் மாதிரி கட்டிக் கொண்டு நிற்க மகனை ஏறிட்டாள். பின்னர் சபதம் மாதிரி சொன்னாள்.

"இல்லப்பா... அதுக்கு நான் விடமாட்டேன். கல்யாணமான இத்தனை வருஷத்துல உங்கப்பாகிட்ட நான் எதுவும் கேட்டதில்ல இப்ப கேட்கப் போறேன். அவரு கால்ல விழுந்தாவது பிச்சையா கேட்கப் போறேன். எப்படியாவது ரவிச்சந்த்ரிகாவை உனக்குக் கட்டி வச்சப்புறம்தான் எனக்குத் தூக்கம், சாப்பாடு எல்லாம். அதனால் நீ கவலைப்படாதே. பொறுப்பை என்கிட்ட ஒப்படைச்சிட்ட இல்ல... நிம்மதியா இரு நான் வரேன்..."

அம்மாவின் அந்த ஆவேசம் அவனை அயர வைத்தது. பேச்சு வராமல் தயங்க வைத்தது. வினாடி நேரம் தடுமாறி பின்னர் மெல்ல சமாளித்துக் கொண்டு, ஓடிப்போய் படியிறங்கிக் கொண்டிருந்த அம்மாவின் தோளைப் பற்றிக் கேட்டான்.

"எங்க போறீங்கம்மா...?"

"உங்கப்பா கிட்ட, இதைப் பத்திப் பேச..."

## 25

ராஜரத்தினத்தின் அறையை நெருங்கினபோதே ராஜேஸ்வரியம்மாளின் கால்கள் தயங்கின. நடை குறைந்து, நிதானமாயிற்று. சக்தியிடம் அவ்வளவு தீர்க்கமாய் சொல்லிவிட்டு வந்தாளே தவிர, பிரச்சினையை நேரில் சந்திக்க நேரிட்ட போது பயம் வந்தது. நெஞ்சுக்குள் ஒரு படபடப்பு தோன்றிற்று. நாக்கு உலர்ந்து மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டது.

ஒரு நாட்டியக் காரியைத் தன் மருமகளாக அவர் ஏற்றுக் கொள்வாரா என்ற சந்தேகம் தோன்றிற்று. சக்தி சொன்ன மாதிரி பரம்பரைப் பணக்காரர்களுக்கே உரிய. அதிலும் அதிபணக்காரர்களுக்கு உரிய அத்தனை விசேஷ குணங்களும் அவரிடம் உண்டு. 'பார் மகளே பார்' சிவாஜி கணேசன் மாதிரி திமிர், அகங்காரம், அந்தஸ்துப் பெருமை, குடும்ப கௌரவம் எல்லாம் உண்டு தனக்கு நிகர் யாருமில்லை என்கிற கர்வம் உண்டு. இவற்றுக்கிடையில் இவை அத்தனைக்கு மிடையில் இயல்பாய் ரத்தத்தில் கலந்து வந்திருந்த கலாரசனை மட்டுமே ரவிச்சந்த்ரிகாவின் நாட்டியத்தைப் பாராட்டிப் புகழ வைத்ததே தவிர வேறு எதுவுமில்லை.

அப்படியிருக்க, அந்தப் பெண்ணையே மருமகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்கப் போனால் பதில் என்னவாக இருக்குமோ என்கிற பயமும், சங்கடமும் தோன்றி அடிவயிற்றைப் புரட்டிற்று. இப்போது என்ன செய்யலாமென்ற கேள்வியின் தயக்கத்தில் அறை வாசலிலேயே நின்றாள் அந்த அம்மாள்.

உள்ளே போகலாமா, வேண்டாமா என்கிற போராட்டம் எழுந்த போது போகத்தான் வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று ராஜரத்தினத்தின் வீட்டுக் காரியதரிசி கணேசன் அன்று வரவில்லை. அதனால் ராஜரத்தினம் தனியாகத்தான் அறையில் இருந்தார். சட்டென்று அறைக் கதவைத் திறந்து கொண்டு போய் அவரைப் பார்த்து விடுவது சுலபம். இல்லாவிட்டால் கணேசனிடம் சொல்லியனுப்பி அனுமதிக்குக் காத்திருந்து பின்னரே தரிசனம் பெற முடியும்.

'இன்று முடியாது' என்கிற பதில் வந்து விட்டால் அவரைக் காண்பது இயலாத காரியமாகிவிடும். பின்னர்



மீண்டும் சொல்லியனுப்பி அவராக நாளும், நேரமும் குறித்துத் தந்தால்தான் உண்டு 'அதுவரை காத்திருக்கத் தன்னாலும் முடியாது, சக்தியாலும் முடியாது' எனத் தோன்ற அன்றைக்கே அவரைப் பார்த்துப் பேசி விடுவது என்கிற முடிவில் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள். பின்னர் மெல்ல கதவை விரல் முட்டியால் இரண்டுமுறை தட்டினாள்.

"கமின்..." என்ற ராஜரத்தினத்தின் கம்பீரக்குரலின் அனுமதி கிடைத்த பின்னரே கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

அந்த நேரத்தில் தன் மனைவியைச் சிறிதும் எதிர் பார்க்காத ராஜரத்தினம் சற்று ஆச்சரியத்துடன் ஏறிட்டார். அதிலும் முன் அனுமதியின்றி இது போல் அவரது அலுவலக அறைவரை தேடி அந்த அம்மாள் வந்ததில்லையாதலால் ஆச்சரியம் இன்னும் அதிக மாயிற்று. ஏதோ மிக முக்கியமான காரணம் இருக்க வேண்டுமென்று தோன்றிற்று. கல்யாணச் செலவு களுக்கான காசோலைகளில் கையெழுத்திட்டு கணக்கை சரிபார்த்துக் கொண்டிருந்தவர் அதை ஒதுக்கி வைத்து விட்டு நிதானமாக, அந்தம்மாளின் முகத்தைப் பார்த்துக் கேட்டார்.

"என்ன... ஆபீஸ் ரூமுக்கே தேடிக்கிட்டு வந்திருக்க...? ஏதாவது முக்கியமான விஷயமா...?"

சட்டென்று அந்த அம்மாளால் பேச முடியவில்லை. வார்த்தைகள் தொண்டைக் குழியில் சிக்கிக் கொள்ள சில வினாடிகள் தடுமாறினாள்.

"ஆ... ஆமாங்க... இ... இல்லீங்க... வந்து.. வந்து..."

"அதான் வந்திருக்க இல்ல... உட்காரு உட்கார்ந்து சொல்லு.."

இது போன்ற நிதானமான, அமைதியான, சற்று அன்புடன் கூடிய வரவேற்பை எதிர்பார்க்காத அந்தம்மாளுக்கு தைரியம் வருவதற்கு பதிலாக பயம் அதிகமாயிற்று.

'இவ்வளவு நிதானமாகவும், பொறுமையுடனும் பேச மாட்டாரே இவர்... என்ன ஆயிற்று...? ஒரு வேளை முன் அனுமதியின்றி வந்த கோபம் உள்ளுக்குள் பதுங்குகிறதோ...? இந்தப் பதுங்குதல் பாய்ச்சலுக்கு அடையாளமோ...? பின்னால் பாய்வாரோ...?'

ஒன்றும் புரியாமல் அந்த அம்மாள் நிற்பதைப் பார்த்த ராஜரத்தினத்துக்குச் சட்டென்று ஒரு பரிதாப உணர்ச்சி தோன்றிற்று. 'பாவம் இவள்...' என்று சொல்லிக் கொண்டார். கல்யாணமான நாளிலிருந்து இதுவரை தான் அவளிடம் ஐந்து நிமிடம் உட்கார்ந்து அமைதியாகப் பேசினதில்லை. அன்பாக ஒரு வார்த்தை சொன்னதில்லை. பிரியமாக ஒரு பொருள் வாங்கித் தந்ததில்லை. வெளியில் எங்கும் அழைத்துப் போனதில்லை. அவளது ஆசைகள் என்ன, எதிர் பார்ப்புகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டதில்லை... இரண்டு குழந்தைகள் பெற்றுக் கொண்டது தவிர, அதுவும் தனக்கு ஏற்பட்ட வேகத்தில் பிறந்த குழந்தைகளே தவிர அவளிடம் காதலால் நெருங்கினதில்லை. அவளையும் நெருங்க விட்டதில்லை...

அந்த அளவிற்கு அவளை ஒரு அடிமை மாதிரி, கைதி மாதிரி, வேலைக்காரி மாதிரித்தான் நடத்தியிருக்கிறோமே தவிர மனைவியாய் மனதிற்கு உகந்தவளாய், வீட்டின் எஜமானியாய் நடத்தியதே இல்லை... நடத்துவது கிடக்கட்டும். அவ்வாறு நினைத்தது கூடக் கிடையாது என்கிற நிஜம் முதல் முறையாக அவரைத் தாக்கிற்று. நெருப்பு மாதிரி நெஞ்சைச் சுட்டது. புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானம் கிடைத்த மாதிரி அவருக்கு அந்த அறையில், அந்த வினாடியில், பளீரென்று ஞானம் உதயமாயிற்று. சில உண்மைகள்



பொறி தட்டின. அடைத்து வைத்திருந்த மனக்கதவு படீரெனத் திறந்து கொண்டது. பூட்டி வைத்திருந்த பூட்டு உடைந்து சிதற ஒரு புது ராஜரத்தினமாக அவதரித்து அவள் முன் நின்றார். புதிதாய்ப் பார்ப்பவரைப் போல் பார்த்தார்.

அவர் மனசுக்குள் நிகழ்ந்த போராட்டத்தையும், எண்ணங்களையும் அறியாத ராஜேஸ்வரியம்மாள், இன்னமும் பயந்து போனாள். அந்த பயத்திலும், பதட்டத்திலும் தலை கவிழ்ந்து கொண்டது. குரல் எழும்ப மறுத்தது.

அவள் நிலை உணர்ந்து அவரே தன் இருக்கையை விட்டு எழுந்து அவளருகில் வந்தார். வந்த பின்பும் ஒரு வினாடி தயங்கினார். அவளிடம் அன்பாய் நடந்து கொள்ள வேண்டும் என்று தோன்றிற்றே தவிர எப்படி நடந்து கொள்வது என்பது தெரியவில்லை. என்ன பேசுவது, எந்த வார்த்தையில், எதைச் சொல்லி ஆரம்பிப்பது என்று எதுவும் புரியாமல் தடுமாறினார். இன்னும் சில வினாடிகள் அந்தத் தடுமாற்றத்தில் கழிந்தன. பின்னர் தன் கையை அவளது தோள் மீது வைத்தார்.

கை நடுங்கிற்று; மனது நடுங்கிற்று, ஒரு அமைதியான மன நிலையில், நிதானமான சூழ்நிலையில் அவளை அவ்வளவு அண்மையில் அன்றுதான் பார்க்கிறாராகையால் உடல் முழுதுமே ஒரு நடுக்கம் ஓடி அடங்கிற்று.

அதுவரை வாழ்க்கையில் எத்தனை விஷயங்களை இழந்திருக்கிறோம் என்பது புரிய, அந்த அம்மாளின் முகத்தை ஏறிட்ட போது உள்ளுக்குள் சிலிர்த்துப் போயிற்று,

முதன் முதலாக அந்த முகத்தின் அழகு அப்போது தான் அவருக்குப் பிடிபட்டது. என்ன அழகு! எத்தனை மென்மை! பொறுமையும், நிதானமுமான எப்படிப்பட்ட

பார்வை! இத்தனை வருடத்திற்குப் பிறகும் இவளது முகத்தில் ஒரு விதக் குழந்தைத் தனம் தெரிகிறதே... அது எப்படி...? ஒரு வேளை கள்ளம், கபடமற்ற, உலக விவரம் தெரியவராத காரணத்தினால் இந்தக் குழந்தைத் தனம் அப்படியே இருக்கிறதோ...? மீதமாய் நிற்கிறதோ...?

ஆனால் அந்தக் குழந்தைத் தனமும் சாதாரணக் குழந்தைத் தனமாக இல்லை. இயல்பான குழந்தைத்தனமில்லை. அடக்கி வளர்க்கப்பட்ட, அதிகம் பயந்து போன, ஏக்கங்களும், எதிர்பார்ப்புகளும் நிறைந்த ஒரு குழந்தைத்தனமாகவும், கலவரம் மிகுந்ததாகவும்தான் பட்டதே தவிர சாதாரணமானதாக இல்லை.

அவளது கலவரம், பயம், சதாசர்வகாலமும். எதையோ எதிர்பார்க்கிற பார்வை, எப்போதும் முகத்தில் கவிழ்ந்து கிடக்கிற துயரம் இவை அனைத்திற்கும் தானே காரணம் என்பதையும் அவரால் உணர முடிந்தது. அந்த உணருதலின் மூலம் அவருக்குள் சொல்ல முடியாத ஒரு துயரம் ஏற்பட்டது. சீ என்ன செய்து விட்டோம்... இப்படிப்பட்டவளின் அருமையை இத்தனை நாளும் புரிந்து கொள்ளாமற் போய் விட்டோமே என்கிற சங்கடம் வந்தது. கூடவே குரல் தடுமாறிற்று. கண்களில் கண்ணீர் தளும்பி நிற்க "ரா ஜேஸ்...வ...ரீ...." என்ற போது உலகத்தின் சோகம் அனைத்தும் ஒன்று திரண்டு அந்த முகத்திற்கு வந்த மாதிரி தோற்றமளித்தது.

அதைக்கண்ட ராஜேஸ்வரியம்மாள் பதறிப் போனாள். அறுந்த பல்லியின்வாலாக அந்த மனசு துடித்தது அடிவயிறு கலங்கிற்று அதுவரை அவரை அந்தமாதிரியானதொரு தோற்றத்தில் அவள் கண்டதே இல்லை. மற்றவர்களை அதட்டிப் பார்த்திருக்கிறாளே தவிர அவர் அடங்கி நின்றதில்லை. மற்றவர்களைத் தலைகுனிய வைத்திருக்கிறாரே தவிர அவர் தலை



குனிந்ததில்லை. மற்றவர்களின் கண்களில் கண்ணீர் வரப் பேசியிருக்கிறாரே தவிர அவர் கண் கலங்கினதில்லை.

ஒரு சிங்கத்தின் கம்பீரமும், வீரமும், உறுமலுமாக நிற்பவரா தன் எதிரில் இப்போது அடிபட்ட மானின் சோகத்துடனும், வருத்தத்துடனும் வேதனையுடனும் காணப்படுகிறார்... அதற்குக் காரணமென்ன...? இவரே இவ்வாறு கண்கலங்கி, நிலைகுனிந்து போக வேண்டுமென்றால்...

என்னவாயிற்று...? ஒரு வேளை வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டதோ...? கதைகளிலும், திரைப்படங்களிலும் வருகிற மாதிரி ஒன்றுமில்லாமல் நொடிந்து, அத்தனை பணமும் போய் விட்டதோ...? திடீரென்று அடுத்த வேளை சாப்பாட்டிற்குக் கூட இல்லாத அளவில் ஏழைகளாகி விட்டோமோ...? என்னவாயிற்று...? எப்படிக் கேட்பது இவரை...? இதுவரை அபபடியெல்லாம் கேட்டதே இல்லையே..? இத்தனை அண்மையில் இவர் முகத்தைப் பார்த்ததில்லையே.. அருகாமையில் இவரை உணர்ந்ததில்லையே..? அதுவுமில்லாமல் தன் தோளில் கைபோட்டு... ராஜேஸ்வரி என்று தழுதழுத்து...

என்னவாயிற்று...?

அந்த அம்மாள் வாய் திறக்கும் முன்பாக அவரே அவளது கைகளைப் பற்றிக் கொண்டார். கலங்கின கண்களால் அவளது கண்களுக்குள் மிக ஆழமாகப் பார்த்தவாறு தன் கர்வம், கம்பீரம், திமிர், அகங்காரம் அனைத்தும் அழிந்து, 'தான்' என்பது அகன்று, தப்பு செய்த குழந்தை, தன் தவற்றை உணர்ந்து வருந்தும் குரலில் மிக மிக மெதுவாகச் சொன்னார்.

"என்னை மன்னிச்சிடு ராஜேஸ்வரி. இத்தனை நாளா உன்னை மனைவியா நடத்தாதது கிடக்கட்டும். மனுஷியா

கூட நடத்தினதில்ல .. எல்லாத்துக்கும் சேர்த்து இப்போ நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன்...''

சட்டென்று ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கில் அவர் வாயைப் பொத்தி கண்களில் கண்ணீர் பிரவாகிக்க நின்றாள் அந்த அம்மாள்...

# 26

அத்தனை வருடங்களாகத் தான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அன்றுதான் அர்த்தம் புரிந்தது ராஜேஸ்வரி அம்மாளுக்கு. அன்றுதான் அர்த்தமே ஏற்பட்ட மாதிரித் தோன்றியது. இருண்டு கிடந்த தன் மனதிற்கு மட்டுமின்றி அந்த வீட்டிற்கே ஒரு பிரகாசம் வந்திருப்பதை உணர்ந்தாள். இனி சந்தோஷத்தையும், சிரிப்பையும் தவிர வேறு எதையும் அந்த வீடு கேட்கப் போவதில்லை என்பது பட, அன்றுதான் திருமணமான புதுமணப் பெண்ணைப் போல் மெல்லத் தலை நிமிர்ந்து கணவனை ஏறிட்டாள்.

தன் முகத்திற்கு மிக அருகில் தெரிவது அவர் முகம் தானா...? தான் காண்பது கனவில்லையே...? அல்லது கற்பனை செய்து கொள்ளவில்லையே...? தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள மெள்ள ஒருமுறை தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

வலித்தது. அது நிஜம்தான். கனவில்லை. கற்பனை இல்லை. நிஜம். கண்ணெதிரில் நிகழ்ந்து போன மாற்றம். இத்தனை நாளாக இறுக மூடிப் பூட்டி வைத்திருந்த மனக்கதவைத் தன் கணவன் திறந்து விட்டிருப்பது நிஜம். திறந்த கதவின் வழியாக ஜிலுஜிலுவென்று காற்று வீசுவது நிஜம். வெளிச்சம் வருவது நிஜம். பாலைவனத்தின் ஏதாவது ஓரிடத்தில் பசுஞ்சோலை இருக்குமென்று சொல்வார்களே... அது நிஜம்.



இத்தனை நாட்களாக நடந்து வந்த தன் வாழ்க்கைப் பாலைவனத்திலும் பசுஞ்சோலை வந்து விட்டது இனி நிழலுக்கும், காற்றுக்கும், தண்ணீருக்கும் குறைச்சலில்லை...

அந்த அம்மாள் கண்களை மூடிக் கொண்டாள். மனது முருகன் சந்நிதியில் நின்றது. முதலில் வடபழனியில் நின்றது பின்னர் திருச்செந்தூர் போயிற்று. அப்புறம் திருப்பரங்குன்றம். அடுத்து சுவாமிமலை. பழனி என அறுபடை வீடுகளையும் தரிசித்தது வீழ்ந்து வணங்கிற்று. 'முருகா...கண் திறந்து பார்த்தியேப்பா... என் வேண்டுதலுக்கு மனமிரங்கி, செவி சாய்த்து, என் வாழ்க்கையிலேயும் விளக்கேற்றி வச்சியே... அதே மாதிரி என் மகன் வாழ்க்கையிலேயும் விளக்கேற்றி வையப்பா... அவன் விரும்பற, ஆசைப்படற விளக்காக ஏற்றி வைப்பா ..''

மனமுருகக் கண்மூடி வேண்டி நின்ற போது ராஜரத்தினம் இன்னமும் பரிவாக அவள் தோள் மீது கை வைத்தார். வருடிக் கொடுக்கிற குரலில் மெதுவாகக் கேட்டார்.

"என்ன ராஜேஸ்வரி... ரொம்ப நேரமா பேசாமலே இருக்கே...?"

"சடாரென்று கண்களைத் திறந்த அந்தம்மாள் மீண்டும் முதல் முதலாகக் கணவனைக் காணும் புது மணப்பெண் மாதிரி தலை கவிழ்ந்து கொண்டாள். இன்னமும் நெருங்கி உட்கார்ந்து அவள் கைகளைத் தன் கைகளோடு சேர்த்துக் கொண்ட ராஜரத்தினம் கரகரத்து நெகிழ்ந்து போன குரலில் சொன்னார்.

'இன்னிக்குத்தான் நமக்குக் கல்யாணமான மாதிரி இருக்கு... இல்ல ராஜேஸ்வரி...?"

அந்தக் கேள்வியில் அந்தம்மாளின் வெட்கம் அதிகமாகி முகம் சிவந்தது. அதைக் கவனித்து ரசித்த ராஜரத்தினம் மேலே தொடர்ந்தார்.

"எனக்கு இந்த நாளைக் கொண்டாடணும்னு தோணுது .. உனக்கு ஏதாவது பெரிசா செய்யணும் போல இருக்குது .. ஏதாவது கேள் ராஜேஸ்வரி... எதுவானாலும் வாங்கித்தரேன்..."

அதில் சடாரென்று அந்தத் தாய் மனம் விழித்துக் கொண்டது. அத்தனை நேரமாய் கணவனது அன்பிலும், காதலிலும், கருணையிலும் மூழ்கிக் கிடந்த உணர்வு அதிலிருந்து விடுபட்டது. எதற்காக அந்த அறைக்கு வந்தோம் என்பது ஞாபகத்திற்கு வந்து நெஞ்சில் உறைத்தது. தன் கடமை உணர்ந்தவளாக, தாய்மை நிரம்பியவளாக, பழைய ராஜேஸ்வரியாக, ஆனால், கணவனிடமிருந்து பெற்ற புதிய அன்பிலும், ஆறுதலிலும் கிடைத்த தன்னம்பிக்கையோடு மெல்ல நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள். பின்னர் தயங்கி மெதுவாகக் கேட்டாள்.

"...ஏங்க... நான் எது கேட்டாலும் செய்வீங்களா ...?"

"இன்னும் உனக்கு என் மேல நம்பிக்கை வரல... எங்க கையை நீட்டு... சத்தியம் செய்து தரேன்..."

"வேணாங்க... வாய் வார்த்தையில் சொன்னாப் போதுங்க..."

"நீ எது கேட்டாலும் செய்யறேன்... எந்த ஆசையானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்... அதைத் தவிர இனிமேல என் வாழ்க்கையில வேறநோக்கமில்ல... தயங்காமல், பயப்படாமல் சொல்லு ராஜேஸ்வரி..."

அத்தனைக்குப் பின்னரும் அந்த அம்மாவிற்குக் குரல் எழும்ப மறுத்தது. அவர் அவளது தோள்மீது கை போட்டு அணைத்தவாறு மென்மையாகப் பார்த்தார்.

"ம்... சொல்லு... என்ன வேணும்..?"

"ஒண்ணுமில்லீங்க... வந்து... வந்து..."



"தயங்காமச் சொல்லு ராஜேஸ்வரி..."

"சொல்ல பயமா இருக்குதுங்க..."

"பயப்படாமல் சொல்லு .. நான்தான் இப்பப் புது ராஜரத்தினமா மாறிட்டனில்ல. இன்னும் கூட என்ன பயம்...?"

"ஒண்ணுமில்லீங்க... வந்து... நம்ம நளினி கல்யாணத்துக்கு டான்ஸ் ஆடிச்சில்ல... அந்தப் பொண்ணைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க...?"

எதற்கு அந்தப் பீடிகை என்பது புரியாமல் அவரது புருவங்கள் ஒரு முறை சுருங்கின. பின்னர் அந்தம்மாவை ஏறிட்டு நிதானமாகவே கேட்டார்.

"எதுக்குக் கேட்கற ராஜேஸ்வரி...?"

"நீங்க சொல்லுங்களேன்... அப்புறம் நான் எதுக்குன்னு சொல்றேன்..."

"பொண்ணு தங்கமான பொண்ணு. மனசால ரொம்ப உயர்ந்த குடும்பத்துப் பொண்ணு. தகதகன்னு தங்கக் குத்துவிளக்கு மாதிரி லட்சணம்—"

"ஏங்க... அந்தக் குத்துவிளக்கை நம்ம வீட்டுக்கு விளக்கேற்றக் கொண்டு வந்தா எப்படிங்க இருக்கும்...?"

"என்ன ..? என்ன சொல்ற நீ...?!"

"அதுக்குத் தாங்க சொல்லப் பயந்தேன்..."

"இல்ல... சொல்ல வந்ததைச் சொல்லு..."

"நீங்க, என்ன வேணும் கேளு... எதுவானாலும் செய்யறேன்னு சொன்னீங்க இல்ல...?"

"ஆமாம்."

"வாக்கு தவற மாட்டீங்க இல்ல...?"

"உன்கிட்ட மட்டுமில்ல... எப்பவும் யார் கிட்டயும் தவறினதில்ல..."

"அப்படின்னா அந்தப் பொண்ணு ரவிச்சந்த்ரிகாவை எனக்கு மருமகளாக்கித்தாங்க..."

"என்ன...?" என்று ஒரு வினாடி அதிர்ந்தார் பின்பு ஆச்சரியமாகப் பார்த்தார். இப்படி ஒரு எண்ணம் இவளுக்கு எப்படித் தோன்றியது என்ற கேள்வி எழுந்தது... இவளுக்காகத் தோன்றிய எண்ணமா...? அல்லது... அல்லது...

மனதில் பட்டதை வாய் விட்டுக் கேட்கவும் செய்தார்.

"ஏன் ராஜேஸ்வரி... இது உனக்குள் மட்டும் ஏற்பட்ட எண்ணமா...?

"ஏன் கேட்கறீங்க...?"

"...இல்ல... அந்தப் பொண்ணை அழைக்க அவ வீட்டுக்குக் கூடப் போகத் தயங்கின உன் மனசுல இப்படிப்பட்ட ஒரு எண்ணம் எப்படி ஏற்பட்டுச்சுன்னு எனக்குத் தெரியணுமில்லையா...?"

"அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போய் பார்த்துப் பழகினதுக்கு அப்புறம் தாங்க தெரிஞ்சது எப்படிப்பட்ட தங்கமான பொண்ணுன்னு..."

"அதுசரி... உனக்கும், எனக்கும் மட்டும் தெரிஞ்சாப் போறுமா...? சக்திக்குத் தெரிய வேணாமா...? அவனுக்குப் பிடிக்கவேணாமா...?"

பளீரென்று அந்த அம்மாவின் முகம் மலர்ந்தது.

"அவனுக்கும் பிடிச்சிருக்கிறதால் தாங்க உங்ககிட்ட கேட்கவே வந்தேன்..."



"அப்படிவா வழிக்கு..." என்று புன்னகைத்தார் அவர்.

அந்தப் புன்னகையைக் கண்ட பின்புதான் அந்த அம்மாவின் நெஞ்சு நிம்மதியடைந்தது. பழைய ராஜ ரத்தினம் இல்லை இவர் என்கிற நம்பிக்கை வலுப் பட்டது. பழைய ராஜரத்தினமாக இருந்தால் இதைக் கேட்டு சீறி விழுந்திருப்பார். பார்வையில் எரித்திருப் பார், சிங்கம் கர்ஜிக்கிற மாதிரி கர்ஜித்திருப்பார்.

ஆனால் இப்போதோ சிரித்துக் கொண்டு நிற்கிறார். அந்த அதி அற்புதமான மாறுதலை, ரஸவாத வித்தையை இவருக்குள் புகுந்து யார் செய்தாகள் என்று யோசித்தாள். அந்த மருதமலையானைத் தவிர வேறு யார் செய்திருக்க முடியும் என்ற முடிவில் 'என்னப்பா... இவர் சரி சொல்லணுமே...' என்றும் வேண்டிக் கொண்டாள்.

"ஏன் ராஜேஸ்வரி... உன் மகனை அந்தப் பொண்ணோட கச்சேரிக்கு ஏற்பாடு செய்யச் சொன்னால், அவன் அந்தப் பொண்ணையே தனக்கு ஏற்பாடு செஞ்சுக்கிட்டானா...? துரைக்குப் படிப்பை முடிக்கிறதா எண்ணமில்லியாமா...?"

"ஏங்க... படிப்புக்கும், இதுக்கும் என்ன சம்பந்தங்க... இந்தக் காலத்துல எந்தக் காலேஜ் படிக்கிற பிள்ளை காதலிக்கலீங்க...?"

"ஓஹோ...! காதல்னே சொல்லிட்டானா...?"

"ஐய்யோ...அப்படியெல்லாம் அவன் சொல்ல லீங்க... அந்தப் பொண்ணைப் பார்த்துவிட்டு வந்த நாளா சாப்பாடு இல்லாமல், தூங்கப் பிடிக்காமல் அவன் தவிக்கிற தவிப்பைப் பார்த்து நானா புரிஞ்சுக் கிட்டேங்க..."

"ஓஹோ... சாப்பாடு தூக்கமில்லாத நிலைக்குப் போயிடுச்சா...? அப்படின்னா அதை உடனே கட் பண்ண வேண்டியதுதான்...."

"என்னங்க...?" என்று பதறிற்று பெற்ற வயிறு. கண் கலங்கி, நெஞ்சு துடித்தது.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால நீ எது கேட்டாலும் செய்யறேன்னு வாக்கு தந்தீங்க இல்ல... இப்ப இப்படிச் சொல்றீங்களே...?"

"என்ன சொன்னேன்...?"

"கட் பண்ணிடணும்னு சொன்னீங்க இல்ல...?"

"எதை கட் பண்ணிடணும்னு சொன்னேன்னு நீ தெரிஞ்சிக்க வேணாமா...?"

"சொல்லுங்க...?"

"நம்ம மகனுடைய சாப்பாடு பிடிக்காத தூக்கம் வராத நிலைமையை.."

"அப்படின்னா...?"

"வர்ற வெள்ளிக் கிழமை சாயந்திரம் வெற்றிலை, பாக்கு, பூ, பழத்தோட நீயும், நானும், ரவிச்சந்த்ரிகா வீட்டுக்கு அவளைப் பொண்ணு கேட்கப் போறோம்னு அர்த்தம்...."

சடாரென்று அந்த அம்மாள் கீழே சரிந்து அவர் கால்களைத் தொட்டு, கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"சீ... பைத்தியம் மாதிரி என்ன இது...? எழுந்திரு " என்று குனிந்து அவளை எழுப்பி தன் தோளில் சரித்துக் கொண்ட போது ஆனந்தத்தால் அவர் கண்களும் கலங்கிக் கிடந்தன...



# 27

தாயின் வருகைக்காக அதி ஆர்வமாகக் காத்துக் கொண்டிருந்தான் சக்தி. அந்தப் பெரிய அரண்மனை போன்ற பங்களாவின் முன் அறையிலேயே விரல் நகங்களைக் கடித்தவாறு உட்கார்ந்திருந்தான். இடது கையின் ஐந்து விரல்களும் கணிசமாக நகங்களை இழந்தன. பார்வை கடிகாரத்தைத் தடவித் தடவி வெறித்தது. மனது சொல்ல இயலாத எதிர்பார்ப்பில் துடித்தது.

அப்பாவோடு பேசுகிறேன் என்று போன அம்மா இரண்டு மணி நேரமான பின்பும் திரும்பி வராததால் உள்ளுக்குள் சங்கடம் அதிகமாயிற்று. ஏதேதோ சந்தேகங்கள் எழ உயிர் துடித்தது.

'என்னவாயிற்று...? அம்மா அப்பாவோடு சண்டை போடுகிறாளோ...? அப்பா கோபம் தாங்காமல் அடித்து விட்டிருப்பாரோ...? போய்ப் பார்க்கலாமா...?'

மனசு தாங்காமல் அப்பாவின் அலுவலக அறைக்குப் போக எழுந்த போது அம்மாவே வருவது தெரிந்தது. வழக்கத்தை விட அந்த முகத்தில் அதீதமானதொரு பிரகாசமும், மகிழ்ச்சியும் படர்ந்திருப்பதைக் கவனித்த இவனுக்குள் ஆச்சரியம் எழுந்தது. அந்த அளவு சந்தோஷத்தில் அம்மாவை என்றுமே பார்த்ததில்லை என்றும் நினைத்துக் கொண்டான். அம்மா இந்த அளவு சந்தோஷப்பட வேண்டுமானால் அப்பா சரி சொல்லி விட்டாரா ..?

வரவேற்பறைக்குள் வரும் வரை தாங்க முடியாதவனாக ஓடிப் போய் வாசல் போர்ட்டிகோவிலேயே அம்மாவின் கைகளைப் பற்றிக் கொண்டான். ஆர்வத்தை அடக்க முடியாத குரலில் கேட்டான்.

“என்னம்மா ஆச்சு...? இத்தனை சந்தோஷமா வரீங்க...? அப்பா சரி சொல்லிட்டாராம்மா...?”

அந்த அம்மாவிற்கு அவனைச் சற்று அழவைத்துப் பார்க்கலாமென்று தோன்றிற்று. கூடவே அறிவு அதனைத் தடுத்தது. ‘ஆரம்பத்தில் அபசகுனமாக ஒன்றும் சொல்லக் கூடாது’ என்ற எண்ணம் எழ மிகுந்த உற்சாகத்தோடு ஆரம்பித்தாள்.

“ஏம்ப்பா...உங்கப்பாகிட்டப் பேசி சம்மதம் வாங்கிட்டு வந்திருக்கேனில்ல... எனக்கு என்ன தருவ...?”

“என்னம்மா... என்ன சொன்னீங்க..? அப்பா சம்மதிச்சிட்டாரா...?”

“சம்மதிச்சது மட்டுமில்லப்பா .. வெள்ளிக் கிழமை சாயந்திரம் அவங்க வீட்டுக்குப் பொண்ணு கேட்கப் போகலாம்னு சொல்லியிருக்காரு...”

“நிஜமாவா சொல்றீங்க...?”

“இந்த விஷயத்துல நான் என்ன உன்கிட்ட பொய்யா சொல்லப் போறேன்...?”

அவனுக்கு அப்படியே அம்மாவைத் தூக்கித் தட்டாமாலை சுற்ற வேண்டும் போலிருந்தது. வானத்தில் பறக்க வேண்டும் போலிருந்தது இமய மலையின் உச்சியில் நின்று கத்த வேண்டும் போலிருந்தது. ரவிச்சந்த்ரிகாவை மருமகளாக்கிக் கொள்ள அப்பாவின் சம்மதம் கிடைத்து விட்ட செய்தியை உலகம் முழுவதும் தெரிவிக்க வேண்டும் போலிருந்தது.

ஆனால் அவை எதையும் செய்யாமல் இன்னமும் அதை நம்ப முடியாதவன் போல் அப்படியே அம்மாவைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். அவனது உணர்ச்சி வசப்பட்ட நிலையையும், அதிர்ச்சியையும் புரிந்து கொண்ட ராஜேஸ்வரியம்மாள் அருகில்



வந்து அவனது தோளில் கை வைத்து புன்னகையோடு கேட்டாள்.

“என்னப்பா... அப்படி நின்னு போயிட்ட...?”

தன்னுணர்வு பெற்றவனாக அவன் அவளை ஏறிட்டான்.

“அம்மா... நீங்க நிஜமாத்தானே சொல்றீங்க... என்னால நம்ப முடியலம்மா...”

“நம்ப முடியாததா எத்தனை விஷயங்கள் உலகத்துல நடக்குது... அதுல இதுவும் ஒண்ணு... இன்னும் நீ அப்பா பேசின அத்தனையும் கேட்டிருக்கணும்... அப்படியே உறைஞ்சு போயிருப்ப...”

“அப்படி என்னம்மா பேசினாரு...?”

“இத்தனை நாளா என்னை மனைவியா மட்டுமில்ல... மனுஷியா கூட நடத்தலைன்னு வருத்தப் பட்டாரு .. இனிமேல நான் சொல்ற மாதிரி நடக்கிறதா சத்தியம் செய்து கொடுத்திருக்காரு ...”

“ஹே...!” என்று நிஜமாகவே அம்மாவைத் தூக்கி விட்டான் அவன்.

“ஏய் சக்தி.... என்னப்பா இது ... விடப்பா...” என்று அந்த அம்மாள் கத்தக் கத்த விடவில்லை. கரகரவென்று சுற்றத் தொடங்கினான

“ஐயோ... தலை சுத்துதப்பா... விடப்பா...” என்று அந்த அம்மாள் கெஞ்சினதற்குப் பின்னரே கீழே இறக்கினான். கீழே இறக்கின பின்பும் சும்மா விட வில்லை. இறுக அணைத்து “அம்மா .. ரொம்ப தாங்க்ஸ்மா... இத்தனை சுலபமா வெற்றிகரமா காரியத்தை முடிச்சிட்டு வருவீங்கன்னு நினைக்கவே இல்லைம்மா...” என இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டதில் அந்த அம்மாவின் மூச்சு முட்டிற்று ..

"அடேடே... போறும்ப்பா... கொஞ்சம் மீதி வச்சிக்க... ரவிச்சந்திரிகாவுக்கு ஒண்ணுமில்லாமப் போயிடப் போவுது..."

"போங்கம்மா..." என்று நிஜமான வெட்கத்தில் முகம் சிவக்க பெண்பிள்ளை போன்று படியேறி ஓடினான் அவன்.

அடுத்த அரைமணி நேரத்தில் மிக அழகாக உடுத்து, தலைவாரி, மென்மையான செண்ட் வாசனையோடு படியிறங்கிக் கீழே வந்தபோது, மகனின் மன நிலை உணர்ந்த தாய் மகிழ்ச்சி பொங்கக் கேட்டாள்.

"என்னப்பா... அவ வீட்டுக்கா...? வெள்ளிக்கிழமை நாங்க பொண்ணு கேட்க வரப் போற விஷயத்தை மட்டும் சொல்லாத. திடீர்னு நானும், உங்கப்பாவும் போய் நின்னு அவங்களை ஆச்சரியப் படுத்தப் போறோம்..."

"சரிம்மா... அதைச் சொல்லலை .. அப்பா சம்மதிச்சுட்ட விஷயத்தை மட்டும் சொல்லிட்டு வரேன்..." என்று கால் தரையில் பாவாத உற்சாகத்துடன் ஓடிப்போய் அப்பா தனக்குப் பரிசாகத் தந்திருந்த பென்ஸ் காரில் ஏறித் தானே ஓட்டிக் கொண்டு போனான்.

அவன் போன போது ரவிச்சந்த்ரிகாவின் வீடு மிக மிக அமைதியாக இருந்தது நிசப்தமாக இருந்தது. முதல் நாள் போன போது எவ்வாறு இருந்ததோ அதே மாதிரி இருந்தது. முதன் முதலில் தான் வந்த அந்த நாளுக்கும் இந்த நாளுக்குமிடையில் எத்தனை வித்தியாசம் என்று நினைத்துக் கொண்டான். என்னென்ன நிகழ்ச்சிகள்! எவ்வளவு மனோ பாவங்கள் இத்தனைக்கும் காரணம் ஒரு பெண்! அழகும், இளமையும் அறிவும், திறமையும், பெண்மையின் மென்மையும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு பெண்! அவனுக்கென்றே பிரம்மன் படைத்த பெண்! எப்படிப்பட்ட பெண்!



ரவிச்சந்த்ரிகா... நிஜமாகவே உன்னை மனைவியாய் அடைய நான் எத்தனையோ பிறவிகளில் தவம் செய்திருக்க வேண்டும். நல்லது என உலகம் போற்றும் அனைத்தையும் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படிப்பட்ட பேறு கிடைத்திருக்காது...

அதற்குமேல் அவளைப் பார்க்காது இருக்க முடியாத தாபத்துடன் ஓடிப்போய் மெல்ல அழைப்பு மணியை அழுத்தினான். அந்த நேரத்தில் தன்னைச் சிறிதுகூட எதிர்பார்க்காத அவள் முகம் எப்படி மலரும் என்பதைக் கற்பனை செய்தவாறு நின்றிருந்தபோது கதவு திறக்கப் பட்டது.

திறக்கப்பட்ட கதவின் பின்னால் ரவிச்சந்திரிகா இல்லை. அவளது தாய் புவனேஸ்வரியம்மாள்தான் நின்று கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் எப்போதும் அந்த முகத்தில் ஒரு மகிழ்ச்சி பரவும். உதடுகள் புன்னகையில் விரியும். "வாங்கதம்பீ..." என உரிமையாய் வரவேற்கும்.

ஆனால் அன்று அந்த மகிழ்ச்சி, புன்னகை எதுவுமில்லை. முகம் மலரவில்லை. தேவையற்ற ஒருவன் வந்து விட்ட பாவனையைக் காட்ட மிக மெதுவான குரலில், சிறிது கூட இயல்பற்ற தன்மையில்,

"வாங்க தம்பீ .." என்றாள் புவனேஸ்வரி அம்மாள்.

அந்தக் குரலின் தொனி, முகமலர்ச்சியற்ற தன்மை இவைகளைப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்து சோபாவில் உட்கார்ந்து கொண்ட அவன் நிதானமாகக் கேட்டான்.

"ஏன்மா... என்னவோ போல் இருக்கீங்க... உடம்பு சரியில்லையா...?"

சட்டென்று விழித்துக் கொண்ட மாதிரி அந்த அம்மாள் உணர்வு பெற்றாள். தன் முகத்திற்கே உரிய

சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவசரமாக அவனை மறுத்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல தம்பீ... கொஞ்சம் லேசா தலையை வலிச்சிச்சு... அவ்வளவுதான்"

"இல்லம்மா... லேசான வலின்னா நீங்க இப்படிச் சோர்ந்து போயிருக்க மாட்டீங்க... வலி நிறைய இருக்கணும். அதனால்தான் இப்படி இருக்கீங்க... வாங்க... டாக்டர்கிட்டே போயிட்டு வரலாம்..."

அவனது பரிவிலும், அன்பிலும் நிஜமாகவே முகம் பளிச்சிடச் சொன்னாள். "நீங்க கேட்டதுலேயே பாதி வலி ஓடிப் போயிடுச்சு... மீதிக்கு மாத்திரை ஏதாச்சும் சாப்பிட்டா சரியாயிடும்... இருங்க தம்பி.. உங்களுக்கு சாப்பிட ஏதாச்சும் கொணடு வரேன்..."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம்மா..." என்ற அவன் கண்கள் ரவிச்சந்திரிகாவைத் தேடின.

அதைப் புரிந்து கொண்ட அந்த அம்மாள் வேண்டுமென்றே கேட்டாள்.

"என்ன தம்பி விஷயம்... இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க...?"

"ஒண்ணுமில்ல ... சும்மா உங்களையெல்லாம் பார்த்திட்டுப் போகலாம்னு..."

"ரொம்ப சந்தோஷம்... ஒரு நிமிஷம் இருங்க சூடா கொஞ்சம் காப்பி கலந்து எடுத்துக்கிட்டு வரேன்..."

"வேணாம்மா... இப்பத்தான் வீட்ல காப்பி குடிச்சிட்டு கிளம்பினேன்..." என்றவன் அதற்கு மேல் தாங்க முடியாதவனாகக் கேட்டுவிட்டான்.

"எங்கம்மா... உங்க மகளைக் காணோம்...?"

"யாரு... ரவிச்சந்த்ரிகாவையா கேட்கறீங்க...?"



"உங்களுக்கு ஒரு மகள் தானேம்மா இருக்காங்க...?"

"ஆமாமாம்..." என்ற அந்தம்மாள் தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"இப்பத்தான் கோவிலுக்குப் போறேன்னு கிளம்பினா..."

"தனியாகவா போயிருக்காங்க ?"

"ஆ... ஆமாம் தம்பி.. நான்தான் எப்பவும் துணைக்குப் போவேன். இன்னிக்குப் போக முடியல... அவளோட அப்பாவுக்குக் கொஞ்சம் உடம்புசரியில்ல..."

"என்னம்மா... டாக்டரை வேணா கூட்டிக்கிட்டு வரட்டுமா...?"

"வேணாம் தம்பி... அதே பழைய நோவுதான். லேசா இன்னிக்குக் கொஞ்சம் மூச்சு அதிகமா வாங்கின மாதிரி இருந்திச்சு. நானே டாக்டருக்குப் போன் பண்ணி வரவழைச்சிட்டேன். இன்ஜெக்ஷன்... போட்டு, மருந்து கொடுத்திட்டுப் போனாரு... இப்ப கொஞ்சம் தேவலை..."

"நான் பார்க்கலாமாம்மா...?"

"தாராளமா... என்ன தம்பி அப்படிக் கேட்கறீங்க... தூங்கிட்டிருக்காருன்னு நினைக்கிறேன்; வாங்க .."

தூங்கிக் கொண்டுதான் இருந்தார் அவர். சக்தி அருகில் போய் தொட்டுப் பார்த்தான். நெற்றியில் கைவைத்துப் பார்த்தான். நல்ல ஆழமான தூக்கம். இதயத்திலிருந்து லேசாய் மாவரைக்கிற இயந்திரம் மாதிரி ஒரு சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது. அது எப்போதும் வருகிற சப்தம்தான் என்றுணர்ந்து சில வினாடிகள் அவரருகே நின்று விட்டுத் திரும்பினான்.

"அம்மா.. எப்போ, என்ன உதவி தேவைன்னாலும் தயங்காமல் வீட்டுக்கு போன் பண்ணுங்க... நான் உடனே ஓடி வந்துடுவேம்மா..."

அந்த வார்த்தைகள் நெஞ்சைத் தொட அந்தம்மாள் தழுதழுத்த குரலில் சொன்னாள்.

'ரொம்ப நன்றி தம்பி... இப்படிச் சொல்லத்தான் எங்களுக்கு யார் இருக்காங்க..?"

"நான் இருக்கேம்மா...எப்பவும் நான் இருப்பேன்..." என்று சொல்லத் துடித்து நுனிநாக்கு வரை வந்துவிட்ட சொற்களை அடக்கிக் கொண்டு மெல்ல நிமிர்ந்து பார்த்தான்.

"அப்ப நான் வரட்டுமா...?" என்று மட்டும் கேட்டான்.

"சரிங்க தம்பீ.."

கதவு வரை போய் அதற்கு மேலும் அடக்கிக் கொள்கிற சக்தியற்று வேறுவழி இன்றிக் கேட்டான்.

"ரவிச்சந்த்ரிகா எந்த கோவிலுக்குப் போயிருக்காங்கம்மா...?"

அந்தம்மாள் சிறிது தயங்கி பின்னர் தயக்கமான தொனியிலேயே சொன்னாள்.

"கபாலீஸ்வரர் கோவிலுக்கு.."

அடுத்த பத்தாவது நிமிடம் அவன் கார் கபாலீஸ்வரர் கோவில் வாசலில் நின்றது. காரினுள் செருப்பை விட்டுப் பூட்டிக் கொண்டு உள்ளே ஓடினான். நுழை வாசலின் எதிரில் இருந்த பிள்ளையாரை வேண்டிக் கொண்டு உள்ளே நுழைந்த போது இவன் தேடி வந்த தெய்வம் எதிரில் நவக்கிரகத்தைச் சுற்றிவிட்டு சந்நிதியிலிருந்து எழுந்து வந்த அம்பாள் மாதிரி வர,

இவன் தன் மனத்துடிப்பை அடக்க இயலாமல் வாய் விட்டுக் கூப்பிட்டான்.

"ரவிச்சந்த்ரிகா..!"



சடாரென்று தலை உயர்த்திப் பார்த்த அவள் கண்கள் நட்சத்திரங்களாக மின்னின. முகம் அமைதி நிறைந்த, குளிர்ச்சியான நிலவொளியைச் சிந்திற்று...

# 28

சக்தியைச் சிறிது கூட எதிர்பார்க்காத ஆச்சரியத்திலும், மகிழ்ச்சியிலும் அவனை நெருங்கினாள் ரவிச்சந்த்ரிகா. எப்போதும் மலர்ந்திருக்கும் அந்த முகம் இன்னமும் விகசித்துப் பிரகாசித்தது. நெற்றியின் விபூதிக் கீற்றும், புருவமத்தியிலிருந்த குங்குமப் பொட்டும் தெய்வீகக் களையை அதிகப்படுத்திற்று. நட்சத்திரங்களின் மினுங்கலையும், சந்திரனின் குளுமையையும் பார்வையில் தேக்கி அவனை ஏறிட்டாள். இதழ்கள் மெல்லப் பிரிந்து வீணையை மீட்டிய குரல் வெளிப்பட்டது.

"கோவிலுக்கு வர்ற வழக்கம் கூட உண்டா உங்களுக்கு...?"

"என் தெய்வம் கோவில்ல இருக்குன்னு தெரிஞ்சதுக்கப்புறம் அங்கதானே வரணும்...?"

சடாரென்று வந்த பதிலில் ஒரு வினாடி அரண்டு போனாள். என்ன பதில் அது! சட்டென்று முதுகுத் தண்டு சொடுக்கிற்று. விருவிருவென்று ஏதோ தலைக்கு ஏறிற்று. உடம்பு சிலிர்த்தது. உள்ளம் சிலிர்த்தது. மழையில் நனைந்த நிலமாகக் குளிர்ந்து போயிற்று அந்தக் குளிர்ச்சியும், சிலிர்ப்பும் குரலுக்கும் வர முதல் முறையாக அவனைப் பெயரிட்டு அழைத்தாள்.

"ச...க்...தி.."

அவளிடமிருந்து தன் பெயர் வெளிப்பட்டதில் புதியதோர் சக்தி பிரவாகித்துப் பாய்வதை உணர்ந்த அவன் மிக மிக மென்மையான பார்வையில் அவளை ஏறிட்டான். அதையும் விட மென்மையாக வருடிக் கொடுக்கிற குரலில் கேட்டான்.

"என்ன சந்த்ரி...?"

அந்தப் பார்வையின் மென்மையிலும், குரலின் குழைவிலும் உருகிக் கரைந்து கொண்டிருந்தவள் பூவைத் தொட்டுப் பார்க்கிறாற் போல் நாவினால் வார்த்தைகளைத் தொட்டாள்.

"என் தெய்வம் கூட இப்ப கோவிலுக்குள்ளதான் இருக்கு... தெரியுங்களா...?"

"தெரியும்" என்றான் அவன், "இப்ப மட்டுமில்ல, கொஞ்ச நாளாகவே அது கோவிலுக்குள்ளதான் குடியிருக்கு..."

"என்ன சொல்றீங்க நீங்க...?"—மெலிதாய் புருவங்கள் உயர, அவளது பார்வையும் உயர்ந்து அவனது முகத்தில் பதிந்தது.

"புரியல...? உன் மனசுன்ற கோவிலுக்குள்ள குடியேறி கொஞ்ச நாளாச்சுன்னு சொல்ல வரேன்..."

உணர்ச்சி வசப்பட்டவளாகத் தன் கை நீட்டி அவன் கையைப் பற்றிக் கொண்டாள். ரோஜாப் பூக்களால் ஆன மாலை ஒன்றைத் தொட்ட மாதிரி மனதும் உடலும் குளிர்ந்து போக நின்றிருந்தான் அவன். வினாடி நேரத்தில் சரேலென்று அவன் கையை உயர்த்தி தன் கண்களில் ஒற்றிக் கொண்டு சொன்னாள்.

"இதுக்கு நான் எத்தனையோ ஜென்மத்துக்குத் தவம் பண்ணியிருக்கணும்..."

"நானும்தான் சந்த்ரி..."



"மனதால் ஒன்றி உருகிக் கரைந்து பார்வையால் தழுவிக் கொண்டு நின்றிருந்த போது முதலில் தன்னுணர்வு பெற்று அவன் கையை விட்டு விலகி நின்றவள் ரவிச்சந்த்ரிகாதான். இருக்குமிடம், சூழ்நிலை, சுற்றியிருக்கும் மனிதர்கள் அனைத்தையும் மறந்து போன அவன் கேட்டான்.

'என்ன சந்திரி..."

"போற, வர்றவங்கள்ளாம் நம்மையே பார்க்கறாங்க..."—சொன்ன போது அவள் செண்பகப்பூ முகம் செம்பருத்தியாக மாறியிருந்தது.

அந்த அழகை ரசித்துக் கொண்டே சொன்னான் சக்தி.

"எதுக்கு பார்க்கறாங்க தெரியுமா..."

"சொல்லுங்க...?"

"என்னடா இது... கொஞ்சம் முன்னால சந்நிதியில பார்த்த அம்பாள் எப்படி, எப்போ வெளிய வந்ததுன்ற அதிசயத்துல பார்க்கறாங்க..."

செம்பருத்தி முகம் செவ்வானமாக ஜொலிக்க அதனை ஏறிட்டுப் புன்னகை பூத்த போது வலது கன்னத்தில் மிக அழகாகக் குழி விழுந்தது.

"ம்ஹூம். அதுக்குப் பார்க்கலீங்க..."

"பின்ன எதுக்காம்...?"

"உன் பிரகாரத்தில் ஈஸ்வரனையும், அம்பாளையும் தனித்தனியாக இல்ல பார்த்து தரிசனம் பண்ணிக்கிட்டு வந்தோம். இதோ இங்க ரெண்டு பேரும் ஒண்ணா வெளிய வந்து நின்னு பேசிக்கிட்டிருக்காங்களேன்ற ஆச்சரியத்துல பார்க்கறாங்க..."

அந்தப் பதிலின் சாதுர்யத்தையும், புத்திசாலித்தனத்தையும், கூர்மையையும் வியந்து, தாங்க முடியாதவனாக மீண்டும் அவள் கையைப் பற்றின போது, "விடுங்க..." என்று விலக்கிக் கொண்டாள்.

"ஏன் ரவி...?"

"இத்தனை பேருக்கு எதிர்ல இப்படியா கை பிடிப்பாங்க...?"

"இதுக்கே இப்படி வெட்கப்பட்டியானால் எப்படி...? நாளைக்கு ஆயிரக்கணக்கானவங்களுக்கு மத்தியில் உன் கையைப் பிடிக்கப் போறேனில்ல...?"

சட்டென்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"என்ன சொல்றீங்க நீங்க...?"

"புரியல...?"

"ம்ஹூம் புரியல..."

"இவ்வளவு புத்திசாலியான உனக்கு இது புரியாமப் போகுமா...?"

"நிஜமாப் புரியலீங்க..."

"சரி. புரியும்படி சொல்றேன். கேட்டுக்க. யாரோ ரவிச்சந்த்ரிகான்னு ஒரு அழகான பொண்ணு இருக்குதாமே... அதுக்கும்... இன்ஜினீரிங் காலேஜ்ல கடைசி வருஷம் படிச்சிட்டிருக்கிற சக்திவேல்ன்ற பையனுக்கும் கல்யாணம் நடக்கப் போவுதாம்..."

காமிராவின் பிளாஷ் மாதிரி பளீரென்று ஒரு ஒளி ஏற்பட்டது அவள் முகத்தில், கண்கள் அகன்றன. வினாடி நேரம் பேச்சு எழாமல் அப்படியே நின்றாள்.

"என்ன சந்த்ரி அப்படிப் பார்க்கற...?"

"நிஜமாவா சொல்றீங்க?"



"பொய் சொல்வனா சந்த்ரி...? அதுவும் இந்த விஷயத்திலா...? அதுவும் உன்கிட்டயா?"

"பொய்னு சொல்லலீங்க... நீங்களா தீர்மானிச்ச விஷயத்தைச் சொல்றீங்களா? இல்ல, வேற யாராச்சும் தீர்மானிச்சாங்களா?"

"வேற யார் இதைப் பத்தி தீர்மானிக்க முடியும்? உங்கப்பா அம்மாவையும், எங்கப்பா அம்மாவையும் தவிர...?"

"இந்த ரெண்டு பேர் அம்மா அப்பாவுல யார் அம்மா அப்பா தீர்மானிச்சது...?"

"நீயே சொல்லு பார்க்கலாம்..."

"ம்...?" என ஒரு வினாடி யோசித்துப் பின்னர் நிதானமாகச் சொன்னாள்.

"எங்கப்பா இதையெல்லாம் யோசிக்கிற நிலையில இல்ல... எங்கம்மாவுக்கு இதைப் பத்தி ஒண்ணும் தெரியாது. அதனால அவங்க இல்ல..."

"ஏன் சந்த்ரி... உங்கம்மாவுக்குத் தெரியாதா...?"

"ம்ஹூம் தெரியாதுங்க..."

"நீ சொல்லலையா...?"

"நானாகப் போய் எப்படிச் சொல்ல முடியும்...?"

"நான் சொல்லிட்டேன்..."

"யார் கிட்ட...?"

"எங்கம்மா கிட்ட..."

"கடவுளே!" என்று ஒரு வினாடி பயந்து போய் அவனைப் பார்த்தாள்.

"என்ன சொன்னாங்க...?"

"என்ன சொல்வாங்க.. உன்னை மாதிரி ஒரு பொண்ணு மருமகளா வரக் கொடுத்து வச்சிருக்கணும்னாங்க..."

"நிஜமாகவா...!? நிஜமாவா சொல்றீங்க?" என்று தாங்க முடியாதவளாகக் கேட்டாள்.

"வேணும்னால் எங்கம்மாகிட்டயே போய்க் கேளு..."

"என்...னங்க..."

"பின்ன...? அதுமட்டுமல்ல சந்திரி... அவுங்க சந்தோஷப்பட்டது மட்டுமில்ல... அப்பாகிட்டேயும் பேசியிருக்காங்க..."

"எ...ன்ன ..?!" — நிஜமாகவே அதிர்ந்து போனாள். இத்தனை சீக்கிரமாகக் காரியங்கள் நடைபெறும் என எதிர் பார்க்கவில்லை. அதைவிட ராஜரத்தினத்தின் பதில் என்னவாக இருந்தது என்பதைக் கேட்க மனசு துடித்தது மாறுபட்டு இருந்து விட்டால் என்ன செய்வது என்று தயங்கிற்று. கூடவே மாறுபட்ட பதிலாக இருந்திருக்குமனால் சக்தி இவ்வளவு சந்தோஷமாக இருக்க மாட்டான், தன்னைத் தேடி வந்திருக்க மாட்டான் என்று தோன்ற மெல்ல தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். உதடுகள் நடுங்கக் கேட்டாள்...

"அப்...அப்பா... என்ன சொன்னாரு...?"

"வேற என்ன சொல்லியிருந்தா நான் இத்தனை சந்தோஷமா உன்னைத் தேடிக்கிட்டு ஓடிவந்திருப்பேன்... பெரிசா பச்சைக் கொடி காட்டினதாலதான் கிளம்பி வந்தேன்..."

"நிஜமாகவா... சக்தி... நிஜமாகவா சொல்றீங்க..?"

"சத்தியமாச் சொல்றேன். போறுமா...?" என்று செல்லமாக, மெதுவாக அவள் தலைமீது அடித்தான்.



அபரிமிதமான அந்த சந்தோஷத்தைத் தாங்க இயலாமல் சில வினாடிகள் கண்மூடி மௌனமாக நின்றாள். சற்று முன் தரிசித்த கற்பகாம்பாள் மனசுக்குள் வந்து போனாள். 'என்னம்மா... என்னம்மா...' என்று நெஞ்சு உருகிற்று. சிவன் எதிரில், துர்க்கை சந்நிதியில், முருகன் எதிரில், என ஓடி கடைசியில் எதிரில் இருந்த பிள்ளையாரைப் பார்த்து கன்னங்களில் போட்டுக் கொண்டது. கண்ணோரங்களில் நீர் துளிர்த்து கன்னங்களில் வழிந்தபோது சக்தி பதறிப் போய்க் கேட்டான்.

"என்ன சந்த்ரிகா...?"

"ஒண்ணுமில்லீங்க. ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு.. இத்தனை சந்தோஷமான்னு பிரமிப்பா இருக்கு.. மனசு தாங்க முடியாம கண்ணுல தண்ணி வடியுது. ரெண்டு பேரும் கோவிலுக்குள்ள இருக்கோம். நீங்க கோவிலுக்குள்ள ஓடி வந்து விஷயத்தைச் சொல்றீங்க... எத்தனை நல்ல சகுனம் பார்த்தீங்களா? தெய்வத்துக்கு நம்ப மேல எவ்வளவு கருணை பாருங்க... வாங்க.. ரெண்டு பேரும் ஒண்ணா உள்ள போய் அந்த நிஜ அம்மா அப்பாவைப் பார்த்து, தரிசனம் பண்ணி, நம்ம ரெண்டு பேர் பேர்லயும் அர்ச்சனை பண்ணிக்கிட்டு வரலாம்.."

இருவரும் ஒன்றாக உள்ளே போனார்கள். சக்திவேல் ரவிச்சந்த்ரிகா என ஒரு நாமமாக அர்ச்சனை செய்யச் சொன்னார்கள். 'என்றைக்கும் எங்களை இப்படியே ஒன்றாக வை' என வேண்டிக் கொண்டார்கள். குங்குமம், விபூதி இட்டுக் கொண்டு, பிரகாரத்தை வலம் வந்து அத்தனை பேர் கண்களும் அந்த ஜோடிப் பொருத்தத்தால் கவரப்பட்டு திரும்பித் திரும்பிப் பார்க்க, அவர்கள் காருக்குத் திரும்பினார்கள்.

கார்க் கதவைத் திறந்து அவள் உள்ளே உட்கார்ந்ததும், காரைக் கிளப்பி, அதற்கு மேல்

தனக்குள் வைத்துக் கொள்ள இயலாதவனாகச் சொன்னான் சக்தி.

"வர்ற வெள்ளிக்கிழமை சாயந்திரம் எங்கம்மாவும், அப்பாவும் உங்க வீட்டுக்குப் பொண்ணு கேட்க வரப் போறாங்க. 'இதைச் சொல்லாத. திடீர்னு போய் அவங்களை ஆச்சரியப் படுத்தணும்னாங்க அம்மா... ஆனால் உனக்கும் எனக்கும் இடையில எந்த ரகசியமும் இருக்கக் கூடாது. நீ வேற நான் வேறன்றது இல்லைன்ற காரணத்தால் சொல்லிட்டேன். இதை நீ உங்கம்மா கிட்ட சொல்ல வேணாம். எங்கம்மாவும், அப்பாவும் வந்து சொல்லி அவங்களை ஆச்சரியப்படுத்தட்டும். என்ன சந்த்ரி...?"

"சரிங்க... நீங்க என்ன சொன்னாலும் சரி..." என்ற போது அவள் மனம் சொல்லுக்கடங்காத பரவச நிலையில் நிறைந்து கிடந்தது...

## 29

வெள்ளிக் கிழமை. என்றைக்குமில்லாமல் அன்று அதிகாலையிலேயே எழுந்து கொண்டார் ராஜரத்தினம். தான் எழுந்ததுடன் மட்டுமின்றி வீட்டிலுள்ள அத்தனை பேரையும் எழுப்பி விட்டார். தொலைபேசியில் தன் உதவியாளர்களைக் கூப்பிட்டு உடனடியாக வீட்டிற்கு வரச் செய்தார்.

தங்களுடைய அத்தனை நாள் அனுபவத்தில் ராஜரத்தினத்திடமிருந்து அதுபோன்ற அவசர அழைப்பு வந்ததில்லை ஆகையால் அவர்கள் பதறிப் போனார்கள்.' எதுவாயினும் யோசித்து, நிதானமாகவும் ஆணித்தரமாகவும் செய்யக் கூடியவர் அன்று அதிகாலையில் உடனே வரச் சொன்னதன் காரணம் புரியாமல் தவித்



தார்கள். வீட்டிற்கு வருகிறவரை அந்தத் தவிப்பு இருந்தது. வந்த பின் ராஜரத்தினம் சொன்ன செய்தியைக் கேட்டு எல்லையற்ற மகிழ்ச்சியும், உற்சாகமும் அடைந்தார்கள்.

"என்னய்யா பார்க்கறீங்க...? எதுக்கு இப்படி வரவழைச்சேன்னு யோசிக்கறீங்க இல்லையா...? நம்ம சக்திக்கு இன்னிக்கு சாயந்திரம் பொண்ணு கேட்கப் போகலாம்னு இருக்கேன். அதுக்குத் தேவையான ஏற்பாடெல்லாம் செய்யணும்னுதான் உங்களை வரவழைச்சேன்..."

மலர்ந்த அவர்களின் முகங்களைப் பார்த்து இவர் முகம் இன்னமும் மலர்ச்சியுற்றது. திடீரென்று வந்த அந்தச் செய்தியின் சந்தோஷத்தில் ஒரு வினாடி என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து நின்றவர்களை அதட்டத் தொடங்கினார்.

"என்னய்யா... அப்படியே நின்னுட்டீங்க..? இப்படி நின்னுக்கிட்டிருந்தா வேலை எப்படி ஆகும்... மட மடன்னு காரியத்தைக் கவனிங்க..."

அதன் பின்னர் வீடு அமர்க்களப்பட்டது. தங்களின் சின்ன எஜமானருக்குப் பெண் கேட்கப் போகப் போகிற செய்தி பரவிற்று. பெண் யார் என்பதைத் தெரிந்து கொள்கிற ஆர்வத்தில் தவித்தது ஆனால் வாய் திறந்து கேட்கிற தைரியமற்ற காரணத்தினால் பரபரவென்று இடப்பட்ட வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களை ஓட ஓட விரட்டிக் கொண்டிருந்தார் ராஜரத்தினம்.

"என்னய்யா கணேசன்... காபூல் திராட்சை வாங்கிட்டு வரச் சொன்னா என்ன திராட்சை வாங்கிட்டு வந்திருக்க...?

"நல்ல திராட்சைங்கய்யா... விதை இல்லா –"

"வேணாம்... இதை நீங்க எடுத்துக்கிடுங்க.. பாய் கிட்ட நான் கேட்டேன்னு ஒரு கிரேட் காபூல் திராட்சை ஒரு கிரேட் காஷ்மீர் ஆப்பிள், ஒரு கூடை மல்கோவா, ஒரு கூடை மலை வாழை. நூறு சாத்துக்குடி. எல்லாம் வாங்கிக்க. கூட கல்கண்டு, உலர்ந்த திராட்சை, அக்ருட், பாதாம் பருப்பெல்லாம் வாங்கிக்க... என்ன ..?"

"சரி சார்..."

"சரின்னு சொல்லி கொஞ்சமா வாங்கிட்டு வந்து நிக்காத... நாம வைக்கிறதெல்லாம் பொண்ணு வீட்டுக் கூடம் நிறைஞ்சு போகணும் கல்கண்டு, திராட்சை, பாதாமெல்லாம் ஒரு வருஷத்துக்கு வரணும்... என்ன ..?"

"சரிங்க..."

"அப்ப நீ கிளம்பு... கதிரேசன் எங்க ..?"

"எஸ் சார்...?"

"இதப்பாரு கதிரேசா... நல்லி குப்புசாமி செட்டியாருக்குப் போன் பண்ணி, நம்ம பிள்ளைக்குப் பொண்ணு கேட்கப் போற விஷயத்தைச் சொல்லி நல்லதா புடவை அனுப்பச் சொல்லு. தகதகன்னு சரிகைல இழைச்சிருக்கணும். அவருக்குத் தெரியும் நம்ம வீட்டுக்கு எப்பிடி அனுப்பணும்னு. அனுப்பிடுவாரு... செட்டியாருக்கு போன் போடு... நானே பேசறேன்..."

கதிரேசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இது போன்ற விஷயங்களையெல்லாம் காதில் கூட போட்டுக் கொள்ளாதவர் இன்று தானாகக் கூப்பிட்டுச் சொல்கிறார் என்பது நம்ப முடியாததாக இருந்தது. அதிலிருந்து இந்தக் கல்யாணத்தில் அவர் காட்டும் ஆர்வமும், பெண் கேட்கப் போகுமிடத்தின் மீது வைத்திருக்கும் மரியாதையும் புரிய பரபரவென்று ஓடினான். மிகப் பணிவாய் நல்லி குப்புசாமி செட்டியாரின் தொலைபேசி எண்களைப் பார்த்து தொலைபேசியைச் சுழற்றினான்.



குப்புசாமிச் செட்டியாருடன் பேசி, நலம் விசாரித்து விஷயம் தெரிவித்து மகிழ்ச்சியை வாங்கிக் கொண்டு,

"ரொம்ப சந்தோஷம்... நல்லபடியா எல்லாம் நிச்சயமாகட்டுங்க... தெரியும்... தெரியும்... அனுப்பி வச்சிடறேன்... தங்கரேக்கு மாதிரி... இன்னும் புடவைகள்ல வைரம் பதிக்க ஆரம்பிக்கல... ஆரம்பிச்சிருந்தால் ப்ளூ ஜாக்கர் பதிச்ச புடவையா அனுப்பி வச்சிருப்பேன்..." என்று மறுமுனையில் செட்டியார் சிரித்தார்.

ராஜரத்தினமும் சிரித்து நன்றி தெரிவித்துத் தொலைபேசியை வைத்தபின் உம்மிடி நந்தகோபாலிடம் பேசினார். அவரிடம் உடனடியாக ராஜரத்தினம் கேட்ட அத்தனை பெரிய தொகைக்கு வைர நெக்லெஸ் இல்லை என்றதும் பாபாலால் அதிபரிடம் பேசி இரண்டு நெக்லெஸ்கள் வீட்டிற்கு அனுப்பி விடச் சொன்னார்.

பின்னர் மகனைக் கூப்பிட்டு அருகில் உட்கார வைத்துக் கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"ஸோ... நீ இன்னும் குழந்தையில்லைன்னு நிரூபிச்சிட்ட... உன்னைக் கார்ல கூட்டிக்கிட்டிப் போய் இந்த மாதிரி நிறைய பழம், பூ, வெற்றிலை பாக்கு வச்சு ஸ்கூல்ல இப்பத்தான் சேர்த்த மாதிரி இருக்குது. அதுக்குள்ள இதோ பொண்ணு கேட்க கிளம்பிட்டோம்... ஆமாம்.. உங்கம்மா ஏதோ சொன்னாளே... இந்தப் பொண்ணு இல்லைன்னால் வாழ்நாள் முழுசும் கல்யாணமில்லைன்னு நீ சொன்னதா... அது நிஜமா...?"

"என்னங்க இது...? பொண்ணு கேட்கக் கிளம்பற நேரத்துல இதெல்லாம் என்ன பேச்சுங்க..?" என்று இடையில் புகுந்தாள் ராஜேஸ்வரியம்மாள்.

"ஆமாம்ப்பா ..." என கலங்கின முகத்தோடு நிமிர்ந்து அவரைப் பார்த்தான் சக்தி.

"இந்தப் பொண்ணு இல்லைன்னால்னு சொல்லவே சொல்லாதிங்கப்பா... நினைக்கக்கூட நினைக்காதிங்க... அந்த மாதிரி ஒன்றை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியல..."

அரண்டுபோனார் ராஜரத்தினம். மகனின் தீவிரமும், உணர்ச்சிகளும் புரிய ஒரு வினாடி உருகிப் போனார். தான் அது போன்று சொல்லியிருக்கக் கூடாது என்று தோன்றிற்று. எந்த நிலையிலும் வார்த்தைகளைத் தவற விடாதவர், இடறவிடாதவர். தன் வாயிலிருந்து எப்படி அது போன்ற ஒரு சொல் வெளிப்பட்டது என்பது புரியாத குற்ற உணர்வுடன் மகனை ஏறிட்டுப் பார்த்தார்.

"ஐயம் ஸாரி சக்தி... உன் மனசைப் புண்படுத்தியிருந்தா என்னை மன்னிச்சிடு. சொல்லணும்னு சொல்லல...ஏதோ தெரியாத்தனமா நழுவிவந்திடுச்சு..."

"ஐயோ... என்னப்பா நீங்க...?" என்றவன் பதறி எழுந்து நின்றான். 'அப்பாதானா அவர்!' என்கிற மலைப்பு எட்டிப் பார்த்தது. பழைய அப்பாவா...? இந்த மாதிரி மன்னிப்பு கேட்பாரா...? எதிரில் நின்று பேச முடியுமா...? அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்த முடியுமா? வேண்டாம் என்று சொல்ல முடியுமா...? வேண்டும் எனவாவது தலையாட்ட முடியுமா...? இரை தேடும் சிங்கத்தின் எதிரில் நிற்கிற மாதிரியல்லவா நடுங்கிக் கொண்டிருப்பார்கள். அவையெல்லாம் போய் மிகப் பிரியமாய், சகஜமானவராக, அன்பானவராக, சாதாரண ஒரு வார்த்தை இடறலுக்கு மன்னிப்பு கேட்பவராக...

அம்மா சொன்னது நிஜம்.

பழைய அப்பா இல்லை இவர்.

புதிய அப்பா...



அகங்காரம், திமிர், கர்வம் எல்லாவற்றையும் சட்டையைக் கழற்றுகிற மாதிரி கழற்றிப் போட்டுவிட்டு அன்பான பார்வையாகப் பார்க்கக் கற்றுக் கொண்டிருப்பவர், நிதானமாக, மென்மையாகப் பேசத் தெரிந்து கொண்டிருப்பவர்.

ஓ!... எத்தனை பெரிய மாற்றம்! எவ்வளவு சீக்கிரம் நிகழ்ந்து விட்டது! இது போன்ற சில பிடிபடல்களையும், புரிந்து கொள்வதையும்தான் ஞானம் என்கிறார்களோ...? அது கிடைக்கின்ற இடமெல்லாம் போதிமரம் தானோ...?

அவன் யோசித்துக் கொண்டிருந்த போதே ராஜரத்தினமும் எழுந்து நின்று அவன் தோள்மீது கை வைத்து மென்மையான குரலில் கேட்டார்.

"என்ன யோசனை சக்தி....?"

அவரது ஸ்பரிசம் பட்டு திடுக்கிட்ட மாதிரி திரும்பினான் அவன்.

"ஓ... ஒண்ணுமில்ல டாடி..."

"அதைவிடு சக்தி... இன்னிக்கு சாயந்திரம் காலேஜ்லேயிருந்து நீ சீக்கிரம் வந்துடு... என்ன...?"

"சரிப்பா..."

"எதுக்குன்னு கேட்கலியே...?"

"சொல்லுங்கப்பா..."

"நீயும் எங்க கூட வர்ற..."

அதைக் கேட்டு ராஜேஸ்வரியம்மாள் இடையில் குறுக்கிட்டாள்.

"என்னங்க...?"

"என்ன...?"

"பொண்ணு கேட்கப் போறப்ப பையனைக் கூட கூட்டிக்கிட்டுப் போற பழக்கம் நம்பள்ல இல்லீங்க..."

"இல்லாட்டி போனால் நாம் ஆரம்பிச்சு வைக்கறது..."

"———"

"என்ன ராஜம் பேசாமல் இருக்க...? பழக்கம்ன்றது என்ன...? இந்த மாதிரி யாரோ ஒருத்தர் ஆரம்பிச்சதை மற்றவங்க பின் தொடர்றதுதான...?"

"ஆ... ஆமாங்க... ஆனாலும்..."

"ஆனாலும்னெல்லாம் இழுத்துக்கிட்டிருக்காத... சக்தி இன்னிக்கி நம்ம கூட வரான். என்ன சக்தி, உனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லையே...?"

'ஆட்சேபணையா... இதற்கா...?' என நினைத்துக் கொண்ட சக்தி, தன் மலர்ச்சி அத்தனையும் முகத்தில் காட்டி சொன்னான்.

"இல்லப்பா..."

"அப்போ சரியா நாலு மணிக்கெல்லாம் காலேஜ் லேருந்து வந்திடு. அஞ்சு மணிக்குக் கிளம்பலாம். என்ன...?"

"சரிப்பா..." என்ற சக்தி எல்லையற்ற தன் சந்தோஷத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவனாகத் துள்ளிக் குதித்துக் கொண்டே வெளியில் போனான். அதைப் பார்த்தவாறு நின்றிருந்த பெற்ற நெஞ்சங்கள் இரண்டும் நிறைந்து பூரித்துக் கொண்டிருந்தன...



# 30

வெள்ளிக்கிழமை. அதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தாள் ரவிச்சந்த்ரிகா ஒவ்வொரு நாளாக எண்ணிக் கொண்டிருந்தாள். சக்தியைக் கோவிலில் சந்தித்து வெள்ளிக்கிழமை அவனது பெற்றோர்கள் பெண் கேட்க வரப்போகிற விஷயத்தைத் தெரிந்து கொண்டதிலிருந்து எப்போது வரும் அந்த வெள்ளிக் கிழமை என்று ஏங்கிக் கொண்டிருந்தாள். 'அம்மாவிடம் சொல்லாத ரவிச்சந்த்ரிகா. அவங்களுக்கு அது ஆச்சரியமான விஷயமாக இருக்கட்டும்' என்று அவன் கேட்டுக் கொண்டதினால் அம்மாவிற்குத் தெரியாமல் உள்ளுக்குள் மிக ரகசியமாகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

'இன்றைக்கென்ன... செவ்வாய்க் கிழமையா... நாளைக்கு புதன்; அடுத்து வியாழன், அதற்கும் அடுத்த நாள்தானே வெள்ளி... அதற்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கிறதே...' என பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

கடைசியாக வியாழக்கிழமை வந்ததும் அவளது மனத்துடிப்பு அதிகமாயிற்று. இதயம் வேகமாக இயங்கத் தொடங்கிற்று. இன்றைய பொழுது சீக்கிரம் கழியாதா என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க ஆரம்பித்தாள். வேண்டுமென்றே ஆண்டவன் நேரத்தை மிக மெதுவாக இயக்குகிறானோ எனப் பட்டது.

இல்லாவிட்டால் கடிகாரத்தின் முட்கள் ஏன் இவ்வளவு மெல்ல நகருகின்றன...? ஒருவேளை கூடத்துக் கடிகாரம் மெதுவாகப் போகிறதோ...? பழைய பாட்டரியானதால் வேகம் குறைந்து விட்டதோ...?

எழுந்து உள்ளே ஓடிப்போய் படுக்கையறை கடிகாரத்தைப் பார்த்தாள். அதுவும் அதே நேரம் காட்ட,

தவறு கடிகாரத்தின் மீது இல்லை எனத் திரும்பி வந்தாள். கூடத்து சோபாவில் உட்கார்ந்து சக்தியை முதல் முதலாக சந்தித்ததிலிருந்து இன்றுவரை நிகழ்ந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் ஒவ்வொன்றாக கோர்த்துப் பார்த்தாள். அதிலும் நளினியின் மாப்பிள்ளை அழைப்பன்று நடனமாடிவிட்டு ராஜரத்தினம் உச்சி குளிரப் புகழ்ந்தபின் உடை மாற்றுவதற்காக அறைக்குள் நுழைந்து தாளிட்டுக் கொண்டபோது, சக்தி கதவைத் தட்டி உள்ளே வந்த நிகழ்ச்சியில் மனம் லயித்தது பேசினது, பார்த்தது, அணைத்துக் கொண்டது, ஈருடல் ஒருயிராக இணைந்து போனது என அதிலேயே ஒட்டிக் கொண்டது அக்காட்சியின் ஈர்ப்பில் உதட்டோரம் ஓடிய புன்னகையை அடக்கிக் கொள்ள இயலாதவளாக அப்படியே உட்கார்ந்திருந்த போது எதேச்சையாக கூடத்திற்கு வந்த புவனேஸ்வரியம்மாள் மகளின் நிலை கண்டு ஒன்றும் புரியாதவளாக மெதுவாகக் கேட்டாள்

"என்ன சந்திரி.... நீயா . சிரிச்சுக்கிட்டிருக்க...? என்ன விஷயம்...?"

திடுக்கிட்ட மாதிரி அக்காட்சி மனக் கண்களிலிருந்து அகல சடாரென்று திரும்பிப்பார்த்தவள், அம்மா நிற்பதைக் கண்டு தன்னை சமாளித்துக் கொண்டாள்.

"ஒண்ணுமில்லம்மா... ஆனந்த விகடன்ல ஒரு ஜோக் படிச்சேன், அதை நினைச்சு சிரிச்சுக்கிட்டிருக்கேன்..."

"என்ன ஜோக்குன்னு சொல்லேன்... நானும் சிரிக்கறேன்..."

"அது ஒண்ணுமில்லம்மா... வந்து—" என்றிழுத்த போது அப்பாவின் குரல் கூப்பிட்டது. மெல்ல எழுந்து படுக்கையில் உட்கார்ந்தவர் "சந்த்ரீ..." என்று குரல் கொடுத்தார்.

அது சாக்காகக் கிடைக்க, "அப்பா கூப்பிடறாரும்மா... இதோ வரேன்..." என்று எழுந்து ஓடினாள்.



'நல்ல வேளையாக... தப்பித்தோம்...' என்று நினைத்துக் கொண்டாள். அப்பாவின் அருகில் கட்டிலில் உட்கார்ந்து மெல்ல அவர் உடலை வருடிக் கொடுத்தாள்.

"என்னப்பா வேணும்...?" என்று இதமான குரலில் கேட்டாள்.

"ஒண்ணுமில்லம்மா... சும்மா படுத்திட்டிருக்கப் பிடிக்கல... ஏதாவது புஸ்தகம் படிக்கறியா...? கேட்கறேன்..."

"என்ன வேணும்னு சொல்லுங்க. படிக்கிறேன்."

"ராமாயணம் படியேன்..."

"சரிப்பா..." என ராமாயண புத்தகத்தை எடுத்து சட்டென்று ஒரு பக்கத்தைப் புரட்டிப் பார்த்தாள்.

சுந்தர காண்டத்தில் அனுமன் சீதையைக் காணும் கட்டத்தில் இருக்க உடல் ஒருமுறை சிலிர்த்தது. கண்களை மூடி நெஞ்சு உருகிக் கரைய ஒரு வினாடி அப்படியே இருந்தாள். "என்னப்பா... ராமா..." என்று வாய் முணகிற்று.

அவளிருந்த நிலையைக் கண்ட அவளது அப்பா, "என்னம்மா...?" என்றார்.

"ஒண்ணுமில்லப்பா... படிக்கிறேன், கேளுங்க..." என படிக்க ஆரம்பித்தாள்.

ராமாயணம் படித்து, அப்பாவை சாப்பிட வைத்து, மருந்து கொடுத்து தூங்க வைத்தபின் அவளும் அம்மாவும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். சாப்பிடும் போது தன் நினைவின்றி ஏதோ யோசனையில் இருந்தவளைப் பார்த்து அம்மா கேட்டாள்.

"என்ன சந்த்ரி... காலையிலேருந்து என்னவோ போல் இருக்க...? என்ன விஷயம்...? உடம்பு ஏதாச்சும் சரியில்லையா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா... நல்லாத்தான் இருக்கேன்..."

'நல்லா இருக்கேன்ற... ஆனா வழக்கமான பேச்சு, சிரிப்பு எதையும் காணமே...?"

"காணாமல் எங்க போயிடுச்சு..." என்று சிரித்தாள் அவள். ஆனால் அதில் புவனேஸ்வரியம்மாள் திருப்தி அடையாதது தெரிந்தது. ஏதோ யோசிப்பது புரிந்தது. அதற்கு மேலும் அம்மாவை யோசிக்க வைக்கக் கூடாது என்று நினைத்த அவள் சட்டென்று பேச ஆரம்பித்தாள். பேச்சு தொட்டுத் தொட்டு எங்கெங்கோ போய் கடைசியில் சக்தியிடம் வந்தது. அதற்கு மேல் சக்தியைப் பற்றி எது பேசினாலும் வாய் உளறிவிடும். நாளை அவர்கள் பெண் கேட்க வரப் போகிற செய்தியைச் சொல்லி விடும் என்பதனால் சட்டென்று தன்னை இறுக்கிக் கொண்டாள்.

'தூக்கம் வருதும்மா... நான் போய் தூங்கறேன்..." என்று எழுந்து கொண்டாள்.

படுத்துப் புரண்டாளே தவிர தூக்கம் வரவில்லை. அலை அலையாக எண்ணங்கள் வந்தன. மனது எதிலோ மிதந்தது. விழித்தவாறே கனவு கண்டது. வாய் 'வாரணமாயிரம் சூழவலம் வந்து நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர் பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும், தோரணம் நாட்டக் கனாக் கண்டேன்...' என மெல்ல முணுமுணுத்தது. உடனே எழுந்து கால்களில் சலங்கை கட்டிக் கொண்டு அதற்கு அபிநயம் பிடிக்க வேண்டும் போலிருந்தது.

ஆனால் தன்னை அடக்கிக் கொண்டாள். அபிநயத்திற்காகத் துறுதுறுக்கக் கைகளை அடக்குக் கொண்டாள். கைகளை அடக்குவது சுலபமாக இருந்த அளவில் மனதை அடக்குவது சுலபமாக இல்லை. அலைபாய்வதைக் கட்டிப் போட முடியவில்லை.



11842 2888966

அடுக்கடுக்காக எழு[illegible] மூடாத இமைகளுமாக கடிகாரத்தில் [illegible]டு, ஒன்று, இரண்டு, மூன்று என நான்கு அடிக்கிறவரை எண்ணினாள். ஐந்தடித்ததும் சடாரென்று பந்து மாதிரி துள்ளி எழுந்து கொண்டாள்.

'இன்றைக்கு வெள்ளிக்கிழமை' என்று வாய் விட்டுச் சொன்ன போது மனதிற்குள் எல்லையற்ற சந்தோஷம் வந்தது. முகம் பூரண சந்திரனாகப் பிரகாசித்தது. மீண்டும் 'அன்று மாலை எப்போது வரும்...?' என ஏங்கத் தொடங்கிற்று.

காலை விடிந்து பொழுதாகி, மாலை நேரத்தை நெருங்கின போது வீட்டு வாசலில் வரிசையாகக் கார்கள் வந்து நின்றன. நீள நீளமான படகு போன்ற கார்கள் தெருவை அடைத்துக் கொண்டன. கதவைத் திறந்த புவனேஸ்வரி அம்மாளை விலகச் சொன்ன வெள்ளை உடை ஊழியர்கள் காரிலிருந்து பெரிய பெரிய வெள்ளித் தட்டுக்களில் பழங்களும், பாதாம், முந்திரி பருப்புகளும், கொண்டு வந்து கூடத்தை நிறைத்தனர்,

"என்ன சந்த்ரி இதெல்லாம்? யாரு இவங்க... எதுக்காக இதையெல்லாம் கொண்டு வந்து நம்ம வீட்டுக் கூடத்துல வைக்கறாங்க...?" என்று புவனேஸ்வரியம்மாள் ஒன்றும் புரியாத மலைப்போடு மகளைப் பார்த்தாள். அதைக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த ராஜரத்தினமும், ராஜேஸ்வரியும் சிரித்துக் கொண்டே சொன்னார்கள்.

"நாங்கதாம்மா வந்திருக்கோம். எங்க மகன் சக்திவேலுக்கு உங்க மகள் ரவிச்சந்த்ரிகாவைப் பொண்ணு கேட்டு வந்திருக்கோம்..."

ராஜரத்தினம் சந்தோஷமாகவும், பெருமையாகவும், முகமலர்ச்சியோடும் சொன்னதைக் கேட்டு புவனேஸ்வரியம்மாளின் முகம் சடாரென்று இருண்டது. உதட்டின் புன்னகை மறைந்தது.

"ரவிச்சந்த்ரிகாவை...? உங்க மகன் சக்திக்கா...? அது எப்படி முடியும்...? நடக்க முடியாத எதையோ எதிர் பார்த்துக்கிட்டு நீங்க இப்படி வந்து நிக்கறீங்க...?"— என்ற அந்த அம்மாளின் குரல் இறுகி, முகம் எல்லையற்ற சோகத்தையும் விரக்தியையும் தொட்டது. கண்களில் மெல்ல கண்ணீர் எட்டிப் பார்க்கத் தொடங்கிற்று.

அந்த மறுப்பை சிறிது கூட எதிர் பார்க்காத ராஜரத்தினமும், ராஜேஸ்வரியம்மாளும், மட்டுமின்றி ரவிச்சந்த்ரிகாவும் அதிர்ந்து போய் பேச்சின்றி நின்றாள்...

## 31

கூடம் அமைதியாக இருந்தது. சற்று முன்பு ஏற்பட்ட ஆர்ப்பாட்டம் பரபரப்பு எல்லாம் சட்டென்று அடங்கிப் போய் விட்டது. பொங்கி வழிந்த பால் அடுப்பையே அணைக்கிற மாதிரி எல்லாருடைய சந்தோஷத்தையும் அணைத்துப் போட்டுவிட்டது அந்த அதிர்ச்சியைத் தாங்க இயலாதவர்களாக ராஜரத்தினமும், ராஜேஸ்வரியும், ரவிச்சந்த்ரிகாவும் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள். புவனேஸ்வரியம்மாளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூடைத் தணலை வாரி முகத்தில் வீசின மாதிரி அந்த அம்மாள் பேசின பேச்சுக் களைத் தாங்க முடியாதவர்களானார்கள். அந்த வார்த்தைத் தணல்கள் நெஞ்சில் விழுந்து நெருப்பாகத் தகித்ததில் சுருண்டு போனார்கள். அந்தச் சுருளலில் நீண்ட நேரம் பேச்சு எழாமல் போயிற்று. தாங்கள் கேட்டது நிஜமா அல்லது பிரமையா என்கிற சந்தேகம் வந்தது.

அதிலும் ராஜரத்தினத்திற்கே அச் சந்தேகம் அதிகம் ஏற்பட்டது. தான் பெண் கேட்டு வந்து வேண்டாம்



எனச் சொல்லக் கூடியவர்கள் இருப்பார்கள் என்பதே அதிர்ச்சிதரக் கூடியதாக இருந்தது. ஏற்றுக் கொள்ள முடியாததாக ஆயிற்று. அதன் காரணம் என்னவாக இருக்கும் என்பதைச் சிந்திக்கும் திறனற்று நின்று கொண்டிருந்தவர், பின்னர் சட்டென்று சுய உணர்வு பெற்றார் புவனேஸ்வரி அம்மாளை ஏறிட்டுப் பார்த்து அந்த முகத்திலிருந்து எதையோ புரிந்துகொள்ள முயன்றார்.

முதலில் தான் பெண் கேட்டு வந்து அதை ஒருவர் நிராகரிப்பதா என்கிற கோபம் ஏற்பட்டாலும் அறிவு அதனை அடக்கிற்று. ஒரு வேளை இந்த அம்மா பயந்து போய் இவ்வாறு பேசுகிறாளோ எனத் தோன்றிற்று. தன் தகுதி கண்டு ஏற்பட்ட பயமாக இருக்கும் எனப் பட்டது. அல்லது மகளின் நடனம் தடைப்பட்டுவிடக் கூடாது என்பதும் காரணமாக இருக்கலாம் எனவும் கருதினார்.

நாட்டியத்திற்கெனவே அர்பணிக்க மகளை உருவாக்கியிருக்கலாம். அந்த அளவு அழகும், அபூர்வத் திறமையும் ஒருங்கே பெற்ற இறைவனது கருணையைப் போற்றிக் காக்க நினைத்திருக்கலாம். கல்யாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி, பிள்ளை குட்டி பெறுகின்ற வாழ்க்கைதான் எல்லோரும் வாழ்கிறார்களே... அவ்வாறு இல்லாமல் தன் மகள் தனித்து நிற்க வேண்டும். தான் பெற்ற வரப்பிரசாதமான அக்கலையில் சிறந்தவளாக வேண்டும். நன்கு தேர்ச்சி பெற வேண்டும். உலகம் புகழ வேண்டும். இவையெல்லாம் ஈடேற வேண்டுமானால், கவனம் சிதறாமல் இருக்க வேண்டும். நாட்டியத்தைத் தவிர நினைவு வேறெதின் மீதும் திரும்பக் கூடாது. ஒரு ஆராய்ச்சியாளன் எப்படி ஆராய்ச்சி தவிர வேறு எண்ணமற்று இருப்பானோ ஒரு ஞானி இறைவனது நினைவு தவிர வேறு நினைவுகளற்று இருப்பானோ அப்படி தன் மகள் நாட்டியத்தைத் தவிர வேறு எதையும் நினைக்கக் கூடாது. கவனம் வேறு

எதிலும் சென்று விடக்கூடாது என்கிற கட்டுப்பாடாக இருக்கலாம்.

அவ்வாறு இருந்தால் அது நியாயம்தான். அதில் தவறில்லை. ஆனால் மகனின் நினைவு திருமணத்தை நாடுகிறது என்றால் அதைத் தடுக்கக் கூடாது. அதற்குக் கட்டுப்பாடு விதிக்கக் கூடாது. அதனால் இருவித நஷ்டங்கள் ஏற்படும். நாட்டியத்திலும் கவனம் போய், ஆசைப்பட்ட வாழ்க்கையும் கிடைக்காமல் திண்டாட நேரிடும். முக்கால்வாசிக் கலைஞர்களின் வாழ்க்கையில் இத்திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

அது போன்ற நிலைமை ரவிச்சந்த்ரிகாவிற்கு ஏற்பட்டுவிடக் கூடாது. தன் மகனைக் கல்யாணம் செய்து கொள்வதால் அவளது நாட்டியத்திற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது. பார்க்கப் போனால் தன் மருமகள் என்கிற அந்தஸ்து அவளது நாட்டியத்தை இன்னும் பிரகாசமாக்கும். அவளது திறமையை உலகம் முழுதும் பளிச்சிட வைப்பது தன் கடமை. ஒரே மகன், அந்த மகனின் ஆசையை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்கிற பாசம் இங்கு இழுத்துக் கொண்டு வந்து நிற்க வைத்திருக்கிறதோ, அதேபோல்மருமகளின் ஆசையை நிறைவேற்றி வைக்கிற கடமை உணர்வும் தனக்கு உண்டு என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்கிற தீர்மானத்தோடு சற்றுமுன் ஏற்பட்ட அதிர்ச்சி, ஏமாற்றம், கோபம் அனைத்தும் அடங்கினவராக மெல்ல நிமிர்ந்து ஒரு புன்னகையோடு புவனேஸ்வரியம்மாளைப் பார்த்தார்.

"ஏம்மா... எதுவாக இருந்தாலும் இப்படி நிற்க வைத்தே பேசி அனுப்பிடற உத்தேசமா...? இல்லாட்டி கொஞ்ச நேரம் உட்கார்ந்து நிதானமாகப் பேசி ஒரு முடிவுக்கு வரலாமா...? நாங்க உங்க வீட்டுக் கூடத்துல கொஞ்ச நேரம் உட்கார்றதுல உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இருக்காதே...?"



அவரின் அந்தக் கேள்வி புவனேஸ்வரியம்மாளை உலுக்கிற்று. பதறிப் போய் வார்த்தைகள் தடுமாறப் பேசினாள்.

"ஐயயோ... என்ன அப்படியெல்லாம் கேட்கறீங்க..? வாங்க... வந்து உட்காருங்க... வாங்கம்மா... உட்காருங்க... இத்தனை பெரியவங்க வீடேறி வந்து இவ்வளவு பிரியமா ஆசையா பொண்ணு கேட்கறீங்க... அதுக்கு எங்களுக்குக் கொடுப்பினை இல்லையேன்ற வருத்தத்துல நான் படபடப்பா பேசிட்டேன். அதுக்கு முதல்ல நீங்க என்னை மன்னிக்கணும்..." என்று மகளின் பக்கம் திரும்பி சொன்னாள்.

"அம்மா... சந்திரி... இவங்களுக்கு நல்லா ரெண்டு கப் காப்பு கலந்து எடுத்துக்கிட்டு வாம்மா..."

"வேணாம்.. வேணாம்... அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். இங்க வாம்மா ரவிச்சந்த்ரிகா... வந்து எங்க பக்கத்துல உட்காரு..." என்று அவளை அழைத்து தனக்கும் ராஜேஸ்வரியம்மாளுக்கும் இடையில் உட்கார்த்தி வைத்துக் கொண்டார்,

பின்னர் புவனேஸ்வரியம்மாளை நிமிர்ந்து பார்த்தார்.

"வாங்க... நீங்களும் வந்து உட்காருங்க... உங்க வீட்டுக்காரரையும் மெதுவா எழுப்பி அழைச்சுக்கிட்டு வாங்க... அவருதான் பொண்ணுக்கு அப்பா... அவரையும் கலந்து பேச வேண்டிய விஷயம் இது..."

"ஐயோ... வேணாங்க... அவரு ஏற்கெனவே ஒரு இதய நோயாளி, அவரு இருக்கிற நிலைமைல ஒரு சின்ன அதிர்ச்சி, வருத்தம் எதையும் தாங்க முடியாது..."

"ஏம்மா... சந்தோஷ சமாச்சாரம் பேச வந்த இடத்துல அதிர்ச்சிக்கும், வருத்தத்துக்கும் எங்க இடமிருக்குது...?"

அதைக்கேட்டு புவனேஸ்வரியம்மாள் அதற்கு மேல் தாங்க இயலாதவளாக முகத்தை மூடிக்கொண்டு குமுறினாள்.

" உங்களுக்கு எப்படி எந்த வார்த்தைல சொல்றதுன்னே தெரியலயே..."

"சொல்லுங்க... எதுவானாலும் மனசு விட்டுச் சொல்லுங்க. இந்தக் கல்யாணத்துனால உங்க பொண்ணோட நாட்டியத் திறமை வீணாயிடும்னு நீங்க சந்தேகப்பட்டால் அதுக்கு நான் உத்திரவாதம் தரேன். கல்யாணத்துக்கு அப்புறமும் ரவிச்சந்த்ரிகா நாட்டியமாடலாம். அதுக்கு நாங்க தடைவிதிக்க மாட்டோம்..."

அதைக் கேட்டு சடாரென்று தலையை உயர்த்தி கணவரைப் பார்த்தாள் ராஜேஸ்வரியம்மாள். 'தங்கள் வீட்டு மருமகளான பின் மேடை ஏறி நாலு பேர் நடுவில் நாட்டியமாடுவதா...?' என்கிற அதிர்ச்சியில் கண்கள் விரிந்து கிடந்தன.

"என்னங்க ..?" என்று அதிர்ச்சி மாறாமல் கணவரை அழைத்தாள்.

ராஜரத்தினம் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

"நீ கொஞ்சம் பேசாமல்இரு ராஜேஸ்வரி" என்றவர் புவனேஸ்வரியம்மாளிடமே பேச்சைத் தொடர்ந்தார்.

" இதப்பாருங்கம்மா... உங்க மகளுக்கு ஆசையா நாட்டியம் கற்று வச்சு அவளை அந்த நாட்டியத்தில் உலகப் புகழ் பெறணும் என்று நீங்க வளர்த்திருந்தீங்கன்னால் அதை நிறைவேற்றி வைக்கவேண்டியது என் பொறுப்பு. என் கடமை. எப்படி என் பிள்ளையின் ஆசையை நிறைவேற்றி வைக்கணும்— அதிலும் ஒரே பிள்ளை, அத்தனை சொத்துக்கும் அதிபதி— வாரிசு— அவனுக்கு இல்லாதது என்னன்னு ஒடி வந்திருக்கேனோ



அந்த மாதிரி உங்க பொண்ணோட நியாயமான ஆசையை, உங்க வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பேன். என் பேச்சுல நம்பிக்கை இல்லேன்னா சத்தியம் வேணும்னாலும் செய்துதரேன..."

நெஞ்சைத் தொட்ட அவரது பேச்சிற்குப் பின்னர், அதற்கு மேலும் மௌனமாக இருப்பதோ, பூடகமாகப் பேசுவதோ, காரணத்தைச் சொல்லாமல் மறுப்பதோ சரியில்லை என்றுணர்ந்த புவனேஸ்வரியம்மாள் முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள். வருவது வரட்டும் என்கிற முடிவில் உண்மையைச் சொல்லி விடுகிற நிர்ப்பந்தத்தில் மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

"நீங்க இத்தனை சொன்னதற்கப்புறம் நான் பேசாமல் இருப்பது சரியில்லீங்க. உண்மையைச் சொல்றதுதான் நல்லது. என் மகளை நாட்டியத்துக்கு அர்ப்பணிக்கணும்னு நான் வளர்க்கலை. அதுக்காக அவளுக்கு நாட்டியம் சொல்லித்தரல... அவ உலகப் புகழ் பெறணும்ன்றதும் என் ஆசையில்ல..."

"அப்படின்னா... நாங்க வந்த நோக்கம் இன்னும் சுலபமாகுது... இல்ல ..?"

"இல்லீங்க..." என்று மறுத்து வேகமாகத் தலையாட்டிய அந்த அம்மாள் கன்னங்களில் வழிந்த கண்ணீரோடு மகளை ஏறிட்டாள். கால்வினாடி அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னர் கரகரத்த குரலில் மகளிடம் சொன்னாள்.

"சந்த்ரி... நீ போய் இவங்களுக்கு குடிக்க ஏதாச்சும் கொண்டு வாம்மா..."

உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்த ரவிச்சந்த்ரிகாவின் கையைப் பற்றி மீண்டும் உட்கார வைத்தார் ராஜரத்தினம்.

"இருக்கட்டும். இப்ப எங்களுக்கு குடிக்க எதுவும் வேணாம். நீங்க சொல்லுங்க..."

"ஐயோ... வேணாங்க... அவ இங்க இருக்க வேணாங்க..." என்று அழுதாள் புவனேஸ்வரியம்மாள்.

ஆனால் ராஜரத்தினம் அதில் பிடிவாதமாக இருந்தார்.

"இல்ல... அவ நிச்சயமா இருக்கணும் அவளைப் பற்றின விஷயத்துக்கு அவ இல்லாமல் போகக்கூடாது..." என்றார்.

"உங்களுக்கு எப்படிச் சொல்றதுன்னே புரியலையே...?" என்று குமுறிக் கண்ணீர் வடித்த புவனேஸ்வரியம்மாள் அந்தக் கண்ணீருடனே பேச்சைத் தொடர்ந்தாள்.

"எந்த அம்மாவுக்காவது தன் மகள் அதுவும் ஒரே மகள் கல்யாணம் செய்துக்கிட்டுப் போகணும்னு ஆசை இருக்காதா...? இந்த மாதிரி அழகும் புத்திசாலித்தனமும், திறமையும் உள்ள பொண்ணுக்கு நல்ல இடமாக வரணும்னு தோணாதா...? உலகத்துல உள்ள எல்லார் மாதிரி எனக்கும் பேரன் பேத்திகளைப் பார்க்கணும் என்கிற எண்ணம் வராதா...? அதுவும் உங்களை மாதிரி நினைக்கக்கூட பார்க்க முடியாத ஒரு இடம் வர்றப்போ நீங்களே பொண்ணு கேட்டு இந்த குடிசைக்கு ஓடி வந்திருக்கிறப்போ... எந்தத் தாயாவது அதை மறுப்பாளா...?" புவனேஸ்வரியம்மாள் முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள். வருவது வரட்டும் என்கிற முடிவில் உண்மையைச் சொல்லி விடுகிற நிர்ப்பந்தத்தில் மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

ஒரு வினாடி நிறுத்தி அழுகையை அடக்க இயலாமல் கேவின அந்த அம்மாள் அத்தனை வருடங்களாக வேறு யாருக்கும் தெரியாமல், மகளுக்குக் கூடத் தெரியவராமல் தன் மனதோடு போட்டுப் பூட்டிப் புதைத்து வைத்திருந்த உண்மையை சரேலென்று வெளியிட்டாள். சிபிச் சக்ரவர்த்தி புறாவிற்காகத் தன் சதையை அறுத்தெடுத்த



மாதிரி மனதை அறுத்தெடுத்து அந்த நிஜத்தைச் சொன்னாள்.

"...காரணம்... என் பொண்ணுக்குக் கல்யாண பாக்கியமில்ல... அந்த வாழ்க்கைக்கு அவ தகுதியில்ல... உங்க பையனை மட்டுமில்லீங்க... வேற யாரையும் அவ கல்யாணம் செய்துக்க முடியாது... யாருக்கும் மனைவியாக முடியாது... இந்த உண்மை அவளுக்குத் தெரியக் கூடாது அவளை எட்டக் கூடாதுன்னு எனக்குள் போட்டுப் பூட்டி வச்சிக்கிட்டிருந்தேன் இன்னிக்கு அவளுக்கு முன்னாலேயே போட்டு உடைக்க வேண்டிய ஒரு நிலைமைக்கு என்னை ஆளாக்கிட்டீங்களே ஐயா..."

அந்தத் தாயின் கதறல், தாய்மையின் கதறல் அத்தனை நெஞ்சங்களிலும் நெருப்புத் துண்டங்களாக விழுந்து பொசுக்கத் தொடங்கின அதன் சூடு தாங்க இயலாமல், உண்மை முழுவதையும் புரிந்து கொள்ளவும் முடியாமல் தவித்துப் போனார்கள் அவர்கள்...

# 32

அடிபட்ட மானாகத் துடித்துப் போனாள் ரவிச்சந்த்ரிகா. அம்மா சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் அம்புகளாகக் குத்திக் கொண்டு நின்றதில் துவண்டு போனாள். அதன் வலியும், வேதனையும், ரணமும் எட்டிப் பார்க்க செயலற்றுப் போனாள்.

அம்மா சொன்னதன் அர்த்தம் பிடிபடவில்லை. கேட்கலாமென்றால் கேள்வி எழும்பவில்லை வாய் விட்டு வார்த்தைகளாகத்தான் கேட்க முடியவில்லையே தவிர உள்ளுக்குள் எழுந்த கேள்விகளை அடக்க முடியவில்லை.

'கல்யாணத்திற்குத் தகுதி இல்லை என்றால் என்ன அர்த்தம்? இந்த இடம் தனக்குத் தகுதியில்லை என்று அர்த்தமா...? அந்த வீட்டு மருமகளாகிற அளவிற்கு அந்தஸ்து இல்லை என்று அர்த்தமா ..? அல்லது கல்யாணத்திற்கே தான் தகுதியற்றவள் என்கிறார் களா...? என்ன அர்த்தம் ..?'

'கல்யாணத்திற்கே தகுதி இல்லை என்றால்... என்ன காரணம்? எதற்காக அப்படிச் சொல்கிறார்கள்...? ஏன் தகுதி இல்லை ..? ஏற்கெனவே கல்யாணம் செய்து வைத்து விட்டார்களா? விவரம் அறிவதற்கு முன்னரே நடத்தப்பட்ட பால்ய விவாகமா...? 'அப்படியானால் தன்னைக் கல்யாணம் செய்து கொண்டவன் எங்கே...? கொண்டவனா, கொண்டவரா ..? எப்படிச் சொல்வது ..? அப்படி கல்யாணமாகியிருந்தால் கழுத்தில் தாலி இருக்க வேண்டுமே...? அது இல்லையே...? கழற்றி விட்டார் களா...? ஏன் கழற்ற வேண்டும்...?

'ஒருவேளை... கதைகளிலும், திரைப்படங்களிலும் வருகிற மாதிரி சிறு பெண்ணாக இருக்கும் போது கல்யாணம் பண்ணி, கல்யாணம் முடிந்த கையோடு மாப்பிள்ளைக்கு ஏதாவது ஆகி விட்டதோ...? விதவை யாகி விட்டோமா ..? அந்த துக்கத்திலும் வருத்தத்திலும் தான் அப்பா இதய நோயாளியாகிப் போனாரோ..? அம்மா யாரோடும் ஒட்ட மாட்டேன் என்கிறாளோ ..? உறவினர்களின் உறவு இல்லாது போய் விட்டதோ...?

'அப்படியே இருந்தாலும் விவரம் புரியாத வயதில் நடந்ததை எப்படிக்கல்யாணம் என்று சொல்ல முடியும்...? சட்ட ரீதியாகக்கூட அது செல்லாதே ..? திருமணம் என்றால் பெண்ணிற்கு பதினெட்டு வயதாகி இருக்க வேண்டுமே... அதற்கு முன் கவுன் போடுகிற வயதில் செய்திருந்தால் அது திருமணமாகி விடுமா...? அந்தப் பையன் இறந்து போயிருந்தால் தன்னை விதவை என்று ஒதுக்க முடியுமா...? விவரம் தெரித்து திருமணம் செய்து



கொண்ட பெண்கள் விதவையானாலே மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என அறிவுரை கூறுகின்ற இந்தக் காலத்திலா தன்னை ஒதுக்குவார்கள் ..?

'இல்லையே .. அம்மா அப்படிச் செய்யக் கூடியவள் இல்லையே... அந்த அளவிற்குப் பிற்போக்கு வாதியோ, மூட நம்பிக்கை உடையவளோ இல்லையே... அப்படியே ஆகி இருந்தாலும் எப்போதோ நடந்ததை மறைத்துத் தன் மகளுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்று தானே எந்தத் தாயும் நினைப்பாள், பாடுபடுவாள்... அதை விட்டு இப்படியும் சொல்வாளா ..? இந்த மாதிரி சொல்ல வேண்டும் என்றால் வேறு ஏதாவது வலுவான காரணம் இருக்குமோ ...? இருக்கும் என்றால் அது என்ன ..?'

அதற்கு மேல் தாங்க முடியாதவளாக மெல்ல நிமிர்ந்து ராஜரத்தினத்தையும், ராஜேஸ்வரியம்மாளை யும் பார்த்தாள். தன்னைப் போலவே அவர்களும் அதிர்ந்து உறைந்து போய் உட்கார்ந்திருப்பதைப் புரிந்து கொண்டாள். தன்னை விடவும் அவர்களின் பாதிப்பு இன்னும் அதிகம் என்பதையும் உணர முடிந்தது. அதிலும் ராஜரத்தினத்தின் முகம் சிவந்திருந்த விதத் திலிருந்து அவரது மனநிலை மிகத் துல்லியமாகப் புரிந்தது. மிகவும் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு அவர் உட்கார்ந்திருப்பது தெரிய வர தானே பேச்சை ஆரம்பிக்க முடிவு செய்தாள். உள்ளுக்குள் கொந்தளித்த உணர்வுகள் எதனையும் வெளிப்படுத்தக் கூடாது என்கிற முடிவில் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டாள். மிக நிதானமாகத் திரும்பி அம்மாவை ஏறிட்டாள். உடம்பு குலுங்க அவள் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. விசும்பல்களும், கேவல் களுமாக வெளிவருவது புலப்பட்டது. உட்கார்ந்திருந்த சோபாவை விட்டு எழுந்து அம்மாவை நெருங்கி அவளது தோள் மீது கை வைத்தாள்.

அது யாருடைய கை என்பது புரியாமல் சடாரென்று தலைநிமிர்ந்த புவனேஸ்வரியம்மாள் தன் மகளே நின்று கொண்டிருப்பது கண்டு இன்னமும் கண் கலங்கனாள். அவளது கையைப் பற்றி தன் முகத்தோடு வைத்து மீண்டும் கதற ஆரம்பித்தாள்.

"இத்தனை அழகான ஒரு பெண்ணைப் பெத்து, பதினெட்டு வருஷம் வளர்த்து, நல்ல இடத்துலேர்ந்து கல்யாணம் கேட்டு வர்றப்போ, சரின்னு சொல்ல முடியாத பாவியாயிட்டேன் பார்த்தியா...?"

அம்மாவின் கதறல் அடிவயிற்றில் இறங்கினாலும் நிதானமாகவே இருந்தாள் ரவிச்சந்த்ரிகா. மெதுவாகவே கேட்டாள்.

"அதுதான் ஏன்னு புரியலம்மா... இந்த மாதிரி அழறதை நிறுத்திட்டு கொஞ்சம் நிதானமாய் பேசுங்கம்மா... எத்தனை பெரியவங்க வந்திருக்காங்க... அவங்களுக்கு முன்னால இப்படியாம்மா அழறது... எழுந்திருச்சு முகத்தைக் கழுவிக்கிட்டு வாங்கம்மா... நான் போய் தண்ணி கொண்டு வரட்டுமா...?"

சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்டாள் அந்த அம்மாள். புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். தலையைக் குனிந்து எழுந்து நின்று 'மன்னிச்சுக்குங்க...' என்று உள்ளே போனாள்.

அம்மா போனதும் ரவிச்சந்த்ரிகா ராஜரத்தினத்தையும், ராஜேஸ்வரியம்மாளையும் பார்த்து தழைந்த குரலில் வேண்டினார்.

"தயவு செய்து அம்மாவைத் தப்பா நினைச்சுக்காதீங்க... அவங்க இப்படி மனசு உடைஞ்சதே கிடையாது. எத்தனை கஷ்டமானாலும் வெளில காட்டிக்கிட்டதே இல்லை. இதுதான் முதல்முறை... எதையோ சொல்ல முடியாமல் ரொம்பச் சங்கடப்படறாங்க—"



அதைக் கேட்டு,

"என்னம்மா நீ..." என்று உரிமையோடு கடிந்து கொண்டார் ராஜரத்தினம்.

"நீ என்ன இப்படி எங்களை அன்னியப் படுத்திப் பேசற...? அவங்க மனசுல இருக்கிற கஷ்டம் என்ன, எதுக்காக இப்படி மறுக்கறாங்கன்னு தெரிஞ்சுக்கிற கடமை எங்களுக்கு இருக்குதும்மா... எந்தக் கஷ்டமானாலும் அதைத் துடைக்க வேண்டிய பொறுப்பு இருக்—"

சொல்லிக் கொண்டிருந்தவர் புவனேஸ்வரியம்மாள் முகம் கழுவிக் கொண்டு வருவதைப் பார்த்து சட்டென்று நிறுத்தினார்.

"வாங்கம்மா ..." என்று அந்தம்மாவை வரவேற்றார்.

"உட்காருங்க..."

அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப் படிந்து அந்தம்மாள் மீண்டும் சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். ராஜரத்தினம் அதுவரை எதுவுமே நடக்காத மாதிரி முகத்தை மிக இயல்பாக வைத்துக் கொண்டு மெலிதான புன்னகையை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

"இப்ப மனசு கொஞ்சம் லேசாயிடுச்சா...?"

பதில் சொல்லாமல் அந்த அம்மாள் தலை குனிந்து கொண்டிருந்தாள். ராஜரத்தினம் தொடர்ந்து மெதுவாய் நிதானமாய் பேசினார்.

"...ஏம்மா... உங்களுக்கு ஒரு கஷ்டம்னால் அது எங்களுக்கில்லையா...? நாங்க தாங்கிக்க மாட்டமா...? அதனால் எதுவானாலும் தயங்காமல், அழாமல் சொல்லுங்க... ஏன் ரவிச்சந்த்ரிகாவைக் கல்யாணத்துக்குக் தகுதி இல்லன்னு சொன்னீங்க..."

ஒரு வினாடி பார்வையை உயர்த்திய அந்த அம்மாளின் கண்கள் குளங்களாக நிறைந்து கிடந்தன.

"அழாமல் சொல்லுங்கம்மா... என்ன காரணம்...?"

சட்டென்று கண்களைமூடி தைரியத்தை வர வழைத்துக் கொண்டவளாக மடமடவென்று சொன்னாள் அந்த அம்மாள்.

"ஏன் அப்படிச் சொன்னேன்னால்... இத்தனை அழகா, திறமை சாலியா இருக்கிற எம் பொண்ணை ஆண்டவன் மிகக் கொடூரமா வஞ்சிச்சிட்டான்...மாறாத குறை ஒண்ணை வச்சிட்டான்..."

"அதான் என்ன குறைன்னு கேட்கறேம்மா...?"

"அது... அது வந்து... எம் பொண்ணுக்குப் பிறவியிலேயே கருப்பை சரியானதாக அமையல. இருக்க வேண்டிய அளவு இல்லாமல் ரொம்ப ரொம்பச் சின்னதா இருக்குது. அதனாலதான் அவ பெரியவளாக ஆகலை... தாம்பத்ய வாழ்க்கைக்கு தகுதி இல்ல. குழந்தை பெறுகிற பாக்கியமில்ல... இப்ப சொல்லுங்க... இத்தனை அழகை அள்ளித்தந்த ஆண்டவன் எம் பொண்ணை எத்தனை வஞ்சிச்சிட்டான்னு. இது தெரிஞ்சப்புறம் நீங்க என் பொண்ணை உங்க மருமகளா ஏத்துப்பீங்களா...? உங்க மகனுக்குக் கல்யாணம் செஞ்சிப்பீங்களா...? சொல்லுங்க...?"

அந்த அம்மாள் கதற, ரவிச்சந்த்ரிகா, ராஜரத்தினம், ராஜேஸ்வரி மூவருமே அந்த உண்மையில் உறைந்து போய் நின்று விட்டனர்

நீண்ட நேரத்திற்கு ஹால் அமைதியாகக் கிடந்தது- அசாதாரண அமைதியாகத் தெரிந்தது...



# 33

அப்பல்லோ, விஜயா, கே. ஜே., தேவகி, என்று வரிசையாய் பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு ரவிச்சந்த்ரிகாவை அழைத்துப் போனார் ராஜரத்தினம். அதன் பின்னர் ஒவ்வொரு நர்ஸிங்ஹோமாக ஏறி இறங்கினார். கடைசி முயற்சியாக பிரேமா கிருஷ்ணசாமி, லக்ஷ்மிகுமாரி, ஈ. வி. கல்யாணி, கனகவல்லி, கமலாசெல்வராஜ் என தனிப்பட்ட டாக்டர்களிடமும் காட்டினார். ஜி ஜி. ஆஸ்பத்திரியில் ஒருவாரம் தங்க வைத்து எல்லாவிதமான பரிசோதனைகளையும் செய்யச் சொன்னார். ஸ்கானிங் செய்து பார்த்து டாக்டர் கமலா செல்வராஜும் கையை விரித்துவிட, ஒட்டு மொத்தமாக நம்பிக்கை இழந்தார்.

"ஐயம் ஸாரி மிஸ்டர் ராஜரத்தினம். இதற்கு முன் அத்தனை டாக்டர்கள் சொன்ன அதே ரிபோர்ட்டைத் தான் நானும் சொல்ல வேண்டியதாக இருக்கு. ரவிச்சந்த்ரிகாவினால் தாயாக முடியாதே தவிர, தாய்மையைத்தான் அனுபவிக்க இயலாதே தவிர, நிச்சயமாக ஒரு மனைவியாக இருக்க முடியும். அதுவும் இவங்க மிக உன்னதமான மனைவியாகவே இருப்பாங்க...அதனால் குழந்தைப் பிரச்சினையை விட்டுவிட்டு இவங்களை மனைவியாக மனப்பூர்வமாக யார் ஏற்றுக் கொள்கிறார்களோ, அவருக்குக் கல்யாணம் செய்து வையுங்க... குழந்தை வேணும்னால் ஏதாவது ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கிட்டால் போச்சு... சுவீகரிச்சுக்கிட்டால் இந்தப் பிரச்சினை சுலபமாக முடிஞ்சு போயிடும்..."

டாக்டர் ரவிச்சந்த்ரிகாவை வெறும் நோயாளியாக மட்டும் வைத்து தீர்ப்பு சொல்லிவிட்டார். அது அவருக்குச் சுலபமாக இருந்தது. காரணம்-உணர்ச்சி பூர்வமாக சம்பந்தப்படாதவர். பந்தமற்று பார்க்கத்

தெரிந்தவர். அன்பும், அனுதாபமும் கருணையும், இரக்கமும், 'நலம் பெற வேண்டும்' என்கிற ஆர்வமும், அக்கறையும் இருக்குமே தவிர நோயாளியை நெருங்கின சொந்தக்காரர்களுக்கு இருப்பதைப் போன்ற பாதிப்பு இருக்காது. இருக்கவும் கூடாது. அப்படி இருக்குமானால் எந்த டாக்டராலும் தன் கடமையைச் செய்ய முடியாது. கர்ம வீரர்களாக இயங்க முடியாது.

ஆனால் ராஜரத்தினமோ, ராஜேஸ்வரியம்மாளோ டாக்டர்களல்ல. புவனேஸ்வரியம்மாளும், சக்தி வேலும் டாக்டர்களில்லை. அவர்களால் இந்தப் பிரச்சினையிலிருந்து தள்ளி நிற்க முடியாது. மீண்டுவர முடியாது. மூன்றாம் மனிதர்களைப் போல் பார்க்க முடியாது. பிரச்சினையோடு சம்பந்தப் பட்டவர்கள் அவர்கள், மிக வலுவாக பாதிக்கப்பட்டவர்கள். ஆகவே உடைந்து போனார்கள். ஒன்றும் செய்ய இயலாதவர்களானார்கள். சிறிது நேரம் பேச்சிழந்து நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் நிலைமையை மிகத் தெளிவாக உணர்ந்து கொண்ட டாக்டர் மென்மையாகவும், நிதானமாகவும் பேசினார்.

"...ஓ... இதுக்கு ஏன் இப்படி அதிர்ந்து, உடைஞ்சு போய் நிற்கறீங்க...? உலகத்துல எத்தனை பேருக்கு எத்தனை பெரிய குறைகளையெல்லாம் கொடுத்திருக்கான் ஆண்டவன். காலில்லாமல், கை இல்லாமல், காது கேட்காமல், கண் இல்லாமல்... கண்ணில்லாததை விடப் பெரிய குறை என்ன இருக்க முடியும்...? வாய்பேச முடியாதது மட்டும் குறை இல்லையா...? மூளை வளர்ச்சியடையாத எத்தனை பேரை நீங்க பார்த்திருக்கீங்க...? அவங்களையெல்லாம் நினைச்சுப்பாருங்க. அந்தக் குறைகளுக்கு முன் இது தூசுக்குச் சமம். காலே இல்லாதவனுக்கு முன்னால் செருப்பில்லாதவன் தனக்கு செருப்பில்லாததையா பெரிசாக நினைப்பான்...? அந்த மாதிரி தான் இது. குழந்தைதானே இருக்காது... எத்தனை



அனாதை ஆஸ்ரமங்களில் எத்தனை அனாதைக் குழந்தைங்க இல்ல... அதுல ஒரு குழந்தையை எடுத்து வளர்த்தால் போச்சு. உங்க வசதிக்கு ஒரு டஜன் குழந்தைகளை எடுத்து வளர்க்கலாம். ஒரு சின்னக் கல்லை கண்முன் வச்சுக்கிட்டு உலகத்தை மறைச்சுக்கிடாதீங்க. விசிறி தூர எறிஞ்சிட்டு விஸ்தாரமா பார்க்கப் பழக்கப் படுத்திக்குங்க..." என்ற டாக்டர் கடைசியாக ரவிச்சந்த்ரிகாவைப் பார்த்தார்.

"என்ன ரவிச்சந்த்ரிகா நான் சொல்றது..? சரி தானே....? அப்படியே இந்தக் குறையை மறந்திட்டு உன்னைக் கல்யாணம் செய்துக்க யாரும் முன் வரலேன்னு வச்சிக்க... அதனால் என்னன்னு ஒதுக்கித் தள்ளத் தெரிஞ்சுக்கணும். கல்யாணம் தான் எல்லோரும் செய்துக்கிறாங்களே... நாமும் அதையே செய்துக்கணுமான்னு நினைச்சா சரியாப் போயிடும். கடவுள் அந்தக் குறையை உன் விஷயத்துல நிறையவே ஈடு செய்திருக்காரு... அறிவு, அடக்கம், அன்பு, பண்பு, எல்லையற்ற அழகு... இவை எல்லாத்துக்கும் மேலான அபூர்வமான நாட்டியக் கலையைக் கொடுத்திருக்காரு... பாலசரஸ்வதி, குமாரி கமலா, பத்மினி, வைஜயந்திமாலா இவங்களுக்கு அப்புறம் நாட்டியத்துக்கென்றே உன்னைப் படைச்சிருக்காரு... அதனால் நீ அதில் முழு மூச்சாக ஈடுபடலாம். எத்தனையோ சாதிக்கலாம். உலகப் புகழ் பெறலாம். அதை விட்டுட்டு இப்படியா கண் கலங்கி நிற்கிறது...? கமான்... இதை சாதாரணமா ஒதுக்கித் தள்ளிட்டு சிரி பார்க்கலாம்... நீயும் சிரிச்சு மற்றவங்களையும் சிரிக்கவை... என்ன...? வாழ்க்கை எதுக்காக இருக்குன்னு நினைக்கிற..? நாமும் சந்தோஷமாக இருந்து மற்றவங்களையும் சந்தோஷமாக வச்சிக்கத்தான். அதை விட்டுட்டு நம் காரணமாக மற்றவங்க கஷ்டப்படும்படி விடலாமா..? எழுந்திரு... சிரிச்சுக்கிட்டு உலகத்தைப் பாரு. உலகமும் உன் கூட சேர்ந்து சந்தோஷமாகச் சிரிக்கும்..."

டாக்டர் சொல்லி அனுப்பியது அவளுக்குள் பெருக்கித் துடைத்து, கோலம் போட்டு விளக்கேற்றி வைத்த மாதிரி இருந்தது. மூடிக்கிடந்த ஜன்னல்களையெல்லாம் திறந்து வைத்த மாதிரி தோன்றியது. ராஜரத்தினம் பெண் கேட்டு வந்ததிலிருந்து இந்தப் பத்து நாட்களாக மனதிற்குள் அடங்கிக்கிடந்த இறுக்கம் தளர்ந்தாற்போல் தோன்றியது. புழுக்கமும், இருட்டும் அகன்று ஜிலு ஜிலுவென்று காற்று வீசியது. எதையோ பறிகொடுத்த பாவம் போய் முகம் சாதாரணமாயிற்று. உதட்டில் சிரிப்பு கூட எட்டிப் பார்க்கத் தொடங்கிற்று.

திரும்பத் திரும்ப டாக்டர் சொன்னதை நினைத்துப் பார்த்தாள். எத்தனை எளிமையான வார்த்தைகளால் அறியாமையைப் போக்கி இருக்கிறார்! ஞானத்தைத் தந்திருக்கிறார். மனப்பூர்வமாக திரும்பத் திரும்ப நன்றி சொல்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்...?

ராஜரத்தினத்தின் வீட்டுப் போர்டிகோவில் கார் நின்றது. டவாலி உடையணிந்த ஒருவன் மிக மரியாதையாகக் கார்க் கதவைத் திறந்தான். இறங்கி உள்ளே போனார்கள். கார்க் கதவின் சத்தம் கேட்டு, அவர்களின் வருகைக்கெனவே காத்திருந்த சக்தி மாடியிலிருந்து இறங்கி ஓடி வந்தான். அவர்களின் முகங்களிலிருந்து எதையும் புரிந்து கொள்ள இயலாதவனாகக் கால் வினாடி மௌனமாக இருந்து பின்னர் அம்மாவைக் கேட்டான்.

“என்ன ஆச்சு அம்மா...? டாக்டர் என்ன சொன்னாங்க...?”

ராஜேஸ்வரியம்மாள் பொங்கி வந்த துக்கத்தை அடக்க முடியாதவளாகத் தலை குனிந்து விசும்பத் தொடங்கினாள்.



தவித்துப் போன சக்தி அப்பாவை ஏறிட்டான்.

“சொல்லுங்கப்பா... டாக்டர் என்னப்பா சொன்னாங்க...?”

அவரிடமிருந்தும் பதில் வரவில்லை. ஒரு ஆழமான பெருமூச்சுடன் மௌனமாக இருக்க, அவன் கடைசியில் ரவிச்சந்த்ரிகாவை நெருங்கிக் கேட்டான்.

“...சந்த்ரி... நீயாச்சும் சொல்லு சந்த்ரி... என்ன ஆச்சு...?”

எல்லையற்ற பிரியத்துடனும், அன்புடனும் அவன் முகத்தை ஏறிட்ட ரவிச்சந்த்ரிகா மிகக் கவனமாக, வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்த நிதானத்துடன் பேச ஆரம்பித்தாள்.

“புதுசா ஒண்ணும் ஆகல சக்தி... புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்திருக்கோம். அவ்வளவுதான்....”

“அப்படின்னா...?”

“அப்படின்னா... நான் கல்யாணம் செய்துக்கத் தகுதி இல்லேன்னு அன்னிக்கு எங்கம்மா சொன்ன அதே காரணத்தை இன்னிக்கு எல்லா டாக்டர்களும், எல்லாப் பரிசோதனையும் செய்து பார்த்து நிரூபிச்சிருக்காங்க .. அவ்வளவுதான் ..”

“...அதா...வது...?”

“அதாவது... எனக்குக் குழந்தை பிறக்க வழி இல்லை, தாயாகிற தகுதி இல்லைன்னு சொல்லிட்டாங்க...”

“அவ்வளவுதானே ..? இது எப்படி உன்னைக் கல்யாணத்துக்குத் தகுதி இல்லாதவளாக ஆக்கும் ..”

“சக்தி ..” என்று திடுக்கிட்டுக்கண்கலங்க அவனை ஏறிட்டாள் ரவிச்சந்த்ரிகா,

"என்ன பேசறீங்க...? குழந்தை பெற்றுத் தர முடியாத என்னைக் கல்யாணம் செய்துக்கிட்டு என்ன செய்யப் போறீங்க..."

"இது என்ன கேள்வி சந்த்ரி...?" என அவள் மீது கோபப்பட்டான் அவன். முகம் தணல்மாதிரி தகதகத்துக் கிடந்தது. பேச்சில் அனல் வீசுற்று.

"...கல்யாணம்ன்றது வம்சவிருத்திக்காக மட்டுமில்ல சந்திரி. வெறும் குழந்தை பெறுவதற்காக ஏற்படுத்தப் பட்டதில்லை. குழந்தை பெறுவதுஎன்பது கல்யாணத்தின் ஒரு அம்சம்தானே தவிர அதுவே கல்யாணமாகி விடாது"

"அப்படின்னா கல்யாணம்ன்றது வேற எதுக்காகன்னு நினைச்சுக்கிட்டிருக்கிற சக்தி...?"— விசும்புவதை நிறுத்திவிட்டு சடாரென்று அம்மாவிட மிருந்து கேள்வி வரும் என்பதை அவன் எதிர்பார்க்க வில்லை. அதைக் கேட்ட அவளது முகமும், குரலின் தொனியும் மாறுபட்டிருக்கவே அவன் இன்னமும் தீவிர மான குரலில் பதிலளிக்க ஆரம்பித்தான்.

"...கல்யாணம்ன்றது பரஸ்பர அன்புக்காகம்மா தோழமைக்காக. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கிற துக்காக. மனசு விட்டுப் பழகுவதற்காக. சரிசமமாக பாரம் சுமப்பதற்காக. சேர்ந்து சிரிப்பதற்காக. பகிர்ந்து வாழ்வதற்காக. இவை அத்தனைக்காகவும்தான் கல்யாணமே தவிர இன விருத்தி ஒன்றுக்காக மட்டும் இல்லைம்மா...அப்படி இருந்தால் புழு, பூச்சிகளுக்கும் மனுஷங்களுக்கும் வித்தியாசமே இல்லாமற் போயிடும்..."

அவனது பேச்சைக் கேட்டு ராஜேஸ்வரியம்மாளின் முகம் சுருங்கிற்று. கண்களில் மெலிதாய் கோபம் எட்டிப் பார்த்தது. அந்தக் கோபம் குரலிலும் வெளிப் பட அழுத்தமாகக் கேட்டாள்.



"அப்படின்னா நீ என்னதான் சொல்ற சக்தி...?"

"...இதையெல்லாம் மீறி நான் ரவிச்சந்த்ரிகாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்றேன். பண்ணி வையுங்கன்னு உங்களைக் கேட்டுக்கப் போறேன்னு—"

"ஓ .. இல்ல... முடியாது... உனக்கப்புறம் இந்தக் குடும்பம் வம்சவிருத்தியற்றுப் போறதை என்னால தாங்கிக்க முடியாது... உன்னோட இந்தப் பரம்பரை முடியறதை ஏத்துக்க முடியாது... இந்தக் குடும்பப் பேர் சொல்ல, குலத்தின் பேரைச் சொல்ல, குழந்தை வேணும்... எனக்குப் பேரன் பேத்தி வேணும்... அவுங்களை நான் பார்க்கணும்... பாராட்டி, சீராட்டி வளர்க்கணும்... 'பாட்டீ'ன்னு கூப்பிடறதைக் கேட்டு மகிழணும்... என் மனசுக்குள்ள இருக்கிற இந்த ஆசை, எல்லாருக்கும் ஏற்படக்கூடிய நியாயமான ஆசை, எனக்கும் ஏற்பட்டிருப்பதைப் புரிஞ்சிக்க சக்தி.... புரிஞ்சிக்கிட்டு என் ஆசையை நிறைவேற்றி வை சக்தி... எல்லாத்தையும் போட்டு உடைச்சிடாத... உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேம்ப்பா..."

கதறி, கண்ணீர் வடித்து அந்தத்தாய் கை கூப்பிக் கெஞ்ச, ஆரம்பித்தார். அதைச் சிறிதும் எதிர்பார்க்காத வனாக அதிர்ந்து போய் நின்றிருந்தான் சக்தி...

## 34

தான் பெற்ற மகனிடம் ஒரு தாய் கை கூப்பி யாசிப்பதை ராஜரத்தினத்தால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பொறுத்துக் கொண்டிருக்கவும் முடிய வில்லை. உள்ளுக்குள் கோபம் கொழுந்து விட்டு எரிய மனைவியை ஓர் அதட்டல் போட்டார்.

"என்ன ராஜம் இது...? எதுக்காக இப்படியெல்லாம் பேசற...? யார் எதிர்ல என்ன பேசணும்னு தெரியாது...?"

அவரது அதட்டலுக்குப் பின்பே அந்தம்மாள் தன்னுணர்வு பெற்றாள். எதிரில் நின்று கொண்டிருக்கும் ரவிச்சந்த்ரிகாவின் ஞாபகம் வந்தது. சூழ்நிலையின் இறுக்கம் பிடிபட்டது. தன் பேச்சு எந்த அளவிற்கு அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்தியிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆனாலும் வேறு வழியில்லை என்பதையும் உணர்ந்தாள். தன் மனதில் இருப்பதை, தான் நினைப்பதைச் சொல்லியே ஆகவேண்டும். இப்போது சொல்லாமல் விட்டு விட்டால் வேறு எப்போதும் சொல்லமுடியாது. சொன்னாலும் பயன் படாது. எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமோ அதை அந்த நேரத்தில் செய்தே ஆக வேண்டும். காலம் கடந்து செய்யப்படுகின்ற செயல்கள் பலனற்றுப் போகும், மதிப்பற்றுப் போகும். இப்போது சொல்லாமல் விட்டு விட்டு, பின்னால் சொல்கிற சொல்லுக்கு என்ன வலிமை இருக்க முடியும்...?

அதனால் மனதில் இருப்பதைக் கொட்டியே ஆக வேண்டும் என்று முடிவு செய்தாள். ஒருக்காலும் சக்திக்கு வாரிசு அற்றுப் போக விடமாட்டாள். குழந்தையற்று நிற்பதை ஏற்றுக் கொள்ளமாட்டாள். ஏதோ ஒரு அனாதை ஆஸ்ரமத்துக் குழந்தையை தத்து எடுக்க விடமாட்டாள். அந்தக் குழந்தையைத் . தன் மகன் வயிற்றுக் குழந்தையாகப் பாவிக்கத் தன்னால் முடியாது. அதற்குண்டான மனப் பக்குவமில்லை. வலிமை இல்லை, விசாலமான இதயமில்லை.

இதற்காக யார் என்ன சொன்னாலும் சரி கணவனே திட்டினாலும் சரி. கோபித்து அடித்து உதைத்தாலும் தன்னால் முடியாது. அந்தஸ்து பார்க்காமல், ஏற்றத்



தாழ்வு பார்க்காமல் ரவிச்சந்த்ரிகாவை மருமகளாக ஏற்றுக் கொள்ள முடிவு செய்த மனது இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. சண்டித்தனம் செய்கிறது... ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறது. பணம் வேண்டாம். லட்ச லட்சமாய் இருக்கிறது. பெயர், புகழ், பதவி எதுவும் வேண்டாம்...

தானும் சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவள் தான். ஒன்றுமில்லாமல் வந்தவள் தான். ஆனால் மலடியாக வரவில்லை குடும்பம் விளங்க, வம்சப் பெயர் சொல்ல அழகழகாக இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறாள் அது போல் தன் மகனின் பெயர் சொல்ல ஒரு குழந்தை வேண்டும் மகனுக்கு மகன் வேண்டும். தனக்குப் பேரன் வேண்டும். பேத்தி வேண்டும். இத்தனை பெரிய வீட்டில் அவர்கள் ஓடி விளையாட வேண்டும். சண்டை பிடித்துக் கொண்டு தன்னிடம் வரவேண்டும்.

"பாரு பாட்டி இவனை... என்னை அடிக்க வரான்..." என்று தன் பின்னால் ஒளிந்து கொள்ள வேண்டும். தன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும். கன்னத்தில் முத்தமிட வேண்டும். 'பாட்டி நல்ல பாட்டி...' என்று கொஞ்ச வேண்டும். தன் இடுப்பில் ஏறி உட்கார்ந்து, 'பாட்டி ஊட்டி விட்டாங்கன்னாத் தான் சாப்பிடுவேன் ...' என்று அடம் பிடிக்க வேண்டும்...

'ஐயோ கடவுளே .. இவை எதுவுமற்று, குழந்தையின் அழுகைச் சத்தமற்று... பூக்காத செடியாக, காய்க்காத மரமாக நிற்கும் என்றால் அதை ஒப்புக் கொள்ள முடியுமா? ஏற்றுக் கொள்ள முடியுமா...? யாரால் முடியும்...? எந்தத் தாய் சரி சொல்வாள்...?

ரவிச்சந்த்ரிகா நல்ல பெண். மிக மிக நல்ல பெண். அன்பும், பிரியமும் கொண்ட பெண். அடுத்தவர் மனதைப் புரிந்து கொள்ள முடிந்த பெண். அவளால் நிச்சயம் தன் மனதைப் புரிந்து கொள்ள முடியும்.

அலசி ஆராய்ந்து பார்க்க முடியும். தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

அதனால் அவளிடம்தான் பேச வேண்டும். அவளிடமே நேரில் பேசி விடுவதுதான் நல்லது. அதை விட்டு கணவரிடமோ, சக்தியிடமோ பேசக் கூடாது. பேசுவதில் எந்த பயனுமிருக்காது...

தீர யோசித்து ஒரு முடிவிற்கு வந்த ராஜேஸ்வரியம்மாள் மெல்ல ரவிச்சந்த்ரிகாவின் அருகில் போய் அவளது கைகளைப் பற்றிக் கொண்டாள். மெல்ல அந்த முகத்தை ஏறிட்டுப் பார்த்த பார்வையில் சோகத்தை விடவும் தன் எண்ணத்தை எப்படியும் தெரியப்படுத்தி விடவேண்டும் என்கிற வேகமே அதிகம் இருந்தது.

அதனால் ரவிச்சந்த்ரிகாவின் கைகளைப் பற்றினவள் சடாரென்று இழுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். அந்தச் செய்கையில் அதிர்ந்து போன ரவிச்சந்த்ரிகா பதறித் தன் கையை இழுத்துக் கொண்டாள்.

"எ... என்னம்மா... இது...?" என்று தடுமாறினாள்.

"நீங்க இப்படிச் செய்யலாமாம்மா...?" என குரல் தழுதழுத்தாள்.

கால் வினாடி தயங்கின ராஜேஸ்வரியம்மாள் பின்னர் மடமடவென்று சொன்னாள்.

"...செய்யணும்மா... செய்துதான் ஆகணும். இப்ப நான் தொட்டுக் கண்ணுல ஒத்திக்கிட்டது உன் கை இல்லம்மா... காலுன்னு வச்சிக்க..."

"ஐயோ..." என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள் ரவிச்சந்த்ரிகா. கண்களில் தண்ணீர் ததும்பிற்று. குரல் லேசான விசும்பலோடு வெளிப் பட்டது. வார்த்தைகள் எல்லையற்ற வேதனையில் தோய்ந்து வந்தன.



"நான்... இதுல... என் தப்பு என்னன்னு இப்படி தண்டிக்கறீங்கம்மா...?"—கேட்ட போது கரகரவென்று கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

அதைப் பார்த்த ராஜேஸ்வரியம்மாளின் நெஞ்சமும் பதறிற்று. மீண்டும் அவளது கையைப் பற்றிக் கொண்டாள்.

"ஐயோ... உன் தப்புன்னு நான் சொல்லலம்மா... நினைக்கக் கூட இல்ல... இது தெய்வத்தோட தப்பும்மா... இத்தனை அழகு, அன்பு, அடக்கம், பண்பு அத்தனையும் வாரித் தந்திட்டு கண்ணைப் பிடுங்கின மாதிரி செய்த கொடூரம். ஆண்டவன் அன்பானவன், இரக்கம் மிகுந்தவன்னு எல்லாம் சொல்றாங்களே... அதெல்லாம் இருந்திருந்தா இப்படிச் செய்திருப்பானா...?"

"இல்லம்மா... தெய்வத்தை ஏம்மா தப்பு சொல்லணும்? யார் யாருக்கு எது எதைத் தரணும்னு கடவுளுக்கு நல்லாத் தெரியும்மா... யாருக்கு எது தகுதியோ அதைத்தான் தருவாரு.. நாம் தகுதி உள்ளவங்களா, இல்லையான்னு தெரிஞ்சுக்காமலே நிறைய பேர் கடவுளைத் தப்பு சொல்வாங்க. நம் கர்மாவை நாம்தான் அனுபவிக்கணும்னு புரிஞ்சுக்காமல் பேசுவாங்க..."

"ரவிச்சந்த்ரிகா..." என்று இடையில் குறுக்கிட்டார் ராஜரத்தினம்.

"...அவதான் வருத்தம் தாங்காமல் ஏதோ உளர்றான்னா படிச்ச பொண்ணு நீ கூடவாம்மா...?" என்ற போது அவரே தாங்க இயலாதவராகத் தழுதழுத்தார்.

"இல்ல... சார்... அவங்க உளறல .. நிஜத்தைத்தான் சொல்றாங்க .. உண்மையைச் சொல்றாங்க..."

"...ஏம்மா... அதுக்குள்ள நான் சார்னு கூப்பிடற அளவுக்கு அந்நியமாயிட்டேனாம்மா...?"

சட்டென்று பார்வையை உயர்த்தி அவரைப் பார்த்த அவளது கண்கள் குளங்களாகிக் கிடந்தன. உதடுகள் காற்றில் அகப்பட்ட ரோஜா இதழ்களாக நடுங்கின.

"...உங்களை மாமான்னு கூப்பிடற பாக்கியம்தான் எனக்கு இல்லாமல் போயிடுச்சே..."—சொல்லி முடிப்பதற்குள் அவளிடமிருந்து நீண்ட நெடும் விம்மல் தெறித்து விழுந்தது.

அதற்கு மேல் தாங்க இயலாதவனாக அவளை நெருங்கி, கைகளைப் பற்றி, துடித்துப் போய்ப் பேசினான் சக்தி.

"என்ன சொல்ற சந்த்ரி...? என்ன பேச்சு பேசிட்ட...? இப்படிப் பேச எப்படி உன் மனசு துணிஞ்சிச்சு...? ஏன் பாக்கியமில்லைன்னு சொல்ற...? எது என்னவானாலும் அவர் உனக்கு மாமாதான். அவரை நீ அப்படித்தான் கூப்பிடணும். அவரை அப்படி கூப்பிடற உரிமை உனக்குத்தான் உண்டு... உனக்கு மட்டும்தான் உண்டு. நீ சொன்ன மாதிரி இந்த ஜென்மம் மட்டுமில்ல... வேற எந்த ஜென்மம் எடுத்தாலும், எத்தினி ஜென்மம் எடுத்தாலும், எனக்கு நீ உனக்கு நான்றதை யாராலும் பிரிக்க முடியாது. என் அம்மா, அப்பா தடுத்தாலும் நடக்காது..."

"ச...க்...தீ..." என்று அவன் கையை உதறித் தன் கைகளை விடுவித்துக் கொண்டு மிக நிதானமாக அவனை ஏறிட்டாள் ரவிச்சந்த்ரிகா. வார்த்தைகளைத் தேடி, அளந்து பேசத் தொடங்கினாள்.

"...தயவு செய்து இப்படிப் பேசாதீங்க. எந்தக் காரணம் கொண்டும் அம்மா அப்பா மனசைப் புண்படுத்தாதீங்க. என்னை எத்தனை நாளாகத் தெரியும் உங்களுக்கு..? மூணு நாலு மாசமிருக்குமா நாம் சந்திச்சு..? மூணு நாலு மாசம் பழக்கமான ஒருத்திக்



காகப் பத்து மாசம் சுமந்து பெற்றெடுத்து, பாராட்டி, சீராட்டி வளர்த்த அம்மாவைப் புறக்கணிக்கிறதா...? அதுவும் சக்தி செய்யலாமா இதை...?"

"..இது எப்படி அம்மாவைப் புறக்கணிக்கிறதா ஆகும் சந்த்ரி...?"

"பின்ன... நீங்க சொன்னதுக்கு என்ன அர்த்தம்...? என் அம்மா, அப்பாவே தடுத்தாலும் நடக்காதுன்றதுக்கு என்ன அர்த்தம்...?"

"அது... அது வந்து..."

"சொல்லுங்க சக்தி.. உங்கம்மாவை அப்பாவை நீங்க இப்படிப் பேசலாமா...? வேற யாரையாவது சொல்லியிருந்தால் கூடப் பரவாயில்ல. அம்மா அப்பாவையா...? அதுவும் இப்படிப்பட்ட அப்பா, அம்மாவையா...? நான் எதிர் பார்க்கல சக்தி... நீங்க, இப்படிப் பேசுவீங்கன்னு எதிர் பார்க்கல"

"...என்னை மன்னிச்சிடு... ரவி..."

"...என்கிட்ட நீங்க மன்னிப்பு கேட்கறதா...? என்ன சக்தி இது...? அப்பாகிட்ட கேளுங்க அம்மாகிட்ட கேளுங்க.. அவங்க மனசைப் புரிஞ்சு நடந்துக்குங்க ஒரு தாய் உள்ளம் என்ன பாடுபடும்னு என்னால தெரிஞ்சுக்க முடியுதே...? உங்களால் முடியாதா சக்தி..? மென்மையான மனசு கொண்ட உங்களாலும் முடியுமே... முடியணுமே... அவங்க ஆசை, எதிர் பார்ப்பு, கற்பனை எல்லாத்தையும் புரிஞ்சுக்க முடியுமே.. அந்த ஆசையில என்ன தப்புன்னு யோசிச்சுப் பாருங்க சக்தி? எந்தத் தாய்க்கும் இருக்கக் கூடிய நியாயமான ஆசைதானே..? நியாயமான கற்பனைதானே...? ஒரு பெண் தனக்குத் திருமணமாகணும், பின்னர் தாயாகணும், அதற்கப்புறம், மாமியாராகணும், கடைசியா பாட்டியாகணும்னுதானே நினைப்பா...

அதையேதானே உங்கம்மா நினைக்கிறாங்க... அதுக்குத் தானே உங்கம்மா ஆசைப்படறாங்க... நியாயமான அவங்க ஆசையை நிறைவேற்றி வைக்கிற பொறுப்பு உங்களுடையது சக்தி .. இந்த மாதிரி ஒரு நல்ல தாய்க்கு நல்ல மகனாக நடந்துக்க உங்களுக்குத் தெரியவேணாமா சக்தி...?"

அவளது கேள்வியின் நோக்கமும் அர்த்தமும் புரிந்தும் புரியாமலும் தவித்துப் போய்க் கேட்டான்.

"இப்ப... நீ என்ன சொல்ற சந்த்ரி...?"

"என்னை மறந்திடச் சொல்றேன். நாம் பழகின காலத்தை கெட்ட கனவாக நினைச்சு மறந்திடச் சொல்றேன். அம்மா ஆசைப்படி வேற ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துக்கிட்டு அவங்க மடியில் உங்க குழந்தையைத் தவழ விடச் சொல்றேன்..."

"முடியாது... சந்த்ரி.,. நீயில்ல... வேற யார் வந்து சொன்னாலும் இது நடக்காது. எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தால அது உன் கூடத்தான்..."

நல்ல பாம்பு தரையில் அடித்து சத்தியம் செய்யுமாமே, அது போல் உரத்த குரலில் சத்தியம் மாதிரி சொல்லி விட்டுப் போனான் அவன்...

## 35

ஆவேசமாக ஆணையிடுகிற மாதிரி சொல்லி விட்டு வந்துவிட்டானே தவிர, அதன் பின்பு சக்தியின் மனம் நிறையவே அமைதியிழந்து தவித்தது. உள்ளுக்குள் பொங்கிப் பொங்கி வந்தது. ரவிச்சந்த்ரிகா இதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே என்று ஏங்கிற்று. அவள் பிடிவாதமாக மறுத்துவிட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்டது.



இந்த விஷயத்தை அவள் தனியாகத் தன்னிடம் மட்டும் வந்து சொல்லிருந்தால் தன் அணுகுமுறையே வேறு விதமாக இருந்திருக்கும் என்று எண்ணிக் கொண்டான். இதை இவ்வளவு பெரிது படுத்தியிருக்க மாட்டான். பெரிய குறையாக நினைத்திருக்க மாட்டான். வாழ்க்கையே போய்விட்ட மாதிரி அழுது புலம்பியிருக்க மாட்டான். ரொம்பவும் சுலபமாக எடுத்துக் கொண்டிருப்பான். அவள் கையைத் தன் கையோடு கோர்த்துக் கொண்டு உள்ளத்துக் காதலையெல்லாம் கண்களில் தேக்கி அவளைப் பார்த்திருப்பான். வருடிக் கொடுக்கிற குரலில் மென்மையாகப் பேசியிருப்பான்.

'அவ்வளவுதானே சந்த்ரி... குழந்தை இருக்காதுல்னு தானே சொன்னாங்க .. ஆனால் நீ இருப்பே இல்ல...?' என்று கேட்டிருப்பான்.

'எனக்கு நீ போதும் சந்த்ரி. வேற எதுவும் வேணாம். இந்த உலகமே கூட வேணாம். ஏன் என்றால், உன்னைப் பெற்றால் உலகத்தையே பெற்ற மாதிரின்னு நான் நினைக்கிறேன். அதனால் உனக்குக் குழந்தை பிறக்க வழியில்லைன்ற விஷயம் எனக்குப் பெரிய விஷயமே இல்ல ... இன்னும் சொல்லப் போனால் இது விஷயமே இல்ல... எனக்கு நீ குழந்தை, உனக்கு நான் குழந்தைன்னு... 'ஒருத்தருக்கு ஒருத்தர் குழந்தையா இருந்துக்கலாம்... என்ன...?' என்று முதுகைத் தடவிக் கொடுத்திருப்பான். தன் தோளின் மீது தலையைச் சாய்த்து வருடிக் கொடுத்திருப்பான். இதன் பாதிப்பை அவள் உணரவிடாமல் செய்திருப்பான்.

ஆனால் இப்போது... அதையெல்லாம் செய்ய முடியாது. நிலைமை வேறுவிதமாகத் திரும்பிவிட்டது. அம்மா எல்லாவற்றையும் திசை திருப்பி விட்டுவிட்டாள். தன் கனவுகளையும், கற்பனைகளையும் சொல்லி அவள் மனதை மாற்றிவிட்டாள். குழந்தை பெறாத பெண்

களின் வாழ்க்கை வீண் என்கிற மாதிரி பேசிவிட்டாள். வாழை குலை தள்ளி கன்று போடாவிட்டால் அது மரமே இல்லை என்பதாகப் பேசிவிட்டாள்.

அம்மாவின் நினைப்பு நியாயமானதாக இருக்கலாம். நிஜமானதாக இருக்கலாம். நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கலாம். தவறற்றதாக இருக்கலாம். எந்த ஒரு தாயும் நினைக்கக் கூடியதுதானே எனலாம்... அது சாத்தியமானது என்றும் சொல்லலாம்,

அதே மாதிரி தன் எண்ணங்களும் நினைப்பும், கனவுகளும், கற்பனைகளும் கூட நிஜமானவைதான், சாத்தியமானவைதான், சத்தியமானவைதான். தவறற்றவைதான். பார்க்கப் போனால் நடைமுறைக்கு சற்று வித்தியாசப்பட்டதே தவிர ஏற்றுக் கொள்ள இயலாததில்லை...

அப்படியிருக்க இதை ஏன் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள்...? ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்...? அம்மா மறுக்கட்டும், பாவாயில்லை. அம்மா ஒரு குறுகிய வட்டத்தை மட்டுமே பார்க்கத் தெரிந்தவள், அந்த வட்டத்திற்குள் மட்டுமே வளைய வருபவள். வீடு, குடும்பம், குழந்தைகள்தான் வாழ்க்கை என்றிருப்பவள். ஆழ்ந்து சிந்தித்துப் பழக்கப் படாதவள்.

ஆனால்... சந்த்ரிகா அப்படி இல்லையே ... அவளுக்கு உலகம் தெரியுமே .. எதையும் ஆழ்ந்து சிந்திப்பவளாயிற்றே. வீடு, குடும்பம் மட்டுமல்ல வாழ்க்கை என்பதைப புரிந்து கொண்டிருப்பவளாயிற்றே...

அவளால கூடவா தன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை...? தன் எண்ணங்கள் பிடிபட வில்லை...?

ஏன் சந்திரி... நீ கூடவா என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறாய்...? அல்லது புரிந்தும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறாயா...? எதற்காக...? அம்மாவிற்காகவா...



அவள் தன் பேரக்குழந்தைகளோடு விளையாட வேண்டும் என்பதற்காகவா...?

இது என்ன பைத்தியக்காரத்தனம் சந்த்ரி...? ஒரு குழந்தைக்காக யாராவது தன்னைத் தானே இழக்க முன் வருவார்களா...? தன்னை மட்டுமா இழக்கிறாய்..? என்னையும் சேர்த்து இழக்கச் சொல்கிறாய்.

அது என்னால் முடியாது சந்த்ரி, எனக்கு நீ வேண்டும், உன் அன்பு வேண்டும். அந்தத் தோழமை வேண்டும். பகிருதல் வேண்டும். உன்னிடம் மட்டும் தான் நான் லயிக்கிறேன். என் மனது லயிக்கிறது. லயிப்பு என்றால் சாதாரண லயிப்பில்லை. உன்னிலேயே ஒன்றிவிட்ட லயிப்பு. நான் நீயாகி விட்ட லயிப்பு... நீதான் எல்லாம் என்றாகிவிட்ட லயிப்பு. இது போதும், இதைத் தவிர வேறு என்ன வேண்டும்...? என ஒரு முகமாகி நின்றுவிட்ட லயிப்பு...

இப்படி ஒரு முகமான மனதிற்கு வேறு எண்ணங்கள் இல்லை. சிந்தனை இல்லை. அலைச்சல் இல்லை... இப்படிப்பட்ட சிந்தனைகளற்ற நிலையை நோக்கித்தான் யோகிகளும் ஞானிகளும் தவமிருக்கிறார்கள். சிந்தையடக்கு என்கிறார்கள்...

தவமிருக்காமல், யோகியாகாமல், காடு தேடாமல், உன் ஒருத்தியால் என் சிந்தை அடங்கி நிற்கிறது என்றால்... .

அதுதான் ஞானம்.

அதுதான் யோகம்.

ஞானமடைந்தவன் மீண்டும் உலக வாழ்க்கைக்குத் திரும்புவானா...? யோகி யோகத்தை விட்டு விலகுவானா...? அது போலத்தான் நானும்...

உன்னை விட்டு விலக மாட்டேன். விலக என்னால் இயலாது. அது முடியாது. எனக்கு நீ வேண்டும்

சந்த்ரி... நீ என்றால் உன் உடம்பு இல்லை. உன் ஐந்தடி நாலங்குல உயரமில்லை. வெள்ளை வெளேறென்ற நிறமில்லை. ரவிவர்மா முகமில்லை...

இவை எல்லாவற்றையும் மீறி உனக்குள் இருக்கிற நீ...? உன் மனசு...? உன் ஆத்மா...? அல்லது... அல்லது...

எனக்குச் சொல்லத் தெரியவில்லை சந்த்ரி... சொல்ல முடியவில்லை. சிலவற்றைச் சொல்ல முடியாது என்பார்களே... அது போலத்தான் இதுவும். கண்டார் விண்டதில்லை, விண்டார் கண்டதில்லை என்பது மாதிரிதான்...

அதனால் என்னைப் புரிந்து கொள் சந்த்ரி. குழந்தை பிறக்க இயலாத சின்னக் குறையைக் காட்டி என்னை ஒதுக்கி விடாதே. என்னால் அது முடியாது. நீயில்லாத என்னை என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது... ஏனென்றால் காதலைப் புரிந்து கொண்டவன். ஒரு 'கயாமத் ஸே கயாமத் தக்' படம் பார்த்து காதல் எப்படி இருக்க வேண்டும் என உறுதி செய்து கொண்டவன்.

காதல் என்பது இப்படித்தான் இருக்க வேண்டும்.

நிஜமாய், நிச்சயமாய், சத்தியமானதாய் இருக்க வேண்டும்.

நீயின்றி நானில்லை என்று உருக வேண்டும்.

உனக்கென்றே நான் என்கிற உறுதி வேண்டும்.

சாவையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

நான் தயாராக இருக்கிறேன் சந்த்ரி. உனக்காக சாவைக் கூட என்னால் வரவேற்க முடியுமே தவிர உன்னை விட்டுப் பிரிய முடியாது. அதனால் என்னைப் புரிந்து கொள்...



உள்ளுக்குள் தவிப்பாய், ஏக்கமாய், வேதனையாய் கதறி, அவை அனைத்தையும் அவளிடமே நேரில் சொல்கிற முடிவுடன் கீழே இறங்கி வந்த போது கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் என்ற புத்தகத்தில் படித்த 'மீரா'வின் கவிதை ஒன்று நினைவிற்கு வந்தது

'என்னை நீ புரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார் புரிந்து கொள்வார்கள்...? என்னை நீ புரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார் புரிந்து கொண்டால் தான் என்ன...?'

# 36

தனக்குள் முடிவு செய்து கொண்டு கீழே இறங்கி வந்தான் சக்தி. வரவேற்பறையில் அம்மா மட்டும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். அப்பாவையும், ரவிச்சந்த்ரிகாவையும் காணாததால் மெதுவாக அம்மாவிடம் கேட்டான்.

"அப்பா எங்கம்மா...?"

ஏதோ யோசனையில் கண்களை மூடி உட்கார்திருந்த ராஜேஸ்வரியம்மாள் அவன் குரலில் யோசனை கலைந்து சடாரென்று கண் விழித்துப் பார்த்தாள். பலவீனமான குரலில் "என்னப்பா...?" என்றாள்.

"அப்பா எங்கேன்னு கேட்டேம்மா..."

"ஆபீஸ் ரூம்ல இருப்பாரு..."

"ரவி...?"

"அப்பவே வீட்டுக்குக் கிளம்பிப் போயிட்டா..."

"என்ன சொல்லிட்டுப் போனாம்மா...?"

"– ——"

"சொல்லுங்கம்மா... கடைசியா என்னதான் சொல்லிட்டுப் போனா...?"

"இதுக்கு மேல சொல்ல என்னப்பா இருக்குது ..?"

"அப்படின்னா...? என்ன அர்த்தம்னு எனக்குப் புரியலம்மா..."

"திருப்பித் திருப்பி எத்தினி தரம் பேசினாலும் நிலைமை ஒண்ணுதானேப்பா..."

"அதுக்காக... ரவியை விட்டுட முடியுமாம்மா...?"

"ஏம்ப்பா... நான் என்ன விடவா சொன்னேன்...? அந்த மாதிரி ஒரு நல்ல பொண்ணை விடமுடியுமா...?"

"அப்படின்னா... நீங்க உங்க மனசை மாத்திக்கிட்டீங்களாம்மா...?"

"மாத்திக்கிட்டீங்களான்னா...? என்ன கேட்கறப்பா...?"

"இல்லம்மா .. ரவியைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்—"

"அது எப்பிடிப்பா முடியும்...? எந்த அம்மா இதுக்கு சம்மதிப்பா...? உங்க அப்பா கூட ஒத்துக்கலையே..."

முகம் மாறி சோகமாயிற்று. அதே சோகக் குரலில் கேள்வி வெளிப்பட்டது.

"எப்ப சொன்னாரு...? என்ன சொன்னாரு...?"

"இப்ப... சந்த்ரியைக் கார்ல ஏத்தி அனுப்பி வச்சதுக்கும் பின்னால கேட்டேன்..."

"என்ன கேட்டீங்கம்மா..."



"ஏங்க .. உங்க மனசு இதை ஒத்துக்குதா...? மனச்சாட்சி சரின்னு சொல்லுதா...? சொல்லுங்க... என்கிட்ட மறைக்காமல் சொல்லுங்கன்னு கேட்டேன்..."

"என்ன சொன்னாரு...?"

"இல்ல ராஜம், உண்மையா சொல்லப் போனா என் மனசும் சரின்னு சொல்லத்தான் இல்ல. எனக்கு மட்டும் இந்த வீட்டுக்கு, குடும்பத்துக்கு வாரிசு வேணும்னு தோணாதா...? ஒரே மகனுடைய குழந்தையைப் பார்க்கணும்னு இருக்காதா...? அள்ளி அணைச்சுக்க ஆசை வராதா ...? நளினிக்குக் குழந்தைங்க பிறக்கும். அதெல்லாம் கூட பேரன் பேத்திங்கதான். ஆனால் மகன் வயிற்றுப் பேரன் பேத்திகளாகுமா ? அது தனி இல்லையா...?"

'அப்போ ஏங்க சொல்லாம விட்டிட்டீங்க ?'

"நீதான் சொல்லிக்கிட்டிருந்த... அதுவுமில்லாம அந்தப் பொண்ணு எதிர்ல மனசை நோகடிக்கிற சக்தி இல்ல ..?"

"இப்போ விட்டுட்டா பின்னால நம் மனசு நோகுங்க .. அதைத் தாங்கிக்கிற சக்தியும் இருக்காது..."

"நிஜம்தான் ராஜம். ஆனாலும் ஒரே மகன். அவன் ஆசைப்படறான். அந்தப் பொண்ணு மேல உயிரையே வச்சுக்கிட்டிருக்கான் ..."

"அதுக்காக... சம்மதிச்சுட முடியுங்களா...? அவனோட இந்த வம்சம் வாரிசு இல்லாம முடிஞ்சு போக விட்டுடலாங்களா ..?"

"கூடாதுதான்... இந்த நிலைமைல என்ன செய்யறதுன்னு தெரியல .. என்னால எந்த முடிவுக்கும் வர முடியல. சில பிரச்சினைகளுக்குக் காலம் தான் முடிவு. காலத்தால்தான் தீர்த்து வைக்க முடியும். அதனால் கொஞ்ச நாள் பேசாமல் இரு ராஜம். கடவுள் என்ன

வழி விடறாருன்னு பார்ப்போம்'னு சொல்லிட்டுப் போயிட்டாரு..."

அப்பாவின் பதில் தனக்கு சாதகமாக இல்லாமற் போனாலும் பாதகமாக இல்லை என்பதைப் புரிந்து கொண்டான் சக்தி. அம்மாவைப் போல் அவர் பிடிவாதமாக இல்லை. மூர்க்கமாக இல்லை. தன் விருப்பத்தையும், ஆசையையும் மதிக்கிறார். அதனால் தான் ரவிச்சந்த்ரிகாவின் வீட்டிற்குப் பெண் கேட்கப் போனார். இல்லாவிட்டால் போயிருக்க மாட்டார்.

அப்பாவின் தகுதிக்கு அவ்வாறு போக வேண்டிய அவசியமில்லை. அவரின் மதிப்பிற்கு, கௌரவத்திற்கு, செல்வாக்கிற்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தாலே போதும், வீடுதேடி அவர்கள் வந்திருப்பார்கள்.

ஆனால் அப்பா அதைச் செய்யவில்லை. எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்திருக்கிறார். இப்போதும் கூட அவரே ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக ஏறி இறங்கியிருக்கிறார். டாக்டர், டாக்டர்களாகப் பார்த்திருக்கிறார். ஒட்டு மொத்தமாக ஒருவர் விடாமல் இயலாது என்று கை விரித்த பின்னரே தடுமாறுகிறார். இப்போதும் கூட அம்மா மாதிரி அவர் மறுக்கவில்லை. பட்டுக் கத்தறிக்கிற குரலில் தீர்க்கமாகச் சொல்லவில்லை. முகத்திற்கு எதிராகப் பேசவில்லை. அம்மாவாகக் கேட்ட பின்னரே தயங்கித் தயங்கி சொல்லியிருக்கிறார்...

அதனால் அப்பாவை சமாளிப்பது சுலபம், அவரிடம் தனியாகப் பேசினால் சம்மதித்து விடுவார். சரி சொல்லிவிடுவார். ஆனால் அம்மா...?

அம்மா சம்மதிக்க வேண்டும். சரி சொல்ல வேண்டும். இவர்களையெல்லாம் விட சந்த்ரிகாதான் இன்னமும் பிடிவாதமாக இருப்பாள். தன்னால் இது போன்ற ஒரு



பிரச்சினை ஏற்படுகிறது என்றால் நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டாள். அன்பும், மென்மையும் கொண்ட அவளது மனம் இதைத் தாங்காது. ஏற்றுக் கொள்ளாது. அதனால் முதலில் அவளைச் சரி செய்ய வேண்டும். அவளை ஏற்றுக் கொள்ளும் படி செய்ய வேண்டும். மாடியில் தான் நினைத்தது. தன் மனதில் இருப்பது எல்லாவற்றையும் சொல்லி தன்னை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். அவள் ஏற்றுக் கொண்ட பின் அம்மாவை ஏற்றுக் கொள்ள வைத்து விடலாம். அல்லது அம்மா மறுக்கிற பட்சத்தில் கல்யாணம் செய்து கொண்ட பின் சரிப்படுத்தி விடலாம். மனசு மாற வைக்கலாம். அம்மா, அப்பாவை விட ரவிச்சந்திரிகாவின் சம்மதமே இப்போது மிக முக்கியம்...

அதை உணர்ந்த சக்தி கடைசியாக ரவிச்சந்த்ரிகா என்ன சொல்லிவிட்டுப் போனாள் என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மெதுவாகக் கேட்டான்.

"ஏம்மா... கடைசியா ரவி என்ன சொல்லிட்டுப் போனா...?"

"புதுசா சொல்ல என்ன இருக்கு...? என் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கிட்டு என் கைல அடிச்சு சத்தியம் செய்திட்டுப் போச்சு..."

"என்னன்னு...?"

"உங்க மகன் வேற ஒருத்தியைக் கல்யாணம் செய்துக்கிட்டு உங்களுக்குப் பேரக் குழந்தைகளைப் பெற்றுத்தர ஒரு போதும் நான் குறுக்க நிக்க மாட்டேன்னுச்சு..."

"அ...ம்மா.." என்று கதற வாயெடுத்த சக்தி குரல் வராமல் அப்படியே உறைந்து போய் நின்றிருந்தான்...

# 37

"வாங்க தம்பீ..." என்று புவனேஸ்வரியம்மாள் சக்தியை வரவேற்றாள். "உட்காருங்க..." என்றாள். அந்தக் குரலில் வெளிப்பட்ட விரக்தி நெஞ்சைத் தொட, சோபாவில் உட்கார்ந்து கொண்ட சக்தி மெதுவாகக் கேட்டான்.

"எங்கம்மா... ரவி இல்ல...?"

"இல்லதம்பி... உங்க வீட்லேர்ந்து வந்து விஷயத்தைச் சொல்லிட்டு, குளிச்சிட்டு இப்போதான் கோவிலுக்குப் போனா..."

"எங்கம்மா... கபாலீஸ்வரன் கோவிலுக்கா...?"

"அங்கதான் வழக்கமா போவா..."

ஒரு வினாடி யோசித்தான் சக்தி. தானும் கோவிலுக்குப் போகலாமா என்று நினைத்தான். உடனே அந்த நினைவை மாற்றிக் கொண்டான். கோவிலுக்குப் போய் ரவிச்சந்த்ரிகாவை சந்தித்துப் பேசுவதை விட முதலில் இந்த அம்மாவிடம் பேசலாம். தேவைப்பட்டால் இவர்களை விட்டே அவள் மனதை மாற்றச் செய்யலாம் என்கிற முடிவுடன் தயங்கித் தயங்கி மெல்லப் பேச்சை ஆரம்பித்தான்.

"ஏம்மா... சந்த்ரி வந்து என்ன சொன்னா...?"

உடனே பதில் சொல்லாமல் தலைகுனிந்து அந்த அம்மாள் மௌனமாக இருந்தாள். மறு வினாடி அவளிடமிருந்து விசும்பல் சத்தம் கேட்டது. அதைக் கவனித்த சக்தியே மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான்.



"இப்ப இத்தனை வருத்தமும், வேதனையும் படர நீங்க முன்னால கொஞ்சம் யோசிச்சு செயல் பட்டிருக்கணும்மா..."

தன் மீது குற்றம் சாட்டுகிற தொனியில் அவன் பேசினதும் அந்தம்மாள் முகத்தைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு சடாரென்று நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன சொல்றீங்க தம்பி நீங்க?" என்றபோது நெற்றி சுருங்கிற்று.

"...இல்லம்மா... ரவிச்சந்த்ரிகா பற்றின உண்மையை அம்மா அப்பா பொண்ணு கேட்க வந்தப்போ நீங்க சொல்லாமல் இருந்திருக்கலாமில்ல...?"

"ஐயோ .. என்ன தம்பி இப்படிப் பேசறீங்க...? என்னைப் பொய் சொல்லச் சொல்றீங்களா தம்பீ ...?"—அதிர்ந்து போய்க் கேட்டாள் அந்த அம்மாள்.

"இல்லம்மா .. பொய் சொல்ல வேணாம் .. அதே சமயத்துல உண்மையைச் சொல்லாம இருந்திருக்கலாம்..."

"சொல்ல வேண்டிய உண்மையைச் சொல்ல வேண்டிய நேரத்துல சொல்லாமல் இருக்கிறதும் பொய் தான் தம்பீ..."

"அது பொய்தான்னா... அந்தப் பொய்யைச் சொல்றதுற ஒரு தப்பும் இல்ல..."

"ஐயோ..." என்று பதறினாள் அந்த அம்மாள்.

"எத்தினி பெரிய விஷயம்... இதைப் போய் சொல்லாமல் விட முடியுமா தம்பீ...?"

"ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்து வைக்கலாம்னு பெரியவங்க சொல்லியிருக்காங்களேம்மா..."

"அதை எதுக்கு சொன்னாங்க...? பணம், காசு, நகை, நட்டுன்ற அற்ப விஷயத்துக்காக கல்யாணம் நின்னு போகும்னால் அப்படிப்பட்ட கல்யாணத்தை நடத்தி வைக்க ஆயிரம் பொய் சொல்லலாம்னாங்க. அது கூட இந்தக் காலத்துல கூடாதுப்பா... நகை. நட்டுக்காகக் கட்டிக்கிட்டவளையே பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தர காலம்ப்பா இது .. அற்ப விஷயத்துக்குக் கூட பொய் சொல்ல முடியாதப்போ இத்தனை பெரிய விஷயத்தை மறைக்கலாமாப்பா ...? குழந்தை பெற வழியற்ற ஒரு பொண்ணுக்கு அதை மறைச்சு கல்யாணம் பண்ணி வைக்கிறது எத்தனை பெரிய பாவம். ஒரு குடும்பத்துக்குச் செய்யற துரோகமில்ல ..? அதுவும் எப்படிப்பட்ட குடும்பம்...! உங்கம்மா, அப்பா மனசு எப்படிப்பட்டது! எவ்வளவு உயர்ந்தவங்க...! அவங்க ஒரே மகன் நீங்க... இன்னும் நாலைஞ்சு பிள்ளைங்க இருந்திருந்தாலும் 'சரி, ஒரு மகனுக்குக் குழந்தையில்லேன்னால் என்ன .. மற்ற மகன்களுக்குக் இருக்குதில்ல... அந்தப் பேரக் குழந்தைங்களைப் பார்த்து மனசாறலாம்னு இருந்திடுவாங்க ..... சந்தோஷப் பட்டுக்குவாங்க... அது எதுவுமில்லாம .. ஒரே மகன்... ஒரு வாரிசு .. அந்த வாரிசை வாரிசில்லாம செய்யணும்னால்... ரொம்ப ரொம்ப சுயநலக்காரியா இருக்கணும். நல்ல வேளையா அந்த சுயநலம் என் கிட்டயோ என் கிட்டயோ என் மககிட்டயோ இல்லை... அந்த மாதிரி மனசைத் தந்த ஆண்டவனுக்கு நாங்க நன்றி சொல்றோம் தம்பீ... 'யார் எப்படிப் போனால் என்ன... நாம் வாழ்ந்தால் போறும்ன்ற' எண்ணம் தோணல பாருங்க... அது போறும் தம்பீ..."

அந்தம்மாள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதில் அவனுக்குக் கண் கலங்கிற்று. குரல் அடைத்துக் கொண்டது. 'ஆண்டவா... இவர்களுக்கா... இந்த நல்லவர்களுக்கா இப்படி ஒரு நிலைமை...' என மனசு அடித்துக் கொண்டது. கண்மூடி ஒரு வினாடி மௌனித்திருந்தவன் கண்களைப் திறந்து பேச ஆரம்பித்த போது ரவிச்சந்த்ரிகா உள்ளே நுழைந்தாள்.



தங்கக் குத்து விளக்கிற்கு குங்கமப் பொட்டிட்டு பூச்சூடின மாதிரி புருவங்களுக்கு மத்தியில் கோவில் குங்குமமும் மேல் நெற்றியில் விபூதிக் கீற்றுமாக தகதகத்தாள். அவனைப் பார்த்து மெலிதாய் புன்னகைத்தபோது அவனது மனம் இன்னும் சங்கடப் பட்டது. இவளையா ...? இந்தத் தெய்வீக அழகையா...? இழக்க முடியுமா தன்னால் ..?

'முடியாது. சந்த்ரி, நீயின்றி எனக்கு வாழ்க்கை இல்லை. எதிர்காலமில்லை. உலகமில்லை. ஒன்றுமே இல்லை .. தயது செய்து புரிந்து கொள் சந்த்ரி... மற்ற அத்தனை பேரும் மறுக்கட்டும். ஆனால் நீ என்னை மறுத்து விடாதே... அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது ..'

உள்ளுக்குள் மறுகி, ரகசியமாக மன்றாடிக் கொண்டிருந்தபோது ரவிச்சந்த்ரிகா சொன்னாள்.

"வாசல்ல காரைப் பார்த்தபோதே நினைச்சேன்... நீங்கதான் வந்திருப்பீங்கன்னு... எப்போ வந்தீங்க ?"

"இப்பத்தான் ... பத்து நிமிஷமாச்சு..."

"இந்தாங்க... விபூதி, குங்குமம் எடுத்துக்குங்க...". தன் வலது உள்ளங்கையிலிருந்த விபூதி கலந்த குங்குமத்தை அவனெதில் நீட்டினாள். குங்குமத்தை எடுக்க நீண்ட அவனது கரம் சட்டென்று தழைந்தது. அதைப் பார்த்த அவள் புருவங்கள் சுருங்கக் கேட்டாள்.

"என்ன சக்தி...?"

"நீயே இட்டு விடு ரவி... நல்லபடியா நம் கல்யாணம் நடக்கணும்னு வேண்டிக்கிட்டே இடு..."

சரேலென்று அவள் கை பின்னால் இழுத்துக் கொண்டது. முகம் மாறி ஒருவித வைராக்கியத்தில் இறுகிற்று. குரல் அழுத்தமாய் வரத் தொடங்கிற்று.

"இல்ல... அது நடக்காது..." வார்த்தைகள் படபடத்துத் தடுமாறின.

"எது நடக்காது ரவி...?" — அவன் தயங்காமல், தடுமாறாமல் கேட்டான்.

"நம் கல்யாணம்..."

"ஏன் ர—"

அவன் முடிப்பதற்கு முன் இடைமறித்து, குறுக்கிட்டாள் அவள்.

"ஏன்றது உங்களுக்கே தெரியும். திரும்பத் திரும்ப அதையே பேசறதுல அர்த்தமில்ல சக்தி..."

"நீ பேசறதுதான் அர்த்தமில்லாததாக இருக்கு சந்த்ரி. குழந்தைக்காகத்தான் கல்யாணம்ன்றது ரொம்ப அபத்தமானதாகப்படுது..."

"குழந்தைக்காகத்தான் கல்யாணம்னு யாரும் சொல்லல.. குழந்தைக்காகவும்தான் கல்யாணம்ன்னு சொல்றாங்க... அது புரியாத மாதிரிப் பேசாதீங்க சக்தி"

"புரிஞ்சாலும் என்னால ஏத்துக்க முடியலை சந்த்ரி..."

"சில விஷயங்களை நமக்குப் பிடிக்குதோ, பிடிக்கலையோ ஏத்துக்கிட்டுத்தான் ஆகணும்.. நமக்காக மட்டுமே வாழறதில்லை வாழ்க்கை. நம்மைச் சுற்றி உள்ளவங்களை நினைச்சுப் பார்த்து, அவங்களையும் அனுசரிச்சு வாழறதுதான் வாழ்க்கை..."



"அது சரி... சுற்றி உள்ளவங்க அதே மாதிரி நம்மை அனுசரிக்கறாங்களா என்ன...? அவங்க புடிச்ச முயலுக்கு மூணுகாலுன்றாங்க..."

"என்ன செய்யறது...? விதி வசமா அவங்க பிடிச்ச முயலுக்கு மூணுகால் தானே இருக்கு..."

"ர...வி..."

"ப்ளீஸ் சக்தி... உங்க உணர்ச்சிகளும், குமுறலும் எனக்குப் புரியுது. அதே குமுறலும் கொந்தளிப்பும் எனக்கும் இருக்கு..."

"இருக்கிற மாதிரி தோணல..."

பளீரென்று சக்தியிடமிருந்து வந்த அந்த பதிலில் உடைந்து போனாள் ரவிச்சந்த்ரிகா அம்பு குத்தின வலியுடனும், வேதனையுடனும், கண்களில் நீர்மல்க அவனைப் பார்த்தாள்.

பார்த்த போது ஓடிப்போய் அவனைக் கட்டிக் கொண்டு கதறவேண்டும் போலிருந்தது. அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உள்ளுக்குள் இருக்கிற ரணமும், வலியும், வேதனையும் மறைகிற மாதிரி அழத் தோன்றியது. 'என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள் சக்தி... உங்க அம்மாவின் நியாயமான ஆசையை, வேண்டுகோளைப் புறக்கணிக்கிற திடம் என் கிட்ட இல்லையே... மறுக்கிற சக்தி இல்லையே... அந்த அளவு சுயநலமானவளாக என் அம்மா என்னை வளர்க்கலையே...' என்று சொல்லத் தோன்றியது.

சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டாள். இந்த நிலைமையில் தான் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு வினாடி யோசித்தாள். ஒரு முடிவிற்கு வந்தவளாக தன்னை இறுக்கிக் கொண்டு குரல் அழுந்தப் பேசினாள்.

"உங்களுக்குத் தோணாததுக்கு நான் என்ன செய்ய முடியும் சக்தி...? என் மனசு என்னன்றது எனக்குத்தான் தெரியும்..."

"உன் மனசு என்னன்றது உனக்குத் தெரிந்சிருந்தால் இப்படிப் பேச மாட்ட சந்திரி எது என்ன ஆனாலும் சரி... என் சக்திதான் எனக்கு வேணும்னு என்கிட்ட ஓடி வந்திருப்ப..."

"இல்ல... என்னால முடியாது .. அந்த அளவுக்கு சுயநலமா யோசிக்க முடியாது. உங்க அம்மா, அப்பா, அவங்க கனவுகள், ஆசைகள் இவைகளையெல்லாம் யோசிக்கிற போது நம் கல்யாணம் நடக்காது. நடக்காமல் இருக்கிறதுதான் நல்லது..."

"என் அம்மா, அப்பாவைப் பற்றி யோசிக்கிற அளவுக்கு நீ ஏன் என்னைப் பற்றி யோசிக்க மாட்டேன்ற சந்த்ரி...? என் கனவுகளையும், ஆசைகளையும் புரிஞ்சுக்க மாட்டேன்ற...?"

"உங்களை நான் புரிஞ்சுக்கிட்ட அளவுக்கு வேற யாரும் புரிஞ்சுக்க மாட்டாங்க சக்தி. புரிஞ்சுக்கவும் முடியாது".

"அப்படி இருந்துமா இப்படி ஒரு முடிவுக்கு வந்த...?"

"இந்த முடிவுதான் சரி சக்தி. இதுதான் உங்களுக்கு நல்லது செய்யும். உங்க குடும்பத்துக்கே நல்லதாக இருக்கும். அமைதியும், நிம்மதியும் தரும். அதை விட்டுவிட்டு குடும்ப அமைதியையும், நிம்மதியையும் கலைக்கிற. ஒரு தாயின் மனசைக் குமுற வைக்கிற செயலை நான் செய்யவே மாட்டேன். உங்களுக்காகக் கூட செய்ய மாட்டேன். என்னால முடியாது சக்தி... தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க. மறந்துடுங்க... அப்பா அம்மா சொல்றபடி கேளுங்க... தயவு செய்து இனிமே இங்க வராதீங்க... வந்தீங்கன்னா நான் பேச மாட்டேன்... போங்க சக்தி... ப்ளீஸ் போயிடுங்க..."



சொல்லி விட்டுக் கதறிக் கொண்டே அவள் உள் அறைக்குள் ஓடி, கதவை மூடிக் கொண்டாள். பின்னாலேயே போக முயன்ற சக்தியை புவனேஸ்வரி அம்மாளின் கை தடுத்து நிறுத்திற்று.

"அம்...மா..." என்று கண்களில் நீர் தேங்கி நிற்க ஏறிட்டான் அவன்.

"தயவு செய்து அவளை விட்டுடுங்க தம்பி .. முன்ன மாதிரி, தான் உண்டு தன் பரதநாட்டியம் உண்டுன்னு அவ தன் வாழ்நாளைக் கடத்தட்டும் .."

"ஏம்மா... இதுதான் உங்களோட இறுதியான முடிவா...?"

அந்த அம்மாள் பதில் சொல்லாமல் கண்கலங்க, சக்தி உறுதியான குரலில் சொன்னான்.

"சரிம்மா... சந்த்ரிக்குக் குழந்தை பிறக்க வழி இல்லைன்ற காரணத்துனால தானே இந்தக் கல்யாணம் நடக்க முடியாது, கூடாதுன்னு சொல்றீங்க...? இதே கல்யாணத்தை நடத்திக் கொடுக்கக் கூடிய ஒரு முடிவோட நான் திரும்பி வரேன். அப்போ எங்களை எது பிரிக்குதுன்னு பார்ப்போம்... வரேன் சந்த்ரி.. கூடிய சீக்கிரம் ஒரு நல்ல பதிலோட திரும்பி வரேன்... அப்போதான் இந்த சக்தி யாருன்னு நீ புரிஞ்சுப்ப..."

சொல்லி முடித்து, சடாரென்று வீட்டை விட்டு வெளியேறி காரில் அமர்ந்து, கார்க் கதவை அறைந்து மூடி, மிக வேகமாகக் கிளப்பிக் கொண்டு போனான் அவன்...

## 38

பெட்டிக்குள் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த சக்தியின் எதிரில் வந்து நின்றாள் ராஜேஸ்வரியம்மாள். வேகமாகப் படியேறி வந்ததன் காரணமாக மூச்சு

இறைத்தது நெற்றியில் வியர்வை பொடி விட்டிருந்தது. முகத்தில் எல்லையற்ற பயமும் கவலையும் குடி கொண்டிருந்தது. சக்தியை ஏறிட்ட பார்வையில் அழுகை தெரிந்தது. குரலில் அதே அழுகையும், பதட்டமும் எட்டிப் பார்க்க, சற்று வேகமாகவே கேட்டாள் அந்த அம்மாள்.

"இப்ப எதுக்காகப் பெட்டில துணியெல்லாம் எடுத்து வச்சிக்கிட்டிருக்க சக்தி..?"

அவனிடமிருந்து பதில் வரவில்லை. ஒருமுறை அம்மாவை நிமிர்ந்து பார்த்து விட்டு ஷேவிங் செட்டை எடுத்து பெட்டிக்குள் வைத்தான். அதைப் பார்த்த ராஜேஸ்வரியம்மாள் அதற்கு மேல் எதையும் எடுத்து வைக்க முடியாதவாறு அவன் கையைப் பற்றி மீண்டும் அழுத்தமான குரலில் கேட்டாள்.

"கேட்டது காதுல விழல...? இப்ப எதுக்காகப் பெட்டிக்குள்ள துணியெடுத்து வச்சிக்கிட்டிருக்க..."

"வேற எதுக்கும்மா வைப்பாங்க...? ஊருக்குப் போறதுக்குத்தான்..."

"ஊருக்கா...? எதுக்கு...?"

"மனசு சரியில்லம்மா..."

"எந்த ஊருக்குப் போகப் போற...?"

"தெரியல..."

"எப்ப வருவ...?"

"அதுவும் தெரியல..."

"அதுவும் தெரியலன்னா... என்ன அர்த்தம்...? எதுக்காக இப்ப ஊருக்குப் போகணும்? ஏன் தனியாப் போகணும்...?

"சொன்னேனில்ல... மனசு சரியில்லேன்னு..."



"மனசு சரியில்லைன்னால் இப்படி பெட்டியைத் தூக்கிக்கிட்டு ஓடிடறதா...? அப்படிப் போயிட்டால் மட்டும் மனசு சரியாயிடுமா...?"

அவன் பேசாதிருந்தான். அந்த அம்மாளே மேலே பேசினாள்.

"இல்ல... தெரியாமத்தான் கேட்கறேன்... மனசை இங்க வச்சிட்டா போகப் போற...? எங்க போனாலும் நிழல் மாதிரி அதுவும் உன் கூடத்தானே வரும்...?"

அதற்கும் பேசாதிருந்தான்.

"மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டுக்குத் தீ வச்சுக் கொளுத்தின மாதிரி மனசுக்குப் பயந்துக் கிட்டா ஊரை விட்டு ஓடறேன்ற...?

"———"

"பேசாம பெட்டியில் இருக்கிற துணியெல்லாம் எடுத்து பீரோவுல வச்சிட்டு படிக்கற வழியைப் பாரு..."

"இல்லம்மா..." என்று அழுத்தமான குரலில் மறுத்தான் அவன்.

"என்னைத் தடுக்காதீங்க... என் வழியில் போக விடுங்க..."

அவனது குரலின் அழுத்தமும்,பிடிவாதமும் நெஞ்சில் பாரமாக இறங்க மீண்டும் பதறத் தொடங்கினாள்.

"எங்க போகணும்ன்ற...?"

"அதான் தெரியாதுன்னு சொன்னேனில்ல..."

"யாராவது கூட வராங்களா... இல்ல... நீ மட்டும் தனியாப் போறியா...?"

"யாராவதுன்னு நீங்க கேட்கிற விதத்தைப் பார்த்தால் ஒரு வேளை ரவிச்சந்த்ரிகாவைக் கூட்டிக்

கிட்டுப் போறேனோன்னு சந்தேகப்படறீங்களாம்மா...?"

"ஓ!" என்று சடாரென்று முகம் சுளித்தாள்.

"என்னப்பா பேசற...? இந்த மாதிரி சந்தேகமெல்லாம் எனக்கு வரும்னு எப்படிப்பா நினைச்ச...? அந்த அளவுக்குக் கேவலமானவளாகவா தோணுது...?"

அம்மா கேட்ட கேள்வியிலிருந்த வருத்தமும் சோகமும் அவனையும் உருக்கிற்று. மெல்ல தலை குனிந்து குரல் கரகரக்கச் சொன்னான்

"என்னை மன்னிச்சுடுங்கம்மா... மனசு சரியில்லாததால் ஏதேதோ பேசிட்டேன்..."

"நீ பேசு... பரவாயில்ல... ஆனால் இந்த நிலைமைல எங்கேயும் போயிடாதப்பா. அதை என்னால் தாங்கிக்க முடியாதுப்பா...'

"இல்லம்மா... போறதுன்னு நான் முடிவு செய்திட்டேன். அதை யாருக்காகவும் மாத்திக்க மாட்டேன்..."

"அம்மா சொல்றேம்ப்பா.... எனக்காகக் கூடவா மாத்திக்க மாட்ட...?"

"ஐயம் ஸாரிம்மா... ஸாரின்னு சொல்றதைத் தவிர வேற வழியில்ல..."

எப்படி அவனைப் போக விடாமல் தடுப்பது என்பது புரியாமல் ஒரு வினாடி தடுமாறினாள் அந்த அம்மாள். பின்னர் கணவரைத் தேடிக் கொண்டு ஓடினாள்.

"என்னங்க... என்னங்க..." என்று பதறியவாறே அவரது அலுவலக அறைக்குள் நுழைந்தாள்.

ஏதோ எழுதிக் கொண்டிருந்த ராஜரத்தினம் அவளது பதட்டமான குரலைக் கேட்டு எழுந்து கொண்டார்.



"என்ன ராஜம்...? எதுக்காக இப்படி அலறி அடிச்சுக்கிட்டு ஓடிவர...?"

"சக்தி... சக்திங்க—"

"சக்திக்கு என்ன ஆச்சு...?"— வினாடி நேரத்திற்குள் அவர் மனது எதுஎதையோ எண்ணிப் பயந்தது.

சட்டென்று அவரது பயத்தைப் புரிந்து கொண்ட அந்த அம்மாள் சிறிது நிதானத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

"ஒண்ணும் ஆகலீங்க.. பெட்டில துணியெல்லாம் எடுத்து வச்சுக்கிட்டு எங்கயோ கிளம்பறாங்க..."

"அப்படியா..?" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் அவர். பின், "எங்கே போறானாம்...?" என்று கேட்டார்.

"தெரியலீங்க..."

"நீ கேட்கலியா...?"

"கேட்டேங்க... எனக்கே தெரியலேன்னு பதில் சொல்றான்... எனக்கென்னவோ பயமா இருக்குதுங்க..."

"ஒரு பயமுமில்ல... பயப்படாத... வா என் கூட..."

"எங்கேங்க...?"

"சக்தியைப் பார்க்கத்தான்..."

அவர்கள் போன போது சக்தி பெட்டியை மூடிப் பூட்டிக் கொண்டிருந்தான்.

"எங்கப்பா கிளம்பிட்ட...?" என்ற அப்பாவின் குரல் கேட்டுத் திரும்பினான். அவரை எதிர்பார்க்காத மருட்சியுடனும், பயத்துடனும் ஏறிட்டான்.

அந்த முகத்திலும், கண்களிலும் குடிபுகுந்திருந்த எல்லையில்லாத சோகத்தையும், புதிதாய் வந்திருந்த

பயத்தையும் புரிந்து கொண்ட ராஜரத்தினம் மெதுவாக நடந்து அவனருகில் போனார், தோளில் கைபோட்டு தோழமையாகத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். முதுகில் வருடிக் கொடுத்தார். மென்மையாக அவன் கண்களுக்குள் பார்த்தவாறே சொன்னார்.

"என்னப்பா... எதுக்குப் பெட்டியெல்லாம் தயார் பண்ணிக்கிட்டிருக்க...? எங்கேயாவது ஊருக்குப் போற உத்தேசமா...?"

"ஆ... ஆமாம்ப்பா..." — அவனது குரல் தழைந்து தழுதழுத்தது.

"எங்க போறதா உத்தேசம்...?"

"தெரிய...லப்பா..."

"தெரியலைன்னா இன்னும் முடிவு பண்ணலியா...?"
"ஆமாம்..."

"கூட யாராவது காலேஜ் பிரெண்ட்ஸ் வராங்களா...?"

"இல்ல..."

"ஏம்ப்பா...? நீ மட்டும் தனியாகவா போகப் போற...?"

"ஆமாம்ப்பா... கொஞ்ச நாள் தனியா இருக்கணும் போல இருக்கு... மனசு சரியாகிற வரை கூட யாரும் வேணாம்னு தோணுது..."

"அப்படியா...?" என்று சில வினாடிகள் மௌனமாக யோசித்த அவர் பின் மெதுவாகத் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

"நான் ஒண்ணு சொல்றேன் கேட்கறியா...?"

"சொல்லுங்கப்பா..."



"ஊட்டிக்குப் போயேன்... நம்ம எஸ்டேட் பங்களாவுல டாக்டர் ரவி மட்டும் தனியாகத்தான் தங்கியிருக்கான். அங்க நர்ஸிங்ஹோம் வச்சு மலைஜாதிக் காரங்களுக்கும், ஆதிவாசிங்களுக்கும் வைத்தியம் செய்துக்கிட்டிருக்கான்..."

"எந்த ரவிப்பா...? உங்க சினேகிதர் ஜெகதீஸன் செட்டியாரோட மகனா...?"

"அவனேதான்... உனக்குக் கூடப் பழக்கம் தானே சக்தி... ரெண்டு பேரும் ஒண்ணா கிரிக்கெட் எல்லாம் விளையாடியிருக்கீங்க... மறந்துட்டியா...?"

"இல்லப்பா... இப்போ ஞாபகம் வருது... அந்த ரவி நம் எஸ்டேட் பங்களாவுலயா தங்கியிருக்கான்...?"

"ம்... ஒரு வருஷமா அங்கதான் இருக்கான். தண்டத்துக்குப் பூட்டி வச்சிருக்கிற பங்களா ஒரு நல்ல காரியத்துக்குப் பயன் படட்டுமேன்னு நான்தான் உபயோகிச்சுக்கச் சொன்னேன்... நல்ல பையன்... உன் மனசறிஞ்சு நடப்பான். உனக்கும் ஒரு மாறுதலா இருக்கும். பத்துநாள் அங்கதான் போய் இருந்திட்டு வாயேன்..."

தயங்கிக் கொண்டே சரி என்று தலையாட்டினான் அவன்.

"கார்லயே போறியா...?"

"சரிப்பா..."

"டிரைவரைக் கூட கூட்டிக்கிட்டுப் போயேன்...?"

"வேணாம்ப்பா..."

"நீயே ஓட்டுவியா...? மனசு வேற சரியில்லேன்ற..?"

"ஓட்டுவேன்...?"

"தைரியமிருக்கா...?"

"இருக்கு..."

"இப்பவே கிளம்பப் போறியா...?"

"ஆமாம்."

"அப்படின்னா கிளம்பு... நான் ரவிக்கு போன் பண்ணி நீ வரப் போறதைத் தெரியப்படுத்தறேன்..."

"என்னங்க...?"

"என்ன ராஜம்...?" — மனைவியின் பக்கம் திரும்பினார்.

"நானும் கூடப் போகட்டுங்களா...?"

"எதுக்கு...?"

"தனியா அவனை அனுப்பவேணாம்னு தான்.."

"வேணாம் ராஜம். அவன் குழந்தையில்ல. தனியாகவே போகட்டும். ஒரு பயமுமில்ல... நீ கிளம்பு சக்தி... பார்த்து ஓட்டு .. ஊட்டி போனதும் மறக்காமல் ஒரு டெலிபோன் மட்டும் பண்ணிடு... ரவிகிட்டேயும் சொல்றேன்... மனசைச் சும்மா அலைய விடாதே... வருத்தப் படுத்திக்காதே... நாம் என்ன நினைச்சாலும் கடவுள் தீர்மானிக்கிறபடிதான் நடக்கும். அதனால் பொறுப்பை அவர்கிட்ட விட்டுட்டு தெளிவாக இருக்கப் பாரு... என்ன...?"

'சரி' என்று தலையாட்டினான்.

"ஒரு வாரம், பத்து நாளுக்கு மேல் இருக்காத... ஏன்னால் காலேஜ் இருக்கு... பரிட்சை வேற வருது..."

"சரிப்பா..."

"அப்போ கிளம்பு... நேரமாகுது பாரு..."

"வரேம்மா... வரேம்ப்பா...." என்றவனின் பெட்டியைத் தானே தூக்கிக் கொண்டு வந்து காரில்



வைத்து வழியனுப்பினார் ராஜரத்தினம். கார் கிளம்பி கேட்டை விட்டு வெளியேறியதும் மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

"பயப்படாத ராஜம். அவனுக்கு ஒண்ணும் ஆகாது .. நல்லபடியா திரும்பி வருவான். அவனுடைய இப்போதைய மனநிலைக்கு இந்த மாறுதல் அவசியம் தேவை. அதனால் கவலைப்படாமல் [illegible]

11842
2888966

## 39

பெங்களூர் போய், மைசூர் [illegible] அடைந்த போது மிகவும் களைத்துப் போயிருந்தான் சக்தி. சொகுசான குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட வெளிநாட்டுக் கார் என்றாலும் நீண்ட நெடும் பயணம் அலுப்பைத் தந்தது. அதுவும் அவனே ஓட்டிக் கொண்டு போனதினாலும், உடம்போடு மட்டுமின்றி மனதும் இன்னமும் சங்கடப் பட்டதன் காரணமாக அலுப்பும் களைப்பும் அதிகம் தெரிந்தன. 'இந்தப் பயணத்தில் ரவிச்சந்த்ரிகாவும் தன்னோடு வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்....' என்பதை எண்ணிப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். இந்தக் குழந்தைப் பிரச்சினை பெரிதாக எழாத பட்சத்தில் ரவிச்சந்த்ரிகாவைத் தன்னோடு அழைத்துக் கொண்டே வந்திருக்கலாம் எனவும் நினைத்தான். உடனே அப்படி ஒரு பிரச்சினை எழாது போயிருந்தால் தன்னுடைய இந்தப் பிரயாணத்திற்கே அவசியமிருந்திருக்காது என்பதும் பட்டது.

வழி முழுதும் வண்டி ஓட்டிக் கொண்டே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை யோசித்தான். ரவிச்சந்த்ரிகா ஒப்புக் கொள்வாளானால் அம்மாவையும் மீறி கல்யாணத்தை முடித்துக் கொண்டிருக்கலாம்.

தேன்நிலவிற்கு சந்தோஷமாக இரண்டு பேரும் சேர்ந்து இதே ஊட்டிக்கு வந்திருக்கலாம். 'ஓ! தேன் நிலவிற்கு ஊட்டிதானா...? ஸ்விட்ஸர்லாந்து போயிருக்கலாம். அங்கு ஒரு வாரம் இருந்து விட்டுப் பின்னர் லண்டன், பிரான்ஸ் எல்லாம் சுற்றியிருக்கலாம். அங்கெல்லாம் ரவிச்சந்த்ரிகாவின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருக்கலாம். 'ம்ஹூம்... கூடாது தேனிலவோடு பரதநாட்டிய நிகழ்ச்சியைப் பிணைக்கக் கூடாது. தேனிலவை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிய பின்னர் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்காக மீண்டும் வெளிநாடு கிளம்பியிருக்கலாம்...

ஆனால் அவை அனைத்தும் வெறும் கற்பனையாகப் போன ஏக்கத்தில் அவனிடமிருந்து ஒரு ஆழமான பெருமூச்சு வெளிப்பட்டது. ரவிச்சந்த்ரிகா ஒப்புக் கொள்ளாத ஏக்கம் வாட்டிற்று. அம்மாவை விட அவளது பிடிவாதம் அதிகமிருந்தது வருத்தப்படுத்திற்று. இனி அம்மாவே சரி என்று சொன்னாலும் அவள் சரி சொல்ல மாட்டாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ரவிச்சந்த்ரிகாவை அடைய வேண்டுமானால் குழந்தைப் பிரச்சினைக்கு ஒரு வழி காண வேண்டும். வேறு ஏதாவது குழந்தையை சுவீகரித்துக் கொள்ளவும் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இந்தப் பிரச்சினை ரவிச்சந்த்ரிகாவிற்கு இல்லாமல் தனக்கு ஏற்பட்டிருக்குமானால் என்னவாகியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தான். அப்போது ரவிச்சந்த்ரிகா தன்னை மறுத்திருப்பாளா...? குழந்தையைக் காரணம் காட்டி ஒதுக்கியிருப்பாளா...? அல்லது அம்மாதான் இந்தக் கல்யாணத்திற்குத் தடை சொல்லியிருப்பாளா...?

இதே அம்மா அப்போது ரவிச்சந்த்ரிகாவின் கையைப் பற்றிக் கொண்டு கெஞ்சியிருப்பாள். 'என் மகனுக்கு வாழ்வு கொடு... ஒரு குழந்தைக்காக என் மகனின் வாழ்க்கையை வீணாக்கி விடாதே...' என



அழுது புலம்பியிருப்பாள். ரவிச்சந்த்ரிகாவும் சினிமாக் களில் வருகின்ற கதாநாயகிகளைப் போன்று வசனம் பேசியிருப்பாள்.

'அப்படியெல்லாம் சொல்லாதீங்க அம்மா... அவரால் எனக்கு ஒரு குழந்தையைத் தர முடியாதது பெரிய விஷயமாம்மா...? குழந்தை வேணாம். ஆனால் வாழ்க்கை தர முடியுமில்லையா...? அதைத் தந்தால் போதும்மா... எனக்கு உங்க மகன்தான் வேணுமே தவிர குழந்தை இல்லை...' என்றிருப்பாள்...

ஆனால்... இப்போது...? ஒரே பிரச்சினை ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபடுகிறதே... 'ஆண் என்றால் எந்தக் குறையையும், எப்படிப்பட்ட தவற்றை யும் மறந்து, அல்லது மன்னித்து ஏற்றுக் கொள்கிற உலகம் பெண் என்றால் ஏன் அவ்வாறு ஏற்றுக் கொள்ள மறுக்கிறது...? பெண்ணுக்கு ஒரு நீதியும், ஆணுக்கு ஒரு நீதியுமாக எப்படித் தராசு தாழ்ந்து போயிற்று...? எதனால் அவ்வாறு தாழ்ந்தது...? தாழ வைத்தவர்கள் யார்...?

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் அவனுக்குக் கிடைக்காமற் போனாலும் பிரச்சினைக்கான சிக்கல் சற்று விலகின மாதிரி பட்டது. இதே பிரச்சினை தனக்கு இருக்கிற பட்சத்தில் அது ஒரு பிரச்சினையாகவே கருதப்பட்டிருக்காது என்பது புரிந்தது. தனக்குக் குழந்தை பிறக்க வழியில்லை என்றிருக்கக் கூடாதா என ஏங்கினவனுக்குச் சட்டென்று ஒரு யோசனை பிடி பட்டது.

'இப்படிச் செய்தால் என்ன...?' என்பதை, தானாக வாய்விட்டுக் கேட்டுக் கொண்டான்.

'தனக்கும் குழந்தை பிறக்க இயலாது என்று ஆகி விட்டால்... இரண்டு குழந்தைகளுக்குப் பின் குழந்தை வேண்டாம் என்பதற்காக பெண்கள் கருத்தடை

ஆபரேஷன் செய்து கொள்கிறார்களே .. அது மாதிரி செய்து கொண்டால் ? அந்த ஆபரேஷனையும் கூட பெண்கள் தான் செய்து கொள்ளும்படி நேர்கிறது. ஆணுக்கும் அதே கருத்தடை ஆபரேஷன் செய்ய முடியும். பார்க்கப் போனால் பெண்களை விட ஆண்களுக்குக் கருத்தடை ஆபரேஷன் செய்வது சுலபம். அதனால் அவர்களின் உடல்நலம் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்றாலும் கூட பெண்களைச் செய்து கொள்ளச் சொல்லித்தான் வற்புறுத்துகிறார்கள். பெண்களும் வேறு வழியின்றி குடும்ப நலனும் குழந்தைகள் நலனும் கருதி தாங்களே அந்த அறுவை சிகிச்சைக்கு உடன் படுகிறார்கள்.

இந்த நிலைமை மாற வேண்டும். ஆண்கள் கருத்தடை ஆபரேஷன் செய்து கொள்ள முன்வர வேண்டும் என்றெல்லாம் அந்த நிலைமையிலும் யோசனை தோன்றிற்று. மற்ற ஆண்கள் செய்து கொள்கிறார்களோ இல்லையோ உடனடியாகத் தான் அந்த ஆபரேஷனை செய்து கொள்ள வேண்டும் என்கிற முடிவிற்கு வந்தான்.

தனக்கும் குழந்தை பிறக்க வழியில்லாத பட்சத்தில் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்து போகும். அம்மாவோ, ரவிச்சந்த்ரிகாவோ ஒன்றும் பேச இயலாது. பேச மாட்டார்கள். பேசுவதற்கும் வழி இருக்காது' ரவிச்சந்த்ரிகாவை அடைய வேண்டுமானால் அதைத் தவிர வேறு மார்க்கம் ஒன்றுமில்லை என்பதில் திடமாகவும், தீர்மானமாகவும் முடிவிற்கு வந்தவனுக்குச் சட்டென்று ஒரு சந்தேகமும் ஏற்பட்டது.

இரண்டு குழந்தைகளைப் பெற்று தகப்பனான பின்னரே கருத்தடை அறுவை சிகிச்சை செய்வார்களே தவிர கல்யாணமே ஆகாத, கல்லூரி மாணவன் ஒருவனுக்குச் செய்ய யாராவது முன் வருவார்களா என்பது கேள்விக்குறியாயிற்று. அதிலும் அப்பா,



அம்மாவிற்குத் தெரியாமல், ரவிச்சந்த்ரிகாவிற்கும் தெரியவராமல் செய்து கொள்ள வேண்டும்.

யார் செய்வார்கள்...? என்பதை யோசித்து சென்னையிலுள்ள தனக்குத் தெரிந்த அத்தனை டாக்டர்கள் பெயரையும் சொல்லிப் பார்த்த போது அவர்கள் எல்லாருமே அப்பாவிற்கும் தெரிந்தவர்கள் என்பது அறிவிற்கு உறைத்தது.

வேறு யார் இருக்கிறார்கள் என்று பார்த்த போது தான் சட்டென்று தங்களின் ஊட்டி பங்களாவில் தற்போது தங்கியிருக்கிற தன் பழைய நண்பனான ரவியின் நினைவு பளிச்சிட்டது.

பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி சந்தோஷப் பட்டான். ரவியிடம் தன் முழுக்கதையையும் சொல்லி எப்படியாவது அவனை சம்மதிக்க வைத்து விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். தன்னை ஊட்டிக்கு அனுப்பி தங்கள் பங்களாவை தன் நண்பன் டாக்டர் ரவி நர்ஸிங் ஹோமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற விஷயத்தைச் சொல்லி அனுப்பிய அப்பாவிற்கு நன்றி சொல்லிக் கொண்டான். இவை அனைத்தையும் எங்கோ இருந்து கொண்டு பொம்மலாட்டம் மாதிரி நடத்தி வைக்கிற ஆண்டவனை நினைத்துக் கொண்டான்.

'கடவுளே... தக்க சமயத்தில் எனக்கு வழி காட்டி அப்பா ரூபத்தில் வந்து ஊட்டிக்கு அனுப்பி வைத்த மாதிரி அந்த டாக்டர் ரவியின் மனதிலும் புகுந்து என் நினைப்பை செயலாக்கவும் உதவி செய்...' எனவும் வேண்டிக் கொண்டான்.

டாக்டர் ரவியிடம் என்ன சொல்ல வேண்டும், எதைப் பேச வேண்டும், என்பதையெல்லாம் யோசித்து ஊட்டி பங்களாவை அடைந்த போது டாக்டர் ரவி

அவனுக்காக வாசல் வராந்தாவிலேயே கூடை நாற்காலியில் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தான்.

"ஹலோ.... சக்தி... எப்படியிருக்கே...? இத்தனை நாளா என் ஞாபகம் கூட உனக்கு வரலே இல்லே...?' உங்கப்பா போன் பண்ணிச் சொன்னாரு... உனக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கேன். வா... வெல்கம் டு ஊட்டி..." என்று சக்தியின் தோளில் கைபோட்டு மிகுந்த அன்புடனும், நட்புடனும், உரிமையுடனும் உள்ளே அழைத்துச் சென்றான்...

ரவியின் முகத்தையே பார்த்தவாறு வீட்டினுள் நுழைந்த சக்தி, 'இந்த முகம் தன் வேண்டு கோளுக்கு இணங்குமா...?' என மீண்டும் யோசித்தான்.

'கடவுளே, எப்படியாவது இவனை இணங்கச் செய்து விடு...' என்பதே அவனது பிரார்த்தனையாக இருந்தது...

# 40

உரிமையாய், தோழமையாம், இதமாய் தோளில் கைபோட்டு அணைத்து உள்ளே அழைத்துக் கோண்டு போன அந்த வினாடியிலிருந்து சக்தியிடம் மிகவும் நெருங்கிப் பழகினான் டாக்டர் ரவி. எப்போதோ கிரிக்கெட் விளையாடிய அந்த நாட்களின் அதே நட்பு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற மாதிரி அவன் பழக்கம் இருந்ததே தவிர புதிதாகப் பழகுகிற மாதிரி இல்லை. அந்நியமாகத் தெரியவில்லை. இடையில் ஏற்பட்ட அத்தனை வருட இடைவெளியையும் நிமிடமாக விரட்டியடித்தான். அன்பாய், பிரியமாய் பேசினான். பளீரென்று வெள்ளையாய் சிரித்தான். ஒரு டாக்டருக்கு இருக்க வேண்டிய கண்ணியமும்,



கம்பீரமும் சிறிதும் குறையாமல் இருந்த போதிலும் அவனது பழக்கமும், சிரிப்பும், பேச்சும் குழந்தையாய்த் தெரிந்தது. கள்ளமற்ற மனதைப் பிரதிபலித்தது. சில பேரைப் பார்த்த உடனே மனது ஓடிப்போய் ஒட்டிக் கொள்ளுமே, அந்த மாதிரி ஒட்டிக் கொண்டது. இயல்பானதோர் பிடிப்பு ஏற்பட்டது. நல்லவன், நாணயமானவன், என்கிற அபிப்பிராயம் தோன்றிற்று. அவனை நம்பி எதையும் சொல்லலாம் என்பதான தைரியம் வந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ரவியின் செய்கைகளிலும், பேச்சிலும் வெளிப்பட்ட அன்பையும், பிரியத்தையும் விட மேலோங்கி நின்ற 'நன்றி' உணர்ச்சி சக்தியைத் தடுமாற வைத்தது. அதை அவன் தன் ஒவ்வொரு பேச்சிலும், நிமிஷத்திற்கு நிமிஷம் வெளிப்படுத்தியது இன்னமும் சங்கடத்தைத் தந்தது. இத்தனை பெரிய வீட்டை அவன் தங்கிக் கொள்ளவும், ஆஸ்பத்திரியாக உபயோகப்படுத்திக் கொள்ளவும் கொடுத்த அப்பாவின் பெரிய மனதிற்குக் காட்டப்படுகிற நன்றி உணர்ச்சி அது என்றே கருதினான்.

ஆனால் தன் நன்றி உணர்ச்சிக்கு அது மட்டும் காரணமல்ல என்பதை நேற்றைய முன் தினம் பேச்சு வாக்கில் சொன்னான் ரவி.

"நீ நினைக்கிற மாதிரி இந்த வீட்டை ஆஸ்பத்திரியா உபயோகிக்கத் தந்தது மட்டுமில்ல சக்தி. இப்படி ஆஸ்பத்திரியா உபயோகிக்கப் பயன் படுதே 'டாக்டர்' பட்டம் அது கூட உங்கப்பா தந்ததுதான்..."

"என்ன சொல்றீங்க...? எனக்குப் புரியல..." என்று புருவங்கள் சுருங்க அவனைப் பார்த்தான் சக்தி.

"உங்கப்பா வருஷம் தவறாமல் இரண்டு ஏழை மாணவர்களைத் தேர்ந்தெ0த்து அவங்க விருப்பப் பட்ட அளவுக்குப் படிப்பு சொல்லித் ,தறாங்க இல்ல...?

அந்த ஏழை மாணவங்கள்ல ஒருத்தனா, உங்கப்பா கொடுத்த பணத்துல படிச்ச டாக்டர் படிப்பு இது. இப்போ நான் தங்கியிருக்கிற இந்த வீடு, செய்யற டாக்டர் தொழில், இன்றைய வாழ்க்கை, என் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமே... உங்களாலதான்னு சொல்ல வரேன்...''

''என்னால இல்ல... எங்க அப்பாவாலன்னு சொல்லுங்க...''

''நீங்க வேற உங்க அப்பா வேறன்னு நான் நினைக்கல... அப்படிப் பிரிச்சுப் பார்க்கவும் இல்ல, பார்க்க என்னால முடியாது... அந்த மாதிரிப் பழகவும் எனக்குத் தெரியாது. யார்கிட்ட பழகினாலும் நெஞ்சார, மனசார உண்மையான அன்பும், நிஜமான பிரியமும் சேர்ந்து பழகறதுதான் என் குணம்...''

கண்களில் நீர் கோர்த்து நிற்க, குரல் கரகரக்க அவன் சொன்ன அந்த வினாடியில் தாங்க முடியாதவனாக எழுந்து அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டான் சக்தி. பேச முடியாமல் தொண்டையை அடைத்துக் கொண்டது. நெஞ்சு விம்மிற்று. குரல் இறுகி கண் கலங்கிற்று.

''என்ன சக்தி...?'' என்று கேட்டதும் ஒன்றுமில்லை எனத் தலையை மட்டும் ஆட்டத்தான் முடிந்ததே தவிர வேறு பதில் சொல்ல முடியவில்லை.

அன்றைக்கு ஏற்பட்ட அதே உணர்ச்சி வசப்படுதலும், உருகுதலும் அன்றும் ஏற்பட்டது சக்திக்கு. காலையில் எழுந்திருக்கும் முன்னரே அறைக் கதவைத் தட்டி உள்ளே நுழைந்து, அவனை எழுப்பி, 'குட்மார்னிங்' சொல்லி ஆவி பறக்கும் தேனீர்க் கோப்பையை நீட்டிய போது நெஞ்சு நெகிழ்ந்தது. தன் வீட்டில் வேலைக்காரன் செய்கிற வேலையை இவன் ஏன் செய்யவேண்டுமென்று தோன்றிற்று. கடமை



தவறாத ஒரு மனைவியைப் போல் அந்த ஊட்டிக் குளிரிலும் அதிகாலையில் எழுந்து, தானே காப்பி போட்டு, டிபன் செய்து சமையலையும் முடித்து பின்னர் மடமடவென்று வீட்டைப் பெருக்கி, சுத்தப்படுத்தி, சமையல் கட்டில் இரவு சாப்பிட்டுப் போட்ட பாத்திரங்களையும், காலையில் சமைப்பதற்கு உபயோகப்படுத்திய சாமான்களையும் கழுவித் துடைத்து அடுக்கி வைத்துப் பின்பு குளித்து, உடைமாற்றி, சாப்பிடுவதாகப் பெயர் பண்ணி விட்டு, வீட்டின் பக்கத்துப் பகுதியில் இருந்த நர்ஸிங் ஹோமிற்கு அவன் ஓடுவதைப் பார்க்க சக்திக்குப் பரிதாபமாக இருந்தது. எதற்காக இவன் இப்படி ஓடுகிறான் என்று தோன்றிற்று. இந்த ஓடலுக்கு ஏதோ காரணம் இருப்பதாகப் பட்டது. அது என்ன என்பதைத் தெரிந்து கொண்டு விடுகிற நோக்கத்தில் அவனிடமிருந்து தேனீர்க் கோப்பையை வாங்கிக் கொண்டு அவனை ஏறிட்டான்.

சக்தியின் பார்வைக்குப் பொருளறியாத அவன் அடுத்து செய்வதற்குக் காத்திருக்கும் வேலைகளை நினைத்து அவசரப்பட்டான்.

''ம்... சீக்கிரம் குடிச்சிட்டு தா சக்தி... எனக்குத் தலைக்கு மேல வேலை இருக்கு...''

''தெரியும்... நான்தான் இங்க வந்ததுலேர்ந்து பார்த்துக்கிட்டிருக்கேனே...''

''தெரிஞ்சுக்கிட்டே நேரமாக்கினால் எப்படி...?''

''நான் நேரமாக்குவதற்கும் ஒரு காரணம் இருக்குமில்ல...?''

''அப்படியா...? அப்படின்னால் சீக்கிரம் சொல்லு...''

''எதை...?''

''அந்தக் காரணத்தை...''

"அதை அப்படியெல்லாம் நின்னுக்கிட்டும், ஓடிக்கிட்டுப் சொல்ல முடியாது. கொஞ்சம் நிதானமா உட்கார்ந்தால்தான் சொல்ல முடியும்..."

"அப்படின்னால் பகல் சாப்பாட்டிற்கு ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வருவேனே... அப்போ கேட்டுக்கறேன்..."

"நோ... நோ..." என்று வேண்டுமென்றே மறுத்தான் சக்தி.

"எனக்கு இப்பவே சொல்லணும்னு தோணுது. இப்பவே தெரிஞ்சுக்கணும்னு ஒரு வேகம் ஏற்படுது..."

"ஓ.கே... ஜஸ்ட் ஒன் மினிட், நான் போய் காஸ் அடுப்பை அணைச்சிட்டு வரேன்... என்ன—?"

"சரி..."

"அதுக்குள்ள நீ டீ குடிச்சிடு சக்தி... இல்லைன்னால் ஆறிப் போயிடும்..." என்று சொல்லிக் கொண்டே போனான். போய் இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் திரும்பி வந்தான். சக்தியின் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்து மென்மையாய் புன்னகைத்துக் கொண்டே அவனை ஏறிட்டான்.

"ம்... இப்பச் சொல்லு... என்றான்.

ஒரு வினாடி தயங்கி, எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்த சக்தி, பின்னர் ஓர் ஆரம்பம் பிடிபட்டு விட்ட, தொனியில் தடாரென்று கேட்டான்.

"என்னங்க இது...? நீங்க எதுக்குங்க இதெல்லாம் செய்யணும்...?

"எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் ரவியின் முகம் அதற்கும் சிரித்தது. பதில் கேள்வியாக, "இதெல்லாம்னால் எதெல்லாம்...?" என்றான்.



அதற்குப் பதிலளிக்காமல் சக்தி மீண்டும், "நீங்க இதெல்லாம் செய்யிறது எனக்குப் பிடிக்கலீங்க..." என்றான்.

அதற்குப் பின்னரே பளீரென்று வெள்ளைச் சிரிப்பாய் சிரித்துக் கொண்டிருந்த ரவியின் முகம் சடாரென்று மாறிற்று. உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து இடுப்பில் கை வைத்து சக்தியை முறைத்துப் பார்த்தான். அந்தப் பார்வையில் தெரிந்த கோபம் அவனது இயல்பாக இல்லாததாகப் பட, எப்போதும் சிரித்து கொண்டிருக்கும் முகம் மாறியது என்னவோ போலிருக்க, தயங்கியபடி கேட்டான்.

"ஏங்க சடார்னு உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து நின்னு என்னை அப்படிப் பார்க்கறீங்க...? நான் தப்பா ஏதாவது சொல்லிட்டேனா...?"

"தப்பா சொல்லணும்னு நினைச்சு சொல்லல... ஆனால் சரியா சொல்றதா நினைச்சு தப்பாவே சொல்ற..."

"அப்படின்னா அது அறியாமல் செய்த தப்பாகத்தானே இருக்க முடியும்...?" சக்தியும் விடாமல் பதிலுக்குக் கேட்டான்.

"அறிஞ்சு செய்தாலும், அறியாமல் செய்தாலும் தப்பு—தப்புத்தானே...?"

"தப்புத்தான், ஆனால் நான் அப்படி என்ன தப்பு செய்தேன்னு தெரியலீங்களே...?"

"இதுதான்... இந்த 'ங்களே' தான் நீ செய்த தப்பு. இனிமேலயும் அந்தத் தப்பைச் செய்யக் கூடாதுன்னு சொல்றேன். ஏன் சக்தி... இங்க வந்ததுலேர்ந்து நான் உன்னை எப்படிக் கூப்பிடறேன்...?"

'வா, போ'ன்னு ஒருமைல தானே..? ஆனால் நீ...? வாங்க,' போங்கன்னு மரியாதை கொடுத்துப் பன்மைல கூப்பிடற. அதன் மூலம், 'என்னை இன்னமும் நெருங்க முயற்சிக்காத... கொஞ்சம் தள்ளியே நில்லு... அதுதான் நீ நிற்க வேண்டிய இடம்'னு சொல்ற இல்ல...?''

அந்தக் கேள்வி கொக்கியாய் மாட்டி மனசை இழுத்தது. அம்பு மாதிரி குத்திக் கொண்டு வலியேற் படுத்தியது. இந்த அன்பிற்கும், நட்பிற்கும் தனக்கு என்ன தகுதி இருக்கிறது என்ற கேள்வியில் நெஞ்சு முட்டிற்று.

'யார் இவன்...? இவனுக்கும் தனக்கும் என்ன உறவு...? எப்போதோ அரை நிஜார் போட்ட பருவத்தில் கிரிக்கெட் விளையாடியதைத் தவிர வேறு என்ன சம்பந்தம்...? அப்பா பணம் கட்டி டாக்டர் படிப்பு படிக்க வைத்ததுதான் காரணம் என்றால் வெறும் நன்றி உணர்வை மட்டும் காட்டினால் போதுமே... ஆனால் இவன் காட்டுகின்ற அன்பு, பேச்சில் வெளிப்படுகிற மென்மை, பார்வையின் இதம், நெஞ்சோடுநெஞ்சாக ஒட்டிக் கொண்டு விட்ட நட்பு...

வெறும் நட்பா...? நட்பு மட்டும்தானா இது ..? இல்லை. அதற்கும் மேலான ஒன்று, ஆத்மாவோடு ஆத்மா ஐக்கியமான சங்கமம், பூர்வஜென்ம பந்தம், விட்ட குறை தொட்ட குறை. ரவிச்சந்த்ரிகாவுடன் ஏற்பட்டதைப் போன்றது. அவள் உயிரோடு உயிராகக் கலந்து விட்டவள் என்றால், ஆன்மாவோடு ஆன்மா வாக ஒன்றிப் போனவள் என்றால் இவன் – இந்த ரவி மனதோடு மனமாக இணைந்து நிற்பவன், இனிய நண்பன்... இப்படிப்பட்டவனை அந்நியமனிதனைப் போல் 'வாங்க, போங்க' என்றழைத்தது தவறுதான், தவறு என்பது தெரிந்த பின் அதைத் திருத்திக் கொள்ள வேண்டியதுதான், அப்படித் திருத்திக் கொள்பவன் தான் மனிதன்.



மனிதனாக இருக்க, மனிதனாக வாழ ஆசைப் பட்டான் சக்தி. அதனால் எழுந்து நின்று ரவியின் கைகளைப் பற்றி தழுதழுத்த குரலில் சொன்னான்.

''சரி ரவி இனிமேல் உன்னை பன்மையில் கூப்பிட மாட்டேன், வா, போன்னே சொல்றேன், சரியா ..?''

''ரொம்ப சரி, இப்பத்தான் நீ என் கூட கிரிக்கெட் விளையாடின பழைய சக்தி... ஆமாம், என்கிட்ட ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு வேலையெல்லாத் தையும் விட்டுட்டு வரச் சொன்னியே... என்ன விஷயம் ...?''

''அதுவா...?'' என்று அவனை இழுத்து உட்கார வைத்து, தானும் உட்கார்ந்து மிக மெதுவாக, காயம் பட்ட இடத்தை வருடிக் கொடுக்கிற மென்மையுடனும், நிதானத்துடனும் ஆரம்பித்தான் சக்தி...

# 41

''நீ ஏன் இந்த வேலையெல்லாம் செய்யணும் ரவி...?''— நிதானமாக வருத்தம் இழையோடவும் கேட்டான் சக்தி.

அந்தக் கேள்வி ரவியை ஆச்சரியப் படுத்திற்று. அவன் எதைச் சொல்கிறான் என்பது புரியாமல் புருவங்கள் சுருங்க அவனைப் பார்த்தான்.

''எந்த வேலையைச் சொல்ற சக்தி...? நான் செய்துக் கிட்டிருக்கிற டாக்டர் வேலையா?'' என்று அதே வியப் புடன் கேட்டான்.

''சீ ! யாராவது டாக்டர் வேலையை ஏன் செய்ய றேன்னு மடத்தனமாக் கேள்வி கேட்பாங்களா...?''

"அப்படின்னா...?"

"நீ செய்துக்கிட்டிருக்கிற மற்ற வேலைகளைச் சொல்றேன்...?"

"மற்ற வேலைகள்னா...? நீ எதைக் குறிப்பிடறேன்னு தெரியல சக்தி... தினமும் சாயந்திர நேரத்துல ஏழைக் குழந்தைகளை வரவழைச்சுப் பாடம் சொல்லித் தர்றதையா...? இல்லைன்னால் ஒழிஞ்ச போது குடிசைப் பக்கம் போய் சுத்தம், சுகாதாரம்னு கற்றுத் தரனே... அதைச் சொல்றியா...?"

"...ஏன் ரவி... நான் செய்யாத, என்னால செய்ய முடியாத, செய்ய்ணும்னு நினைச்சுக் கூடப் பார்க்காத நல்ல காரியங்களையெல்லாம் நீ செய்யறியே... அதையெல்லாமா நான் தப்பு சொல்லப் போறேன்...?"

"பின்ன...? வேற எதைச் சொல்ற சக்தி...?"

"சமையல் செய்யறது, பாத்திரம் தேய்க்கிறது, வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்யறது—"

"அடக் கடவுளே!" என்று வாய் விட்டுச் சிரித்தான் ரவி.

"இதையெல்லாமா தப்புக் காரியங்கள்னு சொல்ற..."

"தப்புக் காரியங்கள்னு சொல்லலை. நீ ஏன் செய்யணும்னுதான் கேட்கறேன்...?"

"என்ன சக்தி இது...? நேரம் இருக்கு... செய்யறேன்..."

"நேரம் எங்க இருக்கு...? காலைல நர்ஸிங் ஹோம் பக்கம் போனியானால் திரும்பி வர ராத்திரி எட்டாகுது..."

"காலைல எட்டு மணிக்கு முன்னாலயும், ராத்திரி எட்டு மணிச்கு அப்புறமும் சும்மாத்தானே இருக்கேன். அந்த நேரத்தை உபயோகமாச் செலவிடலாம்னு—"



"ஆமாம். உபயோகமாச் செலவிட இந்த மாதிரி வீட்டு வேலைகள் தானா கிடைச்சது உனக்கு...?"

"ஏன் இப்படிப் பேசற சக்தி...?

ஒரு வேளை நீ வளர்ந்த சூழ்நிலை காரணமாக அப்படிச் சொல்றியோ என்னவோ...? பார்வை போற பக்கமெல்லாம் வேலைக்காரங்க உத்தரவுக்குக் காத்துக்கிட்டு நிற்கிற கோடீஸ்வரர் வீட்டின் ஒரே பிள்ளையாகப் பிறந்ததுனால பேசறியோ என்னவோ...? ஆனால் எனக்கு இந்த வேலையெல்லாம் புதுசில்ல. வித்தியாசமானதில்ல... எங்கப்பா வியாபாரத்துல நொடிச்சு, ஒண்ணுமில்லாமல் போய் தற்கொலை செய்துக்கிட்டப்போ எனக்கு வயசு பத்து, அப்போ தான் நான் உங்க வீட்டுக்கு கிரிக்கெட் விளையாட வந்துக்கிட்டிருந்தேன். அப்பா செத்துப் போனதுக்கு அப்புறம் வர்றதை நிறுத்திட்டேன்...

"...அப்பா போன வருத்தம் தாங்காமல், கடன் காரங்க தொல்லை தீராமல் படுக்கைல விழுந்த எங்கம்மா செத்தப்போ பனிரெண்டு வயசு. அந்தப் பனிரெண்டு வயசுலேர்ந்து சாப்பாட்டுக்கும், படிப்புக்கும் நாய் அலைச்சல் அலைஞ்சிருக்கேன்... உன்கிட்ட சொல்றதுக்கென்ன...? நோட்டும், புஸ்தகமும் லாங்கவும் ஸ்கூல் ஃபீஸ் கட்டவும் எத்தனை வீடுகளைப் பெருக்கித் துடைச்சிருக்கேன் தெரியுமா...? எத்தனை கார்களைக் கழுவிப் பளபளப் பாக்கியிருக்கேன் தெரியுமா...? உங்கப்பா என் படிப்புச் செலவை ஏத்துக்கிட்டப்புறம் தான் வீடு வீடாக வேலை செய்யறது குறைஞ்சது..."

முகத்திலும், குரலிலும் சிறிது கூட வருத்தமோ, பரிதாபத்தைத் தேடிக் கொள்ளும் நோக்கமோ இன்றி, 'கடந்தகால கஷ்டங்கள் அனைத்தும் அனுபவங்கள். அந்த அனுபவங்கள் தான் இன்றைய ரவியை உருவாக்கியிருக்கின்றன' என்கிற மாதிரி உதட்டில் ஓடும் புன்னகை

மாறாமல் அவன் சொன்ன போது உருகிப் போனான் சக்தி. துள்ளலும், துடிப்புமாக இருக்க வேண்டிய மாணவப் பருவம் முழுவதையும் இவன் வறுமைப் போராட்டத்தில் கழித்திருக்கிறான் என்பதில் அந்த உருக்கம் இன்னமும் அதிகமாயிற்று அப்போதெல்லாம் இவனது கஷ்டங்களை உணரவோ, இவன் ஏன் வீட்டிற்கு வரவில்லை என்பதை யோசிக்கக் கூட இயலாத பருவத்தில் தான் இருந்ததை நினைத்துக் கொண்டான். வீட்டு வேலை செய்து, கார்களைத் துடைத்து வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்வதோடு படிக்கவும் வேண்டுமென்றால் அவன் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும் என்பது புரிய மெல்ல அவனை இன்னமும் நெருங்கி உட்கார்ந்து கொண்டான். அவன் கைகளைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். ஸ்டெதஸ்கோப்பைப் பிடிக்கிற இதே கைதான் துடைப்பத்தையும் பிடிக்கிறது என்ற ஆதங்கத்தில் வருடிக் கொடுத்தான் பின்னர் எல்லையற்ற அன்பும், கனிவும் சேர அவன் முகத்தையும், கண்களையும் பார்த்தவாறு மெலிதான குரலில் பேசினான்.

"...சின்ன வயசுலேர்ந்து எல்லாக் கஷ்டமும் பட்டாச்சில்ல ..? இப்பவும் ஏன் அதே கஷ்டத்தைப் படணும்னுதான் கேட்கறேன்...."— சொல்லி முடிப்பதற்குள் சக்தியின் குரல் கரகரத்து உணர்ச்சி வேகத்தில் தடுமாறிற்று.

அதைப் புரிந்து கொண்ட ரவி அவனது கையிலிருந்து தன் கையை.விடுவித்துக் கொண்டு உதட்டின் புன்னகை விசாலமாக சக்தியின் முதுகில் கை போட்டு அணைத்துக் கொண்டான்.

" என்ன சக்தி இது...? இதுக்குப் போய் ஏன் இப்படி நெகிழ்ந்து போற...? எதுக்காக இந்த அளவு வருத்தப்படற...? இதுல என்ன கஷ்டம்னு இப்படியெல்லாம் பேசற...? நம் வேலையை நாம் செய்துக்கிறதா கஷ்டம்...?"



இன்னமும் உணர்ச்சி வேகத்திலிருந்து மீண்டு வராத சக்தி அதே குரல் கரகரப்புடன். கோபித்துக் கொண்ட குழந்தை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான்.

"அவங்கவங்க வேலையை அவங்கவங்கதான் செய்யணும்னால் என் வேலையை நான் தானே செய்யணும் ..? நீ எதுக்காக செய்யறே ..? பெட்ரூம் வரை ஏன் காப்பியைத் தூக்கிக்கிட்டு ஓடிவர்ற ...?"

"போடா பைத்தியக்காரா ..." என்று அதிக உரிமை எடுத்துக் கொண்டு தன் சொந்தத் தம்பியைச் சொல்கிற மாதிரி சொன்னான் ரவி.

"உன் வேலை என் வேலைன்னு ஏண்டா பிரிச்சுப் பேசற ..? நீ வேற நான் வேறன்னு நான் நினைக்கல... நீ வரப் போறன்னு உங்கப்பா போன் பண்ணிச் சொன்னதுலேர்ந்து எப்படிக் காத்துக் கிட்டிருந்தேன் தெரியுமா ...? உனக்கு என்னவெல்லாம் செய்யணும்னு யோசிச்சு வச்சுக்கிட்டிருந்தேன். தெரியுமா ..? என்னால முடியும்னால் இந்த உடம்பால செருப்பு தைச்சு உனக்கும் உங்கப்பாவுக்கும் போ—"

சடாரென்று அவன் வாயைப் பொத்தினான் சக்தி, கண்களில் நீர் நிறைய அவனை ஏறிட்டான்.

"...பேசாதே ரவி ... இதுக்கும் மேல நீ ஒரு வார்த்தை பேசினால் கூட நான் உடைஞ்சு போயிடுவேன்..." என்று கெஞ்சினான்.

நீர் நிறைந்த அவனது பார்வையும், கெஞ்சலும் மனதை என்னவோ செய்ய கரகரத்த குரலில் பதிலளித்தான் ரவி.

"இல்ல... நான் பேசல... நீ இப்படிக் கெஞ்சாத... கெஞ்சப் பிறந்தவன் இல்லை நீ... கட்டளை இடு. இதைச் செய்டா ரவின்னு கூடப் பிறந்த அண்ணன் கிட்ட

கேட்கிற உரிமையோட கேளு... செய்ய நான் காத்துக் கிட்டிருக்கேன்..."

சடாரென்று கண்களைத் துடைத்துக் கொண்டு முகம் மலர, பளிச்சென்று ஞாபகத்திற்கு வந்தவனாக ரவியின் முகத்தை ஏறிட்டான் சக்தி,

"நான் எது கேட்டாலும் செய்வியா ரவி...?"

"செய்வேன்..."

"நிஜமாகத்தான் சொல்றியா...?"

"இதுல உனக்கென்ன சந்தேகம்...? எங்கே கையை நீட்டு..."

நீட்டினான் சக்தி.

உள்ளங்கையில் அடித்துச் சொன்னான் ரவி.

"சத்தியமாகச் சொல்றேன்டா... உனக்காக எது வேனும்னாலும் செய்வேன். எதை செய்யச் சொன்னாலும் செய்வேன். செத்துப் போன எங்க அம்மா, அப்பா மேல சத்தியம். போறுமா...?"

உள்ளங்கையில் அடித்து சத்தியம் செய்த அந்தக் கையைப் பற்றிக் கொண்டு கண்மூடி மௌனமாக நின்றான் சக்தி...

## 42

"என்ன சக்தி அப்படி நின்னுட்ட... இன்னும் கூட உனக்கு என் மேல் நம்பிக்கை வரலியா...?" என்ற ரவியின் சோகமான குரல் கேட்டு சடாரென்று கண்களைத் திறந்தான் சக்தி.

"சே...! என்ன கேட்கற ரவி...?"



"இல்ல.. ஒரு வேளை இவன் செய்வானோ, மாட்டானோன்ற சந்தேகம் வரலாமில்ல...?"

"அந்த மாதிரி சந்தேகமெல்லாம் வரல..."

"பின்ன...?"

"உன் கிட்ட எப்படிச் சொல்றது... இதைச் செய்னு எப்படிக் கேட்கிறதுன்னு யோசிச்சுக் கிட்டிருக்கேன்..."

"இதுல யோசிக்க என்ன இருக்கு சக்தி..?"

"உனக்குத் தெரியாது ரவி... எத்தனையோ விஷய மிருக்கு... எப்படி, எந்த வார்த்தைகளில் எடுத்துச் சொன்னால் புரியும்னு—"

"இதப்பாரு..." என்று சற்று வேகமாகவே இடையில் குறுக்கிட்டான் அவன்.

"இந்த மாதிரி மனசுக்குள் அலையற அலைச்சலை யெல்லாம் விட்டுட்டு நேரிடையா, சாதாரணமா விஷயத்தைச் சொல்லு... அது போறும்..."

"இல்ல... அது போறாது ரவி..." என்று மறுத்தான் சக்தி.

"என் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற பிரச்னையின் முழு ஆழத்தையும் நீ புரிஞ்சுக்கணும்னால் வார்த்தை களிலேயும் அதே ஆழமும், அழுத்தமும் இருக்கணும்..."

"அவசியமில்ல.. எந்த ஆழமும், அழுத்தமும் எனக்குத் தெரிய வேணாம். வெறும் கோடு காட்டு போறும். 'இதைச் செய்டான்னு' கட்டளை இடு. ராமனுக்குக் கீழ்ப்படிஞ்ச அனுமான் மாதிரி கடலைக் கூடக் கடந்து போறேன்... அந்த அளவுக்கு உனக்குச் செய்யக் கடமைப்பட்டவன் நான்..."

"அப்படின்னா...வெறும் கடமைப்பட்ட காரணத்துக் காகத்தான் சொல்றியா...?"

"என் பேச்சு, செய்கை இதையெல்லாம் பார்த்தால் கடமைக்காகச் செய்யறவன் மாதிரியா தெரியுது...? அன்புக்குச் செய்யறது தெரியல...? பாசத்துக்கு ஏங்கறது புரியல...?"

"உன்கிட்ட விளையாடவே கூடாதுடா ரவி... உடனே அதையும் விபரீதமா எடுத்துக்குவ..."

',எதுல வேணா விளையாடு சக்தி... ஆனால் இதுல இல்ல... நான் காட்ற அன்பு, பாசத்துல இல்ல..."

"ஓ. கே .. ஸாரிடா... தப்புடா... வேணும்னால் தோப்புக்கரணம் போடட்டுமா...?" என்று அந்தச் சூழ்நிலையின் இறுக்கத்தையும், ரவியின் உணர்ச்சி மயமான வேகத்தையும் குறைப்பதற்காக மெல்லப் புன்னகைத்தவாறு கேட்டான் சக்தி. அதைக் கேட்ட ரவியின் முகத்திலிருந்த இறுக்கம் தளர்ந்து மெதுவான புன்சிரிப்பாக மாறிற்று. குரலும் சாதாரணமாக வந்தது.

"தோப்புக்கரணமெல்லாம் வேணாம். நான்தான் கட்டளை இடுன்னு காத்துக்கிட்டிருக்கேனில்ல...? கடலைத் தாண்டிப் போயாவது காரியத்தை முடிச்சுக் கிட்டு வரனா இல்லையான்னு பாரு...?"

"உன் பேச்சுல வெளிப்படற வேகத்தைப் பார்த்தால் அனுமார் பறந்த மாதிரிப் பறந்தே கடலைக் கடந்துடுவ போல இருக்குதே...?"

"அந்த அனுமாருக்குப் பறக்கிற சக்தி இருந்தது .. பறந்தார். ஆனால் இந்த அனுமானுக்கு ஏது அந்த சக்தியெல்லாம்...? அதனால இவரு ஏரோப்பிளேன்ல போய் காரியத்தை முடிச்சுட்டு வந்துடுவாரு .." என்ற ரவி கால் வினாடி இடைவெளி விட்டுக் கேட்டான்.

'ஆமாம்... இன்னும் நீ காரியம் என்னன்னே சொல்லலையே... அந்த சீதையை ராவணன் தூக்கிக் கிட்டுப் போன மாதிரி உன்னுடைய சீதையையும் யாராவது தூக்கிட்டுப் போயிட்டாங்களா...? என்ன விஷயம் சக்தி...?"



"...தூக்கிக்கிட்டுப் போகலேன்னாலும் கிட்டத் தட்ட ராமனையும் சீதையையும் சேர்த்து வைக்கிற மாதிரியான விஷயம்தான் ரவி..."

"அப்படின்னா... சீக்கிரம் சொல்லு.. இதோ இப்படின்றதுக்குள்ள முடிச்சுடறேன்..." — கை விரலால் ரவி சிட்டிக்கை போட்டுக் காட்டியதும் சக்தியிடமிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

"அது அத்தனை சுலபமாக முடிஞ்சு விடக்கூடிய விஷயமில்ல ரவி..."

"முதல்ல நீ விஷயத்தைச் சொல்லு. அப்புறம் எத்தனை சுலபம்ன்றதை நான் பார்த்துக்கறேன்..."

மீண்டும் சக்தி தயங்க,

"சீக்கிரம் சொல்லு சக்தி... இதுக்கு மேல் என்னால் தாங்க முடியாது..." என்று ரவி பரபரத்ததும்,

"சொல்றேன்..." என்று தயங்கித் தயங்கி ஆரம்பித் தான் சக்தி.

கல்லூரி நண்பர்களோடு காதலைப் பற்றி ஏற்பட்ட விவாதத்திலிருந்து தொடங்கி ரவிச்சந்த்ரிகா பற்றி, அவளது அழகு பற்றி, மேன்மையான குணங்களைப் பற்றி, தங்கள் காதல் பற்றி, அவளது கருப்பை வளர்ச்சி யடையாததன் காரணமாக அவளுக்குக் குழந்தை பிறக்க இயலாது என்று டாக்டர்கள் சொன்னது பற்றி, அதன் பின் நடந்த மனப் போராட்டம், கருத்துப் பரிமாற்றம் கடைசியில் தான் கிளம்பி இங்கு வந்தது என ஒன்று விடாமல் சொன்னான். சொல்லிவிட்டு குரலடைக்கப் பேசினான்.

"... வாழ்க்கைக்காகத்தான் எல்லாமே தவிர, எல்லாவற்றிற்காகவும் வாழ்க்கை இல்ல .. அதைப் புரிஞ்சுக்காமல் வெறும் குழந்தை பிறக்க இயலாதுன்ற காரணம் காட்டி ரவிச்சந்த்ரிகாவை என் கிட்டேயிருந்து பிரிக்க நினைக்கிறாங்க ரவி .. அவளை மாதிரி ஒரு பெண்ணை நீ பார்த்திருக்க மாட்டே... இனி பார்க்கப் போறதுமில்லைன்னு என்னால அடிச்சு சொல்ல முடியும். அந்த அழகு... வெறும் அழகு மட்டும்னால் நான் இப்படி உயிரைவிட மாட்டேன். அழகுக்குத் தகுந்த குணம், அடக்கம், பொறுமை, நிதானம்... இதெல்லாம் சேர்ந்து எத்தனை பொண்ணுங்க கிட்ட இருக்கு...? எந்தப் பொண்ணு கிட்ட நீ பார்த்திருக்க சொல்லு..."

"சரிப்பா... நான் பார்க்கிறது கிடக்கட்டும். இதையெல்லாம் நீ உங்க அப்பா, அம்மா கிட்ட எடுத்துச் சொல்ல வேண்டியது தானே...?"

"எதுக்குச் சொல்லணும்...? எல்லாம் அவங்களுக்கும் தெரிஞ்சதுதானே...?"

"அப்படி இருந்துமா மறுக்கறாங்க...?"

"அம்மா மட்டும்தான் பிடிவாதமா மறுக்கறாங்க. மகன் வயிற்றுப் பேரன் பேத்திகள் கிட்ட கொஞ்சணும்ன்றாங்க... குழந்தை இல்லேன்னா என்னம்மா ? ஏதாவது அனாதை ஆஸ்ரமத்துலேர்ந்து எடுத்து வளர்க்கலாம்னால் மறுக்கறாங்க. அது தன் ரத்தத்துல உருவானதா இருக்காதுன்னு அடம் பிடிக்கறாங்க ..."

"...சரி... அவங்க அடம்பிடிக்கிறாங்கன்னால் அதுல ஓரளவு உண்மையிருக்கு. நியாயம் இருக்கு. ஒரு அம்மாவின் உணர்ச்சிகள் எப்படி இருக்கணுமோ, அப்படி இருக்கு... அதை மதிக்கலாமே தவிர அதன்படி நடக்க முடியாது. உனக்கும் ரவிச்சந்த்ரிகாவுக்குமிடையில் ஏற்பட்டிருக்கிற அன்பின் ஆழம் புரியாமல்



அவங்க பேசறாங்கன்னு நினைக்கணுமே தவிர வேற எதுவும் செய்ய முடியாது ஆனால் உங்க அப்பா அப்படியில்ல... அவரு உன்னைப் புரிஞ்சுக்கிட்டவர். அந்தப் பொண்ணைப் பற்றியும் தெரிஞ்சுக்கிட்டவர். அவர் கிட்ட தனியாப் பேசி நீயும், அந்தப் பொண்ணும் கல்யாணம் செய்துக்க ஏற்பாடு செய்யச் சொல்லலாமில்ல...?"

"சொல்லலாம்ப்பா... அப்பாவும் செய்வாரு... அப்படியே அப்பா செய்யாமல் போனாலும் நான் தனியா அவளைக் கூட்டிக்கிட்டுப் போய் ஏதாவது ஒரு முருகன் கோவில்ல வச்சு தாலி கட்டத் தயாரா இருக்கேன். ஆனால் அதுக்கு ரவிச்சந்த்ரிகா ஒத்துக்கணுமில்ல...?"

"ஏன்...? அந்தப் பொண்ணு ஒத்துக்கர்தா ...?"

"பிரச்சினையே அங்கதான் முழுசா முடிச்சு கட்டிக்கிட்டிருக்கு... அவதான் இதுக்கு முதல்ல மாட்டேன்றா... நான் எவ்வளவு கேட்டும் சம்மதிக்க மறுக்கறா..."

"ஏன்?"...

"எங்க குடும்பம் வம்சமற்றுப் போயிடக் கூடாதாம். அம்மாவோட ஆசைகள் வீணாயிடக் கூடாதாம். அவங்க கனவு நனவாகணுமாம். நான் வேற எந்தப் பொண்ணையாவது கல்யாணம் செய்துக்கிட்டு குழந்தை பெற்று அம்மா மடியில் தவழ விடணுமாம்..."

"என்ன முட்டாள் தனம் இது ..? படிச்ச பொண்ணு தானே அவ...?"

"என்ன படிச்சாலும் நம் நாட்டுல இன்னும் இந்த மாதிரி விஷயங்களை கெட்டியா பிடிச்சுட்டில்ல இருக்கறாங்க..."

"சரி... இப்ப நீ என்ன செய்யப் போற...? எதை நினைச்சுக்கிட்டு இங்க ஓடி வந்துட்ட ...?"

"எதை நினைச்சுக்கிட்டும் வரல... ஒரு மன நிம்மதிக்காகத்தான் வந்தேன்... ஆனால் இங்க வந்தப்புறம் நினைக்கிறேன். உன்னால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்னு நம்பறேன். ராமனையும், சீதையையும் சேர்த்து வச்ச அனுமான் மாதிரி என்னையும், ரவிச்சந்த்ரிகாவையும் சேர்த்து வைக்க இயலும்ன்ற முடிவுக்கு வந்திருக்கேன்..."

அதைக் கேட்டு ரவியின் முகம் சடாரென்று மலர்ந்தது. ஆயிரம் வாட் பல்பு ஒன்றைப் போட்ட மாதிரி பிரகாசித்தது உணர்ச்சி வசப்பட்ட குரல் கரகரவென்று ஒலித்தது.

"என்னால் முடியும்னால் சொல்லு... என் உயிரைக் கொடுத்தாவது உங்களை சேர்த்து வைக்கிறேன்..."

"உயிரைக் கொடுக்க வேணாம் ரவி... ஆனால்... ஆனால்... இன்னொரு உதவி... மிகப் பெரிய உதவி... உன்னால் மட்டுமே செய்ய முடிந்த உதவி... அதைச் செய்யணும்..."

"சொல்லு... எப்படிப்பட்ட உதவியாக இருந்தாலும் செய்யறேன்..."

"எனக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்யணும். குழ்ந்தை பெறத் தகுதியற்றவனாக ஆக்கணும்".

"என்ன...?!"

அதிர்ந்து போய் அவனை ஏறிட்டான் ரவி.

## 43

"என்ன...?" என்று அதிர்ந்து போய் சக்தியை ஏறிட்ட ரவி, சில வினாடிகள் கண்ணகல அவனையே பார்த்துவிட்டுப் பின்னர் மீண்டும் கேட்டான்.



'என்ன சொன்ன சக்தி... திரும்பச் சொல்லு...?"

"காதுல விழலியா... இல்ல... மனசுல வாங்கிக்கலியா...? எதுக்காகத் திரும்ப சொல்லச் சொல்ற ரவி...?"—சக்தி சற்றுத் தயங்கி குழப்பத்துடன் கேட்டான்.

"ரெண்டும்தான்... காதுலயும் சரியா விழல... மனசுலயும் ஒழுங்காப் பதியல... அதனால்தான் திருப்பி சொல்லச் சொல்றேன்..."

மீண்டும் தயங்கி எங்கோ எதுவோ இடறுவது புரிய மெதுவாகச் சொன்னான் சக்தி.

"...இல்ல... ஆபரேஷன் பண்ணி எனக்கும் குழந்தை பிறக்க வழி இல்லை... நானும் எந்தப் பெண்ணுக்கும் குழந்தை பாக்கியம் தருகிற தகுதி இல்லாதவன்னு ஆக்கிடச் சொல்றேன்..."

"அதுதான் ஏன்னு நான் திருப்பி கேட்கிறேன்..."

"இவ்வளவு தூரம் கதை சொல்ற மாதிரி சொல்லியும் ஏன்னு கேட்டால் நான் என்ன சொல்ல முடியும் ரவி...?"

"என்ன சக்தி இது...? இதுக்குப் போய் இப்படிக் கண் கலங்கிப் பேசற...? உனக்கு ஆபரேஷன் செய்து உன்னையும் குழந்தை பெறத் தகுதியற்றவனாகச் செய்யறதுனால என்ன லாபம்...? அதனால் எப்படிப் பிரச்சினை தீரும்னு—"

"புரியலயா உனக்கு...?" என்று அவசரமாக இடையில் குறுக்கிட்டான் சக்தி.

"எனக்கும் குழந்தை பிறக்க வழி இல்லைன்னு ஆயிடுச்சுன்னால், நான் ரவிச்சந்த்ரிகாவைக் கல்யாணம் செய்துக்க எந்தத் தடையும் இல்லையே... ரவிச்சந்த்ரிகாகிட்டேயும், அம்மாகிட்டேயும் சொல்லி அவங்களை சம்மதிக்க வைக்கலாமில்ல...?"

"என்னன்னு சொல்லுவ...?"

"எனக்கும் குழந்தை பிறக்காது, பிறக்க வழி இல்லை, குடும்பக் கட்டுப்பாட்டு ஆபரேஷன் செய்துக்கிட்டேன்னு சொல்லுவேன்..."

"யார் செய்தாங்கன்னு கேட்டால்...?"

"நீ செய்ததாகச் சொல்லுவேன்..."

"ரொம்ப நல்லாருக்கு சக்தி... உங்க அம்மாவும், அப்பாவும் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க...? 'ஏண்டா டேய்.. யாருமில்லாத அனாதையா, வீடு வீடாக வேலை செய்துக்கிட்டிருந்தவனைப் படிக்க வச்சு டாக்டராக்கினதுக்கு நீ எங்களுக்குக் காட்ற நன்றியாடா இது..?'ன்னு கேட்டு பார்வையாலயே சுட்டுப் பொசுக்கிட மாட்டாங்க..?"

"..சரி.. வேணாம்.. இதுல நான் உன் பெயரை இழுக்கலை.. வேற ஏதாவது ஒரு டாக்டர் பெயரைச் சொல்லிடறேன்...?"

"நோ... சக்தி..." என்று மென்மையான குரலில், ஆனால் வார்த்தைகளில் மட்டும் அழுத்தம் வெளிப்பட மறுத்தான் ரவி

"என் பெயருக்காக நான் கவலைப்படல. உனக்கு உதவின்ற பட்சத்துல என் பெயர் எனக்குப் பெரிசில்ல... ஆனால் நான் செய்யற தொழிலுக்காகக் கவலைப் படறேன். புனிதமான டாக்டர் பட்டத்தைக் கறை படுத்தி விடக்கூடாதேன்னு பயப்படறேன்..."

"என்ன ரவி பேசற...? இதனால் உன் தொழில் பாதிக்கப் படும்னு நினைக்கறியா..?"

"நோ... தொழில் பாதிக்கப்படும்னால் கூடப் பரவாயில்ல... ஆனால் அந்தத் தொழில் களங்கப் படும்னால் அதை எப்படிச் செய்ய முடியும் சக்தி...?"



" களங்கப்படுமா... நீ சொல்றது எனக்குப் புரியல ரவி.."

"புரியல..? நீ பண்ணச் சொல்கிற அந்த வாஸக்டமி ஆபரேஷனை யாருக்குச் செய்வாங்க தெரியுமா...? கல்யாணமாகி, இரண்டு குழந்தைகள் பெற்று எல்லாம் அனுபவித்து, இனி குழந்தை வேண்டாம்னு நினைக்கிற ஆணுக்குத்தான செய்வாங்க... ரொம்ப ரொம்ப சாதாரணமாகக் காலையில் அட்மிட் ஆகி ஆபரேஷன் முடிந்து, எந்தவித பாதிப்பும், தொந்தரவுமின்றி அன்று மாலையே வீட்டுக்குப் போய் விடக்கூடிய சின்ன ஆபரேஷனைக் கூட தான் செய்துக்கத் தயங்கி தன் மனைவி செய்துக்கட்டும்னு அவள் தலையில் சுமத்துகிற ஆண்களைக் கொண்ட தேசம் இது. நாற்பது வயதுக்கு மேல் இனி குழந்தை வேண்டாம்னு தீர்மானிச்ச ஆம்பிளைகளுக்குச் செய்கிற வாஸக்டமியை உனக்கு... கல்யாணமாகாத... இன்னும் கல்லூரிப் படிப்பு கூட முடியாத.. இருபத்திரெண்டு வயசு இளைஞனுக்கு, மாணவனுக்குச் செய்வதா...? இது டாக்டர் தொழிலுக்கே இழுக்கு இல்லையா...? செய்யலாமா...? மனச்சாட்சி உள்ள எந்த டாக்டராவது செய்வானா ? பட்டம் பெற்று, தொழில் தொடங்கும் முன் பிரமாணம் செய்து கொள்கிறானே... அந்தப் பிரமாணத்துக்கே அது துரோகமில்லையா...? அதை நான் செய்யலாமா சக்தி ..? என்னை செய்யச் சொல்கிறாயா...? சொல்லு சக்தி ?"

உருக்கமும், வேகமும், விவேகமும் நிறைந்த ஓர் தொனியில் ரவி கேட்ட கேள்வியில் ஆடிப் போனாள் சக்தி. அந்தக் கேள்வியின் நியாயம் அவளைத் தலை குனியச் செய்தது. ஏமாற்றத்தில் மனசு பாரமாகக் கனத்தது. பெரியதோர் பாறாங்கல்லைத் தூக்கி வைத்த மாதிரி நெஞ்சு வலித்தது. தனக்குத் தோன்றிய அந்த ஒரே வழியும் அடைபட்டு விட்ட துக்கத்தில் கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள, மெல்ல ரவியை

ஏறிட்டுப் பார்த்தான். உதடுகள் துடிக்க மெதுவாகப் பேசினான்.

"..வேணாம் ரவி... உன் மனசு ஏற்றுக்காத, மனச்சாட்சிக்கு விரோதமான எந்தக் காரியத்தையும் நான் செய்யச் சொல்லல... ஆனால்... எனக்குத் தெரிஞ்ச அந்த ஒரே வழியும் இப்போ இல்லைன்னு ஆகிப் போயிடுச்சேன்னு வருத்தப்படறேன்..."

'ஏன் அப்படிச் சொல்ற...? இந்த வழி இல்லைன்னால் வேற வழி கிடைக்காமலா போயிடும்...'

"ப்சூ... வேற என்ன வழி இருக்கு...?" என்று குரலில் அழுகை முட்ட சக்தி கேட்டதும், சில வினாடிகள் தலை குனிந்து யோசித்த ரவி திடீரென்று முகம் பிரகாசிக்க அவனைப் பார்த்தான்.

"ஏன் சக்தி... இப்படிச் செய்தால் என்ன...?"

"எப்படி...?"

"ஆபரேஷன் செய்யத்தானே மாட்டேன்றேன்... ஆனால் ஆபரேஷன் செய்ததாகப் பொய் சொல்ல மாட்டேன்னலியே...?'

சடாரென்று முகம் உயர்த்திக் கேட்டான் சக்தி.

"அப்படின்னா..."

"உங்க அம்மா, அப்பாகிட்டேயும் உனக்கு வாஸக்டமி ஆபரேஷன் நடந்ததாகப் பொய் சொல்லி விட்டால்..? அதுவும் அதை நானே செய்ததாகவும் சொல்லி விட்டால்...? வெறும் பொய் தானே... அதுவும் ஒரு நல்ல விஷயத்துக்குச் சொல்லற பொய்தானே...? ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணம் செய்யணும்னு பெரியவங்களே சொல்லியிருக்காங்களே! சொல்லியிருக்காங்க இல்ல...?"



"அது சரி... நாம் சொல்ற பொய்யை அம்மா, அப்பாவும் ரவிச்சந்த்ரிகாவும் நம்பணுமே...?"

"நம்பற மாதிரி சொல்லணும். வேற வழி இல்ல..."

"ஒரு வேளை அப்பா என்னை வேற டாக்டர்களை வரவழைக்க செக்-அப் செய்ய வச்சாருன்னால் ..?"

"மாட்டார்..." என்று உறுதியான குரலில் மறுத்தான் ரவி.

"எப்படி அவ்வளவு திடமாகச் சொல்ற ..?" எனக் கேட்டான் சக்தி.

"எப்படின்னால்... யாரும் மென்மையான, மிகவும் சென்ஸிடிவ்வான இந்த விஷயத்தைச் சோதனை போட்டு, தூண்டித் துருவி ரணப்படுத்த மாட்டாங்க... மனசைப் புண்படுத்த மாட்டாங்க... அதிலும் உன்னைப் பெற்றவங்க, உன் மேல் உயிரையே வச்சிருக்கிறவங்க நிச்சயமாகச் செய்ய மாட்டாங்கன்ற நம்பிக்கைலதான் சொல்றேன். உங்கப்பா ஒரு ஜென்டில்மேன். இந்த மாதிரி சாதாரண, சின்னத்தனமான விஷயமெல்லாம் செய்யவே மாட்டாரு..."

சக்தி யோசனையில் ஆழ, ரவியே தொடர்ந்து பேசினான்.

"..மேலும் இந்தப் பொய்யினால் இன்னும் ஒரு நன்மை ஏற்படுகிற வாய்ப்பும் இருக்கு... உனக்கும், ரவிச்சந்த்ரிகாவுக்கும் கல்யாணமானதற்கு அப்புறம் ஒரு வேளை கடவுள் கண்திறந்து, மனசு வச்சு ரவிச்சந்த்ரிகாவின் கர்ப்பப்பையை சரியாக்கிடறாருன்னு வச்சுக்க .. அப்போ அவசரப்பட்டு ஆபரேஷன் பண்ணிக்கிட்டதுக்கு நீ வருத்தப்பட வேண்டிய அவசியம் இருக்காது! உனக்கும், ரவிச்சந்த்ரிகாவுக்கும் தங்க விக்கிரகம் மாதிரி ஒரு குழந்தை பிறக்கும்..."

"நிஜமாகவா சொல்ற ரவி...? எங்களுக்குக் கல்யாணமாகிக் குழந்தையும் பிறக்குமா...!"

"கடவுள் மனசு வச்சால் எது நடக்காது சக்தி...? அவர் நடத்தணும்னு நினைச்சுட்டார்னு வச்சுக்க, அதைத் தடுக்க இந்த உலகத்து மனுஷங்கள்ளாம் ஒண்ணு சேர்ந்தாலும் முடியுமா...? டி.வி யில் மகாபாரதம் பார்க்கல நீ...? துரியோதனன் கூட தம்பிமார் நூறு பேர், ஆச்சாரியர் துரோணர், பீஷ்மர் எல்லோரும் இருந்தும் கடைசியில் கிருஷ்ணர் இருந்த பஞ்ச பாண்டவர்கள் தானே ஜெயிச்சாங்க... அவங்க பக்கம்தானே ஜெயிச்சது... அதனால் கடவுளின் கருணை இருந்தால் எது நடக்காது...? எதை நடத்த முடியாது சொல்லு?"

உள்ளம் உருகிக் கண்கள் வழியாகக் கன்னங்களில் வழிய, உடல் முழுவதும் சின்னச் சிலிர்ப்பாக ஒன்று படர, எழுந்து வந்து ரவியின் கைகளைப் பற்றிக் கொண்டான் சக்தி. வார்த்தை வராமல் தடுமாறிப் பின்னர் குரல் கரகரக்கச் சொன்னான்.

"...அப்ப...டி... எங்களுக்கு ஒரு குழந்தை பிறக்கட்டும்... அதற்கு ரவின்னு உன் பெயரையே வைக்கிறேன்..."

"போடா பைத்தியக்காரா... எதற்கெடுத்தாலும் இப்படி உணர்ச்சி வசப்பட்டால் எப்படி...? முதல்ல கல்யாணம் முடியட்டும். குழந்தையைப் பற்றி அப்புறம் யோசிக்கலாம். நாளைக்கே நாம் கிளம்பி மெட்ராஸ் போகலாம்..."

"நாளைக்கேவா...?"

"பின்ன...? நீ வந்து எத்தனை நாளாச்சு தெரியுமா... பத்து நாளாகப் போறது, இதுக்கு மேலயும் இங்க இருந்தால் உங்கம்மா, ரவிச்சந்த்ரிகா ரெண்டு பேரும் கவலைப்படமாட்டாங்க...? அதோடு... கல்யாணத்தையும் சீக்கிரம் முடிக்க வேணாம்...? அதனால் நாளைக்கே கிளம்பலாம்... என்ன...?"



"சரி..."

## 44

கிளம்பி மெட்ராஸ் வந்து குளித்து, சாப்பிட்டு சிறிது ஓய்வு எடுத்த பின் அன்றிரவு ராஜரத்தினமும், ராஜேஸ்வரியும் வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டிருந்த போது மெதுவாக உள்ளே நுழைந்தார்கள் ரவியும், சக்தியும்.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்த ராஜரத்தினம் அவர்கள் இருவரையும் நிமிர்ந்து பார்த்து, புன்னகை செய்தவாறே... "வாங்கப்பா..." என்றார்.

"நல்லாத் தூங்கினீங்களா ரெண்டு பேரும்...? அவ்வளவு தூரம் டிரைவ் பண்ணிக்கிட்டு வந்ததே களைப்பாக இருக்கும் இல்லையா ..?" எனவும் கேட்டார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல சார்... நாங்க என்ன சாதாரணக் கார்லியா வந்திருக்கோம்...? ஏரோப்பிளேன்ல வந்த மாதிரி அலுங்காமல் இல்ல வந்தோம்..." என்றான் ரவி பணிவுடன்.

"சரிப்பா... நான் என்ன ஸ்கூல் டீச்சரா... எதுக்காக இப்படி கையைக் கட்டிக்கிட்டு நிக்கற? வா... வந்து இப்படி உட்காரு .."

"பரவாயில்ல சார்... நான் இப்படியே நிக்கறேன்..."

"என்னப்பா சக்தி... நீ உட்கார்ந்தால் தானே உன் சிநேகிதன் உட்காருவான்...? ரெண்டு பேரும் இப்படி

ஒட்டிக்கிட்டு நின்னால் எப்படி...?''— ராஜேஸ்வரியம்மாள் முதல் முறையாக வாய் திறந்தாள்.

''இல்லம்மா... நாங்க ரெண்டு பேரும் உங்க ரெண்டு பேர் கிட்டேயும் முக்கியமான விஷயம் ஒண்ணு பேசணும்னு வந்திருக்கோம்... அப்பாவுக்கு நேரமிருக்கும்னால் இப்பவே பேசிடலாம்னு நினைக்கிறோம்...''

''அப்படியா...?'' நிமிர்ந்து உட்கார்ந்தார் ராஜரத்தினம்.

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

''இல்லப்பா... வந்து... உங்களுக்கு... நேரம் இருக்குதான்னு—''

''இருக்கிறதால்தானே கேட்கிறேன்... சொல்லு என்ன விஷயம்...?''

சக்தி தயங்கியவாறு ரவியை ஏறிட்டான். அதைக் கவனித்த ராஜரத்தினம் ரவியைப் பார்த்துக் கேட்டார்.

''நீதான் சொல்லேன்ப்பா... அவன் தயங்கித் தயங்கி உன் முகத்தைப் பார்க்கிறானில்ல?''

ரவியும் தயங்கினான்.

''ம்... சொல்லு... எதுவானாலும் தயங்காமல், பயப்படாமல் கேளுங்க... பணம் ஏதாவது வேணுமா...?''

''ம்ஹூம்... பணம்... எதுவும் வேணாம் சார்...''

''பின்ன...?''

''வந்து... வந்து சார்...'' என்று தடுமாறின ரவி அதற்கு மேல் தாமதிக்கக் கூடாது என சடாரென்று விஷயத்தைச் சொன்னான். அதைக் கேட்ட ராஜரத்தினம் உறைந்து போய் உட்கார, பதறித் துடித்தவளாக ராஜேஸ்வரியம்மாள் சக்தியின் அருகில் ஓடி வந்தாள்.



அவனது தோள்கள் இரண்டையும் பிடித்து உலுக்கியவாறு கதறினாள்.

''...ஏம்பா சக்தி... ரவி சொல்றதெல்லாம் உண்மையா...? நிஜமாகவே நீ ஆபரேஷன் செய்துக்கிட்டியா...? சொல்லுப்பா...?''

''ஆ.... மாம்... மா... நிஜமாகத்தான் செய்துக்கிட்டேன்...''

''ஐயோ... ஏம்பா அப்படிச் செய்த...? உனக்குத் தெரியாதாப்பா... உன் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சணும்னு நான் எவ்வளவு ஏங்கிக்கிட்டிருந்தேன்னு... அதனால் தானே ரவிச்சந்த்ரிகாவைக் கூட மருமகளா ஏத்துக்க மாட்டேன்னு மறுத்தேன்...''

''அதுக்காகத்தாம்மா அப்படிச் செய்தேன். ரவிச்சந்த்ரிகாவுக்குக் குழந்தை பிறக்க வழி இல்லேன்னு தானே அவளைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு சொன்னீங்க...? அதே குறை எனக்கு இருந்திருந்தால் மறுத்திருப்பீங்களாம்மா...? ரவிச்சந்த்ரிகாவின் கையைப் பிடிச்சுக்கிட்டு 'எனக்கு இருக்கிறது ஒரே மகன் அவனுக்கு வாழ்வு கொடுன்னு...' கெஞ்சியிருக்க மாட்டீங்களா...?''

''கெஞ்சியிருப்பேன்ப்பா... அதுதான் தாய்ப் பாசம்ன்றது...''

''அதே பாசம் ரவிச்சந்த்ரிகாவின் அம்மாவுக்கும் இருந்திருக்குமில்லையாம்மா...?';

''ச...க்...தீ...''

''ஆனால் அவங்க அப்படி கெஞ்சலை... அவங்க நினைச்சிருந்தால் உண்மையை மறைச்சிருக்க முடியும். தன் மகளுக்குக் கல்யாணம் செய்து வைத்திருக்க முடியும் ...இல்லையாம்மா...?''

"சக்தி... அதுக்காக... நீ... இப்படிச் செய்யலாமாப்பா...?" துக்கம் தாங்காமல் அந்த அம்மாள் புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு கதறினாள். அந்தக் கதறலைக் காண இயலாதவனாகத் தலைகுனிந்து சொன்னான் சக்தி.

"அதுக்காக மட்டுமில்லேம்மா .. ரவிச்சந்த்ரிகாவை என்னால் மறக்க முடியாதும்மா ... அவ இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லேம்மா என் உயிரோடு உயிராகக் கலந்து போய் விட்டவளை நீங்க பிரித்து எடுக்க முயற்சி செய்யலாமா அம்மா... அதனால்தான் இந்த முடிவுக்கு வந்தேன். ரவிச்சந்த்ரிகாவைத் தவிர வேறு எந்த ஒரு பெண்ணையும் நினைத்துப் பார்க்க முடியாத காரணத்தினால் வந்தேன். குழந்தை பெற இயலாத குறை ரெண்டு பேருக்கும் பொதுவாக இருக்கட்டும் என்றுதான் செய்துக்கிட்டேன். ரவிச்சந்த்ரிகாவைக் கல்யாணம் செய்துக்க நீங்களும் இப்போ மறுக்க மாட்டீங்க... அவளாலும மறுக்க இயலாதுன்னு தான் இப்படிச் செய்தேன்..."

"ஐயோ... அதுக்காக இப்படியா செய்வாங்க... கல்யாணமே ஆகாத உனக்கு .. முகத்துல குழந்தைத் தனம் மீதமிருக்கிற உனக்கு .. இப்படிப்பட்ட ஒரு ஆபரேஷனைச் செய்த அந்த கொடுமைக்கார டாக்டர் யாரு ..?" — கண்ணீருடன் கண்களில் கனல் பறக்க அந்த அம்மாளின் பார்வை ரவியின் பக்கம் போனதும், சடாரென்று குரல் உயரச் சொன்னான் சக்தி...

"அம்மா .. அவனை அப்படிப் பார்க்காத... அவன் செய்யலை இந்தக் காரியத்தை... இங்கிருந்து கிளம்பி பெங்களூர் போய் அங்க ஒரு டாக்டர்கிட்ட ஆபரேஷனை முடிச்சுக்கிட்டுத் தான் நான் ஊட்டிக்கே போனேன்..."

சக்தியை விட்டு அகன்று ரவியின் அருகில் போய் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்ச ஆரம்பித்தாள் அந்த அம்மாள்.



"...ரவி ... இவன் சொல்றதெல்லாம் 'நிஜமாப்பா .. ? உண்மையாகவே இவன் அந்த ஆபரேஷனை செய்துக்கிட்டானா .. கொஞ்சம் பரிசோதிச்சுப் பார்த்து சொல்லுப்பா..."

அதுவரை மௌனமாகத் தலைகுனிந்து நின்றிருந்த ரவி இப்போது நிமிர்ந்து ராஜேஸ்வரியம்மாளை மென்மையாகப் பார்த்து இதமான குரலில் சொன்னான்.

" ..நிஜம்தாம்மா... ஆபரேஷன் செய்துக்கிட்ட மறுநாள்தான் என்கிட்ட வந்தான். அதுக்கப்புறம் நான் தான் இத்தனை நாள் கூட இருக்கச் செய்து உடம்பைத் தேற்றி அழைச்சுக்கிட்டு வந்தேன்..."

"இதையெல்லாம் ஏம்ப்பா டெலிபோன் பண்ணப்ப சொல்லலை ?"

"ஏம்மா... போன்ல சொல்ற செய்தியாம்மா இது ..? நேர்ல கேட்கிறப்பவே தாங்க முடியாமல் இப்படிக் கதர்ற நீங்க... டெலிபோன்ல சொல்லியிருந்தால் தாங்கியிருப்பீங்களாம்மா ?"

"தாங்கிக்காமல் என்னப்பா செய்திருக்க முடியும்...? பெத்த அம்மாவை நினைச்சுப் பார்க்கல... நேற்று வந்த அந்தப் பொண்ணுக்காக இத்தனை பெரிய காரியத்தைச் செய்திட்டு வந்து நிக்கறான்னால்... நான் என்ன சொல்ல முடியும்...?"

அந்தக் கடுமையான வார்த்தைகளைக் கேட்ட ராஜரத்தினம், "ராஜேஸ்வரி ..!" என்று தன் கணீர்க் குரலில் மனைவியை அதட்டினார்.

"என்ன பேசற நீ ? யாரைப் பற்றி பேசறன்னு தெரிஞ்சுதான் பேசறியா...? இப்படி ஒரு காரியத்தை செய்திட்டு வந்து நிக்கறவன் என் மகன்னு நான் உள்ளுக்குள்ள உருகிக் கரைஞ்சுக்கிட்டிருக்கேன்... நீ என்னடான்னால்... இப்படிப் பேசற..." என்றவர்,

கண்கள் லேசாகக் கலங்கித் தளும்ப, மகனின் கையைப் பற்றிக் கொண்டு, குரல் கரகரக்க அவனை ஏறிட்டார்.

"...எனக்குப் பெருமையாக இருக்கு சக்தி.. சந்தோஷமாக இருக்கு இவன் என் மகன்னு உரக்கக் கத்தணும் போல இருக்கு... எந்த உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பழக்கப்படாத என்னையே நீ உணர்ச்சி வசப்பட வச்சிட்டப்பா..."

"அ...ப்பா...?!" என்று தடுமாறினான் அவன்.

"என்ன அப்படிப் பார்க்கற சக்தி...? அப்பா நிஜமாகச் சொல்றாரா, இல்லை கோபத்துல சொல்றாரான்னு சந்தேகப் படறியா...? நிஜமாகத்தாம்ப்பா சொல்றேன். தூய்மையான. உண்மையான காதல்ன்றது இன்னும் முழுசா அழிஞ்சு போயிடலை. அம்பிகாபதி—அமராவதி, லைலா—மஜ்னு, ரோமியோ ஜூலியட் இவர்களெல்லாம் எப்போதோ இருந்தவங்க இந்தக் காலத்துல இப்படிப்பட்ட காதல் இருக்க முடியுமான்னு நினைக்கிறவங்களுக்கும், கேட்கிறவங்களுக்கும் 'இருக்க முடியும். இதோ, என் மகன் இருக்கான்'னு .. என்னால் தலைநிமிர்ந்து நின்னு காட்ட முடியும் எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குப்பா... ரொம்ப ரொம்பப் பெருமையா இருக்கு..."

குரல் தழுதழுக்க உணர்ச்சி வசப்பட்டு அவர் சொல்லி முடித்ததும், அதற்கு மேல் தாங்க இயலாதவனாக அவர் கால்களில் விழுந்தான் சக்தி.

"எழுந்திரு சக்தி .. தந்தைக்கு உபதேசம் செய்த அந்த முருகன் மாதிரி இன்னிக்கு எனக்கே உபதேசம் செய்திருக்க... மனித நேயத்துக்கு அப்புறம்தான் எதுவும்னு எடுத்துக் காட்டியிருக்க இப்படிப்பட்ட ஒரு நல்ல பிள்ளையைப் பெற்றதுக்கு நான் பூரிச்சுப் போய் நிற்கறேன் ... நீ என்னடான்னால் என் கால்ல விழற..."



என்றவர் மனைவியின் பக்கம் திரும்பி கம்பீரமான, மறுக்க முடியாத கட்டாயக் குரலில் சொன்னார்.

"இதப்பாரு ராஜேஸ்வரி... இனிமேலயும் அழுதுக்கிட்டு நிற்காமல் மடமடன்னு வேலையைப் பாரு... இப்பவே போய் அந்தப் பொண்ணு ரவிச்சந்த்ரிகாவையும், அவங்க அம்மா, அப்பா ரெண்டு பேரையும் நம்ம வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்திடு— இனிமேல் அவங்க வேற, நாம் வேற இல்ல... அவளுடைய அப்பாவை அழைச்சுக்கிட்டு வர ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்யச் சொல்றேன்... இப்பவே அய்யரை வரவழைச்சு அடுத்த முகூர்த்தம் எப்போன்னு பார்க்கச் சொல்றேன்... இதப்பாரு ரவி... நீ கிளம்பி ஊட்டி போகணும்னு போயிடாத... உன் சிநேகிதனுக்குத் தோழனாகத் கல்யாணம் வரை இரு.... உன்னால் முடிஞ்ச வேலையெல்லாம் பாரு... அடுத்து உனக்கும் ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சிடறேன்..."

என முச்சு விடாமல், முகம் முழுதும் சிரிப்பு படரச் சொன்னவர், மீண்டும் மனைவியைப் பார்த்து ஓர் அதட்டல் போட்டார்.

"ம்... இன்னும் என்ன கண்கலங்கிக்கிட்டிருக்க...? நல்ல காரியம், ஒரே மகனுக்குக் கல்யாணம்... யாராச்சும் அழுதுக்கிட்டு நிப்பாங்களா...? சீக்கிரம் புறப்படு... நானும் உன் கூட வரேன். நல்ல நேரமாகப் பார்த்து மருமகளை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வரலாம்..."

என்று விட்டு, பத்து வயது குறைந்தவராக, கம்பீரமான நடையில் அந்த இடத்தை விட்டு பரபரப்புடன் நகரத் தொடங்கினார் ராஜரத்தினம்...

# 45

இடைவேளைக்கான மணி அடித்தது. வழக்கமாகக் கல்லூரி மரத்தடியில் கூடுகிற அந்த மாணவர்களின் கூட்டம் அன்றைக்கும் கூடிற்று.

"இன்னிக்குக் காலேஜுக்கு வர்றப்ப பஸ் ஸ்டாப்பிங்ல ஃபிகர் ஒண்ணைப் பார்த்தேன் மச்சி... ஃபிகர்னால் அது ஃபிகர்... அசப்புல சிலுக்கு மாதிரியே இருந்திச்சு..."

என்கிற கிளுகிளுப்பான அரட்டைப் பேச்சில் ஆரம்பிக்காமல் மறுநாள் நடக்கப் போகும் சக்தியின் கல்யாணத்தைப் பற்றின பேச்சில் இறங்கிற்று. உள்ளுக்குள் நிஜமான சந்தோஷமும், உற்சாகமும் இருந்தாலும் குரல்களில் ஒருவித வருத்தம் இடறிற்று.

"பார்த்தீங்களாடா...? நாளைக்குக் கல்யாணம், நேற்று சாயந்திரம்தான் நமக்கே இன்விடேஷன் கொண்டு வந்து தர்றான்... அந்த அளவுக்கு நாம் அந்நியமாப் போயிட்டோம்..."

"நாம் அந்நியமாகலடா... கூடவே ஒட்டிக்கிட்டு வந்தானே... அந்த டாக்டர்... பேரு என்ன சொன்னான்...?"

"ரவி..."

"அந்த ரவிதான் சக்தியை நம்மகிட்டேயிருந்து பிரிச்சுட்டான்..."

"அடச்சீ... சும்மா இருங்கடா... சக்தி கல்யாணம் செய்துக்கறானே... அதுலயும் காதலிச்ச அதே பொண்ணை கட்டிக்கறானேன்னு சந்தோஷப்படாமல்... இது என்னடா பேச்சு...?" —சட்டென்று அடக்க முற்பட்டான் சங்கர்.



"அதில்ல தலைவா... 'இந்த மாதிரி காதலிச்சு நேம்ப்பா'ன்னு ஒரு வார்த்தை நம்ம கிட்ட கூட சொல்லல பாரு..."

"சொல்லியிருந்தா என்னடா செய்திருப்ப்...?"

"தூது போயிருக்கலாமில்ல...?"

"உன்னைத் தூது அனுப்ப வேணாம்னுதான் அவனே காரியத்தை முடிச்சுட்டான்..."

"காரியத்தையே முடிச்சுக்கிட்டானா...?" கேட்டவன் கண்ணடித்தான்.

"டேய் டேய்.. அவன் சக்திடா..! உன்னை மாதிரி கொம்புக்குப் புடவை சுத்தியிருந்தால் கூட தொட்டுப் பார்க்கிற ஜென்மமில்ல..."

"ஆமாம்... பெரிய விஸ்வாமித்திரர்..."

"சரிப்பா... விஸ்வாமித்திரன்னே வச்சுக்குவோம்... மேனகை யாருன்னு சொல்லுங்க ..?"

"உனக்குத் தெரியாதா...? ஓஹோ... நேற்று நீ காலேஜுக்கே வரலையா...? யார் அந்த மேனகை தெரியுமா...? ரவிச்சந்த்ரிகாடா..!"

"ரவிச்சந்த்ரிகாவா...? யாரு அவ,...?"

"என்ன மச்சி... மறந்திட்டியா...? சக்தியோட தங்கச்சி கல்யாணத்துல நாட்டியமாடிச்சே... அந்தப் பொண்ணு..."

"அந்தப் பொண்ணா...! அந்தக் கால பத்மினி, வைஜயந்திமாலா மாதிரி என்ன அழகுடா...! இன்னிக்கெல்லாம் பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல..."

"டேய்... டேய்... டேய்..." என்று மீண்டும் செல்லமாய், போலியாய் அதட்டினான் சங்கர். "என்னடா

பேசற...? நம் சக்திக்கு மனைவியாகப் போறவடா அவ ..''

''இல்ல தலைவா... நமக்கெல்லாம் வந்து வாய்க்குதுங்களே... பொண்ணுங்களா அதுங்க...? பொண்ணுன்னால் சக்திக்குக் கிடைக்ச மாதிரி கிடைக்கணும்...''

''கிடைப்பாடா... ஏன்னால் நீங்கள்ளாம் சக்தி மாதிரி உண்மையாகக் காதலிச்சிங்க பாரு...காதலுக்காக உருகித் தவிச்சிங்க பாரு...வாழ்ந்தால் அவளோடுதான்னு தீர்மானிச்சிங்க பாரு .. எந்த பஸ் ஸ்டாப்புல எந்தப் பொண்ணு நிப்பான்னு அலையற ஜென்மங்க நீங்க... உங்களுக்கு ரவிச்சந்த்ரிகா மாதிரி ஒரு தேவதை கேக்குதாக்கும் ..?'' சற்று 'சுருக்'கென்று தைக்கிற மாதிரி சொன்னான் சங்கர். தைக்கவேண்டுமென்றுதான் சொன்னானோ என்னவோ... குபீரென்று அங்கிருந்த அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து அவன் மீது பாய்ந்தார்கள்.

''ஆமாம்ப்பா... நீயும் சக்தியும் அம்பிகாபதி, ரோமியோ, மஜ்னு இவங்க மாதிரி அமர காதலர்கள். நாங்கள்ளாம் வெறும் தெருவுல ஸைட் அடிக்கிற ஜென்மங்கள் தான்...''

''...என்னடா நீங்கள்ளாம்... எதைச் சொன்னாலும் பெரிசா எடுத்துக்கிட்டு ..? சரி அதை விடுங்க... நாமெல்லாம் எப்ப,. எப்படி கல்யாணத்துக்குப் போறதுன்னு யோசிக்கலாம்...''—ஒருவன் வெள்ளைக் கொடி காட்டினான்.

''...இதுல என்ன இருக்கு...? நமக்காக சக்தி ரெண்டு கார் அனுப்பறதாச் சொல்லியிருக்கான். இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடும்... கிளம்ப வேண்டியது தான்...''

''இன்னிக்கேவா...?''



''நாளைக் காலைல கல்யாணம்... இன்னிக்குப் போகாமல் என்னிக்குப் போவாங்களாம்...?''

''இப்படியேவா போறது ..? வீட்டுக்குப் போய் டிரஸ் பண்ணிக்கிட்டு, நாளைக் காலைக்கும் மாற்று டிரஸ் எடுத்துக்கிட்டுப் போகலாண்டா...''

''அதெல்லாம் சரி... எல்லாரும் கல்யாணத்துக்குப் போறதைப் பற்றியே பேசறீங்களேடா... யாராச்சும் என்ன பிரஸண்ட் பண்றதுன்னு யோசிச்சிங்களா...?''

அத்தனை நேரமும் உரத்து வெளிபட்ட குரல்கள் அனைத்தும் அந்தக் கேள்வியில் சட்டென்று அடங்கிப் போயிற்று. சிறிது நேரம் அமைதி நிலவிற்று அந்த அமைதியைக் கலைத்து சங்கர்தான் குரலைத் தழைத்துக் கொண்டு மெதுவாகச் சொன்னான்.

''...சக்திக்குப் போய் நம்மால் பரிசு தர முடியுமாடா...? அவன் தகுதிக்கு ஏற்ற மாதிரிப் பரிசு தரும் சக்தி நமக்கு இருக்கா ? நாமெல்லாம் சாதாரண வீட்டுப் பிள்ளைங்க .. படிக்கிறதே சம்பாதிக்கத்தான்னு படிக்க வந்திருக்கிறவங்க... நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவங்க... பார்க்கப் போனால் சக்தியிடம் சினேகிதமாக இருக்கவே தகுதியில்லாதவங்க .. அவனுடைய பெரிய மனசின் காரணமாக சினேகிதமா இருக்கிறவங்க... நாம் போய் அவனுக்குப் பரிசுன்னு எதையாவது வாங்கி, பூப்போட்ட காகிதத்தில் சுற்றி, கலர் ரிப்பன் கட்டிக் கொடுக்கிற அதிகப் பிரசங்கித்தனமெல்லாம் செய்யக் கூடாது. பிரெண்ட்ஸா லட்சணமா அத்தனை பேரும் ஒண்ணாச் சேர்ந்து கல்யாணத்துக்குப் போறோம் பாரு .. அதுதான் நாம் அவனுக்குத் தர்ற கல்யாணப் பரிசு. அவனும், ரவிச்சந்த்ரிகாவும் என்னென்னிக்கும் சந்தோஷமா வாழணும்னு வாயார, மனசார வாழ்த்தறோம் பாரு... அதுதான் நம்மால் தர முடிஞ்ச மிகப் பெரிய பரிசு...''

"ஓ.கே... தலைவா... இத்தனை உருக்கமா நீ டயலாக் அடிச்சிட்ட... அதுக்கப்புறமும் பரிசு, கிரிசுன்னு பேசிக்கிட்டிருந்தா நல்லா இருக்காது... அதனால் இப்பவே நாம் கிளம்பிடுவோம்..."

'ஹே...' என்று பெரிதாகக் கத்திக் கொண்டு வகுப்பறைக்குப் போய் தங்களின் நோட்டு, புத்தகங்களை எடுத்துக் கொண்டு அவர்கள் வெளியில் வரவும், அவர்களுக்காக சக்தி அனுப்பிய இரு கார்களும் கல்லூரிக்குள் நுழையவும் சரியாக இருந்தது...

விசாலமான அந்தப் படுக்கை அறை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. குளிர்சாதன வசதியின் காரணமாக சில்லென்றிருந்தது. பிரத்யேகமாக வரவழைக்கப்பட்ட மதுரை மல்லிகைச் சரங்களால் தோரணங்களும், காஷ்மீர ரோஜா இதழ்களால் படுக்கை விரிப்பும் நெய்யப்பட்டிருந்தன. பிரெஞ்சு நாட்டு வாசனைத் திரவியங்களின் மணமும், ஊதுவத்தி வாசனையும் சன்னமாய் மிதக்க, காவியக்கால சிலையாய், ரவிவர்மாவின் ஓவியமாய் சக்தியின் தோளில் சரிந்து கிடந்தாள் ரவிச்சந்த்ரிகா. தோளில் கிடந்தவளை இழுத்து மடியில் கிடத்திக் கொண்டு மலர்முகம் பார்த்தான் சக்தி. பார்த்த கண்கள் நீண்ட நேரம் அப்படியே பார்த்தவாறு கிடக்க மெல்ல அவனது கரம் பற்றி தன் கன்னத்தில் பதிய வைத்துக் கொண்டாள் ரவிச்சந்த்ரிகா. பின்னர் வீணையை மீட்டின இனிமையான குரலில் மென்மையாகக் கேட்டாள்.

"என்ன சக்தி... அப்படிப் பார்க்கறீங்க...?"

"... ம்...?" என்று கிறங்கிய குரலையே பதிலாக்கினான் சக்தி.

"என்ன, அப்படியே பார்த்துக்கிட்டிருக்கீங்கன்னு கேட்டேன்...?"



"கண் கொட்டக் கூட மனசு வரல சந்த்ரி... தகதகன்னு தங்கத்தை உருக்கி வார்த்த மாதிரி அப்படி ஒரு அழகு..."

"ஐயோ... போறும் சக்தி என் அழகை வர்ணிச்சது... வேற ஏதாவது பேசுங்க சக்தி..."

"வேற என்ன பேசறது ..?"

"ஏதாவது பேசுங்க ..."

"ஏதாவதுன்னால்...?"

"ஏதாவதுதான்..."

"ம்...?" என்று கால்வினாடி யோசித்துச் சொன்னான் சக்தி.

"என்ன பேசறதுன்னு தெரியல... உன் முகத்தைப் பார்த்தால் பேச்சு வரல... வேணும்னால் ஒண்ணு செய்யறேன்..."

"என்ன ...?"

"பாடட்டுமா ...?"

"நிஜமாகவே...! நீங்க பாடுவீங்களா சக்தி...?!"

"இந்த மாதிரி மோகனமான ஒரு சூழ்நிலையில, தந்தத்தினால் செய்யப்பட்ட அதி அற்புதமான வீணை மாதிரி நீ என் மடியில் கிடக்க, யாருக்குத்தான் பாட்டு வராது ... சொல்லு ...?"

"அப்ப பாடுங்க..."

"சும்மாப் பாட மாட்டேன்..." இந்த வீணையை மீட்டிக்கிட்டேதான் பாடப் போறேன்..."

"போ...ங்...க... சக்தி......"

மிக அழகாக முகம் சிவந்தாள் அவள். சந்திரனின் மீது சூரிய கிரணங்கள் மிக மென்மையாகப் பதிந்தது போன்ற அந்தக் காட்சியில் லயித்து, இதமாக அவளை அணைத்து, காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்க, மெல்லிய குரலில் நெஞ்சைத் தொடும் வகையில் பாடலானான் அவன்.

பாயுமொளி நீ எனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு;
தோயும் மது நீ எனக்கு, தும்பியடி நானுனக்கு;
வாயுரைக்க வருகுதில்லை, வாழி நின்றன்
மேன்மையெல்லாம்;
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா!
வீணையடி நீ எனக்கு, மேவும் விரல் நானுனக்கு

அதற்கு மேல் தாங்க இயலாதவளாகச் சக்தியின் உதட்டைப் பொத்தி மார்பில் முகம் பதித்து உருகத் தொடங்கினாள் ரவிச்சந்த்ரிகா.

(முற்றும்)

11842
25.88966